# குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு

2012

# முன்னுரை

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் இலங்கையின் 14 ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2012 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. மூன்று தசாப்தங்களின் பின்னர் அதாவது 1981 இன் பின்னர் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் நடாத்தப்பட்ட இந்த தொகைமதிப்பு இலங்கைத் தொகைமதிப்பு வரலாற்றில் முக்கிய மைல்கல்லாக விளங்குகின்றது. இந்த வெளியீடு 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் இறுதித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மக்களியல் மற்றும் வீட்டு வசதித் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையாகும்.

12 அத்தியாயங்களை உள்ளடக்கிய இந்த அறிக்கையில் முதலில் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் வரலாறு மற்றும் அதன் முக்கியத்துவத்தினைப் போன்று தொகைமதிப்பு நடவடிக்கைகளை ஒழுங்கமைப்புச் செய்த முறையும், இரண்டாவது இலங்கையின் நிருவாகக் கட்டமைப்புத் தொடர்பாகவும், மூன்றாவதில் சனத்தொகை வளர்ச்சி மற்றும் பரம்பல் தொடர்பாகவும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் நான்காவது அத்தியாயம் தொடக்கம் பன்னிரண்வாவது அத்தியாயம் வரை வயது பால் கட்டமைப்பு, விவாக அந்தஸ்து மற்றும் கருவள வீதம், நகராக்கம், குடிப்பெயர்வுப் போக்கு, உடல் மற்றும் உள ரீதியான இடர்பாடுடைய நபர்கள், இனம் மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை, இலங்கையின் கல்வி நிலமை தொடர்பான தகவல்கள் பொருளாதார ரீதியாகச் செயற்றிறன் கொண்ட மற்றும் பொருளாதார ரீதியாகச் செயற்றிறனற்ற நபர்கள் மற்றும் நபர்கள் வசிக்கும் வீடுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் உள்ளடகக்கப்பட்டுள்ள தகவல்கள் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக கொள்கை வகுப்பாளர்கள் ஆராய்சியாளர்கள் நிருவாகிகள் நிபுணர்களைப் போன்று கல்வி நடவடிக்கைகளுக்காகப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் பயனுடைய வகையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2012 இனை வெற்றிகரமாக்கிக்கிக் கொயள்வதற்க பல்வேறு வகையில் பங்களிப்புச் செய்த தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் தங்களது கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டு தமது பங்களிப்பினை வழங்கிய ஏனைய அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கும் தகவல் சேகரிக்கும் கடமையில் ஈடுபட்ட சகல கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இந்தத் தொகைமதிப்பு அறிக்கைக்காக கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை வழங்கிய மக்களியல் தொடர்பான நிபுணர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே இந்தத் தேசிய பணியினை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்ககு தகவல்களை வழங்கி தமது ஒத்துழைப்பினை வழங்கிய இலங்கை மக்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.



கலாநிதி. ஏ.ஜே. சதரசிங்ஹ

பணிப்பாளர் நாயகம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

“சங்கியான மந்திரய”

306/71 பொல்தூவ வீதி

பத்தரமுல்லை

2015.07.30.

# நன்றிகள்

30 வருடங்களின் பின்னர் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை திட்டமிடல் தொடர்பில் முழுமையான பொறுப்பனை வகித்து பிரதான அமுலாக்கல் முழு மூலம் ஆலோசனைகளை வழங்கி மற்றும் நவீன தொழில் நுட்ப முறைமைகள் பலவற்றைத் திணைக்கனளத்திற்கு அறிமுகப்படுத்தி வெற்றிகரமான தொகைமதிப்பினை மேற்கொள்வதற்கு தலைமைத்துவத்தினை வழங்கி 2012 தொகைமதிப்பு அத்தியட்சகர் மற்றும் ஒய்வு நிலை பணிப்பாளர் நாயகம் திருமதி. டீ.பீ.பி.எஸ்.வித்யாரத்ன அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் கௌரவமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அவ்வாறே தொகைமதிப்பின் 2013 – 2014 காலப்பகுதியில் இந்தத் தொகைமதிப்பினை அமுல்படுத்தி மற்றும் உரிய வழிகாட்டல்களை வழங்கிய ஓய்வு நிலை பணிப்பாளர் நாயகம் டீ.சீ.ஏ. குணவர்தன அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் தொகைமதிப்புச் செயற்பாடுகளின் போது மாவட்டத் தொகைமதிப்பு ஆணையாளர்களாகக் கடமையாற்றிய மாவட்டச் செயலாளர்கள் உள்ளடங்கலாக மாவட்ட நிருவாக உத்தியோகத்தருக்கு எனது விசேட நன்றிகள் உரித்தாகுக. வேறு அரச துறை நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை வெற்றிகரமாக நடாத்துவதற்குத் தொடர்ச்சியாக ஒத்துழைப்பினை வழங்கிய சகல உத்தியோகத்தர்களுக்கும் தொகைமதிப்பினை நடாத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகளை வழங்கி ஒத்துழைப்பு வழங்கிய சகல நிறுவனங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

குடிசன மற்றும் வீட்டு வசதிகளை வெற்றிகரமாக நடாத்துவதற்காக தொகைமதிப்பு அத்தியகட்சருக்குத் தொடர்ச்சியாக ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்பப் பங்களிப்பினை வழங்கிய திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகங்கள், சகல பணிப்பாளர்கள், சகல பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றென். தொகைமதிப்பின் சகல கட்டங்களையும் வெற்றிகரமாக நடாத்துவதற்காகப் பங்களிப்பு வழங்கிய திணைக்களத்தின் சகல சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர்கள் புள்ளிவிபரவியலாளர்கள் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் புள்ளிவிபர உதவியாளர்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் சகல உத்தியோகத்தர்கள் தாபனப் பிரிவு நிருவாகப் பிரிவு மற்றும் கணக்கீட்டுப் பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும் அச்சகப் பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும் சகல அலுவலக உதவியாளர்களுக்கும் சாரதிகளுக்கும் மற்றும் ஏனைய சகல உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். தொகைமதிப்புக் கால எல்லைக்குள் திணைக்களத்தில் சேவையாற்றிய சகல ஓய்வு நிலை உத்தியோகாத்தர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் இறுதி அறிக்கையை தயாரிக்கும் பொறுப்பினை வகித்த குடிசனத் தொகைமதிப்பு மற்றும் மக்களியல் பிரிவின் பணிப்பாளர் திருமதி. ஐ. ஆர். பண்டார மற்றும் அந்தப் பிரிவின் சகல பணிக்குழுவினருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

முழு நாடும் உள்ளடங்கும் வகையில் நடாத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் கணக்கெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சகல கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் கிராம உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் தகவல்களை வழங்கி வெற்றிகரமான தொகைமதிப்பொன்றை நடாத்துவதற்கு பங்களிப்பு வழங்கிய சகல இலங்கை மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

## சாராம்சம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தொழில் நுட்ப ஆலோசணைகளுக்கமைய மாவட்ட நிருவாகத்தினரின் அமுல்படுத்தலுடன் பல்வேறு தராதரத்திலான அதிக எண்ணிக்கையான அரச உத்தியேதகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இலங்கையின் 14 ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. இவ்வாறு குறிக்கப்பட்ட தினமொன்றில் நாட்டின் மொத்த நிலப் பரப்பினுள் வசிக்கும் சகல மக்களையும் வழமையான வசிப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுத்தல் மற்றும் நபர்களின் தகவல்களைச் சேகரித்தல் மிகப் பாரிய பணியாகும் என்பதுடன் தொகைமதிப்பில் வெளியாகும் தகவல்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்வது சகல தரவு பயன்படுத்துவோரதும் பொறுப்புமாகும்.

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் இறுதித் தகவல்களுக்கமைய இலங்கையின் மொத்த சனத்தொகை 20,359,439 என்பதுடன் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 325 ஆகும். மாகாண மட்டத்தில் சனத்தொகையின் பரம்பலைக் கவனத்தில் கொண்டால் மேல் (28.7%), மத்திய (12.6%), தென் (12.2%), மற்றும் வடமேல் (11.7%) ஆகிய நான்கு மாகாணங்களில் நாட்டின் மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டு பகுதியின்ர் வசிக்கின்றனர். அதிக சனத்தொகை கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் குறைந்த சனத்தொகை முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. வழமையாக வசிக்கும் இடத்திற்கமைய நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளுக்கமைய கவனத்தில் கொண்டால் அதிக எண்ணிக்கையான சனத்தொகை கிராமப் பிரிவில் வசிப்பதாக வெளியாகியுள்ளது.

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் வெளியான மக்களியல் தகவல்களுக்கமைய மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 48.4 ஆண்கள் என்பதுடன் நூற்றுக்கு 51.6 பெண்களாவர். பதிவாகியுள்ள மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 25.3 வீதமானோர் 15 வயதிலும் குறைந்த பிள்ளைகள் என்பதுடன் நூற்றுக்கு 62.4 வீதமானோர் 15 வயதிற்கும் 59 வயதிற்கும் இடைப்பட்ட நபர்களாவர். அதற்கமைய வயோதிபச் சனத்தொகை மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 12.4 வீதமானோராவர். விவாக அந்தஸ்து தொடர்பிலான தகவல்களைப் பகுப்பாய்வு செய்த போது நூற்றுக்கு 50.7 வீதமானோர் திருமணமானவர்கள் என்பதுடன் ஒருபோதும் விவாகமாகாத நபர்கள் நூற்றுக்கு 30.0 காணப்படுகின்றனர். அவ்வாறே தாரமிழந்தவர்கள் நூற்றுக்கு 3.9 வீதமானோர் என தகவல்களுக்கமைய வெளியாகியுள்ளது.

இன வர்க்கத்திற்கமைய சனத்தொகையை ஆய்வு செய்த போது மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 74.9 வீதமான பெரும்பான்மை சிங்களவர்களாவர். இலங்கைத் தமிழர் நூற்றுக்கு 11.2 வீதமும் இந்தியத் தமிழர் நூற்றுக்கு 4.1 வீதமும் இலங்கைச் சோனகர் நூற்றுக்கு 9.3 வீதமும் எஞ்சிய நூற்றுக்கு 0.5 வீதமானோர் ஏனைய இனத்தவராவர். இந்த நாட்டு மக்கள் அனுஸ்டிக்கும் சமயங்களுக்கமைய வகைப்படுத்தல்களை மேற்கொண்டால் இதற்குச்

சமமான போக்கில் சனத்தொகை பிரிந்துள்ளமை பதிவாகியுள்ளது. இதற்கமைய பெரும்பான்மையான பௌத்த சமயத்தவர்கள் நூற்றுக்கு 70.1 ஆகப் பதிவாகியுள்ளதுடன் அதற்கடுத்தாக அதிக எண்ணிக்கையானோர் பின்பற்றும் சமயம் இந்து சமயமாகும். அதனைப் பின்பற்றுவோர் நூற்றுக்கு 12.6 ஆகும். இஸ்லாம் மதத்தினைப் பின்பற்றும் மக்களின் சகவீதம் நூற்றுக்கு 9.7 வீதமாகும்.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கமைய 1981 முறையே நூற்றுக்கு 55 மற்றும் நூற்றுக்கு 59 ஆகக் காணப்பட்ட திருமணமான ஆண் மற்றும் பெண் விதாசாரம் 2012 ஆம் ஆண்டாகும் போது நூற்றுக்கு 67 என்ற சமமான சதவீதம் வரை அதிகரித்துள்ளது. அவ்வாறே 1981 தொடக்கம் 2012 வரையான 31 வருட காலத்தினுள் ஒரு போதும் விவாகமாகாத ஆண்களின் சதவீதம் நூற்றுக்கு 43 இலிருந்து நூற்றுக்கு 30 வரை குறைவடைந்துள்ளதுடன் பெண்களின் சதவீதம் நூற்றுக்கு 32 இலிருந்து நூற்றுக்கு 22 வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடென்ற வகையில் இலங்கை பெற்றுக்கொண்டுள்ள உயர் கல்வி மட்டம் இந்த நாட்டின் எழுத்தறிவு வீதம் தொடர்பில் கவனத்தில் கொண்டால் தெளிவாகும். அதற்கமைய இலங்கையரின் மொழியறிவு வீதம் நூற்றுக்கு 95.7 என்ற உயர் பெறுமதியைக் கொண்டிருப்பதுடன் ஆண்களின் மொழியறிவு வீதம் பெண்களின் மொழியறிவு வீதத்தினைவிட உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பதாக வெளியாகியுள்ளது. 10 வயதிலும் மேற்பட்ட நபர்களின் கணினியைப் பயன்படுத்தும் ஆற்றல் தொடர்பில் பெற்றுக்கொண்ட தரவுகளுக்கமைய நூற்றுக்கு 24.2 வீதமானோர் கணினி அறிவைக் கொண்டிருப்பதாக பதிவாகியுள்ளது.

இந்தத் தொகைமதிப்பில் உள்ளூர் குடிப்பெயர்வினைப் போன்று சர்வதேசக் குடிப்பெயர்வு தொடர்பிலும் தகவல் சேகரிக்கப்பட்டன. அதிகளவான உள்ளூர்க் குடிப்பெயர்வு ஏற்பட்டுள்ளது மேல் மாகாணத்திலாகும். உள்ளூர்க் குடிப்பெயர்விலே மிகவும் பிரபல்யமான மாவட்டமாக கொழும்பு மாவட்டம் விளங்குகின்றது. அதற்கமைய தற்காலிகமாக அதாவது ஆறு மாதங்களுககும் அதிகமான காலம் வெளிநாட்டில் வசிக்கும் மொத்த சனத்தொகை தொடர்பில் கவனம் செலுத்தும் போது ஆண்கள் முன்னணி வகிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் நகராக்கம் தொடர்பில் அதாவது நகரம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதேசங்களின் சனத்தொகையில் விகிதசம அதிகரிப்புத் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய இந்நாட்டுச் சனத்தொகையில் நூற்றுக்கு 18.2 வீதமானோர் நகரப் பிரதேசங்களில் வாழ்கின்றனர்.

மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினரான 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 51.6 வீதமானோர் பொருளாதார ரீதியாகச் செயற்பாடுடைய நபர்கள் என்பதுடன் நூற்றுக்கு 48.4 வீதமானோர் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற பகுதிக்குள் அடங்குவர். அவ்வாறே குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய உடல் மற்றும் உள ரீதியான இடர்பாடுடைய

1,617,924 நபர்கள் காணப்படுவதாகப் பதிவாகியுள்ளது. மாவட்ட அடிப்படையில் எடுத்துக் கொண்டால் உடல் மற்றும் உள ரீதியான இடர்பாடுடைய அதிக சனத்தொகை பதிவாகியுள்ளது கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலாகும்.

இந்தக் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் நபர்கள் வசிக்கும் கட்டிடங்கள் 5,267,159 காணப்படுவதாகப் பதிவாகியுள்ளதுடன் கம்பஹா மாவட்டத்தில் நபர்கள் வசிக்கும் கட்டிடங்களின் எண்ணிக்கை அதிகமாகவும் மன்னார் மாவட்டத்தில் நபர்கள் வசிக்கும் கட்டிடங்களின் எண்ணிக்கை குறைவாகவும் பதிவாகியுள்ளது. அவ்வாறே குடிப்பதற்குப் பொருத்தமான நீரைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் காணப்படும் வீடுகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 80.9 வீதம் எனவும் தொகைமதிப்பில் வெளியாகியுள்ளதுடன் நூற்றுக்கு 87 வீதமான வீடுகளுக்கு தேசிய மின்சார வலையமைப்பின் மூலம் மின்சாரம் வழங்கப்படட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளது.

# குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் வரலாறு மற்றும் முக்கியத்துவம்

## 1.0

### குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் வரலாறு மற்றும் முக்கியத்துவம்

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு என்பது குறிக்கப்பட்ட நிலப் பரப்பில் குறிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் நாடொன்றில் வசிக்கும் சகல நபர்களையும் கணக்கெடுத்தல் மற்றும் அந்த நபர்களின் மக்களியல், சமூகப் பொருளாதார மற்றும் அவர்கள் வசிக்கும் வீட்டுக் கூறுகளில் தகவல் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் வெளியீடு செய்தல் என்பனவாகும். இது மிகவும் சிக்கல் நிறைந்த செயற்பாடு மற்றும் அதிக செலவுகளைக் கொண்ட பணியென்பதால் சனத்தொகைமதிப்பு உலக சகல நாடுகளாலும் 10 வருடங்களுக்கொரு முறை நடாத்தப்படுகின்றது. தொகைமதிப்பினை நடாத்தும் கால இடைவெளி ஓரினத் தன்மை வாய்ந்த இடைவெளியில் நடாத்துவதற்குத் திட்டமிடப்படுவதுடன் அது "0" அல்லது "1" இல் நிறைவடையும் வருடங்களில் நடாத்துவது மிகவும் பொருத்தமானதென்பது ஐக்கிய நாடுகளின் பரிந்துரையாகும். இலங்கையின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை நடாத்துவதற்கு "1" இல் நிறைவடையும் வருடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சில காலப் பகுதிகளில் பல்வேறு காரணங்களால் இதில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எமது நாடு குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை நடாத்துவதில் நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதுடன் இலங்கையில் சட்ட ரிதியாக நடாத்தப்பட்ட முதலாவது குடிசனத் தொகைமதிப்பு 1871 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி நடாத்தப்பட்டுள்ளது. தெற்காசிய நாடுகளுள் முதன் முதலாக நடாத்தப்பட்ட விஞ்ஞான முறைமையிலான (தேசிய) குடிசனத் தொகைமதிப்பு இதுவாகும்.

1871 இல் இலங்கையின் மொத்த சனத்தொகை 2.4 மில்லியன்களாகப் பதிவாகியுள்ளது. 1871 இன் பின்னர் 1881, 1901, 1911, 1921, 1931 ஆகிய வருடங்களில் இலங்கையின் குடிசனத் தொகைமதிப்பு "1" முடிவடையும் வருடங்களில் நடாத்தப்பட்டிருந்தாலும் இரண்டாம் உலக யுத்தத்தின் தாக்கம் காரணமாக 1941 இல் குடிசனத் தொகைமதிப்பு நடாத்தப்படவில்லை. ஆனால் 1946, 1953, 1963 ஆம் ஆண்டுகளில் குடிசன மற்றும் வீட்டு வகதிகள் தொகைமதிப்பு நடாத்தப்பட்டுள்ளதுடன் மீண்டும் 1971, 1981, 2001, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு நடாத்தப்பட்டுள்ளது. 1980 களின் பின்னரைப் பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட குழப்பகரமான சூழ்நிலை குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை நடாத்துவதற்கு தடையாகக் காணப்பட்டது. இதற்கமைய 1991 ஆம் ஆண்டில் தொகைமதிப்பினை நடாத்துவதற்கு முடியாமல் போனதுடன் 2001 ஆம் ஆண்டில் இலங்கையின் 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மட்டும் தகவல் சேகரிக்கக் கூடியதாகவிருந்தது. 2012 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இலங்கையின் 14 ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு மிக முக்கியமாகக் கருதப்படுவதற்குக் காரணம் 1981 இன் பின்னர் முழு இலங்கையும் உள்ளடங்கும் வகையில் நடாத்தப்பட்ட தொகைமதிப்பு இது என்பதனாலாகும். 2012 ஆம்

ஆண்டின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய இலங்கையின் மொத்த சனத்தொகை 20,359,439 எனப் பகதிவாகியுள்ளது.குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை நடாத்துவதற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினை நிறுவப்பட்டது 1947 இல் என்பதுடன் அதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தொகைமதிப்புக்கள் காலனித்துவக் காலத்தில் நடாத்தப்பட்டவைகளாகும். மேலும் இலங்கையின் குடிசனத் தொகைமதிப்பினை நடாத்துவதற்காக தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் 1868 இல் வரையப்பட்டுள்ளதுடன் அது காலத்தின் தேவை கருதி பல்வேறு காலப்பகுதிகளில் திருத்தியமைக்கப்பட்டு தொகைமதிப்புக்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் கட்டளைச் சட்டத்திற்கமைய தொகைமதிப்புக்காக சரியான தகவல்களை வழங்குவதற்கு சகல நபர்களும் சட்டத்தினால் கட்டுபட்டுள்ளார்கள் என்பதுடன் அதன்போது தனிப்பட்ட தககவல்களின் இரகசியத் தன்மையினை பேணுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சட்டத்தினால் கட்டுப்பட்டுள்ளது. அவ்வாறே குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் தகவல்கள் சகல நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்திக் கொள்ளல் சகலரதும் பொறுப்பாகும்.

**தொகைமதிப்பின் முக்கியத்துவம்**

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் மூலம் ஏதாவது குறித்துரைக்கப்பட்ட தினமொன்றிற்கமைய நாடொன்றில் வசிக்கும் சகல நபர்களினதும் மக்களியல் பொருளாதார மற்றும் வீட்டு வசதிகள் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்படும். இந்தத் தகவல்களை சிறிய நிருவாக அலகு வரை பெற்றுக் கொடுப்பதற்கான ஆற்றல் உள்ள ஒரேயொரு தரவு மூலமாக காணப்படுவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பாகும்.

நாட்டில் தேசிய மட்டத்தைப் போன்று பிரதேச மட்டத்திலும் ஏற்படும் பல்வேறு அபிவிருத்தி திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளப்படுவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் தகவல்களையாகும். சிறிய நிருவாக மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை மதியுரை செய்வதைப் போன்று தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான சனத்தொகை தொடர்பான பல்வேறு குறிகாட்டிகளை தயாரிப்பதற்கும் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நாடொன்றின் சனத்தொகையின் அளவு மற்றும் பரம்பல் எதிர்கால சனத்தொகைப் மதிப்பீட்டைத் தயாரித்தல் கல்வி மற்றும் தொழில்களைத் திட்டமிடுதல் குடிப்பெயர்வின் போக்கினை அடையாளம் காண்பதைப் போன்று பல்வேறு ஆராய்ச்சி மற்றும் கற்றல் நடவடிக்கைகளுக்கு தரவுகளைப் பயன்படுத்துவோரால் குடிசன மற்றும் வீட்டு வகதிகள் தொகைமதிப்பின் தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் தகவல்கள் நிருவாகப் பிரதேச எல்லைகளை நிர்ணயிப்பதற்கு உதவுவதைப் போன்று தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைத் தீர்மானிப்பதற்கும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே

சகல கட்டிடங்களும் நிரற்படுத்தப்பட்டு சட்டகம் ஒன்று தயாரித்துக் கொள்ளப்படுவதுடன் அந்தச் சட்டகம் பொருளாதாரத் தொகைமதிப்பு நடவடிக்கைகளைப் போன்று பல்வேறு விடயங்களின் கீழ் நடாத்தப்படும் மாதிரி அளவீடுகளுக்கும் பயன்படுத்தப்படும்.

**தொகைமதிப்பின் பிரதான படிமுறைகள்**

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் பல படிமுறைகள் உள்ளன. அதில் பிரதான படிமுறைகள் **4** ஆகும்.

படிமுறை 1 - கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் தேசப்படம் தயாரித்தல் மற்றும் தொகைமதிப்புக் கண்டங்களை வேறுபடுத்தல்

படிமுறை 2 - சகல கட்டடிக் கூறுகளையும் நிரற்படுத்தல்

படிமுறை 3 - நபர்களதும் மற்றும் விட்டு வசதிகள் தகவல்களைச் சேகரித்தல்

படிமுறை 4 - தரவுகளைப் பகுப்பாய்வு செய்து தொகைமதிப்புத் தகவல்களை வெளியீடு செய்தல்

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் ஒவ்வொரு படிமுறைகள் தொடர்பாகவும் சிறு விளக்கமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

**படிமுறை 1 - கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் தேசப்படம் தயாரித்தல் மற்றும் தொகைமதிப்புக் கண்டங்களை வேறுபடுத்தல்**

2012 ஆம் ஆண்டாகும் போது இலங்கையில் 14,022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்பட்டதுடன் இந்தக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக தேசப்படம் தயாரிப்பும் பணி தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மாவட்டப் பணிக் குழுவினரின் மேற்பார்வையின் கீழ் கிராம உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் தேசப்படம் தயாரிப்பதற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வரைபடவியல் பிரிவினால் பருமட்டான தேசப்படம் (உரு 1.1) கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அண்மையில் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவை ஊடுருவாத வகையில் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கிடையில் பிரதேசம் தவறவிடப்படாத வகையில் மிகக் கவனமாக இந்தத் தேசப்படங்கள் தற்காலப்படுத்தப்படும். சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகள் காலத்திற்குக் காலம் வேறுபட்டமைவதால் இந்தப் பணியினை மிக்க கவனமாக மேற்கொள்ள வேண்டும். கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைத் தயாரித்ததன் பின்னர் கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒரு தொகைமதிப்புக் கண்டத்தில் 150 அளவிலான கட்டிடக் கூறுகள் உள்ளடங்கும் வகையில் தொகைமதிப்புக் கண்டங்களாகப் பிரித்து தொகைமதிப்புக் கண்ட மட்டத்தில் தேசப்படம் தயாரிக்கப்படும் (உரு 1.2). இந்தத் தொகைமதிப்புக் கண்டங்களை வேறுபடுத்தும் போது பிரதேசத்தில் / நிலத்தின் தன்மையினையும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும். தொகைமதிப்பினை நடாத்தும்

எல்லைக்குள் ஒரு கணக்கெடுக்கும் உத்தியோகத்தரால் தகவல் சேகரிப்பதற்கு ஏற்ற வகையில் கட்டிடக் கூறுகளின் எண்ணக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வரைபடம் 1.1 : கிராம உத்தியோகத்தர் பிரிவொன்று தொகைமதிப்புக் கண்டங்களாகப் பிரித்துவேறுபடத்திக் காட்டப்பட்டுள்ள பருமட்டான தேசப்படம்**




**வரைபடம் 1.2 : தொகைமதிபபுக் கண்ட மட்டத்தில் தயாரிக்கப்பட்ட பருமட்டான தேசப்படம்**




**படிமுறை 2**

அடுத்த படிமுறையாக தொகைமதிப்புக் கண்டத்தில் காணப்பட்ட மனிதர்கள் வசிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் கட்டிடக் கூறுகளின் பட்டியலொன்றைத் தயாரிப்பது மேற்கொள்ளப்பட்டது. இது முன்நிரற்படுத்தும் படிவம் (F1 படிவம்) என்ற பெயரால் அழைகக்ப்பட்டது. கட்டிடக் கூறுகளை நிரற்படுத்துதல் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டது. வீட்டுக் கூறு கூட்டு வசிப்பிடம் வசிப்பிடமல்லாத கட்டிடக் கூறு கட்டிடக் கூறுகள் வகைப்படுத்தப்பட்டதுடன் F1 படிவத்திற்கமைய கட்டிடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கம் எழுதப்பட்ட சிவப்பு நிறத்திலான ஒட்டி (லேபல்) கட்டிடக் கூறுகளுக்கு ஒட்டப்பட்டது. (உரு 1.3). நிரற்படுத்தும் கட்டம் தொகைமதிப்புத் தகவல்களைச் சேகரிக்கும் கால எல்லைக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது. தொகைமதிப்பிலே தகவல்களைச் கேரிப்பதற்காக நியமிக்கப்பட்ட கணக்கெடுக்கும் உத்தியோகத்தர் அந்தப் பணியினை மேற்கொள்வதற்கு வீட்டுக் கூறுகளை அடையாளம் காண்பது இந்தப் படிவம் மற்றும் சிவப்பு லேபலில் உள்ள இலக்கத்தின் மூலமாகும். பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரால் தமது பிரதேசத்திலுள்ள கட்டிடக் கூறுகள் நிரற்படத்தப்பட்ட போது அந்தக் கூறின் உரிமையாளரின் பெயர் முகவரி மற்றும் வீட்டுக் கூறா கூட்டு வசிப்பிடமா அல்லது வசிப்பிடமற்ற கட்டிடக் கூறா என்பது பற்றிய விபரங்கள் F1 படிவத்தில் உள்ளடக்கிக் கொள்ளப்படும். இந்தப் படிவம் தொகைமதிப்புச் சட்டகமாக எதிர்காலத் தேவைகளுக்காகக் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும்.

**உரு 1.3 : கட்டிடக் கூறுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட சிவப்பு லேபல்**



**தொகைமதிப்பினை நடாத்தும் முறைமைகள்**

தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்திற்கமைய தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திடம் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை நடாத்தும் முழுமையான தொழில்நுட்பப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை நடாத்துவதற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் “தொகைமதிப்பு அத்தியட்சகராக” தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்திற்கமைய நியமிக்கப்பட்டு வர்த்தமானிப் பத்திரம் மூலம் வெளிப்படுத்தப்படுவதுடன் அதில் குறிப்பிடப்பட்ட திகதியில் தொகைமதிப்பினை நடாத்துவதற்கு திட்டமிடல்களை மேற்கொள்வதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைகக்ளத்தில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதுடன் நாட்டின் நிருவாகக் கட்டமைப்பினைப் பயன்படுத்தி கள நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொறுப்பு மாவட்ட நிருவாகத்திற்குரியதாகும். இதற்கமைய சகல மாவட்டச் செயலாளர்களும் அந்த மாவட்டத்தின் “தொகைமதிப்பு ஆணையாளராக” நியமிக்கப்படுவதுடன் பிரதேச செயலாளர்கள் “பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர்களாக” நியமிக்கப்படுவர். தொகைமதிப்பிலே வீடு வீடாகச் சென்று நபர்களின் தகவல்களைச் சேகரிப்பது அதற்காகப் பிரதேச மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தற்காலிகக் கணக்கெடுக்கும் உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படும். அவர்கள் கிராம உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் கணக்கெடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வர். தொகைமதிப்பினை நடாத்தும் செயன்முறை தொடர்பில் அவர்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் பயிற்றுவிக்கப்படுவர். தொகைமதிப்பின் ஒழுங்கமைப்புத் திட்டமிடல் உரு 1.4 இல் காட்டப்பட்டுள்ளது.

**உரு 1.4 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் ஒழுங்கமைப்புத் திட்டமிடல்**




**படிமுறை 3 – நபர்களின் மற்றும் வீடுகளின் தகவல்களைச் சேகரித்தல்**

தொகைமதிப்பு வரலாற்றில் முதன் முறையாக 2012 தொகைமதிப்பில் நபர்களைக் கணக்கெடுத்தல் **வழமையான வசிப்பிடத்திற்கமைய** மேற்கொள்ளப்பட்டது. அது சட்ட ரீதியான கணக்கெடுப்பு (de-jure) என அழைக்கப்படும். இங்கு வழமையான வசிப்பிடம் என பொருள்கோடல் செய்வது " ஏதாவதொரு நபர் தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தின் போது 6 மாதங்களுக்கு அதிகமான காலம் வசிக்கும் அல்லது எதிர்காலத்தில் 6 மாதங்களிலும் அதிகமான காலம் தொடர்ச்சியாக வசிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள இடமாகும்.

நபர்களின் மற்றும் வீட்டுத் தகவல்களைச் சேகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட தொகைமதிப்பு வினாக்கொத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வினாக்கள் மற்றும் விடையளிக்க வேண்டிய முறைகள் தொகைமதிப்பு திட்டமிடல் படிமுறையின் போது தொகைமதிப்புப் படிவம் (F3 படிவம்) தயாரிக்கும் உப குழுவின் மூலம்

மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த வினாக்கொத்து சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் முற்சோதணை செய்யப்பட்டது. இதன்போது அடையாளம் காணப்பட்ட விடயங்களுக்கமைய தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதிப் படிவம் (F3) தயாரிக்கப்பட்டது.

2012 ஆண்டு தொகைமதிப்புத் தினமாக மார்ச் 20 ஆம் திகதி பெயர் குறிக்கப்பட்டதுடன் தொகைமதிப்புக் கணமாக மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகும் கணமான மார்ச் 19 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி பெயரிடப்பட்டது.

தொகைமதிப்புத் தகவல்களைச் சேகரிப்பதற்காக கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு இதற்கு முன்னர் குறிப்பிட்டவாறு 150 அளவிலான வீட்டுக் கூறுகள் உள்ளடங்கும் தொகைமதிப்புக் கண்டம் மற்றும் கூறுகளுக்குச் செல்ல வேண்டிய முறையினை உள்ளடக்கிய தேசப்படத்துடன் முன்நிரற்படுத்தும் படிவம் (F1 படிவம்) ஒப்படைக்கப்படும். இந்த ஆரம்பத் தேசப்படம் கிராம உத்தியோகத்தர்களால் தயாரித்து வழங்கப்பட்டதுடன் தொகைமதிப்புக் கண்டங்களை வேறுபடுத்தல் மற்றும் நிரற்படுத்தல் படிவத்தினைத் பூரணப்படுத்துவதும் கிராம உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். “பிரதேசத் தொகைமதிப்பு உத்தியோகத்தர்கள்” ஆக நியமிக்கப்பட்ட புள்ளிவிபர உத்தியோகத்தர்களால் இந்த நடவடிக்கை மேற்பார்வை செய்யப்பட்டது.

இந்தத் தொகைமதிப்பு இரண்டு பிரதான சுற்றுக்களை உள்ளடக்கியது. முதலாவது சுற்றான தகவல் சேகரிக்கும் சுற்றுக்காக கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு தொகைமதிப்புத் தினத்திற்கு முன்னர் 3 வாரங்கள் அதாவது 2012 பெப்ரவரி 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 19 ஆம் திகதி வரை வழங்கப்பட்டது. இதன்போது நபர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று அவற்றில் வழமையாக வசிக்கும் நபர்களின் “தனிப்பட்ட தகவல்கள்” மற்றும் வசிக்கும் வீட்டுக் கூறுகளுக்காக மட்டும் “வீட்டுத் தகவல்கள் தொகைமதிப்புப் படிவத்தில் உள்ளடக்கப்பட்டன. அதாவது கூட்டு வசிப்பிடங்கள் மற்றும் வசிப்பிடமற்ற கட்டிடக் கூறுகளில் வீட்டுத் தகவல்கள் சேகரிக்கப்படவில்லை. அதன் பின்னர் திருத்தச் சுற்றின் போது தகவல் சேகரிக்கும் சுற்றில் தகவல் சேகரித்த இடங்களுக்கு மீண்டும் ஒரு முறை சென்று தொகைமதிப்புக் கணத்தினை அடிப்படையாகக் கொண்டு புதிதாகப் பிறந்த குழந்தைகள் தொடர்பான தகவல்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் தொகைமதிப்புக் கணத்திற்கு முன்னர் இறந்த நபர்களின் தகவல்களை F3 படிவத்திலிருந்து நீக்குவதற்கும் தகவல் சேகரித்ததன் பின்னர் வசிப்பிடத்தில் மாற்றமொன்று ஏற்படுமாயின் அதனைத் திருத்தம் செய்வதற்கும் மார்ச் மாதம் 20 மற்றும் 21 ஆகிய இரு தினங்கள் மீண்டும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**வசிப்பிடமற்ற சனத்தொகையினைக் கணக்கெடுத்தல்**

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே நபர்கள் கணக்கெடுக்கப்படுவது அவர்களின் வழமையான வசிப்பிடத்திற்கமையவேயாகும். ஆனால் எமது நாட்டில் சில நபர்களுக்கு வசிப்பதற்கு நிலையான இடமொன்று அல்லது வீடொன்று இல்லை. அவர்கள் கடைகள் அல்லது வேறு இடங்களில் இராப்பொழுதைக் கழிக்கின்றனர். இவர்கள் இந்த நாட்டின் சனத்தொகையில் ஒரு பிரிவினர் என்பதால் அவ்வாறான நபர்களினது எண்ணிக்கையும் தொகைமதிப்பு இரவிலே கணக்கெடுக்கப்பட்டது. மேலும் இந்த நபர்கள் இரவுப் பொழுதில் தங்கியிருக்கும் இடங்கள் தொடர்பில் தொகைமதிப்புக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டது. நடைமுறைச் சிக்கல்களைக் கவனத்தில் கொண்டு 2012 மார்ச் மாதம் 19 ஆம் திகதி இரவு 10 – 12 மணிக்கிடையில் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய இலங்கையில் வசிப்பதற்கு வீடற்ற நபர்கள் 3,418 எண்ணிக்கையானோர் இருப்பதாகப் பதிவாகியுள்ளது.

**2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே கணக்கெடுப்பு முறைமையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள்**

தொகைமதிப்பிலே தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பிரதான முறைகள் 2 உள்ளன. அதாவது,

1) தொகைமதிப்புக் கணத்திலே நபர்களைச் சந்திக்கும் இடத்தில் கணக்கெடுத்தல் (de – facto முறை) எனப்படும் யதார்த்தக் கணக்கெடுப்பு
2) நபர்களின் வழமையான வசிக்கும் இடத்திற்கமையக் கணக்கெடுத்தல் (de- jure முறை) எனப்படம் சட்டரீதியான கணக்கெடுப்பு

2012 ஆம் அண்டில் நடாத்தப்பட்ட தொகைமதிப்பிலே நபர்களின் வழமையான வசிப்பிடத்திற்கமைவான (de- jure) கணக்கெடுத்தல் முறை பயன்படுத்தப்பட்டது. இம்முறை கணக்கெடுத்தல் முறையாக de- jure முறை பயன்படுத்தப்பட்டிருப்பது தற்போது நாட்டில் காணப்படும் நிலமை மற்றும் தேவைகளுக்கு அமையவாகும். அதாவது யதார்த்தக் கணக்கெடுப்பு முறையான de- facto முறையில் கணக்கெடுக்கும் போது நடைமுறைச் சிக்கல்கள் பல அடையாளம் காணப்பட்டுள்ளன. உதாரணமாக நபர்களின் நடமாட்டம் அதிகரித்தல் காரணமாக அதிக எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் இறுதித் தொகைமதிப்பு இரவின் போது திறந்த வெளிக் கணக்கெடுப்பிற்கு பயன்படுத்த நேரிடும். இதன்போது பல்வேறு தொகைமதிப்பு வழுக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். மேலும் மாவட்ட நிருவாக மட்டத்தில் திட்டமிடல்களை மேற்கொள்ளும் போது தேவைப்படுவது பிரதேச மட்டத்தில் வழமையாக வசிக்கும் நபர்களின் எண்ணிக்கை என்ற விடயமும் இதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

de- facto முறையிலே காணப்படும் மேற்கூறப்பட்ட பிரிதகூலங்களுடன் ஒப்பிடுமிடத்து de – jure முறையில் பல அனுகூலங்களைக் குறிப்பிட முடியும். de – jure முறைக்கமைய

கணக்கெடுக்கும் உத்தியோகத்தருக்கு தகவல் சேகரிப்பதற்காக பொருமானளவு கால அவகாசம் வழங்க முடியுமென்பதால் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு அதிகரித்தல், நபர்கள் தவறவிடப்படுவதைக் குறைத்தல் மற்றும் இரட்டைக் கணிப்பீட்டிற்கான ஏற்படுவதற்கான வாய்ப்பினைக் குறைப்பதற்கான ஆற்றல் அதிகரித்த்ல் போன்ற நன்மைகளுண்டு.

இதற்கமைய நபர்கள் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் வைத்தியசாலைகள், சுற்றுலா விடுதிகள் வாடி வீடு ஓய்வு விடுதிகள் அலுவலகம் விமான நிலையம் போன்ற இடங்கள் வழமையான வசிப்பிடங்களாகக் கருதப்படுவதில்லை.

**தொகைமதிப்புச் செயன்முறைகளுக்குள் உள்ளடங்கும் பிரதான பணிகள்**

- தொகைமதிப்பின் அமுலாக்கல் குழு மற்றும் உப குழுக்களை நியமித்தல்
- மாவட்ட மட்டங்களில் செயலமர்வுகளை நடாத்தி தொகைமதிப்புத் தகவல்களின் அவசியத் தன்மையினைத் தேடியறிதல்
- தொகைமதிப்பினை நடாத்தும் கால எல்லை மற்றும் ஏனைய பணிகளுக்காக திகதிகளைத் திட்டமிடல்
- வேறு நாடுகள் பயன்படுத்தியிருக்கும் நவீன தொழில் நுட்ப முறைகளைத் தேடியறிதல்
- கிராமங்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் குறியீட்டுப் பட்டியலை தற்காலப்படுத்தல் மற்றும் தொகைமதிப்புச் சட்டகத்தைத் தயாரித்தல்
- தேசபடங்களைத் தற்காலப்படுத்தும் முறைமையினைத் திட்டமிடல்
- தொழில் மற்றும் கைத்தொழில் குறியீட்டுப் பட்டியலைத் தற்காலப்படுத்தல்
- தொகைமதிப்பு நடவடிக்கைகளுக்காக ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அறிக்கைகளைத் தயாரித்தல்
- தொகைமதிப்பில் கணக்கெடுக்கும் முறைமையினைத் தீர்மானித்தல்
- தொகைமதிப்புப் படிவத்தினைத் திட்டமிடல்
- தொகைமதிப்புப் படிவத்திற்கான முற்சோதனையை மேற்கொள்ளல்
- தொகைமதிப்புக்குத் தேவையான சட்ட ரீதியான மற்றும் நிருவாக ரீதியான விடயங்களைத் தயார் செய்தல்
- தரவு பயன்படுத்துவோருடன் கலந்துரையாடல் சுற்றுக்களை நடாத்துதல்
- கணினி உதவியுடன் குறியீட செய்யும் வேலைத்திட்டத்தினைத் திட்டமிடல்
- தரவுகளைக் கணினிப் பதிவு செய்தல் மற்றும் பகுப்பாய்வு முறைமைகளை திட்டமிடல்
- தொகைமதிபப்புச் செயன் முறைகளுக்காக முன்னோடித் தொகைமதிப்பினை நடாத்துவதைத் திட்டமிடல்

- தரவுப் பரப்பாக்க வேலைத்திட்டங்களைத் தயாரித்தல்
- தொகைமதிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவுறுத்தல் கைந்நூல்களை (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளிலும்) தயாரித்தல் மற்றும் அச்சிடுதல்
- தொகைமதிப்பு நடவடிக்கைகளுக்குரிய உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்களை திட்டமிடல்
- தரவுகளை சீராக்கம் செய்யும் வேலைத்திட்டங்களைத் தயாரித்தல்
- தொகைமதிப்புப் பிரச்சார நடவடிக்கைகளைத் தயார்ப்படுத்தல்
- தொகைமதிப்புக்ககுத் தேவையான நிருவாக மற்றும் அமுலாக்கத்திற்குத் தேவையான படிவ வகைகளைத் திட்டமிடல் மற்றும் அச்சிடுதல்
- தொகைமதிப்புக்குத் தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்றுவித்தல்
- தொகைமதிப்பின் பின்னரான அளவீட்டினைத் திட்டமிடல்
- தொகைமதிப்புச் செயன்முறைகளுக்குத் தேவையான படிவங்கள் மற்றும் ஏனைய பொருட்களை மாவட்டங்களுக்கு விநியோகித்தல்
- தொகைமதிப்பின் முன்நிரற்படுத்தல் மற்றும் கணக்கெடுத்தல் வேலைத்திட்டங்களை தயாரித்தல்
- 5% மாதிரிக்குரிய தரவுகளைப் பெற்றறுக்கொள்ளும் வேலைத்திட்டங்களை திட்டமிடல்
- தொகைமதிப்புச் செயல்முறைகளை அமுல்படுத்தல்
- தொகைமதிப்பு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அச்சிடுதல்
- தொகைமதிப்புச் செயன்முறைகளை நிறைவு செய்தல்

**தொகைமதிப்புச் செலவுகளை மதிப்பீடு செய்தல்**

- அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்
- கொடுப்பனவுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்

**பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

- நிரற்படுத்தும் கட்டம்
- கணக்கெடுக்கும் கட்டம்

**தரவு சேகரித்தல் மற்றும் மேற்பார்வை**

- தரவு சேகரிக்கும் கட்டத்தில் மேற்பார்வை செய்தல்

- தொகைமதிப்பு நிறைவடைந்தவுடன் சாராம்ச அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் மாவட்ட காரியாலயங்களுக்கு உரிய வகையில் அனுப்புவதை மேற்பார்வை செய்தல்

**தரவுகளை கணினிப் பதிவு செய்தல், சீராக்குதல் மற்றும் அட்டவணைகளைப் பெற்றுக்கொள்ளல்**

- தரவுகளைக் கணினிப் பதிவு செய்யும் நவீன முறைமைகளை அடையாளம் காணல்
- தரவு வருடல் நடவடிக்கைகள்
- தரவு வருடல் நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்
- உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்
- தரவுச் சீராக்கல் அறிவுறுத்தல்களைத் தயாரித்தல்
- முன்னோடித் தொகைமதிப்புத் தரவுகளிலிருந்து அட்டவணைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான கணினி வேலைத்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் தேவையான திருத்தங்களைச் செய்தல்
- இறுதி அட்டவணைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**தரவுகளை வெளியீடு செய்யும் படிமுறை**

- ஆரம்ப அறிக்கைகளை வெளியீடு செய்தல்
- சாராம்ச அறிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் தரவுஎ அட்டவணைகளுடன் அறிக்கைகளை வெளியீடு செய்தல்
- 5% மாதிரியிலிருந்து அறிக்கையை வெளியீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொளள்ல்
- இறுதித் தரவு அட்டவணைகளை இணையத் தளத்தில் வெளியீடு செய்தல்
- மாகாண மட்டத்தில் தொகைமதிப்பு அறிக்கைகளை வெளியீடு செய்தல்
- இறுதித் தொகைமதிப்பு அறிக்கையினை வெளியீடு செய்தல்
- விசேட தலைப்புக்களின் கீழ் அறிக்கைகளை வெளியீடு செய்தல்
- தொகைமதிப்புத் தரவுகளைப் பரப்பாக்கம் செய்யும் மாநாடுகளை நடாத்துதல்

**தொகைமதிப்புப் படிவங்கள்**

தொகைமதிப்பிலே நபர்களைக் கணக்கெடுப்பதற்காக இரண்டு வகையான படிவங்கள் பயன்படுத்தப்பட்டன.

1) குடிசன மற்றும் வீட்டு வசதிகள் படிவம் - இது F3 படிவம் என அடையாளப்படுத்தப்பட்டது. பிரதான படிவமான இந்தப் படிவம் நபர்கள் வழமையாக

வசிக்கும் இடங்களுக்காக பூரணப்படுத்தப்பட்டது. இது சகல வீட்டுக் கூறுகள், கூட்டு வசிப்பிடங்கள் மற்றும் வசிப்பிடமற்ற கட்டிடக் கூறுகள் ஆகிய மூன்று வகைகளிலும் நபர்கள் வசித்தல் பூரணப்படுத்தப்பட்டது. நபர்கள் வசிக்கும் வீட்டுக் கூறுகளில் மட்டும் வீட்டு வசதிகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படும்.

**2)** வசிப்பதற்கு வீடற்ற நபர்களுக்கான படிவம் - இது F4 என்ற பெயரால் அழைக்கப்பட்டது. வசிப்பதற்கு வீடற்ற நபர்களுக்காக இந்தப் படிவம் பூரணப்படுத்தப்பட்டது.

தொகைமதிப்பு படிவம் (F3) மூலம் தகவல் சேகரிக்கப்பட்ட பிரதான தலைப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| மக்களியல் தகவல்கள் | – | பிறந்த திகதி, பால் விபரம், சமயம், இனம், விவாக அந்தஸ்து, குடிப்பெயர்வுத் தகவல்கள், உடல் மற்றும் உள ரீதியான இடர்பாடுகள், கல்வி மட்டம், மொழியறிவு மற்றும் கணினி அறிவு, ஈடுபட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகள், கருவள வீதம் |
| தற்காலிகமாக வெளிநாடு சென்றுள்ள நபர்கள் | – | சென்றிருக்கும் வெளிநாடு, வெளிநாடு சென்றமைக்கான காரணம் |
| வீட்டுக் கூறின் தகவல்கள் | – | வீட்டுக் கூறின் அமைப்பு, சுவர், தரை மற்றும் கூரையினை அமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள் நிர்மாணிக்கப்பட்ட வருடம் |
| குடித்தனக் கூறின் தகவல்கள் | – | குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கம் |
| | – | வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மார்க்கம் |
| | – | சுகாதார வசதிகள் |
| | – | தொடர்பாடல் வசதிகள் மற்றும் இணைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் முறைகள் |

**தொகைமதிப்பு உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்**

தொகைமதிப்பு உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. முதலில் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் பிரதான பயிற்றுவிக்கும் உத்தியோகத்தர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டனர். மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் 25 மாவட்டங்களுக்காகவும் ஒரே விதத்தில் நடாத்தப்பட்டது. இதற்காக 3 மொழிகளிலும் முன்வைப்பு (Presentation) வேலைத்திட்டங்கள் கணினி மூலம் (Powerpoint)

தயாரிக்கப்பட்டது. கிராம உத்தியோகத்தர்களுக்காக மாவட்ட மட்டத்திலான வேலைத்திட்டங்களை நடாத்துதல் பயிற்சியளிக்கப்பட்ட திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்பு கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஒரு பயிற்சி வகுப்பிற்கான கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 45 ஆக மட்டுப்படுத்தப்பட்டதுடன் சகல பயிற்சி வகுப்புக்களுக்காகவும் கணினி மூலம் (Powerpoint) தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் பயன்படுத்தப்பட்டன. 2001 ஆம் ஆண்டு தொகைமதிப்பில் தொழில்நுட்பம் இந்தளவிற்கு முன்னேற்றம் கொண்டதாக இல்லாத காரணத்தினால் அதற்காக அச்சிடப்பட்ட அறிவுறுத்தல்கள் பயன்படுத்தப்பட்டன. பயிற்சி வகுப்பு மேற்பார்வையில் திணைக்களத்தின் சிரேஸ்ட அதிகாரிகள் பங்குபற்றியதுடன் சகல பயிற்சி வகுப்புக்களும் பிரதேச செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்டது. கணக்கெடுக்கும் உத்தியோகத்தரால் எழுப்பப்படும் வினாக்களுக்கு தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் இம்முறை மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை அட்டவணை 1.1 இல் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை 1.1 : 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை

| | மாவட்டம் | நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்புக்களின் எண்ணிக்கை | மேற்பார்வை உத்தியோகத்தர்கள் | கணக்கெடுக்கம் உத்தியோகத்தர்கள் | பிரதித் தொகைமதிப்பு ஆணையாளர்கள் | உதவித் தொகைமதிப்பு ஆணையாளர்கள் | ஏனைய தொழில்நுட்பமல்லா உத்தியோகத்தர்கள் | தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | உதவித் தொகைமதிப்பு அத்தியட்சகர் | பிரதேசத் தொகைமதிப்பு உத்தியோகத்தர்கள் | ஏனைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் |
| | **முழுத் தொகை** | **2562** | **16304** | **80046** | **356** | **356** | **1770** | **59** | **518** | **216** |
| 1 | கொழும்பு | 224 | 1094 | 9768 | 14 | 14 | 70 | 20 | 58 | 130 |
| 2 | கம்பஹா | 239 | 1568 | 7871 | 14 | 14 | 70 | 4 | 32 | 26 |
| 3 | களுத்துறை | 138 | 865 | 4323 | 15 | 15 | 75 | 3 | 30 | 17 |
| 4 | கண்டி | 183 | 1270 | 5545 | 21 | 21 | 105 | 2 | 27 | 2 |
| 5 | மாத்தளை | 69 | 550 | 1990 | 12 | 12 | 60 | 1 | 16 | 1 |
| 6 | நுவரெலியா | 83 | 553 | 2576 | 6 | 6 | 30 | 2 | 9 | - |
| 7 | காலி | 135 | 915 | 3946 | 20 | 20 | 90 | 2 | 26 | 5 |
| 8 | மாத்தறை | 105 | 678 | 3115 | 17 | 17 | 85 | 2 | 21 | 4 |
| 9 | அம்பந்தோட்ட | 78 | 596 | 2306 | 13 | 13 | 65 | 1 | 15 | 2 |
| 10 | யாழ்ப்பாணம் | 77 | 483 | 2309 | 16 | 16 | 80 | - | 20 | - |
| 11 | மன்னார் | 23 | 153 | 664 | 6 | 6 | 30 | - | 8 | - |
| 12 | வவுனியா | 24 | 149 | 820 | 5 | 5 | 25 | - | 6 | 2 |
| 13 | முல்லைத்தீவு | 25 | 159 | 559 | 7 | 7 | 35 | 1 | 10 | - |
| 14 | கிளிநொச்சி | 17 | 122 | 588 | 5 | 5 | 25 | - | 8 | - |
| 15 | மட்டக்களப்பு | 69 | 391 | 1868 | 15 | 15 | 75 | 1 | 19 | - |
| 16 | அம்பாறை | 78 | 565 | 2135 | 21 | 21 | 105 | 2 | 24 | 3 |
| 17 | திருகோணமலை | 46 | 282 | 1452 | 12 | 12 | 60 | 2 | 15 | 2 |
| 18 | குருணாகல் | 219 | 1662 | 6392 | 31 | 31 | 155 | 3 | 35 | 4 |
| 19 | புத்தளம் | 91 | 602 | 2626 | 17 | 17 | 85 | 1 | 23 | 5 |
| 20 | அநுராதபுரம் | 115 | 742 | 3332 | 23 | 23 | 115 | 2 | 27 | 1 |
| 21 | பொலன்னறுவை | 46 | 320 | 1383 | 8 | 8 | 40 | 1 | 11 | 1 |
| 22 | பதுளை | 110 | 598 | 3260 | 16 | 16 | 80 | 2 | 20 | - |
| 23 | மொனராகலை | 65 | 361 | 1920 | 12 | 12 | 60 | 1 | 17 | 3 |
| 24 | இரத்தினபுரி | 144 | 701 | 4602 | 18 | 18 | 90 | 4 | 25 | 6 |
| 25 | கேகாலை | 94 | 605 | 2896 | 12 | 12 | 60 | 2 | 16 | 2 |
| | வேறு | 65 | 320 | 1800 | | | | | | |

குறிப்பு :

1. ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் மாவட்டத் தொகைமதிப்பு ஆணையாளர் மற்றும் மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர் ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டனர்.
2. எனைய தொழில்நுட்பமல்லா உத்தியோகத்தர்களாக கணக்காளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் உள்ளடங்கலாக வேறு உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

## பிரச்சார நடவடிக்கைகள்

தொகைமதிப்பில் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரச்சார நடவடிக்கைகள் மிகவும் பயனுடையதாகும். சனத்தொகையில் பல்வேறு குழுக்களை முன்னிலைப்படுத்தி இந்தப் பிரச்சார நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன. இது தொடர்பில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### பாடசாலைப் பிள்ளைகளுக்கான சித்திரப் போட்டி

பாடசாலை பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்களைத் தெளிவுபடுத்துவதன் ஊடாகத் தொகைமதிப்பின் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக போஸ்டர் சித்திரப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டதுடன் தரம் 6 – 9 வகுப்புக்களுக்காக கனிஷ்ட பிரிவுப் போட்டியும் தரம் 10 – 13 இற்காக சிரேஷ்ட பிரிவுக்கான போட்டியும் நடாத்தப்பட்டன. இதன்போது முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தைப் பெற்ற வெற்றியாளர்களுடன் மேலும் 40 வெற்றியாளர்கள் நடுவர் குழாத்தினால் தெரிவு செய்யப்பட்டனர். இரண்டு பிரிவுகளிலும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு பணப் பரிசில்கள் 2010.10.10 ஆம் திகதி விமர்சையாக நடைபெற்ற உலகப் புள்ளிவிபரவியல் தினத்தில் வழங்கப்பட்டன.

இரண்டு பிரிவுகளிலும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற சித்திரப் போஸ்டர்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**கனிஷ்ட பிரிவு (தரம் 6 – 9)**

முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம்









**சிரேஸ்ட பிரிவு (தரம் 10 - 13)**

| முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
| --- | --- | --- |
|  |  |  |

### தொகைமதிப்பு பிரச்சார ஸ்டிக்கர் (ஒட்டி)

கள நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட திணைக்களத்தின் 50 அதிகமான உத்தியோக பூர்வ வாகனங்களின் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தொகைமதிப்பு பற்றிய ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளில் ஸ்டிக்கர்களை ஒட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இலங்கைப் போக்குவரத்து சபையினால் (இ.போ.ச) இந்த ஸ்டிக்கர்கள் நாடு முழுவதும் உள்ள பேருந்துகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

### தொகைமதிப்புச் செய்தி

திணைக்களத்தின் கடிதத் தலைப்புக்கள் மற்றும் தபால் உறைகளில் தெகைமதிப்புச் செய்தி அச்சிடப்பட்டது. மேலும் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தொகைமதிப்பு பை, தொப்பி, பேனை மற்றும் பிளாஸ்டிக் கோவைகளில் தொகைமதிப்பு செய்தியினை அவ்விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### தொகைமதிப்பு புத்தக அடையாளங்கள் (Book Mark)

தொகைமதிப்பு செய்திகளை உள்ளடக்கிய புத்தக அடையாளங்கள் (Book Mark) மற்றும் A4 அளவிலாள 300,000 துண்டுப் பிரசுரங்கள் 2010 ஆம் ஆண்டு கண்டி பல்லேகளவில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் மக்களுக்கு விநியோக்கிக்கப்பட்டன.

**தொகைமதிப்பு நாட்காட்டிகள்**

2011 ஆம் ஆண்டு நாட்காட்டிகள் வருடத்திற்காக அச்சிடப்பட்ட அரசாங்கத்தின் மேசை நாட்காட்டிகள் மற்றும் சிறிய நாட்காட்கள் 200,000 இல் தொகைமதிப்புச் செய்திகள் அச்சிடப்பட்டதுடன் 2011 இல் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் இவை விநியோகிக்கப்பட்டன. இந்த சிறிய நாட்காட்டிகளுக்காக பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட தொகைமதிப்பு போஸ்டர் சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற சித்திரங்கள் உள்ளடக்கப்பட்டன.

**தொகைமதிப்புக் கையேடுகள்**

நாட்டின் பொதுமக்களைத் தொகைமதிப்புத் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக கையேடுகளை அச்சிட்டு விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன.

இதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொகைமதிப்புக் கையேடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.







**தொகைமதிப்புத் தகவல்கள் பத்திரங்கள்**

தொகைமதிப்பின் முன்னேற்றங்கள் திணைக்களத்தின் தொகைமதிப்பு இணையத்தளத்தினூடாகப் பிரசாரம் செய்யப்பட்டதுடன் தொகைமதிப்பின் நிரற்படுத்தும் கட்டத்திலே லங்காதீப மற்றும் தினகரன் ஆகிய செய்தித்தாள்களுடன் உரிய தொகைமதிப்புத் தகவல் பத்திரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிப்பப்பட்டன.

**தொகைமதிப்புச் சுவரொட்டிகள்**

தொகைமதிப்புத் தொடர்பில் 75,000 சுவரொட்டிகள் நிரற்படுத்தும் கட்டத்திலும் 200,000 சுவரொட்டிகள் கணக்கெடுக்கும் கட்டத்தின் போதும் அச்சிடப்பட்டு மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## தொகைமதிப்புப் பதாதைகள்

இறுதித் தொகைமதிப்புக் கட்டமான கணக்கெடுக்கும் கட்டத்தின் போது இரண்டு வகையான பதாதைகள் 2,000 அச்சிடப்பட்டு மாவட்டச் செயலகங்களூடாக மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இந்தப் பதாதைகள் பொதுமக்கள் நடமாடும் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்டன.







ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினால் பாரிய அளவிலான 30 காட்சிப் பதாதைகளைத் தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.

## ஊடகவியலாளர் மாநாடு

தொகைமதிப்பின் அமுலாக்கல் நடவடிக்கைகள் இடம்பெற்ற காலத்தில் அரசாங்க ஊடகத் திணைக்களத்தின் மூலம் 3 ஊடகவியலாளர் மாநாடுகள் நடாத்தப்பட்டதுடன் ஊடகவியலாளர்களைத் தெளிவுபடுத்துவதற்காக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடங்கள் பயன்படுத்தப்பட்டன.

## கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்களைத் தெளிவுபடுத்தும் செய்திகள்

தொகைமதிப்பின் கணக்கெடுக்கும் கட்டத்தின் போது கல்வி அமைச்சின் ஊடாக நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் தொகைமதிப்பின் முக்கியத்துவம் பற்றி கடிதமொன்று அனுப்பப்பட்டதுடன் அதிபர் மூலம் பாடசாலை மாணவர்களைத் தெளிவுபடுத்துவதற்கும் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் ஒத்துழைப்பினை வழங்குவன் முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துவதற்கும் இயலுமானதாகவிருந்தது.

**தொலைக்காட்சி மூலம் பிரச்சார நடவடிக்கைகள்**

தொகைமதிப்பின் நிரற்படுத்தும் கட்டத்தின் போதும் மற்றும் கணக்கெடுக்கும் கட்டத்தின் போதும் தொலைக்காட்சி ஊடகம் மூலம் பிரசார விளம்பரங்கள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் பொதுமக்களைத் தெளிவுபடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**தொகைமதிப்பின் தகவல்களை கணினிப் பதிவு செய்தல்**

1946 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மற்றும் விட்டு வசதிகள் தொகைமதிப்பிலே தகவல்களைத் தயார் செய்து பகுப்பாய்வு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டது துளை அட்டை (Punch Card) முறை மூலம் இயந்திரத்திற்கு தரவுகளை உள்ளடக்கும் முறைமையாகும். 1953 இல் இந்த இயந்திரம் தற்காலப்படுத்தப்பட்டது. 1971 தொடக்கம் கணினித் தொழில் நுட்பம் அதிகளவில் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து தொகைமதிப்புத் தகவல்கள் கணினிப் பதிவு செய்யும் முறைமை அதிகளிவில் வளர்ச்சி பெற்றுள்ளது.

1983 இல் கணினித் தொழில்நுட்பம் மேலும் வளர்ச்சி பெற்றதுடன் தொகைமதிப்புத் தரவுகளைப் பதிவ செய்வதற்காக IBM4331 வகையைச் சேர்ந்த கணினி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் என்பன பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளன. 2001 ஆம் ஆண்டில் தொகைமதிப்புத் தரவுகளைக் கணினிப் பதிவு செய்தல் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன. அதாவது “கைகளால் குறியீடு செய்தல்” மற்றும் “கணினி மூலம் குறியீடு செய்தல்” என்ற வகையிலாகும்.

எவ்வாறாயினும் கைகளால் தகவல்களைக் பதிவு செய்யும் முறைமைக்காக அதிகளவான மனித உழைப்பு மற்றும் காலம் தேவைப்படுவதால் அதற்குப் பதிலாக 2012 தொகைமதிப்பிலே தரவு வருடல் (Scanning) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இதற்காக OMR/ICR போன்ற இலக்கப் பிரதிவிம்பங்களின் மூலம் தரவுகள் உள்வாங்கப்பட்டு விசேட தரக்கட்டுப்பாட்டு (Quality Control) முறைமைகளைப் பயன்படுத்தி தொகைமதிப்புத் தரவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன. இம்முறைத் தொகைமதிப்பிலே சகல தரவுகளினதும் துல்லியத் தன்மை பரீட்சிக்கப்பட்டு தேவையான திருந்தங்ககளை மேற்கொள்ளல் அனைத்தும் கணினி மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நடைமுறைச் சமூக அமைப்பில் வீடுகளுக்குச் சென்று தொகைமதிப்புத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. பகல் வேளைகளில் தொழில்களில் ஈடுபடுவதால் வீடுகளில் வசிக்கும் நபர்களைச் சந்தித்தல் சிரமமானதாகும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் தெரிவு செய்யப்பட்ட 300 வீட்டுக் கூறுகளில் தகவல் சேகரிப்பதற்காக e- census தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இதன்போது குடித்தனங்களுக்கு இரகசிய கடவுச் சொல் அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கமையத் தொகைமதிப்புத் தகவல்கள் கணினி மூலம் இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கும் அந்தத் தகவல்களின் இரகசியத் தன்மையினைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் கடந்த தொகைமதிப்புக்களிலே பதிலளிப்பவரின் தொழில் மற்றும் கைத்தொழில் தகவல்களுக்கு குறியீடு செய்தல் உத்தியோகத்தர்களால் மேற்கொளள்ப்பட்டதுடன் இம்முறை அதற்காக கணினி மென்பொருள் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் தயாரித்து வழங்கப்பட்டது. இதற்கமைய தொகைமதிப்பின் நூற்றுக்கு 5% மாதிரிக்கு இந்தக் குறியீடு செய்யப்பட்டு முழுச் சனத்தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்டது.

**படிமுறை 4 – தரவுப் பகுப்பாய்வு மற்றும் தொகைமதிப்புத் தகவல்களை வெளியீடு செய்தல்**

தொகைமதிப்புத் தகவல்களை வெளியீடு செய்தல் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. இதற்குக் காரணம் ஒவ்வொரு தொகைமதிப்புக் கண்டத்தினதும் (80,000 அளவிலான)விசேட பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டு துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு கணிசமான காலப்பகுதி தேவைப்பட்டமையாகும். இதற்கமைய கீழ் குறிப்பிடப்படும் வகையில் தொகைமதிப்புத் தகவல்கள் வெளியீடு செய்யப்பட்டன.

1) தொகைமதிப்புத் தகவல் சேகரிக்கப்பட்டு நிறைவடைந்தவுடன் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களால் தங்களுடைய தொகைமதிப்புக் கண்டத்திற்கான சாராம்சப் படிவங்கள் தயாரிக்கப்படும். கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான சகல தொகைமதிப்புக் கண்டங்களினதும் சாராம்ச அறிக்கைகள் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலான சாராம்ச அறிக்கைகள் தயாரிக்கப்படும். அதன் பின்னர் பிரதேச செயலாளர் பிரிவின் புள்ளிவிபர உத்தியோகத்தரின் உதவியுடன் பிரதேச செயலாளர் பிரிவுக்கான சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினதும் கூட்டுத்தொகை பெறப்பட்டு பிரதேச செயலாளர் பிரிவுக்கான அறிக்கை தயாரிக்கப்படும். பின்னர் மாவட்ட செயலகத்தில் புள்ளிவிபரப் பிரிவின் மூலம் மாவட்ட மட்டத்தில் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தொகைமதிப்புப் பிரிவுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும். நாட்டின் சகல மாவட்டங்களினதும் சாராம்சத் தகவல்களை உள்ளடக்கி இலங்கைக்கான அறிக்கை தயாரிக்கப்படும். தொகைமதிப்பு நிறைவடைந்து ஒரு மாத காலத்தினுள் அந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

2) கணக்கெடுக்கும் உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்ட சாராம்ச அட்டவணைகளைப் பயன்படுத்தி பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தகவல்களை உள்ளடக்கிய 2 சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் அறிக்கைகள் 2012 ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது.

3) தொகைமதிப்பு தகவல்களை அவற்றைப் பயன்படுத்துவோருக்கு விரைவாக பெற்றுக்கொடுப்பதற்காக 5% மாதிரி மூலம் பெற்றுக்கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டது தொகைமதிப்புச் செயன்முறைகளின் ஆரம்பத்திலாகும். இந்த மாதிரித் தொகைமதிப்புக் கண்டங்களுக்காக வேறான நிறத்தில் தொகைமதிப்புப் படிவங்கள் அச்சிடப்பட்டதுடன் அவை முதலில் தரவுவருடல் செயன்முறைக்குட்படுத்தப்பட்டு தரவுகளின் துல்லியத்தன்மை பரீட்சிக்கப்பட்டு அதன் பின்னர் விபரங்கள் உள்ளடங்கிய 5% மாதிரிக்குரிய அறிக்கை 2014 மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.

4) அதிக எண்ணிக்கையான தொகைமதிப்பு இறுதித் தொகைமதிப்பு அட்டவணைகள் மற்றும் மாகாண மட்டத்திலான அறிக்கை 2014 டிசம்பர் மாதம் திணைக்களத்தின் இணையத் தளத்தினூடாக வெளியிடப்பட்டது.

5) 2014 டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி தொகைமதிப்பின் பிரதான தகவல்களை வெளியீடு செய்யும் மாநாடு 500 அளவிலான அழைப்பாளர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டதுடன் அதனோடிணைந்ததாக 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் பிரதான தகவல்கள் பலவற்றை உள்ளடக்கிய அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது.

தொகைமதிப்புத் தகவல்களை இயன்றளவிற்குப் பயன்படுத்துதல் நாட்டு மக்கள் அனைவரினதும் கடமையாகும். சனத்தொகை அதிகரிப்பால் அல்லது குறைவடைவதால் ஏற்படும் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு பல்வெறு பிரதேசங்களில் சனத்தொகை குவிவடைவதற்கு காரணங்களைத் தேடியறிவதைப் போன்று சனத்தொகை மூப்படைவதால் முதியோர் சனத்தொகையைப் பராமரிப்பதற்கு தீர்மானம் எடுத்தல், குடும்பக் கட்டமைப்பில் காலமாற்றத்திற்கேற்ப ஏற்படும் மாற்றத்தின் காரணமாக குடும்பத்திற்கும் நாட்டிற்கும் அது பாதிப்பை ஏற்படுத்தும் விதம் போன்ற பல்வேறு விடயத் தலைப்புக்களில் தொகைமதிப்புத் தகவல்களைக் கலந்துரையாட முடியும். அதற்காக நாட்டு மக்கள் அறிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் தீர்மானம் எடுக்கும் போது தொகைமதிப்புத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டால் அந்தத் தீர்மானங்கள் மிகவும் சரியானதாகவும் மனித சமுதாயத்தின் அபிவிருத்திக்காகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## இலங்கையில் தொகைமதிப்புக்காக உள்ளடக்கப்பட்ட தலைப்புக்கள் 1871 – 2012

| தொகைமதிப்புப் படிவத்தினுள் உள்ளடக்கப்பட்ட தலைப்புக்கள் | தொகைமதிப்பு வருடம் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931* | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 | 2001 | 2012 |
| **<u>மக்களியல் மற்றும் தனிநபர் தகவல்கள்</u>** | | | | | | | | | | | | | | |
| பெயர் | x | x | x | x | x | x | x | xs | x | x | x | x | x | x |
| குடித்தனத் தலைவருடனான உறவு முறை | x | x | x | - | - | - | - | x | x | x | x | x | x | x |
| பால் விபரம் | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x |
| பிறந்த திகதி | - | - | - | - | - | - | - | - | - | x | x | x | x | x |
| வயது | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | - | x |
| விவாக அந்தஸ்து | x | - | - | x | x | x | x | x | xs | x | x | x | x | x |
| இனத் தொகுதி | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x |
| சமயம் | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x | x |
| பிரஜாவுரிமை | - | - | - | - | - | - | - | - | x | x | x | x | x | x |
| தேசிய அடையாள அட்டை இலக்கம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | x |
| **<u>கல்வித் தகவல்கள்</u>** | | | | | | | | | | | | | | |
| சிங்களம் மற்றும் தமிழில் பேசும் ஆற்றல் | - | - | - | - | - | - | - | x | x | x | - | - | - | - |
| ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் | - | - | - | - | x | x | x | x | x | x | - | - | - | - |
| சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | x | x |
| எழுதத்றிவு | - | x | x | x | x | x | x | x | x | x | x | - | - | - |
| ஆங்கில அறிவு | - | - | - | x | x | x | x | x | x | x | - | - | - | - |
| சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியறிவு | - | - | - | - | - | - | - | - | - | - | - | x | x | x |
| கல்வித் தகைமைகள் | - | - | - | - | - | - | - | - | xs | x | x | x | x | x |
| பாடசாலை செல்லல் | - | - | - | - | - | - | - | - | - | - | x | x | x | x |
| தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | x |

| தொகைமதிப்புப் படிவத்தினுள் உள்ளடக்கப்பட்ட தலைப்புக்கள் | தொகைமதிப்பு வருடம் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931* | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 | 2001 | 2012 |
| **<u>பொருளாதாரத் தகவல்கள்</u>** | | | | | | | | | | | | | | |
| செய்யும் வேலை | - | - | - | - | - | - | - | - | - | X | X | X | X | X |
| பிரதான தொழில் | X | X | X | X | X | X | X | X | XS | X | X | X | X | X |
| உப தொழில் | - | - | - | X | X | X | - | - | - | - | - | - | - | - |
| கைத்தொழில் | - | - | - | - | - | - | - | X | X | X | X | X | X | X |
| தொழிலின் தன்மை | - | - | - | - | - | - | - | X | X | X | X | X | X | X |
| வருமானம் | - | - | - | - | - | - | - | X | XS | - | - | - | - | - |
| தங்கிவாழல் | - | - | - | X | X | X | X | X | X | - | - | - | - | - |
| வேலையற்ற காலப்பகுதி | - | - | - | - | - | - | - | - | XS | - | X | - | - | - |
| தொழில் தேடுகின்றாரா? | - | - | - | - | - | - | - | - | - | - | - | X | - | - |
| தொழில் தேடிய காலப்பகுதி | - | - | - | - | - | - | - | - | - | - | - | X | - | - |
| தொழில் தேடமைக்கான காரணம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | X | - | - |
| பொருளாதாரமற்ற நடவடிக்கைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | X |
| **<u>குடியகல்வு மற்றும் வசிப்பிடம் தொடர்பான தகவல்கள்</u>** | | | | | | | | | | | | | | |
| பிறந்த மாவட்டம் | X | - | X | X | X | X | X | X | X | X | XS | XS | X | X |
| வழமையாக வசிக்கின்ற மாவட்டம் | - | - | - | - | - | - | - | - | - | - | XS | XS | X | - |
| வழமையாக வசிக்கும் இடத்தில் வசிக்கும் காலம் | - | - | - | - | - | - | - | - | - | - | XS | XS | X | X |
| இதற்கு முன்னர் வசித்த இடம் | - | - | - | - | - | - | - | - | - | - | XS | XS | X | X |
| இலங்கையில் வசித்த காலம் | - | - | - | - | - | - | - | X | X | - | - | - | - | - |
| **<u>விவாக அந்தஸ்து மற்றும் கருவளம்</u>** | | | | | | | | | | | | | | |
| திருமணமான திகதி | - | - | - | - | - | - | - | X | XS | - | - | - | - | - |
| இதற்கு முன்னர் திருமணமானவராயின் முதல் திருமணம் செய்த திகதி | - | - | - | - | - | - | - | X | XS | - | - | - | - | - |
| முதல் திருமணத்தின் போது வயது | - | - | - | - | - | - | - | - | - | - | XS | - | - | - |
| | | | | | | | | | | | | | | - |
| முதல் திருமணத்தின் கால எல்லை | - | - | - | - | - | - | - | - | - | - | XS | - | - | |

| தொகைமதிப்புப் படிவத்தினுள் உள்ளடக்கப்பட்ட தலைப்புக்கள் | தொகைமதிப்பு வருடம் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931* | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 | 2001 | 2012 |
| ஒரு முறைக்கு மேல் திருமணம் செய்தவராயின் ஏனைய திருமணங்களின் கால எல்லை | - | - | - | - | - | - | - | - | - | - | xs | - | - | - |
| முதல் குழந்தை பிறந்த பொது வயது | - | - | - | - | - | - | - | x | xs | - | - | - | - | - |
| மொத்த உயிர்ப்பிறப்புக்களின் எண்ணிக்கை | - | - | - | - | - | - | - | x | xs | - | xs | - | x | x |
| தற்போது உயிருடனுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை | - | - | - | - | - | - | - | - | - | - | xs | - | x | x |
| கடைசி உயிர்ப்பிறப்பு நிகழ்ந்த திகதி | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | x |

**<u>ஏனைய தலைப்புக்கள்</u>**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வழமையாக வசிக்குமிடத்திலிருந்து தொழில் நிலையத்திற்கு அல்லது பாடசாலைக்குள்ள தூரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | x | - | - |
| தொழிலுக்கு அல்லது பாடசாலைக்குச் செல்லும் பிரதான போக்குவரத்து ஊடகம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | x | - | - |
| தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கும் குடித்தனத்தின் உறுப்பினர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | x |

குறிப்பு: X சகல நபர்களிடமும் சேகரிக்கப்பட்டது
xs மாதிரி ஒன்றிலிருந்து மட்டும் தகவல் சேகரிக்கப்பட்டது.
- தகவல் சேகரிக்கப்படவில்லை
*கொழும்பு நகரசபைப் பிரதேசத்தினுள் மட்டும் நபர்களின் விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன் ஏனைய பிரதேசங்களில் நபர்களின் கணக்கெடுப்பு மட்டும் மேற்கொள்ளப்பட்டது.

# இலங்கையின் நிருவாகப் பிரிவுகள்

## 2.0

## இலங்கையின் நிருவாகப் பிரிவுகள்

இலங்கையின் குடிசன மற்றும் விட்டு வசதிகள் தொகைமதிப்புக்களின் போது சனத்தொகை பற்றிய தகவல்கள் நிருவாகப் பிரிவு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும். இதன்போது இலங்கையில் மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அதன் கீழ் காணப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் ஏனைய நிருவாக எல்லைகளை ஊடுறுத்துச் செல்லாதவாறு தொகைமதிப்புக் கண்டம் என்றவாறு பிரித்துத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அற்கமையத் தொகைமதிப்புத் தகவல்களை வெளியீடு செய்யும் போது தேசிய, மாவட்டம் பிரதேச செயலாளர் பிரிவு, கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் பிரிவு ரீதியாக என்ற வகையில் பல்வெறு மட்டங்களில் தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக www.statistics.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அத்தியாயத்தின் மூலம் இலங்கையின் நிருவாகப் பிரிவுகளின் வளர்ச்சி மற்றும் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் போது உரிய பிரிவுகளின் தாக்கங்களைச் சுருக்கமாக விமர்சிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**மாகாண அடிப்படையில் பிரித்தல்**

தற்கால இலங்கையின் நிருவாக எல்லைகள் பிரித்தானியக் காலனித்துவ யுகத்தில் அதாவது 1833 இல் மேற்கொள்ளப்பட்ட கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மாகாணங்களாகப் பிரிக்கும் முறையின் வளர்ச்சியாகக் குறிப்பிடலாம்.

1833.10.01 ஆம் திகதி வெளியிடப்பட்ட கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் திசைகளுக்கமைய இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டது. அதாவது, வட மாகாணம்,தென்மாகாணம், கிழக்கு மாகாணம், மேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் என்றவாறாகும்.

பிற்காலத்தில் நிருவாக மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் விரிவாக்கம் காரணமாக இந்தப் பிரிப்பானது எண்ணிக்கை மற்றும் நில விஸ்தீரண எல்லைக்கமைய மாற்றங்களுக்கு உட்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

1. 1845 ஒக்டோபர் 01 அம் திகதி மேல் மாகாணம் “வடமேல் மாகாணம்” மற்றும் “மேல் மாகாணம்” என இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்படல்
2. 1873 ஒக்டோபர் 06 ஆம் திகதி வட மாகாணத்திலிருந்து நுவரகாலாவிய மாவட்டம் (தற்போதைய அநுராதபுரம் மாவட்டம்) கிழக்கு மாகாணத்தின் தம்மன்கடுவ வடமேல் மாகாணத்தின் ஏழுகோறளையின் தமிழ் பற்று ஆகியவற்றை ஒன்றிணைத்து “வடமத்திய மாகாணம்” என்ற பெயரில் புதிய மாகாணம் ஒன்றை உருவாக்குதல்
3. 1886 பெப்ரவரி 05 அம் திகதி மத்திய மாகாணம் “மத்திய மாகாணம்” மற்றும் “ஊவா மாகாணம்” என இரண்டாகப் பிரிக்கப்படல்.
4. 1889 பெப்ரவரி 04 ஆம் திகதி மேல் மாகாணம் “மேல் மாகாணம்” மற்றும் “சப்பிரகமுவா” மாகாணம் என இரண்டாகப் பிரிக்கப்படல்.

அதற்கமைய 1889 ஆகும் போது ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டதுடன் அன்று தொடக்கம் அவ்வப்போது ஏற்பட்ட சிறு எல்லைப் பிரச்சினைகளைத் தவிர இதுவரை மாகாணங்களின் எண்ணிக்கையில் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை. இலக்கம் 2.1 தேசப்படம் இலங்கையின் மாகாணப் பிரிப்புக்களைக் காட்டுகின்றது.

உரு 2.1 மாகாண மட்டத்திலான இலங்கைத் தேசபப்டம்



### மாவட்ட அடிப்படையில் பிரித்தல்

கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் 1833 இல் அமைக்கப்பட்ட 05 மாகாணங்கள் 23 மாவட்டங்களை உள்ளடக்கியது. அந்த மாவட்ட எல்லைகள் அவ்வப்போது மாற்றங்களுக்கு உட்பட்டதுடன் அந்த மாற்றத்தின் காரணமாக பின்னர் நடாத்தப்பட்ட குடிசனத் தொகைமதிப்புக்களின் போது மாவட்டங்களின் எண்ணிக்கை மாற்றத்திற்கு உட்பட்டது. அது கீழே அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1 : ஒவ்வொரு தொகைமதிப்பு வருடங்களின் போது தொகைமதிப்பு மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்கள்**

| மாவட்டம் | தொகைமதிப்பு வருடம் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 | 2001* | 2012 |
| **மொத்தம்** | **18** | **21** | **22** | **20** | **20** | **20** | **20** | **20** | **20** | **22** | **22** | **24** | **25** | **25** |
| கொழும்பு | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| மீகமுவை | | X | X | | | | | | | | | | | |
| கம்பஹா | | | | | | | | | | | | X | X | X |
| களுத்துறை | | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| கண்டி | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| மாத்தளை | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| நுவரெலியா | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| பதுளை | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| காலி | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| மாத்தளை | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| அம்பந்தோட்டை | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| யாழ்ப்பாணம் | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| மன்னார் | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| வவுனியா | | X | X | | | | | X | X | X | X | X | X | X |
| முல்லைத்தீவு | X | X | X | X | X | X | X | | | | | X | X | X |
| கிளிநொச்சி | | | | | | | | | | | | | X | X |
| மட்டக்களப்பு | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| அம்பாறை | | | | | | | | | | X | X | X | X | X |
| திருகோணமலை | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| குருணாகலை | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| புத்தளம் | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| சிலாபம் | | | X | X | X | X | X | X | X | | | | | |
| அநுராதபுரம் | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| பொலன்னறுவை | | | | | | | | | | X | X | X | X | X |
| மொனராகலை | | | | | | | | | | X | X | X | X | X |
| இரத்தினபுரி | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |
| கேகாலை | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X | X |

*2001 ஆம் ஆண்டில் 18 மாவட்டங்களில் மட்டும் தொகைமதிப்பு நடாத்தப்பட்டதுடன் ஏனைய 7 மாவட்டங்களில் மதிப்பீட செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1 காட்டப்படுள்ளவாறு 1871 ஆம் ஆண்டில் 18 மாவட்டங்கள் தொகைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டன. பின்னர் நீர்கொழும்கு, களுத்துறை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்கள் முறையே 1875, 1876 மற்றும் 1879 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டன. ஆகையால் 1881 குடிசன தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் காணப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை

21 ஆகும். அவ்வாறே 1887 இல் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டம் புத்தளம் மற்றும் சிலாபம் என இரண்டு மாவட்டங்களாக பிரித்து வேறுபடத்தப்பட்டன. அப்போது இலங்கையின் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 22 ஆக உயர்வடைந்ததுடன் 1891 குடிசனத் தொகைமதிப்பில் இந்த 22 மாவட்டங்களிலும் தொகைமதிப்பு நடவடிக்கைகள் மேற்கொளள்ப்பட்டன.

அவ்வாறே 1875 இல் நீர்கொழும்பு மாவட்டம் கொழும்மு மாவட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அளுத்குரு கோரளை மற்றும் ஹாபிடிகம கோரளை ஆகியவற்றை ஒன்றிணைத்து அமைக்கப்பட்டதுடன் 1896 இல் மீண்டும் அதனைக் கொழும்பு மாவட்டத்துடன் அணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1898 இல் வவுனியா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசங்களும் வட மாகாணத்திற்குச் சொந்தமான ஏனைய மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டு வவுனியா மாவட்டம் நீக்கப்பட்டது. இந்த விடயங்கள் காரணமாக 1901 குடிசனத் தொகைமதிப்பு மேற்கொள்ளப்பட்ட மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 20 ஆகும்.

1953 இல் பொலன்னறுவை மாவட்டம் அமைக்கப்பட்டது, அப்போது அநுராதபுரம் மாவட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த தமன்கடுவை உதவி அரசாங்க அதிபர் பிரிவு மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டமையாலாகும். அந்தக் காலப்பகுதியிலேயே சிலாபம் மற்றும் புத்தளம் மாவட்டங்கள் ஒரு மாவட்டமாக ஒன்றிணைக்கப்பட்டது. 1959 இல் பதுளை மாவட்டத்தின் வெள்ளவாய புத்தலை மற்றும் வெல்லச ஆகிய பிரிவுகளை ஒன்றிணைத்து மொணராகலை மாவட்டமாக உறுதிப்படுத்தப்பட்டது. 1961 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது. இந்த நிலைம காரணமாக 1963 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே 22 மாவட்டங்கள் காணப்பட்டன. 1971 குடிசனத் தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தில் இந்த நிலைமை அவ்வாறே காணப்பட்டது. 1978 இல் கம்பஹா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர் நாட்டின் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்தது. 1981 குடிசனத் தொபைமதிப்பிலே 24 மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டன. 1971 மற்றும் 1981 காலப்பகுதியில் மாவட்டங்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை எனினும் சில மாவட்டங்களின் எல்லை நிருணயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டதைக் காணக்கூடியதாகவிருந்தது. 2011 மற்றும் 2012 ஆம் வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொகைமதிப்பிலே மாவட்டங்களில் எண்ணிக்கை 25 ஆகக் பதிவுசெய்யப்பட்டமைக்குக் காரணம் 1984 இல் வட மாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டம் உருவாக்கப்பட்டமையாகும். தேசப்படம் 2.2 இன் மூலம் தற்போதைய இலங்கையின் மாவட்டப் பிரிவுகள் காட்டப்பட்டுள்ளன.

**பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கமைய பிரித்தல்**

இலங்கையின் நிருவாகப் பிரிப்புக் கட்டமைப்பில் மாவட்டத்தின் பிரதான உப பிரிப்பாக பிரதேச செயலாளர் பிரிவினை அடையாளப்படுத்தப்படும். இது 1991 வரை உதவி அரசாங்க அதிபர் பிரிவாகப் பெயரிடப்பட்டிருந்தது.

சகல மாவட்டங்களும் நிருவாக வசதிக்காக பிரதேச செயலாளர் பிரவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே கிராம உத்தியோகத்தர் பிரிவு சில கிராமங்களை அல்லது ஒரு கிராமத்தை உள்ளடக்கியது. இலக்கம் 2.2 மற்றும் 2.3 அட்டலணைகள் மூலம்

1981 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை தொடர்பிலான தகவல்கள் காட்டப்பட்டுள்ளன.

உரு 2.2 : மாவட்ட அடிப்படையிலான இலங்கைத் தேசப்படம்



**அட்டவணை 2.2 : மாவட்ட அடிப்படையில் நிருவாகக் கட்டமைப்பு – 1981**

| மாவட்டம் | 1981 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எண்ணிக்கை | கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை | கிராமங்களின் எண்ணிக்கை | மாநகர சபைகளின் எண்ணிக்கை | நகர சபைகளின் எண்ணிக்கை | பிரதேச சபைகளின் எண்ணிக்கை |
| **மொத்தம்** | **245** | **4,113** | **25,453** | **12** | **39** | **83** |
| கொழும்பு | 8 | 121 | 188 | 2 | 4 | 6 |
| கம்பஹா | 13 | 389 | 836 | 1 | 6 | 9 |
| களுத்துறை | 10 | 230 | 630 | - | 4 | 6 |
| கண்டி | 16 | 430 | 1,998 | 1 | 4 | 2 |
| மாத்தளை | 10 | 170 | 881 | 1 | - | 3 |
| நுவரெலியா | 4 | 98 | 648 | 1 | 2 | 1 |
| காலி | 16 | 274 | 1,445 | 1 | 1 | 7 |
| மாத்தறை | 11 | 214 | 690 | - | 2 | 2 |
| அம்பந்தோட்டை | 8 | 165 | 1,014 | - | 2 | 4 |
| யாழ்ப்பாணம் | 16 | 150 | 551 | 1 | 3 | 9 |
| மன்னார் | 4 | 33 | 581 | - | - | 1 |
| வவுனியா | 4 | 23 | 579 | - | 1 | - |
| முல்லைத்தீவு | 4 | 26 | 297 | - | - | 1 |
| மட்டக்களப்பு | 7 | 87 | 667 | 1 | - | 2 |
| அம்பாறை | 12 | 108 | 467 | - | 1 | 2 |
| திருகோணமலை | 9 | 48 | 374 | - | 1 | 3 |
| குருணாகலை | 17 | 510 | 4,141 | 1 | 1 | 3 |
| புத்தளம் | 10 | 178 | 1,001 | - | 2 | 5 |
| அநுராதபுரம் | 16 | 189 | 3,402 | - | 1 | 1 |
| பொலன்னறுவை | 5 | 60 | 381 | - | - | 2 |
| பதுளை | 14 | 151 | 1,126 | 1 | 2 | 4 |
| மொனராகலை | 8 | 88 | 873 | - | - | 1 |
| இரத்தினபுரி | 13 | 175 | 1,586 | 1 | 1 | 3 |
| கேகாலை | 10 | 196 | 1,097 | - | 1 | 6 |

மூலம்: குடிசன மற்றும் வீட்ட வசதிகள் தொகைமதிப்பு அறிக்கை, 1981

**அட்டவணை 2.3 : மாவட்ட அடிப்படையில் நிருவாகக் கட்டமைப்பு – 2012**

| மாவட்டம் | 2012 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை | கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை | கிராமங்களின் எண்ணிக்கை* | மாநகர சபைகளின் எண்ணிக்கை | நகர சபைகளின் எண்ணிக்கை | பிரதேச சபைகளின் எண்ணிக்கை |
| **மொத்தம்** | **331** | **14,021** | **36,822** | **23** | **41** | **271** |
| கொழும்பு | 13 | 557 | 357 | 5 | 5 | 3 |
| கம்பஹா | 13 | 1,177 | 1,565 | 2 | 5 | 12 |
| களுத்துறை | 14 | 762 | 2,352 | - | 4 | 12 |
| கண்டி | 20 | 1,187 | 2,833 | 1 | 4 | 17 |
| மாத்தளை | 11 | 545 | 1,344 | 2 | - | 11 |
| நுவரெலியா | 5 | 491 | 1,199 | 1 | 2 | 5 |
| காலி | 19 | 895 | 2,423 | 1 | 2 | 17 |
| மாத்தறை | 16 | 650 | 1,662 | 1 | 1 | 15 |
| அம்பந்தோட்டை | 12 | 576 | 1,380 | 1 | 1 | 10 |
| யாழ்ப்பாணம் | 15 | 435 | 1,251 | 1 | 3 | 13 |
| மன்னார் | 5 | 153 | 680 | - | 1 | 4 |
| வவுனியா | 4 | 102 | 421 | - | 1 | 4 |
| முல்லைத்தீவு | 6 | 136 | 607 | - | - | 4 |
| கிளிநொச்சி | 4 | 95 | 350 | - | - | 3 |
| மட்டக்களப்பு | 14 | 346 | 947 | 1 | 2 | 9 |
| அம்பாறை | 20 | 503 | 737 | 2 | 1 | 17 |
| திருகோணமலை | 11 | 230 | 602 | - | 2 | 11 |
| குருணாகலை | 30 | 1,610 | 4,533 | 1 | 1 | 19 |
| புத்தளம் | 16 | 548 | 1,328 | - | 2 | 10 |
| அநுராதபுரம் | 22 | 694 | 2,633 | 1 | - | 18 |
| பொலன்னறுவை | 7 | 295 | 629 | - | - | 7 |
| பதுளை | 15 | 567 | 1,960 | 2 | 1 | 15 |
| மொனராகலை | 11 | 319 | 1,346 | - | - | 10 |
| இரத்தினபுரி | 17 | 575 | 2,101 | 1 | 2 | 14 |
| கேகாலை | 11 | 573 | 1,582 | - | 1 | 11 |

மூலம் : தொகைமதிப்புக் கண்டம் தொடர்பான மூலப் பதிவேடு (MRCB)

*ஒரு கிராம எத்தியோகத்தர் பிரிவின் எல்லைக்குள் அடங்காத கிராமங்கள் உரிய கிராம உத்தியோகத்தா பிரிவுக்கமைய வெவ்வேறு கிராமங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

இலக்கம் 2.2 மற்றும் 2.3 அட்டவணைகளுக்கமைய 1981 – 2012 காலப்பகுதியில் இலங்கையில் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை 86 இனாலும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை 9,908 இனாலும் அதிகரித்துள்ளன. அவ்வாறே மாநகர சபைகளின் எண்ணிக்கை 12 இலிருந்து 23 ஆகவும் நகர சபைகளின் எண்ணிக்கை 39 இலிருந்து 41 ஆகவும் அதிகரித்துள்ளன.

# சனத்தொகை வளர்ச்சி, பரம்பல் மற்றும் முன்னேற்றப் போக்கு

## 3.0

## சனத்தொகை வளர்ச்சி பரம்பல் மற்றும் முன்னேற்றப் போக்கு

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் மூலம் இலங்கையின் சனத்தொகையில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் வெளிக்காட்டப்பட்டுள்ளன. 1981 இன் பின்னர் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பொன்றை 2012 இல் நடாத்தக் கூடியதாகவிருந்ததன் காரணத்தினால் சனத்தொகையை ஒப்பீடு செய்யக் கூடிய அண்மித்த தொகைமதிப்பு வருடமாக 1981 இனைப் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. 2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொகைமதிப்பிலே முழு இலங்கையினையும் உள்ளடக்க முடியாமல் போனதுடன் 2001 ஆம் வருடத்தில் தொகைமதிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போன மாவட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட சனத்தொகையையும் உள்ளடக்கி மொத்த சனத்தொகை குறிப்பிடப்பட்டது.

### சனத்தொகை வளர்ச்சி

இலங்கையில் சனத்தொகைமதிப்பு ஆரம்பிக்கப்பட்ட 1871 ஆம் ஆண்டு தொடக்கம் மொத்த சனத்தொகை தொகைமதிப்புக்கிடைப்பட்ட சனத்தொகை அதிகரிப்பு மற்றும் வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் (நூற்றுக்கு) கீழே அட்டவணை 3.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1 : தொகைமதிப்பு வருடத்திற்கமைய கணக்கிடப்பட்ட மொத்த சனத்தெகை,தொகைமதிப்புக்களுக்கிடையிலான அதிகரிப்பு மற்றும் வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம், 1871 – 2012**

| தொகைமதிப்புத் தினம் | இலங்கையின் மொத்த சனத்தொகை | தொகைமதிப்பிற்கிடைப்பட்ட வளர்ச்சி | | வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | |
| 1871 மார்ச்27 | 2,400,380 | - | - | - |
| 1881 பெப்ரவரி 17 | 2,759,738 | 359,358 | 15.0 | 1.4 |
| 1891 பெப்ரவரி 26 | 3,007,789 | 248,051 | 9.0 | 0.9 |
| 1901 மார்ச்01 | 3,565,954 | 558,165 | 18.6 | 1.7 |
| 1911 மார்ச்10 | 4,106,350 | 540,396 | 15.2 | 1.4 |
| 1921 மார்ச்18 | 4,498,605 | 392,255 | 9.6 | 0.9 |
| 1931 பெப்ரவரி 26 | 5,306,871 | 808,266 | 18.0 | 1.7 |
| 1946 மார்ச்19 | 6,657,339 | 1,350,468 | 25.4 | 1.5 |
| 1953 மார்ச்20 | 8,097,895 | 1,440,556 | 21.6 | 2.8 |
| 1963 ஜூலை 08 | 10,582,064 | 2,484,169 | 30.7 | 2.6 |
| 1971 ஒக்டோபர் 09 | 12,689,897 | 2,107,833 | 19.9 | 2.2 |
| 1981 மார்ச்17 | 14,846,750 | 2,156,853 | 17.0 | 1.7 |
| 2001 ஜூலை 17 | 18,797,257 | 3,950,507 | 26.6 | 1.2 |
| 2012 மார்ச்20 | 20,359,439 | 1,562,182 | 8.3 | 0.7 |

**குறிப்பு :** 2001 சனத்தொகைமதிப்பிலே வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றம கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் தொகைமதிப்பு நடவடிக்கை முழுமை பெறாமையால் அந்த மாவட்டங்களுக்காக சனத்தொகை உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் இறுதியில் கணக்கிடப்பட்ட மொத்த சனத்தொகை 2001 கீழ் காட்டப்பட்டுள்ளது.

மேலே அட்டவணை 3.1 இற்கமையப் பார்க்கும் போது வருடாந்த உயர் வளர்ச்சி வீதம் நூற்றுக்கு 2.8 ஆக 1953 இல் பதிவாகியுள்ளது. அதன் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து இம்முறை 0.7 ஆகப் பதிவாகியுள்ளது. சனத்தொகையின் இயற்கை அதிகரிப்பின் வீழ்ச்சி மற்றும் நாட்டிற்கு வெளியே இடம்பெறும் குடிப்பெயர்வு சனத்தொகை வளர்ச்சி வேகத்தை குறைந்த மட்டத்திற்கு கொண்டுவந்தாலும் சனத்தொகையின் எண்ணிக்கையில் கிரமமான வளர்ச்சிப் போக்கினை வெளிக்காட்டியுள்ளது.

**உரு 3.1 : சனத்தொகையின் அளவு மற்றும் வளர்ச்சி, 1871 – 2012**



**மாகாண மற்றும் மாவட்டத்திற்கமைய சனத்தொகைப் பரம்பல்**

**அட்டவணை 3.2 : மாகாணம் மற்றும் மாவட்டங்களுக்கமைய சனத்தொகை – 2012**

| மாகாணம் மற்றும் மாவட்டம் | மொத்த சனத்தொகை | |
|---|---|---|
| | எண்ணிக்கை | % |
| **இலங்கை** | **20,359,439** | **100.0** |
| **மேல் மாகாணம்** | **5,851,130** | **28.7** |
| கொழும்பு | 2,324,349 | 11.4 |
| கம்பஹா | 2,304,833 | 11.3 |
| களுத்துறை | 1,221,948 | 6.0 |
| **மத்திய மாகாணம்** | **2,571,557** | **12.6** |
| கண்டி | 1,375,382 | 6.8 |
| மாத்தளை | 484,531 | 2.4 |
| நுவரெலியா | 711,644 | 3.5 |
| **தென் மாகாணம்** | **2,477,285** | **12.1** |
| காலி | 1,063,334 | 5.2 |
| மாத்தறை | 814,048 | 4.0 |
| அம்பந்தோட்டை | 599,903 | 2.9 |
| **வடக்கு மாகாணம்** | **1,061,315** | **5.4** |
| யாழ்ப்பாணம் | 583,882 | 2.9 |
| மன்னார் | 99,570 | 0.5 |
| வவுனியா | 172,115 | 0.9 |
| முல்லைத்தீவு | 92,238 | 0.5 |
| கிளிநொச்சி | 113,510 | 0.6 |
| **கிழக்கு மாகாணம்** | **1,555,510** | **7.6** |
| மட்டக்களப்பு | 526,567 | 2.6 |
| அம்பாறை | 649,402 | 3.2 |
| திருகோணமலை | 379,541 | 1.9 |
| **வடமேல் மாகாணம்** | **2,380,861** | **11.7** |
| குருணாகல் | 1,618,465 | 7.9 |
| புத்தளம் | 762,396 | 3.7 |
| **வடமத்திய மாகாணம்** | **1,266,663** | **6.2** |
| அநுராதபுரம் | 860,575 | 4.2 |
| பொலன்னறுவை | 406,088 | 2.0 |
| **ஊவா மாகாணம்** | **1,266,463** | **6.2** |
| பதுளை | 815,405 | 4.0 |
| மொனராகலை | 451,058 | 2.2 |
| **சப்ரகமுவா மாகாணம்** | **1,928,655** | **9.5** |
| இரத்தின புரி | 1,088,007 | 5.3 |
| கேகாலை | 840,648 | 4.1 |

மாகாண அடிப்படையில் சனத்தொகைப் பரம்பலைக் கவனத்தில் கொண்டால் நாட்டில் அதிகமான சனத்தொகை வசிப்பது மேல் மாகாணத்திலாகும். அது நாட்டின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 28.7 ஆகும். குறைந்த சனத்தொகை காணம்படும் மாகாணம் வட மாகாணமாகும். அது நாட்டின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 5.4 ஆகும். அவ்வாறே அதிக சனத்தொகை காணப்படும் மாவட்டம் கொழும்பு மாவட்டம் என்பதுடன் அது நாட்டின் மொத்த சனத்தொகையில்

11.4 ஆகும். குறைந்த சனத்தொகை காணப்படுவது முல்லைத்தீவு மாவட்டத்தில் என்பதுடன் அது மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 0.5 ஆகும்.

**மாவட்ட மட்டத்திலான சனத்தொகை வளர்ச்சி**

மாவட்ட மட்டத்தில் சனத்தொகை வளர்க்கியைக் கவனத்தில் கொண்டால் இம்முறைத் தொகைமதிப்பில் தரவுகளை முன்னைய இரு தொகைமதிப்புக்கள் அதாவது 1981 மற்றும் 2001தொகைமதிப்புத் தரவுகளுடன் ஒப்பீடு செய்ய முடியும். 2001 இல் நடாத்தப்பட்ட தொகைமதிப்பிலே முழு நாடும் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் 18 மாவட்டங்களின் தகவல்கள் மாத்திரம் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 3.3 இற்கமைய கவனத்தில் கொண்டால் சனத்தொகை வளர்ச்சி அதிகமாகக் காணப்படும் மாவட்டமாக உலர் வலயத்தின் அநுராதபுரம் மாவட்டம் காணப்படுகின்றது. ஆனால் அதிகமான சனத்தொகை வசிப்பது ஈரவலய மாவட்டங்களிலாகும். மேல் மாகாணத்தில் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதிக சனத்தொகை வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருப்பது நகரப் பிரதேசங்கள் வணிகமயமாக்கப்படுவதன் காரணத்தினால் அந்த மாவட்டங்களுக்கு ஏனைய மாவட்டங்களிலிருந்து சனத்தொகை குடிபெயர்வதனாலாகும். அட்டவணை 3.3 இல் காட்டப்பட்டுள்ள 3 தொகைமதிப்பு வருடங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதிக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட தரவுப் பகுப்பாய்வின் போது தெளிவாகும் விசேட அம்சம் யாதெனில் களுத்துறை அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் ஆகிய 3 மாவட்டங்களைத் தவிர ஏனைய சகல மாவட்டங்களிலும் சனத்தொகை வளர்ச்சி வேகம் 1981 – 2012 காலப்பகுதிக்குள் வீழ்ச்சியடைந்துள்ளமையாகும்.

நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய இரு மாவட்டங்களில் சனத்தொகை வளர்ச்சி மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்குக் காரணம் பெருந்தோட்டத் துறை சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோர் வேறு பிரதேசங்களுக்குக் குடிபெயர்தல் மற்றும் சமாதானம் உருவாக்கப்பட்டதன் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த மாவட்டங்களுக்கு வருகைதந்த மக்கள் மீண்டும் அவர்கள் வசித்த மாவட்டங்களுக்கு குடிபெயர்ந்தமையாகும்.

வவுனியா மாவட்டத்திற்கு வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்து யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் வருகை தந்ததன் காரணத்தினால் வவுனியா மாவட்டத்தின் சனத்தொகை வளர்ச்சி நூற்றுக்கு 1.0 இலும் கூடிய பெறுமதியை வெளிக்காட்டுகின்றது. 1981 – 2012 காலப்பகுதியைக் கவனத்தில் கொண்டால் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களின் வளர்ச்சி வீதத்தில் வீழ்ச்சியைக் காண்கூடியதாக இருப்பதற்குக் காரணம் யுத்த நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இந்த மாவட்டங்களுக்கு வெளியே புலம் பெயர்ந்தமையாகும்.

## அட்டவணை 3.3 : மாவட்ட மட்டத்திலான சனத்தொகை வளர்ச்சி – 2012

| மாவட்டம் | மொத்த சனத்தொகை | | | வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் (நூற்றுக்கு) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1981 (1) | 2001 (2) | 2012 | 1981-2001 | 1981-2012 | 2001-2012 |
| **இலங்கை** | **14,846,274** | **18,797,257** | **20,359,439** | **1.16** | **1.02** | **0.75** |
| கொழும்பு | 1,675,847 | 2,239,696 | 2,324,349 | 1.43 | 1.05 | 0.35 |
| கம்பஹா | 1,367,813 | 2,060,470 | 2,304,833 | 2.01 | 1.68 | 1.05 |
| களுத்துறை | 823,964 | 1,065,635 | 1,221,948 | 1.26 | 1.27 | 1.28 |
| கண்டி | 1,032,335 | 1,276,202 | 1,375,382 | 1.04 | 0.92 | 0.70 |
| மாத்தளை | 352,860 | 439,031 | 484,531 | 1.07 | 1.02 | 0.92 |
| நுவரெலியா | 583,716 | 702,689 | 711,644 | 0.91 | 0.64 | 0.12 |
| காலி | 805,403 | 989,769 | 1,063,334 | 1.01 | 0.90 | 0.67 |
| மாத்தறை | 642,235 | 760,990 | 814,048 | 0.83 | 0.76 | 0.63 |
| அம்பந்தோட்டை | 421,277 | 525,913 | 599,903 | 1.09 | 1.14 | 1.23 |
| யாழ்ப்பாணம் | 734,474 | - | 583,882 | - | -0.74 | - |
| மன்னார் | 105,276 | - | 99,570 | - | -0.18 | - |
| வவுனியா | 93,694 | - | 172,115 | - | 1.96 | - |
| முல்லைத்தீவு | 73,886 | - | 92,238 | - | 0.71 | - |
| கிளிநொச்சி | 90,778 | - | 113,510 | - | 0.72 | - |
| மட்டக்களப்பு | 329,343 | - | 526,567 | - | 1.51 | - |
| அம்பாறை | 383,275 | 592,596 | 649,402 | 2.14 | 1.70 | 0.86 |
| திருகோணமலை | 250,771 | - | 379,541 | - | 1.34 | - |
| குருணாகலை | 1,198,795 | 1,458,385 | 1,618,465 | 0.96 | 0.95 | 0.97 |
| புத்தளம் | 485,619 | 709,002 | 762,396 | 1.86 | 1.45 | 0.68 |
| அநுராதபுரம் | 575,546 | 742,535 | 860,575 | 1.25 | 1.30 | 1.38 |
| பொலன்னறுவை | 253,411 | 358,804 | 406,088 | 1.71 | 1.52 | 1.16 |
| பதுளை | 620,839 | 778,422 | 815,405 | 1.11 | 0.88 | 0.43 |
| மொனராகலை | 269,684 | 396,521 | 451,058 | 1.89 | 1.66 | 1.21 |
| இரத்தினபுரி | 779,927 | 1,016,221 | 1,088,007 | 1.30 | 1.07 | 0.64 |
| கேகாலை | 678,456 | 784,371 | 840,648 | 0.71 | 0.69 | 0.65 |

1) தற்போது காணப்படும் மாவட்ட எல்லைகளுக்குமைய யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் தரவுகள் காட்டப்பட்டுள்ளன.

2) 2001 தொகைமதிப்பிலே யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்ளப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தொகைமதிப்பு நடவடிக்கைகள் பூர்த்தியடையாமையால் அந்த மாவட்டங்களுக்காக சனத்தொகை உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பின்னர் இறுதியில் கணக்கிடப்பட்ட நாட்டின் மொத்த உத்தேச சனத்தொகை 2001 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**குறிப்பு** : 2012 குடிசன மதிப்பிலே நபர்களைக் கணக்கெடுத்தல் அவர்களின் வழமையான வசிப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதால் தரவுகளை ஒப்பீடு செய்வதற்காக 1981 மற்றும் 2001 தொகைமதிப்புக்களின் போதும் சனத்தொகையாகக் காட்டப்பட்டுள்ளது, அந்தத் தொகைமதிப்புக்களின் போது மாவட்ட அடிப்படையில் பெறப்பட்ட வழமையாக வசிக்கும் சனத்தொகையாகும்.

## உரு 3.2 : மாவட்ட அடிப்படையிலான சனத்தொகைப் பரம்பல் - 2012



**சனத்தொகை அடர்த்தி**

சனத்தொகை அடர்த்தி என அடையாளப்படுத்தப்படுவது ஒரு சதுர கிலோ மீற்றர் நில விஸ்தீரணத்தினுள் வசிக்கும் நபர்களின் எண்ணிக்கையாகும். அது 1981,2001 மற்றும் 2012 குடிசன தொகைமதிப்புக்களின் போது பெறப்பட்டுள்ளதுடன் அந்தத் தகவல்கள் அட்டவணை இலக்கம் 3.4 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.4 : மாவட்ட மட்டத்திலான சனத்தொகை அடர்த்தி 1981,2001 மற்றும் 2012**

| மாவட்டம் | சனத்தொகை அடர்த்தி (சதுர கிலோ மீற்றருக்கு நபர்கள்) | | |
|---|---|---|---|
| | 1981 | 2001 | 2012 |
| **இலங்கை** | **230** | **300** | **325** |
| கொழும்பு | 2,605 | 3,330 | 3,438 |
| கம்பஹா | 994 | 1,539 | 1,719 |
| களுத்துறை | 516 | 677 | 775 |
| கண்டி | 554 | 667 | 717 |
| காலி | 487 | 613 | 658 |
| மாத்தறை | 516 | 600 | 641 |
| யாழ்ப்பாணம் | 401 | - | 629 |
| கேகாலை | 412 | 466 | 499 |
| நுவரெலியா | 354 | 412 | 417 |
| குருணாகலை | 254 | 316 | 350 |
| இரத்தினபுரி | 246 | 314 | 336 |
| பதுளை | 227 | 276 | 288 |
| புத்தளம் | 165 | 246 | 265 |
| மாத்தளை | 180 | 226 | 248 |
| அம்பந்தோட்டை | 164 | 211 | 240 |
| மட்டக்களப்பு | 134 | - | 202 |
| அம்பாறை | 86 | 140 | 154 |
| திருகோணமலை | 98 | - | 150 |
| பொலன்னறுவை | 77 | 117 | 132 |
| அநுராதபுர | 82 | 112 | 129 |
| கிளிநொச்சி | - | - | 94 |
| வவுனியா | 36 | - | 92 |
| மொனராகலை | 49 | 72 | 82 |
| மன்னார் | 53 | - | 53 |
| முல்லைத்தீவு | 39 | - | 38 |

**குறிப்பு** : 2001 தொகைமதிப்புக்காக அதன்போது கணக்கிடப்பட்ட உத்தேச மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கான சனத்தொகை அடர்த்தி காட்டப்பட்டுள்ளது.

பொதுவாகக் கவனத்தில் கொண்டால் சனத்தொகை அதிகரிப்புக்குச் சமாந்திரமாகச சனத்தொகை அடர்த்தியும் அதிகரித்துள்ளது. 1981 குடிசனத் தொகைமதிப்பின் போது ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 230 ஆகக் காணப்பட்ட நபர்களாகக் காணப்பட்ட நாட்டின் சனத்தொகை அடர்த்தி

2012 தொகைமதிப்பிலே ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 325 ஆக உயர்வடைந்துள்ளது. 2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து இம்முறை சனத்தொகை அடர்த்தி ஒரு கிலோ மீற்றருக்கு 300 நபர்களிலிருந்து 325 வரை 25 அலகுகளால் அதிகரித்துள்ளது.

அவ்வாறே மாவட்ட மட்டத்திலான சனத்தொகை அடர்த்தி தொடர்பில் அவதானத்தைச் செலுத்தினால் மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் தென் மாகாணத்தில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திலும் வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் அதிக சனத்தொகை அடர்த்தியிணைக் காணக் கூடியதாகவுள்ளது. அதிக சனத்தொகை காணப்படும் கொழும்பு மாவட்டத்தைக் கவனத்தில் கொண்டால் 1981 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் போது ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 2605 நபர்களாகவும் 2001 இல் 3330 நபர்களாகவும் 2012 இல் 3,438 நபர்களாக மேலும் அதிகரித்துள்ளது. அதற்கடுத்ததாக அதிக சனத்தொகை அடர்த்தி கம்பஹா மாவட்டத்தில் காணப்படுவதுடன் அது 1,719 ஆகும். கண்டி, காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் ஒரு சதுர கிலோ மீற்றருக்காக நபர்களின் எண்ணிக்கை 600 அதிகமாகக் காணப்படுகின்றது.

1981 குடிசனத் தொகைமதிப்புத் தகவல்களைக் கவனத்தில் கொண்டால் அட்டவணை 3.4 இற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்திற்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சகல மாவட்டங்களிலும் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 100 நபர்களிலும் குறைவானதாகும். ஆனால் இம்முறை கிளிநொச்சி வவுனியா, மொணராகலை, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மட்டும் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 100 நபர்களிலும் குறைவான சனத்தொகை அடர்த்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2012 தொகைமதிப்பிலே இலங்கையில் குறைந்த சனத்தொகை அடர்த்தியை முல்லைத்தீவு மாவட்டம் வெளிப்படுத்துவதுடன் அது ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 38 நபர்களாகும்.

**பிரிவு ரீதியான சனத்தொகைப் பரம்பல்**

இலங்கையில் நகரப் பிரிவாகக் கருதப்படுவது மாநகர சபை மற்றும் நகரசபைப் பிரதேசங்களாகும். 20 ஏக்கர்கள் அல்லது அதிலும் கூடிய மற்றும் 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட பயிர்ச்செய்கையுடன் கூடிய நிலப் பிரதேசம் பெருந்தோட்டமாகவும் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசம் பெருந்தோட்டமாகக் கருதப்படும். இந்தப் பிரிவுகளுக்குள் உள்ளடங்காத ஏனைய அனைத்துப் பிரதேசங்களும் கிராமியப் பிரிவுக்குள் அடங்கும்.

இந்த வரைவிலக்கணத்திற்கமைய நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டப் பிரவுகளின் சனத்தொகை தகவல்களை முன்வைத்தாலும் அந்த வரைவிலக்கணங்கள் தொடர்பில் திருப்தியடைய முடியாது. அந்த வலைவிலக்கணங்களைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அதற்குக் காரணம் நகரப் பண்புகளைக் கொண்டிருக்கும் பிரதேசங்கள் மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளாக வரைவிலக்கணப் படுத்தப்படாமையாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணங்களுக்கமைய இலங்கையில் நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளன் சனத்தொகைப் பரம்பல் தொகைமதிப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை இலக்கம் 3.5 இற்கமைய இலங்கையின் மொத்த சனத்தொகையில் நகரச் சனத்தொகை நூற்றுக்கு 18.2 ஆகும். 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமையக் கவனத்தில் கொண்டால் 3,704,470 சனத்தொகை நகரப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். அது 1981 குடிசன தொகைமதிப்பிலே பதிவாகியுள்ள 3,192,489 இனை விட 5 இலட்சம் அளவிலான அதிகரிப்பாகும். மாவட்ட மட்டத்திலான சனத்தொகைப் பரம்பல் அட்டவணை 3.5 இல் காட்டப்பட்டுள்ளது. இந்த நகரச் சனத்தொகையில் நூற்றுக்கு 61.4 மாநகர சபைகளிலும் நூற்றுக்கு 38.6 நகர சபைகளிலும் வாழ்கின்றனர்.

இலங்கையில் கிராமியச் சனத்தொகை நூற்றுக்கு 77.4 ஆகும். நாட்டில் அதிகமான சனத்தொகை கிராமியப் பிரதேசங்களில் வாழ்கின்றனர். நகரப் பிரிவுகள் காணப்படாமையால் பொலன்னறுவை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கிராமியச் சனத்தொகை நூற்றுக்கு 100 எள்ற அதிக வீதாசாரத்தைப் பதிவ செய்துள்ளன.

பெருந்தோட்டப் பிரிவின் சனத்தொகை நாட்டின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 4.4 ஆகும். பெருந்தோட்டப் பிரிவில் அதிகமான சனத்தொகை நுவரெலியா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் அது நூற்றுக்கு 53.3 ஆகும் பதுளை மாவட்டத்தில் நூற்றுக்கு 18.9 ஆகும். அவ்வாறே இரததினர்ரி கேகாலை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் நூற்றுக்கு 6 இலும் அதிகமான பெருந்தோட்டச் சனத்தொகையினர் பதிவாகியுள்ளனர்.

அட்டவணை 3.5 இற்கமைய நாட்டில் அதிக நகரச் சனத்தொகையுடனான மாவட்டமாகக் கொழும்பு விளங்குகின்றது. அந்த மாவட்டத்தின் சனத்தொகையில் நூற்றுக்கு 78 அளவிலானவர்கள் நகரப் பிரதேசங்களில் வசிப்பவர்களாவர். கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் மொத்த நகரச் சனத்தொகை நாட்டின் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கு அதாவது நூற்றுக்கு 48.6 இற்குச் சமமானதாகும். அவ்வாறே மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் நகரச் சனத்தொகை முறையே நூற்றுக்கு 28.7 நூற்றுக்கு 23.6 நூற்றுக்கு 22.4 மற்றும் நூற்றுக்கு 24.5 எனத் தெரிந்து கொள்ளலாம். அது உரிய மாவட்டச் சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கிற்குச் சமமானதாகும்.

வட மாகாணத்தில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நகரச் சனத்தொகை நூற்றுக்கு 20 இனைத் தாண்டியுள்ளன. ஏகைய மாவட்டங்களைக் கவனத்தில் கொண்டால் நூற்றுக்கு 10 இலும் அதிகமான நகரச் சனத்தொகை காணப்படுவது கம்பஹா, காலி, கண்டி. மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் மட்டுமேயாகும்.

அவ்வாறே நாட்டில் குறைவான நகரச் சனத்தொகை காணப்படுவது குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களிலாகும். அந்த மாவட்டங்களில் நகரச் சனத்தொகை அவற்றின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 2 இலும் குறைவானதாகும்.

## அட்டவணை 3.5 : மாவட்டம் மற்றும் பிரிவுகளுக்கமைய சனத்தொகை – 2012

| மாவட்டம் | மொத்தம் | | பிரிவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நகரம் | | கிராமம் | | பெருந்தோட்டம் | |
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **இலங்கை** | **20,359,439** | **100.0** | **3,704,470** | **18.2** | **15,753,322** | **77.4** | **901,647** | **4.4** |
| கொழும்பு | 2,324,349 | 100.0 | 1,802,904 | 77.6 | 513,534 | 22.1 | 7,911 | 0.3 |
| கம்பஹா | 2,304,833 | 100.0 | 360,221 | 15.6 | 1,943,418 | 84.3 | 1,194 | 0.1 |
| களுத்துறை | 1,221,948 | 100.0 | 109,069 | 8.9 | 1,075,246 | 88.0 | 37,633 | 3.1 |
| கண்டி | 1,375,382 | 100.0 | 170,544 | 12.4 | 1,119,221 | 81.4 | 85,617 | 6.2 |
| மாத்தளை | 484,531 | 100.0 | 60,276 | 12.4 | 405,176 | 83.6 | 19,079 | 3.9 |
| நுவரெலியா | 711,644 | 100.0 | 40,151 | 5.6 | 290,913 | 40.9 | 380,580 | 53.5 |
| காலி | 1,063,334 | 100.0 | 133,398 | 12.5 | 911,159 | 85.7 | 18,777 | 1.8 |
| மாத்தறை | 814,048 | 100.0 | 96,570 | 11.9 | 694,948 | 85.4 | 22,530 | 2.8 |
| அம்பந்தோட்டை | 599,903 | 100.0 | 31,709 | 5.3 | 568,194 | 94.7 | - | - |
| யாழ்ப்பாணம் | 583,882 | 100.0 | 117,575 | 20.1 | 466,307 | 79.9 | - | - |
| மன்னார் | 99,570 | 100.0 | 24,417 | 24.5 | 75,153 | 75.5 | - | - |
| வவுனியா | 172,115 | 100.0 | 34,816 | 20.2 | 137,299 | 79.8 | - | - |
| முல்லைத்தீவு | 92,238 | 100.0 | - | - | 92,238 | 100.0 | - | - |
| கிளிநொச்சி | 113,510 | 100.0 | - | - | 113,510 | 100.0 | - | - |
| மட்டக்களப்பு | 526,567 | 100.0 | 151,226 | 28.7 | 375,341 | 71.3 | - | - |
| அம்பாறை | 649,402 | 100.0 | 153,338 | 23.6 | 496,064 | 76.4 | - | - |
| திருகோணமலை | 379,541 | 100.0 | 85,123 | 22.4 | 294,418 | 77.6 | - | - |
| குருணாகலை | 1,618,465 | 100.0 | 30,342 | 1.9 | 1,580,556 | 97.7 | 7,567 | 0.5 |
| புத்தளம் | 762,396 | 100.0 | 66,952 | 8.8 | 693,844 | 91.0 | 1,600 | 0.2 |
| அநுராதபுரம் | 860,575 | 100.0 | 50,595 | 5.9 | 809,980 | 94.1 | - | - |
| பொலன்னறுவை | 406,088 | 100.0 | - | - | 406,072 | 100.0 | 16 | - |
| பதுளை | 815,405 | 100.0 | 69,800 | 8.6 | 591,707 | 72.6 | 153,898 | 18.9 |
| மொனராகலை | 451,058 | 100.0 | - | - | 442,710 | 98.1 | 8,348 | 1.9 |
| இரத்தினபுரி | 1,088,007 | 100.0 | 99,451 | 9.1 | 888,845 | 81.7 | 99,711 | 9.2 |
| கேகாலை | 840,648 | 100.0 | 15,993 | 1.9 | 767,469 | 91.3 | 57,186 | 6.8 |

# வயது அடிப்படையிலான பால் வீதாசாரம்

## 4.0

## வயது அடிப்படையிலான பால் வீதாசாரம்

சனத்தொகையினது வயது மற்றும் பால் வீதாசாரப் பரம்பல் தொடர்பாக மிகத் தெளிவான வளக்கத்தினை வயதுப் பால் கட்டமைப்பு மூலம் காட்டலாம். அந்த சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பு பிறப்பு, இறப்பு குடிப்பெயர்வின் போக்கிற்கமைய மாற்றமடையும் விதம் சனத்தொகைப் பிரமிட்டினால் காட்டப்படும். இந்த வயதுப் பால் கட்டமைப்பின் மூலம் நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படத்தும் வேலை செய்யும் வயதுச் சனத்தொகை சிறுவர் சனத்தொகை மற்றும் முதியோர் சனத்தொகை (வயோதிபச் சனத்தொகை) வெளிப்படுத்தப்படுகின்றது.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே வயதினைக் கணிப்பிடுவதற்கு பிரஜைகளின் பிறந்த வருடம் மற்றும் மாதம் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. தமது பிறந்த வருடம் மற்றும் மாதத்தினை சரியாகத் தெரிந்திராத பதிலளிப்பவர்களின் தேசிய அடையாள அட்டை சிறப்புச் சான்றிதழ் மற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அடையாள அட்டைகள் ஜாதகக் கணிப்புப் பிரதிகள் மற்றும் பிள்ளைகளின் வயதினை உறுதிப்படுத்தம் ஆவணங்களைக் கவனத்தில் கொண்டு பிறந்த வருடம் உத்தேச மதிப்பீடு செய்யப்படும். தொகைமதிப்புப் படிவத்தின் மூலம் சனத்தொகையில் பால் விபரம் தொடர்பில் தரவு சேகரிக்கபட்டது.

**அட்டவணை 4.1 மொத்த சனத்தொகை, பால் விகிதாசாரம் மற்றும் பெண் வீதாசாரம் (தொகைமதிப்பு வருடம் 1946 – 2012)**

| தொகைமதிப்பு வருடம் | இலங்கை | பால் விகிதாசாரம் *** | பெண் வீதாசாரம் |
|---|---|---|---|
| 1946 | 6,657,339 | 113.0 | 46.9 |
| 1953 | 8,097,895 | 115.5 | 47.3 |
| 1963 | 10,582,064 | 108.2 | 48.0 |
| 1971 | 12,689,897 | 106.1 | 48.5 |
| 1981 | 14,846,750 | 104.0 | 49.0 |
| 2001* | 16,929,689 | 99.1 | 50.2 |
| 2012 | 20,359,439 | 93.8 | 51.6 |

*18 மாவட்டங்கள் மட்டும்

*** பால் வீதாசாரம் என்பது 100 பெண்களுக்கு காணப்படும் ஆண்களின் எண்ணிக்கையாகும்.

தொகைமதிப்பு வரலாற்றில் முதல் தொகைமதிப்பான 1871 தொடக்கம் 1981 வரை நடாத்தப்பட்ட சகல தொகைமதிப்புக்களிலும் மொத்த சனத்தொகையில் ஆண் விதாசாரம் பெண் விதாசாரத்தைத் தாண்டி பதிவாகியுள்ளது. 1946 இல் நூற்றுக்கு 46.9 ஆகக் காணப்பட்ட பெண்கள் சனத்தொகை 1981 ஆகும்போது நூற்றுக்கு 49.0 என்றவாறும் 2012 தொகைமதிப்புக்கமைய அது நூற்றுக்கு 51.6 ஆகவும் வளர்ச்சியடைந்துள்ளது.

**உரு 4.1 பால் விகிதாசாரம் 1946 – 2012**




*18 மாவட்டங்கள் மட்டும்

தொகைமதிப்பு வரலாற்றில் உயர்ந்த பால் விகிதாசாரம் 1953 இல் 115.5 ஆகப் பதிவாகியுள்ளது. பால் விகிதாசாரம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 2012 இல் நூற்றுக்கு 93.8 என்ற பெறுமதியைப் பெற்றுள்ளது. பெண்கள் சனத்தொகை அதிகரிப்பதற்குப் செல்வாக்குச் செலுத்துகின்ற பிரதான காரணிகள் ஆண்களுடன் ஒப்பிடுமிடத்து பெண்கள் உயர்ந்த ஆயுட்காலத்தை அனுபவித்தல், தாய் மரண வீதத்தில் ஏற்பட்ட விரைவாக வீழ்ச்சி என்பனவாகும். 1981 வரை 100 இலும் உயர்ந்த பெறுமதியைப் பெற்ற பால் விகிதாசாரம் முதன்முதலாக அதிலும் குறைந்த பெறுமதியை அதாவது, 99.1 இனைப் பதிவு செய்வது 2001 ஆம் ஆண்டிலாகும். வேறு வகையில் குறிப்பிட்டால் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 100 பெண்களுக்கு அமைவாக 2001 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை 99 ஆகும்.

**உரு 4.2 : வயதுப் பால் பரம்பல் - 1981**




உரு 4.3 : வயதுப் பால் பரம்பல் - 2001*




*18 மாவட்டங்கள் மட்டும்

## உரு 4.4 : வயதுப் பால் பரம்பல் - 2012




மேலுள்ள வயது பிரமிட்டுக்களில் காட்டப்படுவது ஒன்றிற்கொன்று வேறுபட்ட வருடங்களில் சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பு மாற்றமடைந்துள்ள விதமாகும். 1981 ஆம் ஆண்டாகும் போது இலங்கையின் மக்களியல் நிலைமாற்றம் 1 ஆவது கட்டமான முன் நிலைமாறு கட்டத்தை (உயர்ந்த பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதத்துடன் கூடிய சனத்தொகையின் உயர்ந்த உத்தம மட்டத்தில் காணப்பட்ட சந்தர்ப்பம்) கடந்துள்ளதாக உரு 4.2 சனத்தொகை பிரமிட்டின் மூலம் தெளிவாகின்றது. 1981 ஆம் ஆண்டினுள் பிரதானமாக சிறுவர் சனத்தொகை அதிகமாகக் காணப்பட்டதால் பிரமிட்டின் அடிப்பகுதி விரிவடைந்திருந்தது. இது படிப்படியாக அதிகரிக்கும் தன்மையுடைய வயது பிரமிட்டாகக் காணப்படுவதுடன் சனத்தொகை எண்ணிக்கையின் நிலைமாறு கட்டம் II சந்தர்ப்பம் அதாவது படிப்படியான முன் அதிகரிக்கும் தன்மையுடைய கட்டமாகக் கருத முடியும்.

2012 ஆகும் போது சிறுவர் சனத்தொகைக்குச் சமாந்திரமாக ஆவலை செய்யும் வயதுச் சனத்தொகை மற்றும் முதியோர் சனத்தொகை அதிகரித்துள்ளது. இது நிலைத்திருக்கும் தன்மையையடைந்த பிரமிட்டை ஒத்த வடிவமாகும். இந்த நிலமை சனத்தொகை எண்ணிக்கையின் நிலைமாறு கட்டம் III ஆவது சந்தர்ப்பம் அதாவது படிப்படியாகப் பின் அதிகரிப்புக் கட்டத்தை ஒத்த தன்மையாகும். மென்மேலும் சனத்தொகைக் கட்டமைப்பின் வடிவம் மாற்றமடைந்து சனத்தொகைக் கட்டமைப்பில் முதியோர் (வயோதிபச்) சனத்தொகை அதிகரித்து 2041 ஆம் ஆண்டாகும் போது வயது பிரமிட்டின் வடிவம் உருளை (பெரல்) வடிவத்தை வந்தடையும் என எதிர்பார்க்கலாம். அதாவது நிலைமாறு கட்டம் அடையும் சந்தர்ப்பம் உருவாகும் என எதிர்பார்க்க முடியும். இது மக்களியல் நிலைமாறு கட்டம IV ஆவது சந்தர்ப்பமான சனத்தொகை எண்ணிக்கை கீழ் உத்தம மட்டத்தில் காணப்படும் சந்தர்ப்பமாகும்.

அட்டவணை 4.2 : வயதுப் பிரிவுக்கமைய சனத்தொகை 1946 – 2012

| வயதுப் பிரிவு | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 | 2001* | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| 00-04 | 12.9 | 14.9 | 15.2 | 13.1 | 12.5 | 8.5 | 8.6 |
| 05-09 | 12.2 | 13.4 | 13.7 | 13.2 | 11.3 | 8.8 | 8.6 |
| 10-14 | 12.1 | 11.4 | 12.6 | 12.7 | 11.4 | 9.0 | 8.1 |
| 15 - 19 | 10.2 | 8.7 | 9.7 | 10.7 | 10.8 | 9.7 | 8.1 |
| 20 - 24 | 9.6 | 9.5 | 8.4 | 10.0 | 10.2 | 9.4 | 7.5 |
| 25 - 29 | 8.7 | 8.8 | 7.0 | 7.5 | 8.6 | 7.9 | 7.6 |
| 30 - 34 | 6.8 | 6.4 | 6.3 | 5.8 | 7.6 | 7.6 | 8.1 |
| 35 - 39 | 7.0 | 6.6 | 6.2 | 5.7 | 5.7 | 7.4 | 6.9 |
| 40 - 44 | 4.8 | 4.6 | 4.6 | 4.6 | 4.7 | 6.9 | 6.7 |
| 45 - 49 | 4.8 | 4.6 | 4.3 | 4.3 | 4.1 | 6.1 | 6.3 |
| 50 - 54 | 3.0 | 3.4 | 3.4 | 3.3 | 3.6 | 5.4 | 6.0 |
| 55 - 59 | 2.5 | 2.3 | 2.6 | 2.8 | 2.8 | 4.0 | 5.2 |
| 60மற்றும்அதற்கு மேல் | 5.5 | 5.4 | 6.0 | 6.3 | 6.6 | 9.2 | 12.4 |

*18 மாவட்டங்கள் மட்டும்

குறிப்பு : வீதாசாரம் ஒரு தசமதானத்திற்கு மட்டந் தட்டப்பட்டுள்ளது.

உரு 4.5 : வயதுப் பிரிவுக்கமைய சனத்தொகை 1946 – 2012




*18 மாவட்டங்கள் மட்டும்

கடந்த தொகைமதிப்பு வருடங்களுடன் ஒப்பிடுமிடத்து மக்களியலில் முக்கியமான மாற்றம் வயதுக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ளத. அதாவது சிறுவர் சனத்தொகை படிப்படியாகக்

குறைவடைந்து காணப்படவதாகும். 2012 ஆம் ஆண்டாகும் போது அது மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 25.2 ஆகும். இது 1981 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புடன் ஒப்பிடுமிடத்து நூற்றுக்கு 10 குறைவானதாகும். அதற்கு விகிதசமமாக 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகை அதிகரித்து 2012 ஆம் ஆண்டில் அது நூற்றுக்கு 12.4 ஆகப் பதிவாகியுள்ளது. இந்தப் பெறுமதி 1981 தொகைமதிப்பு வருடத்தின் போது பதிவாகியிருந்த வயோதிபச் சனத்தொகையின் இரு மடங்கினை அண்மித்த பெறுமதியாகும். வயோதிபச் சனத்தொகை இவ்வாறு அதிகரிப்பது தொடர்ந்தால் 2014 ஆகும்போது அது மீண்டுமொரு முறை இரட்டித்து அந்தப் பெறுமதி 24.8 ஆகும் என எதிர்பார்க்கப்படுகின்றது **1981 மற்றும் 2012 தொகைமதிப்பு வருடங்களுக்கிடைப்பட்ட காலத்தினுள் இளையோர் சனத்தொகை (வேலை செய்யும் சனத்தொகை / ஊழியப்படை) நூற்றுக்கு 58.2 இலிருந்து நூற்றுக்கு 62.4 ஆகப் படிப்டியாக அதிகரித்துள்ளது. சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சனத்தொகை இவ்வாறு காணப்படுவது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விரும்பத்தகு நிலமையாகும். இது மக்களியல் வெகுமதி (Demographic Dividend) காணப்படும் நிலமையாகும். மக்களியல் வெகுமதி எனப்படுவது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு பொருத்தமான முறையில் சனத்தொகை கட்டமைப்பு அமையப்பெற்றுள்ள சந்தர்ப்பமாகும்.

நாட்டிற்கு மக்களியல் வெகுமதி கிடைக்கப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் சிறுவர் சனத்தொகையில் சிறு அதிகரிப்பைக் காட்டுவதுடன் அதற்குச் சமாந்திரமாக வேலை செய்யும் வயதுச் சனத்தொகை அதிகரித்துள்ளது. இந்த மக்களியல் நிலைமாறு கட்டம் சந்தர்ப்பத்தில் வேலை செய்யும் சனத்தொகை பராமரிப்பதற்குக் காணப்படும் தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை குறைவாகும். இவ்வாறான நிலைமையில் பொருத்தமான சமூகப் பொருளாதார கொள்கைகள் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் போன்று சமூக நலன்களையும் விருத்தி செய்வதற்கு புதிய பாதைகளை உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இது மக்களியல் வெகுமதி நிலைமாறும் சந்தர்ப்பமாகும். சிறுவர் சனத்தொகை மற்றும் முதியோர் சனத்தொகை வளர்ச்சியடையும் வேகத்தின் அடிப்படையில் மக்களியல் வெகுமதி எதிர்க்கனியப் பெறுமதியை கொண்டிருக்க முடியும். இலங்கையினுள் காணப்படும் சிறுவர் மற்றும் முதியோர் சனத்தொகை வளர்ச்சியடையும் வேகத்தின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கும் மக்களியல் வெகுமதி 1990 தொடக்கம் 2030 இற்கு இடைப்பட்ட 40 வருட காலத்தினுள் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகையால் இந்த மக்களியல் வெகுமதியை உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கு திட்டமிடல்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

**தங்கியிருப்போர் வீதம்**

சிறுவர் தங்கியிருப்போர் வீதம் என்பது வேலை செய்யும் வயதுச் சனத்தொகை (15 – 59 வயதிற்கு இடைப்பட்ட சனத்தொகை) 100 பேருக்கு காணப்படும் 15 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கையாகும். வேலை செய்யும் வயதுச் சனத்தொகையில் 100 பேருக்குக் காணப்படும் 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களின் எண்ணிக்கை முதியோர் தங்கியிருப்போர் வீதம் ஆகும். மொத்த தங்கியிருப்போர் வீதம் என அடையாளப்படுத்தப்படுவது வேலை செய்யும் வயதுச் சனத்தொகை 100 பேருக்கு காணப்படும் 15 வயதிற்குக் குறைந்த மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களின் எண்ணிக்கை அல்லது சிறுவர் மற்றும் முதியோர் தங்கியிருப்போர் வீதத்தின் கூட்டுத்தொகையாகும்.

** De Silva, W.I 2007> A Population projection of Sri Lanka for the millenium, 2001 – 2101 : Trends and Implecations, Intitute of Health, Colombo

**உரு 4.6 : தங்கியிருப்போர் வீதம், 1946 – 2012**




*18 மாவட்டங்கள் மட்டும்

கடந்த தொகைமதிப்பு வருடங்களைக் கவனத்தில் கொண்டால் சிறுவர் தங்கியிருப்போர் வீதம் முதியோர் தங்கியிருப்போர் வீதம் மற்றும் மொத்தத் தங்கியிருப்போர் வீதம் மாற்றமடைந்துள்ள விதம் மேலே உரு இலக்கம் 4.6 இல் காட்டப்பட்டுள்ளது. மொத்தத் தங்கியிருப்போர் விகிதாசாரத்தின் உயர்ந்த பெறுமதி 1963 ஆம் ஆண்டில் பதிவாகியிருப்பதுடன் அதன் பெறுமதி 90.5 ஆகும். அந்த வருடத்தில் சிறுவர் தங்கியிருப்போர் வீதம் 70.0 மற்றும் முதியோர் தங்கியிருப்போர் விகிதம் 11.4 ஆகும். 1963 ஆம் ஆண்டின் பின்னர் மொத்த தங்கியிருப்போர் வீதம் படிப்படியாகக் குறைவடைந்து 2001 தொகைமதிப்பு வருடத்தின் பின்னர் மீண்டும் அதிகரிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. 2012 ஆம் ஆண்டின் மொத்தத் தங்கியிருப்போர் விதம்

60.2 ஆகும். அதன்போது தங்கியிருப்போர் எண்ணிக்கை 60.2 ஆகக் காணப்படுவது முதியோர் தங்கியிருப்போர் வீதம் 19.8 மற்றும் சிறுவர் தங்கியிருப்போர் வீதம் 40.4 என்றவாறாகும். 1981 தொடக்கம் 2012 வரை சிறுவர் சனத்தொகை குறைவடைந்ததன் காரணமாக சிறுவர் தங்கியிருப்போர் எண்ணிக்கை நூற்றுக்கு 60.5 இலிருந்து நூற்றுக்கு 40.4 வரை விரையான வீழ்ச்சியைக் காட்டுவதுடன் முதியோர் தங்கியிருப்போர் எண்ணிக்கை நூற்றுக்கு 11.4 இலிருந்து நூற்றுக்கு 19.8 வரை அதிகரித்துள்ளது. இந்த நிலமை முதியோர் சனத்தொகை அதிகரித்ததால் ஏற்பட்டதொன்றாகும். இதன் தேறிய விளைவாக மொத்தத் தங்கியிருப்போர் எண்ணிக்கை 1981 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதிக்குள் 71.9 இலிருந்து 60.2 வரை குறைவடைந்துள்ளதுடன் அது அந்தக் காலப்பகுதிக்குள் நூற்றுக்கு 11.7 வீத வீழ்ச்சியாகும்.

**சனத்தொகை முதிர்ச்சியடைதல் 1946 – 2041**

சனத்தொகை முதிர்ச்சியடையும் மக்களியல் செயன்முறையானது கருவள வீதம் குறைவடைவதற்குச் சமாந்திரமாக இடம்பெற்றதொன்றாகும். கருவள வீதம் மற்றும் விரைவான வீழ்ச்சி எதிர்க்கனிய தேறிய குடிப்பெயர்வு வீதம் மற்றும் உயர்ந்த ஆயுள் எதிர்பார்ப்பு காணப்படுதல் சனத்தொகை முதிர்ச்சியடையும் வேகம் அதிகரிப்பதற்கு காரணமாகும்.

**உரு 4.7 : 60 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகை வீதம், 1946 – 2041**




*18 மாவட்டங்கள் மட்டும்

இலங்கையில் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர் சனத்தொகை 2012 ஆம் ஆண்டாகும் போது 2.5 மில்லியன்களாகும். இது மொத்த சனத்தொகையில் 1/8 ஆகும். 1946 – 1981 வரையான தொகைமதிப்பு காலத்தினுள் வயோதிபமடைவது நூற்றுக்கு 5 மற்றும் நூற்றுக்கு 7 இற்கு இடையில் காணப்பட்டதுடன் அதன் பின்னர் இந்த முதிர்ச்சியடையும் செயன்முறை வளர்ச்சியடைவதற்கு ஆரம்பித்தது. முதியோர் சனத்தொகை முதன் முறையாக இரட்டிப்பாவதற்கு அண்ணளவாக ஐம்பது வருட காலம் 1953 (5.4%) தொடக்கம் 2003 (10.8%) எடுத்திருந்தாலும் இரண்டாவது இரட்டிப்பாதல் குறைந்த கால எல்லைக்குள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1981 இல் நூற்றுக்கு 6.6 ஆகக் காணப்பட்ட முதியோர் சனத்தொகை 2012 இல் நூற்றுக்கு 12.4

ஆக இருந்தது. சனத்தொகை முதிர்ச்சியடைதல் இதே வேகத்தில் காணப்படுமாயின் 2041 ஆகும் போது இலங்கையின் முதியோர் சனத்தொகை இரட்டிப்பாகி அந்தப் பெறுமதி நூற்றுக்கு 24.8 ஆகக் காணப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது**. அதாவது 2041 ஆகும் போது ஒவ்வொரு 4 பேருக்கு ஒருவர் முதியோர் சனத்தொகைக்குரிய நபராகக் காணப்படுவார். மேலும் எதிர்வரும் இரு தசாப்த காலத்தினுள் முதியோர் சனத்தெகையில் உயர்ந்த வளர்ச்சி விகிதாசாரம் பதிவாகும் என எதிர்ப்பார்க்கலாம்

**முதுமைச் சுட்டெண்**

முதுமைச் சுட்டெண் மூலம் 15 வயதிலும் குறைந்த சிறுவர் சனத்தொகையில் நூறு பேருக்குக் காணப்படும் 60 வயதிலும் மேற்பட்ட சனத்தொகையின் எண்ணிக்கை வெளிப்படுத்தப்படும். இந்தச் சுட்டெண் மூலம் மக்களியல் நிலைமாறலின் பல்வேறு சந்தர்ப்பங்களை வெளிப்படுத்தலாம்.

** De Silva, W.I 2007> A Population projection of Sri Lanka for the millenium, 2001 – 2101 : Trends and Implecations, Intitute of Health, Colombo

**உரு 4.8 : முதுமைச் சுட்டெண், 1946 – 2041**




*18 மாவட்டங்கள் மட்டும்

உரு 4.8 இல் வயதுப் பரம்பலில் கட்டமைப்பு ரீதியான ஏற்பட்ட மாற்றங்கள் தெளிவாகப் பிரதிபலிக்கப்படுகின்றது. 1946 ஆம் ஆண்டில் 14.5 ஆகக் காணப்பட்ட முதுமைச் சுட்டெண் 2012 ஆகும் போது 49.1 ஆகக் காணப்பட்டது. இது மூன்று மடங்கிலும் அதிகமான அதிகரிப்பாகும். 1946 ஆம் ஆண்டு தொடக்கம் 1981 ஆம் ஆண்டு வரையான 35 வருட காலப்பகுதிக்குள் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு 4.3 ஆகக் காணப்பட்டாலும் 1981 தொடக்கம் 2012 வரையான 31 வருட காலப்பகுதிக்குள் அந்த அதிகரிப்பு 30.3 ஆகும். அதாவது முதுமைச் சுட்டெண்ணில் திருப்பு முனை ஏற்பட்டது 1981 ஆம் ஆண்டிலேயாகும். சிறுவர் சனத்தொகை குறைவடைவதற்குச் சமாந்திரமாக முதியோர் சனத்தொகையின் அதிகரிப்பு மேலும் அதிகரித்து 1041 இல் முதுமைச் சுட்டெண் 163** கேக் காணப்படுமென மதிப்பீட செய்யபப்ட்டுள்ளது. முதுமையடைவோரின் கால் விகிதாசாரம் 1981 ஆம் ஆண்டில் 113.7 ஆகக் காணப்பட்டதுடன்

2012 ஆம் அண்டில் அந்தப் பெறுமதி 79.4 ஆகப் பதிவாகியுள்ளது. இதன்மூலம் தெரியவருவது முதியோர் சனத்தொகையில் அதிகமானோர் பெண்கள் என்பதாகும்

**அட்டவணை 4.3 : வயதுப் பிரிவுக்கமைய முதியோர் சனத்தொகை மற்றும் பால் விகிதாசாரம் 1981 – 2012**

| ஆண்டு | 60-74 வயதுச் சனத்தொகை | | | 75 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | பால் வீதாசாரம் | ஆண் | பெண் | பால் வீதாசாரம் |
| 1981 | 413,800 | 359,547 | 115.1 | 108,600 | 99,861 | 108.8 |
| 2012 | 891,038 | 1,072,575 | 83.1 | 224,613 | 332,347 | 67.6 |

மக்களியலில் முதுமைச் சனத்தொகை இரண்டு பிரிவாகக் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும். அதாவது 60 – 74 வயதுச் சனத்தொகை இளைய முதியோர் சனத்தொகை எனவும் 75 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகை முதுமை முதியோர் சனத்தொகை என்றவாறாகும்.

** De Silva, W.I 2007> A Population projection of Sri Lanka for the millenium, 2001 – 2101 : Trends and Implecations, Intitute of Health, Colombo

60 – 74 வயதுப் பிரிவில் (இளைய முதியோர்) பால் விகிதாசாரம் 83.1 ஆகவும் 75 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவில்(முதுமை முதியோர்) பால் விகிதாசாரம் 67.6 ஆகும். இதற்கமைய முதியோர் சனத்தொகையில் பெரும்பான்மையானோர் பெண்களாவர். பால் விகிதாசாரத்திற்கமைய முதியோர் சனத்தொகையின் வாழ்க்கைப் போக்கு மாற்றமடையும்.

**அட்டவணை 4.4 : சனத்தொகையின் இடைய வயது 1946 – 2012**

| தொகைமதிப்பு வருடம் | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1946 | 21.3 | 22.1 | 20.5 |
| 1953 | 20.8 | 21.7 | 19.9 |
| 1963 | 19.4 | 20.0 | 18.4 |
| 1971 | 19.7 | 20.0 | 19.3 |
| 1981 | 21.4 | 21.5 | 21.4 |
| 2012 | 30.0 | 30.0 | 31.0 |

மேலே அட்டவணை 4.4 இல் காட்டப்படுவது சனத்தொகையின் இடைய வயது மாற்றமடைந்துள்ள விதமாகும். 1981 இன் பின்னர் இடைய வயது மொத்த சனத்தொகைக்காகவும் 8.6 வருடங்களினாலும் பெண்களுக்காக 9.6 வருடங்களாலும் ஆண்களுக்காக 8.5 வருடங்களாலும் மாற்றமடைந்துள்ளது. 1981 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆண்களின் இடைய வயது பெண்களை விட அதிகமாகும். 1981 இன் பின்னர் ஏற்பட்ட முதிர்ச்சியடையும் தன்மை இவ்வாறு தொடருமானால் இலங்கையின் சனத்தொகையின் இடைய வயது 40 வரை அதிகரிக்கும்.

**உரு 4.9 : வயதுப் பிரிவுக்கமைய பால் விகிதாசாரம் 1981 மற்றும் 2012**




1981 ஆம் ஆண்டில் ஒரு வயதிலும் குறைந்த சனத்தொகையின் பால் வீதாசாரம் 103.9 ஆக விருந்து 2012 ஆகும் போது 100.8 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. 01 – 04 வயதுப் பிரிவின் பால் விகிதாசாரம் 103.7 இலிருந்து 101.9 வரையும் 05 – 14 வயதிற்கிடைப்பட்ட சிறுவர் சனத்தொகையின் பால் விகிதாசாரம் 103.9 இலிருந்து 102.1 வரையும் வீழ்ச்சியடைந்துள்ளது. 15-29 வயதிற்கிடைப்பட்ட வயதுப் பிரிவின் பால் விகிதாசாரம் 101.3 இலிருந்து 95.1 வரை வீழ்சிசயடைந்துள்ளது. இந்தப் பெறுமதி வீழ்ச்சியடைவதை ஆண் பெண் இருபாலரும் திருமணம் செய்யும் இடைய வயதைக் கவனத்தில் கொண்டால் திருமணம் செய்வதற்குப் பொருத்தமான வயது (இளைஞர்) சனத்தொகை திருமணம் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நடுவயதுச் சனத்தொகையில் (30 -59 வயதிற்கிடைப்பட்ட) 1981 இல் 104.8 ஆகக் காணப்பட்ட பால் விகிதாசாரம் 2012 ஆம் ஆண்டாகும் போது 93.0 வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சனத்தொகையைக் கவனத்தில் கொண்டால் பால் விகிதாசாரம் 1981 – 2012 காலப் பகுதிக்குள் வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதாவது 100 பெண்களுக்குக் காணப்படும் ஆண்களின் எண்ணிக்கை 79 ஆகும். முதியோர் சனத்தொகையில் விதவைகளின் எண்ணிக்கை ஆண் தாரமிழந்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகரிப்பதற்கு இந்த நிலமை காரணமாகவுள்ளது. 75 வயதிற்கு மேற்பட்ட வயதுப் பிரிவின் பால் விகிதாசாரம் 67.6 வரை படிப்படியாகக் குறைவடைந்துள்ளது. பெண்களின் ஆயுள் எதிர்பார்ப்பு ஆண்களை விட அதிகம் என்பதால் முதியோர் சனத்தொகையின் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெண்கள் கொண்டுள்ளனர். இந்த நிலைமைக்கமைய முதுமையடையும் போது தமது கணவரின் பாதுகாப்பின்றித் தனிமையில் வாடும் வயோதிபப் பெண்களை பாதுகாப்பது தொடர்பில் சமூகம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வேலை செய்யும் வயதில் அதாவது 15 – 59 இடைப்பட்ட சனத்தொகையின் பால் விகிதாசாரம் 93.8 ஆகும். நாட்டின் சமூகப் பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு பங்களிப்பை வழங்கக் கூடிய ஊழியப் படையினுள் ஆண்களை விடப் பெண்களின் எண்ணிக்கை அதிகம் என்பது

தெளிவாகின்றது. பெண் ஊழியப்படையினை உரிய வகையில் உரிய வகையில் ஈடுபடுத்துவதற்கு நாட்டினுள் திட்டமிடல் அவசியம் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

**உரு 4.10 : பிரிவு ரீதியாகப் பால் விகிதாசாரம் 2012**




வசிக்கும் பிரிவுக்கமைய பால் விகிதாசாரத்தைக் கவனத்தில் கொள்ளுமிடத்து நகரப் பிரிவில் உயர்ந்த பால் விகிதாசாரம் 94.5 பதிவாகியுள்ளது. பெருந்தோட்டப் பிரிவில் குறைந்த பால் விகிதாசாரமான 92.4 பாதிவாகியுள்ளது. அதற்கமையப் பெருந்தோட்டப் பிரிவில் உயர்ந்த பெண் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது. அந்தப் பெறுமதி முழு இலங்கையின் பால் விகிதாசாரத்தை விட குறைந்த பெறுதியைக் கொண்டிருக்கின்றது.

கீழே அட்டவணை 4.5 இற்கமைவாக இன அடிப்படையிலான பால் விகிதாசாரத்தைக் கவனத்தில் கொண்டால் 1981 ஆம் ஆண்டாகும் போது சகல இனத் தொகுதிகளுக்காகவும் 100 பெண்களுக்குக் காணப்படும் ஆண்களின் எண்ணிக்கை 100 இலும் கூடிய பெறுமதியைப் பதிவு செய்துள்ளதுடன் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய சகல இனத் தொகுதிகளுக்காகவும் 100 பெண்களுக்குக் காணப்படும் ஆண்களின் எண்ணிக்கை 100 இலும் குறைவான பெறுமதியைப் பதிவு செய்துள்ளது.

**அட்டவணை 4.5 : இனத் தொகுதிக்கமைய பால் விகிதாசாரம் 2012**

| இனத் தொகுதி | பால் விகிதாசாரம் | |
|---|---|---|
| | 1981 | 2012 |
| **இலங்கை** | **104.0** | **93.8** |
| சிங்களவர் | 103.7 | 94.1 |
| இலங்கைத் தமிழர் | 106.5 | 92.3 |
| இந்தியத் தமிழர் | 101.3 | 91.5 |
| இலங்கைச் சோனகர் | 104.5 | 94.6 |
| ஏனையவை | - | 97.4 |

**மாவட்ட அடிப்படையில் பால் விகிதாசாரம்**

கீழே உரு 4.11 இல் மாவட்ட அடிப்படையில் பால் விகிதாசாரம் காட்டப்பட்டுள்ளது. அதிக பால் விகிதாசாரமான 101.1 மன்னாரில் பதிவாகியுள்ளது. மன்னார் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் பால் விகிதாசாரம் 100 இலும் குறைவானதாகும். குறைந்த பால் விகிதாசாரமான 88.5 யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது. 1981 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 2012 ஆம் ஆண்டின் பால் விகிதாசாரம் 104 இலிருந்து 93.8 வரை குறைவடைந்துள்ளது. ஆண்களுடன் ஒப்பிடுமிடத்து பெண்கள் உயர்ந்த ஆயுட்காலத்தைக் கொண்டிருத்தல், தாய் மரணங்கள் வீழ்ச்சியடைதல் இதில் தாக்கம் செலுத்தியுள்ள காரணங்களாகக் குறிப்பிடலாம். ஆண்களின் ஆயுட்காலத்தை உயர்த்துவதற்கு தேவையான திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

## உரு 4.11 : மாவட்ட மட்டத்திலான பால் விகிதாசாரம் 2012



**வயதுப் பால் துல்லியச் சுட்டெண்**

தொகைமதிப்பிலே பெற்றுக்கொளள்ப்படும் அடிப்படைத் தகவல்களான வயது மற்றும் பால் விபரம் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளின் துல்லியத் தன்மை பல சுட்டெண்களைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யலாம். இதன் மூலம் தொகைமதிப்புத் தகவல்களின் துல்லியத்தன்மை தொடர்பிலான விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேயர்ஸ் சுட்டெண்**

மேயர்ஸ் சுட்டெண் முழுமையான வயதைக் கவனத்தில் கொள்ளுமிடத்து ஓரிலக்கப் பெறுமதியைச் சுற்றி ஒன்று சேர்தல் அல்லது அந்தப் பெறுமதிகளைத் தாண்டி வயதைக் குறிப்பிடல் தொடர்பில் அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும். மேயர்ஸ் சுட்டெண் பெற்றுக்கொள்ளும் பெறுமதிக்கமைய தரவுகளின் துல்லியத் தன்மையைக் கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் காட்டலாம்.

- சுட்டெண் பெறுமதி 6 இலும் குறைவு : மிகவும் உயர் துல்லியத் தன்மையுடன் கூடிய தரவுகள் (ஓரிலக்கப் பெறுமதியைச் சுற்றிக் குவிந்திருத்தல் அல்லது அந்தப் பெறுமதியைத் தாண்டி காணப்படுதல் மிகக் குறைவு)
- சுட்டெண் பெறுமதி 6 – 20 இற்கிடையில் : துல்லியத்தன்மை குறைந்த தரவுகள் (ஓரிலக்கப் பெறுமதியைச் சுற்றிக் குவிந்திருத்தல் அல்லது அந்தப் பெறுமதியைத் தாண்டியிருத்தல்)
- சுட்டெண் பெறுமதி 20 இலும் அதிகம் : துல்லியத் தன்மையற்ற தரவுகள் (ஓரிலக்கப் பெறுமதியைச் சுற்றி குவிந்திருத்தல் அல்லது அதனைத் தாண்டியிருத்தல் மிக அதிகம்.)

(Ueda, 1980)

**அட்டவணை 4.6 : பால் விபரத்திற்கமைய மேயர்ஸ் சுட்டெண், 1981,2001 மற்றும் 2012**

| பால் விபரம் | மேயர்ஸ் சுட்டெண் | | | மாற்றமடைந்த வீதாசாரம் (1981-2012) |
|---|---|---|---|---|
| | 1981 | 2001* | 2012 | |
| **ஆண் பெண் இரு பாலரும்** | **9.7** | **2.7** | **1.7** | **82.4** |
| ஆண் | 8.7 | 2.7 | 1.8 | 79.6 |
| பெண் | 11.2 | 3.0 | 1.7 | 85.0 |

*18 மாவட்டங்கள் மட்டும்

2012 ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகைக்கான மேயர்ஸ் சுட்டெண் 1.7 ஆகும். பெண்களுக்கான மேயர்ஸ் சுட்டெண் 1.7 என்பதுடன் ஆண்களுக்கான மேயர்ஸ் சுட்டெண் 1.8 ஆகும். 1981 ஆம் ஆண்டீடன் ஒப்பிடுமிடத்து ஆண் பெண் இரு பாலருக்குமாக 2012 ஆம் ஆண்டில் இந்தச் சுட்டெண்ணின் பெறுமதி 6 அலகினை விடக் கூடிய பெறுமதியிலால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் மூலம் தெளிவாவது தொகைமதிப்பிலே ஆண் பெண் இருபாலரதும்

வயது தொடர்பான தரவுகள் தெளிவாகக் பெறப்பட்டுள்ளன என்பதாகும். சரியான வயதைக் குறிப்பிடுவதற்குத் தவறியவர்கள் மிகக் குறைவானவர்கள் என்பத மேலும் தெளிவாகின்றது. 1981 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து மொத்த மேயர்ஸ் சுட்டெண்ணின் விழ்ச்சி நூற்றுக்கு 82.4 என்பதுடன் ஆண்களுக்கு அந்தப் பெறுமதி நூற்றுக்கு 79.6 மற்றும் பெண்களுக்காக நூற்றுக்கு 85.0 ஆகும். 2012 ஆண்டின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் வயது மற்றும் பால் விபரத்திற்கமைய தரவுகளின் நம்பகத் தன்மை இதன் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

**உரு 4.12 : பால் விபரத்திற்கமைய மேயர்ஸ் சுட்டெண் 1981, 2001 மற்றும் 2012**




*18 மாவட்டங்கள் மட்டும்

**அட்டவணை 4.7 1981 மற்றும் 2012 வருடத்திற்கான முழுமையான வயது ஓரிலக்க பெறுமதியின் விலகல்கள்**

| ஓரிலக்கப் பெறுமதி | 1981 | | 2012 | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| மேயர்ஸ் சுட்டெண் | **8.7** | **11.2** | **1.8** | **1.7** |
| 0 | +2.4 | +2.9 | +0.2 | +0.1 |
| 1 | -0.6 | -1.1 | +0.2 | +0.1 |
| 2 | +0.1 | -0.3 | +0.2 | +0.1 |
| 3 | -0.3 | 0.0 | -0.1 | -0.1 |
| 4 | -0.7 | -0.8 | 0.0 | 0.0 |
| 5 | +0.9 | +1.2 | -0.1 | -0.1 |
| 6 | -0.6 | -0.6 | -0.3 | -0.3 |
| 7 | -1.2 | -1.4 | -0.1 | 0.0 |
| 8 | +1.0 | +1.4 | -0.2 | -0.2 |
| 9 | -1.2 | -1.4 | +0.3 | +0.4 |

மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நேர் பெறுமதிகள் தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தின் போது நபர்கள் தமது வயதைக் குறிப்பிடும் போது வயதின் ஓரிலக்க பெறுமதியைச் சுற்றி குவிந்திருப்பதை வெளிப்படுகின்றது. எதிர்க்கனியப் பெறுமதிகள் வயதின் ஓரிலக்கப் பெறுமதியிலிருந்து விலகியிருப்பதைக் காட்டுகின்றது. 0.0 எனக் காட்டப்படுவது வயதின் ஓரிலக்கப் பெறுமதியைச் சுற்றி குவிந்திருப்பதோ அல்லது விலகலோ இல்லாதிருக்கும் தன்மையாகும். 2012 ஆம் ஆண்டில் ஆண் பெண் இருபாலரும் 0, 1, 2, 9 பெறுமதிகளைச் சுற்றிக் குவிந்திருத்தலும் மற்றும் 3, 5, 6,7, 8 பெறுமதிகளில் விலகலையும் வெளிக்காட்டுகின்றது. 4 இலக்கத்தில் நிறைவடையும் வயதுகளில் ஆண் பெண் இருபாலருக்காகவும் 7 இலக்கத்தில் நிறைவடையும் வயதுகளில் பெண்களுக்காக இந்தப் பெறுமதி 0 ஆக இருப்பதால் அந்த வயதுகளில் வயது சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்படும். 1981 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து இந்த விலகலில் எண்ணிக்கை ரீதியாக வீழ்ச்சி ஏற்பட்டுளள்மை தெரிய வருகின்றது.

**வீபல்ஸ் சுட்டெண்**

இந்தச் சுட்டெண்ணானது தொகைமதிப்பிலே வயது மற்றும் பால் விபரத்திற்கமைய தரவுகளின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்தக் கூடிய சுட்டெண்ணாகும். தரவு சேகரிக்கும் சந்தர்ப்பத்தில் பதிலளிப்பவர்கள் 0 மற்றும் 5 ஆகிய இலக்கங்களில் முடிவடையும் வயதைக் குறிப்பிடுவதால் “வயதின்” துல்லியத் தன்மைக்கு ஏற்படும் தாக்கம் இதன் மூலம் வெளிப்படுத்தப்படும். வீபல்ஸ் சுட்டெண் பெற்றுக்கொள்ளும் பெறுமதிக்கமைய வயதில் 0 மற்றும் 5 ஆகிய இலக்கங்களில் முடிடையும் பெறுமதிகளுக்கு ஈர்க்கப்படும் அளவினை வெளிக்காட்டும்.

வீபல்ஸ் சுட்டெண் பெற்றுக்கொள்ளும் பெறுமதிக்கமைய தரவுகளின் துல்லியத் தன்மை கீழே காட்டப்பட்டுள்ளது.

- சுட்டெண்ணின் பெறுமதி 105 அல்லது அதிலும் குறைவு : உயர் துல்லியத் தன்மை கொண்ட தரவுகள்
- சுட்டெண்ணின் பெறுமதி 105 மற்றும் 109.9 இற்கிடையில் : துல்லியத் தன்மை கொண்ட தரவுகள்
- சுட்டெண்ணின் பெறுமதி 110 மற்றும் 124.9 இற்கிடையில் : அண்ணளவாகத் துல்லியத் தன்மை கொண்ட தரவுகள்
- சுட்டெண்ணின் பெறுமதி 125 மற்றும் 174.9 இற்கிடையில் : துல்லியத்தன்மையற்ற தரவுகள்
- சுட்டெண்ணின் பெறுமதி 174.9 இலும் கூடிய : மிகத் துல்லியத்தன்மையற்ற தரவுகள்

(U.N. Statistics)

**அட்டவணை 4.8 : பால் விபரத்திற்கமைய வீபல்ஸ் சுட்டெண், 1981, 2001 மற்றும் 2012**

| பால் விபரம் | வீபல்ஸ் சுட்டெண் | | |
|---|---|---|---|
| | **1981** | **2001*** | **2012** |
| **ஆண் பெண் இரு பாரும்** | **118.6** | **97.0** | **100.2** |
| ஆண் | 116.7 | 97.5 | 100.3 |
| பெண் | 120.5 | 96.4 | 100.0 |

*18 மாவட்டங்கள் மட்டும்

1981 இல் 118.6 ஆகக் காணப்பட்ட வீபல்ஸ் சுட்டெண் 2012 ஆம் ஆண்டில் அதன் பெறுமதி 100.2 ஆகும். 1981 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சனத்தொகை பிரமிட்டுக்களைக் கவனத்தில் கொண்டால் 1981 சனத்தொகைப் பிரமிட்டிலே 0 மற்றும் 5 ஆகிய இலக்கங்களில் முடிவடையும் வயதுகளில் குவிவடையும் தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது. 2012 இல் பெண்களுக்கான வீபல்ஸ் சுட்டெண் 100.0 உம் ஆண்களுக்கான வீபல்ஸ் சுட்டெண் 100.3 உம் ஆகும். 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே வயதுத் தரவுகள் உயர் துல்லியத்தன்மை கொண்டவை என்பது இதிலிருந்து புலனாகின்றது. தொகைமதிப்புத் தரவுகளைச் சேகரிக்கும் சந்தர்ப்பத்தில் பிறந்த திகதியை வினவி வயதைக் கணிப்பிடல் இந்த உயர் துல்லிளத்தன்மைக்கான காரணமாகவிருக்கலாம்.

# விவாக அந்தஸ்து மற்றும் கருவளம்

# 5.0

## விவாக அந்தஸ்து மற்றும் கருவளம்

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே சேகரிக்கப்பட்ட பால் விபரம், வயது, இனம் போன்ற உயிரியல் விஞ்ஞானத் தரவுகளுக்கு மேலதிகமாக சகல நபர்களிடமும் சேகரிக்கப்பட்ட மிக முக்கியமான தகவலாக விவாக அந்தஸ்தினைக் அடையாளப்படுத்தலாம். விவாக அந்தஸ்து என்பது உயிரியல் விஞ்ஞான, சமூக, பொருளாதார, சட்ட மற்றும் சமயம் போன்ற காரணிகளுடன் தொடர்புடைய மக்களியல் பண்பாகும்.

அவ்வாறே விவாக அந்தஸ்து என்பது சனத்தொகை மாற்றும் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரதான காரணியாகவும் கவனத்தில் கொள்ளலாம். நாட்டின் கருவளம் தொடர்பில் நேரடியாகவும் இறப்பு மற்றும் குடிப்பெயர்வு தொடர்பிலும் விவாக அந்தஸ்து தாக்கம் செலுத்தும். அதனைத் தவிர கல்வி நிலமை, ஊழியப்படையின் பங்குபற்றல் போன்ற சமூக மற்றும் பொருளாதார காரணிகள் தொடர்பிலும் நபரின் விவாக அந்தஸ்து தாக்கத்தை ஏற்படுத்தும்.

பொதுவான திருமணச் சட்டம், மலைநாட்டு திருமணச் சட்டம் மற்றும் முஸ்லீம் திருமணச் சட்டம் என்றவாறு இலங்கையில் திருமணம் தொடர்பில் தெளிவான மூன்று சட்ட திட்ட ஒழுங்கமைப்புக்கள் அமுலில் உள்ளன. பெரும்பாலும் உரோம மற்றும் ஒல்லாந்து சட்டங்கள் மற்றும் ஆங்கிலேயச் சட்டங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட பொதுச் சட்டம் கரையோரச் சிங்களவர், தமிழர் மத்தியில் நிகழும் திருமணங்களைப் போன்று இனங்கள் மற்றும் இரு சமயக் குழுக்களுக்கிடையில் நடைபெறும் திருமணம் தொடர்பிலும் செல்லுபடியானதாகும். மலைநாட்டுச் தங்களது சுய விருப்பத்திற்கமைய பொதுத் திருமணச் சட்டத்திற்கமைய அல்லது மலைநாட்டுப் பாரம்பரிய திருமணச் சட்டத்திற்கமைய திருமணம் செய்யலாம். இலங்கையினுள் வசிக்கும் முஸ்லீம்களின் திருமணம் தொடர்பில் செல்லுபடியாவது முஸ்லீம் திருமணச் சட்டமாகும்.

உலகில் பிரதானமாக ஒருதாரத் திருமணம் மற்றும் பலதாரத் திருமணம் என்ற இரு வகைகள் காணப்பட்டாலும். இலங்கையினுள் பலதாரத் திருமணங்களை காணமுடியாதுள்ளது. பொதுத் திருமணச் சட்டம் மற்றும் மலைநாட்டு பாரம்பரியத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச வயதெல்லை 18 வருடங்களாகும். முஸ்லீம் பெண்களுக்கு 12 வயது பூர்த்தியான பின்னர் திருமணம் செய்ய முடியும் ஆனால் காதி நீதிமன்ற (குவாசி சபையின்) அனுமதியைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் 11 வயதிலும் குறைந்த பெண்களும் திருமணம் செய்யலாம். திருமணமொன்றைப் பதிவு செய்தல் கட்டாயமல்ல என்பதுடன் பௌத்த, இந்து அல்லது கிறிஸ்தவ சமயப் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கமைய மேற்கொளள்ப்படும் பாரம்பரியத் திருமணங்களும் செல்லுபடியானவையாகக் கருதப்படும்.

2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் திருமண அந்தஸ்து மற்றும் கருவளம் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தரவுகள் தொடர்பில் பகுப்பாய்வு ரீதியான விபரிப்புகளும் இதற்கு முன்னைய தொகைமதிப்புக்களில் சேகரிக்கப்பட்ட தகவல்களுடன் இம்முறை தொகைமதிப்பிலே சேகரிக்கப்பட்ட தகவல்களின் ஒப்பீடும் இந்த அத்தியாயத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கு முன்னர் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் தொகைமதிப்பு நடாத்தப்பட்டது 1981 இல் ஆகும். 2001 ஆம் ஆண்டில் குடிசன மற்றும் தொகைமதிப்பொன்று நடாத்தப்பட்டாலும் அப்போது நாட்டினுள் நிலவிய அசாதாரனச் சூழ்நிலை காரணமாக அந்தத்

தொகைமதிப்பிலே முழுமையாகக் கணக்கெடுகக்ப்பட்டது 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மட்டுமேயாகும். இதன்போது வட மாகாண மாவட்டங்களான யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளில் மட்டும் தொகைமதிப்பு நடாத்தப்பட்டுள்ளது. அதன்போது மிக முக்கியமான பல தகவல்கள் சேகரிக்கப்பட்டாலும் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் அதிகமாக வசிக்கும் அந்தப் பிரதேசங்களில் முழுமையாகக் கணககெடுக்கப்படாததன் காரணத்தினால் நாட்டின் சமூகப் பொருளாதார நிலமைகள் உரிய வகையில் பிரதிபலிக்கப்படவில்லை. ஆகையால் இந்த அத்தியாயத்தில் தொகைமதிப்புத் தகவல்களை ஒப்பீடு செய்வதற்காக 1098 ஆம் ஆண்டு மற்றும் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தொகைமதிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களும் தேவையான சந்தர்ப்பங்களில் 1971 தொகைமதிப்புத் தகவல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தொகைமதிப்பு வரைவிலக்கணங்களுக்கமைய விவாக அந்தஸ்து**

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே சகல நபர்களிடமும் வினவப்படும் விவாக அந்தஸ்துத் தொடர்பான வினா மூலம் நாட்டின் சனத்தொகையின் நிகழ்கால விவாக அந்தஸ்துத் தொடர்பான தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியும். தொகைமதிப்பு வரைவிலக்கணங்களுக்கமைய சகல நபர்களும் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

1. ஒருபோதும் விவாகமாகாத - வாழ்க்கைக் காலத்தினுள் ஒருபோதும் திருமணம் செய்யாத நபர்கள்
2. விவாகமான (பதிவு செயய்ப்பட்ட) - தற்போது விவாகமாகியுள்ளதுடன் திருமணத்தை சட்ட ரீதியாகப் பதிவு செய்துள்ள நபர்கள்
3. விவாகமான (சம்பிரதாய பூர்வமாக) - திருமணத்தைச் சட்ட ரீதியாகப் பதிவு செய்யாத ஆனால் சம்பிரதாய பூர்வமாகத் திருமணம் செய்துள்ளதாகக் குறிப்பிடும் நபர்கள்.

   (தாரமிழந்த/ விவாகரத்துப் பெற்றிருந்தாலும் வேறு நபருடன் ஒன்றாக வசிக்கும் நபர்களும் இதன் கீழ் அடங்குவர்)
4. தாரமிழந்த - தனது கணவர்/ மனைவி இறந்திருப்பதுடன் தற்போது எந்த விதத்திலாவது திருமண வாழ்க்கையை வாழாத நபர்கள்
5. விவாகரத்துப் பெற்ற - கணவரிடம்/ மனைவியிடமிருந்து சட்ட ரீதியாக விவாகரத்துப் பெற்றுத் தற்போது மீண்டும் திருமணமாகாத நபர்கள்
6. சட்ட ரீதியாகப் பிரிந்து வாழும் - சட்ட ரீதியதகத் திருமணம் செய்து சட்ட ரீதியாக விவாகரத்துப் பெறாமல் சட்ட

ரீதியில் அல்லது நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் பிரிந்து வாழும் நபர்கள்

7. பிரிந்து வாழும் (சட்ட ரீதியற்ற) - சட்ட ரீதியாகத் திருமணம் செய்திருந்தாலும் தமது சுய விருப்பின் பேரில் பிரிந்து வாழும் (சட்ட ரீதியாகப் பிரிந்து வாழாமல்) நபர்கள்

இலங்கையிக் பொதுத் திருமணச் சட்டத்திற்கமைய சகல நபர்களும் ஒருவரை மட:டுமே திருமணம் செய்ய முடியும். இஸ்லாமியச் சட்டத்திற்கமைய ஆண்கள் ஒரு முறையில் உயர்ந்த பட்சம் 4 பெண்களைத் திருமணம் செய்ய முடியுமாக இருந்தாலும் இலங்கையின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 4.5 அளவிலான முஸ்லிம் ஆண்கள் மத்தியில் காணப்பட்டாலும் பலதாரத் திருமணங்கள் மிகவும் குறைவானதாகும்.

தொகைமதிப்பிலே சேகரிக்கப்பட்ட விவாக அந்தஸ்துத் தொடர்பான தகவல்கள் பதிவாகியுள்ள விதம் தொடர்பிலான துல்லியத் தன்மையை மதிப்பீடு செய்யக் கூடிய பிரதான முறையாக திருமணமாகியுள்ள ஆண்கள் மற்றும் திருமணமாகியுள்ள பெண்களின் எண்ணிக்கை காணப்படுகின்றது.

அட்டவணை 5.1 இல் காட்டப்படுவது 1981 மற்றும் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்களிலே பதிவாகியுள்ளவாறு திருமணமான (சட்ட ரீதியாக மற்றும் சம்பிரதாய பூர்வமாக) ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கையாகும். அதற்கமையத் திருமணமான பெண்களின் எண்ணிக்கை திருமணமான ஆண்களின் எண்ணிக்கையை விட 483,547 இனால் அதிகம் என்பது 2012 குடிசனத் தொகைமதிப்புக்கமையத் தெரிய வந்துள்ளது.

**அட்டவயை 5.1 : விவாக அந்தஸ்திற்கமைய திருமணமான நபர்களின் எண்ணிக்கை 1981 மற்றும் 2012**

| விவாக அந்தஸ்து | 1981 | | | | 2012 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண்களின் எண்ணிக்கையை விட அதிகமான பெண்களின் எண்ணிக்கை | | ஆண் | பெண் | ஆண்களின் எண்ணிக்கையை விட அதிகமான பெண்களின் எண்ணிக்கை | |
| | | | எண்ணிக்கை | % | | | எண்ணிக்கை | % |
| **சகல விவாக அந்தஸ்து** | **2,709,285** | **2,784,876** | **75,591** | **2.8** | **4,921,044** | **5,404,591** | **483,547** | **9.8** |
| பதிவு செய்யப்பட்ட திருமணம் | 2,439,496 | 2,493,608 | 54,112 | 2.2 | 4,726,489 | 5,183,280 | 456,791 | 9.7 |
| சம்பிரதாயத் திருமணம் | 269,789 | 291,268 | 21,479 | 8.0 | 194,555 | 221,311 | 26,756 | 13.8 |

இந்த மிகையான தன்மைக்குக் காரணம் இந்தத் திருமணமான பெண்களின் கணவர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளமையாக இருக்கலாம். அவ்வாறில்லை எனின் இலங்கைக் கலாசாரத்திற்கமைய திருமணமான பெண்கள் தமது கணவர் என்ன காரணத்திற்காக தம்முடன் ஒன்றாக வசிக்கவில்லை என்பதைக் குறிப்பிடுவதற்குக் தயக்கம் காட்டுகின்றமை காரணமாக இருக்கலாம்.

அட்டவணை 5.2 மூலம் 1981 மற்றும் 2012 தொகைமதிப்புக்களுக்கமைய இலங்கையில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையில் விவாக அந்தஸ்து மற்றும் பால் விபரத்திற்கமைய பரம்பியுள்ள முறை காட்டப்படுகின்றது.

**அட்டவணை 5.2 : விவசாக அந்தஸ்து மற்றும் பால் விபரத்திற்கமைய 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகை 1981 மற்றும் 2012**

| **விவாக அந்தஸ்து** | 1981 | | | | 2012 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **ஆண்** | | **பெண்** | | **ஆண்** | | **பெண்** | |
| | **எண்ணிக்கை** | **%** | **எண்ணிக்கை** | **%** | **எண்ணிக்கை** | **%** | **எண்ணிக்கை** | **%** |
| **சகல விவாக அந்தஸ்துக்களும்** | **4,905,730** | **100.0** | **4,714,422** | **100.0** | **7,266,234** | **100.0** | **7,961,539** | **100.0** |
| ஒருபோதும் திருமணம் செய்யாத | 2,085,222 | 42.5 | 1,525,309 | 32.4 | 2 ,179,099 | 30.0 | 1,748,503 | 22.0 |
| திருமணமான | 2,709,283 | 55.2 | 2,782,228 | 59.0 | 4,921,044 | 67.7 | 5,401,061 | 67.9 |
| தாரமிழந்த | 90,516 | 1.9 | 377,199 | 8.0 | 97,532 | 1.3 | 695,415 | 8.7 |
| விவாகரத்துப் பெற்ற | 11,546 | 0.2 | 17,658 | 0.4 | 14,847 | 0.2 | 26,328 | 0.3 |
| சட்ட ரீதியாகப் பிரிந்த | 9,163 | 0.2 | 12,028 | 0.3 | 11,135 | 0.2 | 19,778 | 0.2 |
| பிரிந்து வாழும் (சட்ட ரீதியற்ற) | * | * | * | * | 42,577 | 0.6 | 70,454 | 0.9 |

*பிரிந்து வாழும் (சட்ட ரீதியற்ற) என்னும் பிரிவின் கீழ் 1981 தொகைமதிப்பிலே தகவல் சேகரிக்கப்படவில்லை.

1981 தொடக்கம் 2012 வரையான 31 வருட காலத்தினுள் 15 வயது மற்றும் அதற்க மேற்பட்ட சனத்தொகையில் தாரமிழந்த, விவாகரத்துப் பெற்ற மற்றும் சட்ட ரீதியாகப் பிரிந்து வாழும் நபர்களின் வீதாசாரத்தில் பாரிய மாற்றங்கள் வெளிக்காட்டப்படவில்லை.

ஆனால் 1981 தொடக்கம் 2012 வரையான 31 வருட காலத்தினுள் ஒருபோதும் திருமணமாகாத ஆண்களின் வீதாசாரம் நூற்றுக்கு43 இலிருந்து நூற்றுக்கு 30 வரை வீழ்ச்சியடைந்துள்ளதுடன் பெண்களின் வீதாசாரம் நூற்றுக்கு 32 இலிருந்து நூற்றுக்கு 22 வரை வீழ்ச்சியடைந்துள்ளது. அவ்வாறே 1981 இல் முறையே நூற்றுக்கு 55 மற்றும் நூற்றுக்கு 59 ஆகக் காணப்பட்ட திருமணமான ஆண்கள் மற்றும் திருமணமான பெண்களின் வீதாசாரம் 2012 ஆம் ஆண்டாகும் போது நூற்றுக்கு 68 என்ற சம வீதாசாரம் வரை அதிகரித்துள்ளமை தெரிய வந்துள்ளது.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையின் விவாக அந்தஸ்து உரு 5.1 மூலம் காட்டப்பட்டுள்ளது.

**உரு 5.1 : விவாக அந்தஸ்திற்கமைய 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகை 2012**




### ஒருபோதும் விவாகமாகாத நபர்கள்

1971, 1981 மற்றும் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய ஒவ்வொரு வயதுப் பிரிவுக்குரிய ஒருபோதும் விவாகமாகாத ஆண் பெண் வீதாசாரம் அட்டவணை 5.3 இன் மூலம் காட்டப்படுகின்றது.

**அட்டவணை 5.3 : 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஒருபோதும் விவாகமாகாத நபர்களின் வீதாசாரம்**

| வயதுப் பிரிவு | ஆண் | | | பெண் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1971 | 1981 | 2012 | 1971 | 1981 | 2012 |
| **15 மற்றும் அதற்கு மேற்பட்ட சகல வயதுப் பிரிவுகளும்** | **43.7** | **42.5** | **30.0** | **31.3** | **32.4** | **22.0** |
| 15-19 | 99.4 | 99.0 | 97.7 | 89.4 | 90.1 | 89.4 |
| 20-24 | 86.6 | 83.5 | 81.3 | 53.2 | 55.3 | 56.8 |
| 25-29 | 53.2 | 51.5 | 47.9 | 24.6 | 30.4 | 24.4 |
| 30-34 | 25.6 | 24.9 | 20.3 | 10.9 | 15.8 | 10.2 |
| 35-39 | 13.4 | 12.6 | 9.5 | 5.8 | 8.9 | 6.7 |
| 40-44 | 9.2 | 8.3 | 6.7 | 4.7 | 5.9 | 5.7 |
| 45-49 | 8.0 | 6.9 | 5.8 | 4.1 | 4.5 | 5.4 |
| 50-54 | 7.5 | 6.4 | 5.4 | 4.5 | 4.2 | 5.8 |
| 55-59 | 7.2 | 6.1 | 4.9 | 4.4 | 3.8 | 6.3 |
| 60-64 | 7.5 | 6.5 | 4.9 | 4.8 | 4.5 | 6.8 |
| 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட | 7.5 | 6.8 | 5.1 | 4.5 | 4.8 | 5.3 |

1971 -1981 மற்றும் 1981 – 2012 என்ற தொகைமதிப்பு வருடங்களின் மாற்றங்களை ஆய்வு செய்யும் போது கடந்த 40 வருடங்கள் அளவான காலப்பகுதிக்குள் சகல வயதுப் பிரிவுகளுக்காகவும் ஒருபொதும் விவாகமாகாத ஆண்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றமை தெரிய வந்துள்ளது.

1971 இன் பின்னர் ஒரு போதும் விவாகமாகாத பெண்களின் எண்ணிக்கை மாற்றமடைதல் ஆண்களின் மாற்றடையும் போக்கினை விட வித்தியாசமாக போக்கினைக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிய வந்துள்ளது. இதன்போது 1971 – 1981 தசாப்தத்தினுள் 25-34 வயதுப் பிரிவுக்குள் யுவதிகள் திருமணம் செய்யாமல் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. அதனை அடுத்து வரும் 1981-2012 வரையான தொகைமதிப்புக் காலத்தினுள் 25-34 வயதிற்கிடைப்பட்ட வயதுப் பிரிவு மீண்டும் 1971 காணப்பட்ட மட்டத்திற்கு அண்ணளவாக வந்துள்ளமை வெட்டிக்காட்டும் பண்பாகும்.

இவ்வாறு 1981 தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தில் ஒருபோதும் விவாகமாகத பெண்கள் எனப் பதிவாகியுள்ள பெண்களுள் அதிகமானோர் அதன் பின்னர் திருமணம் செய்யவில்லை என்பது 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே 55 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் விவகாமாகாத வீதாசாரத்தைக் கவனத்தில் கொள்ளுமிடத்துத் தெரிய வருகின்றது.

1971, 1981 மற்றும் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்களில் ஒரு போதும் விவாகமாகாத பெண்களின் வீதாசாரமான மாற்றங்கள் கீழே உரு 5.2 மூலம் காட்டப்பட்டுள்ளது.

**உரு 5.2: ஒரு போதும் விவாகமாகாத பெண்களின் வீதாசாரம் 1971, 1981 மற்றும் 2012**



## திருமணமான நபர்கள்

1971, 1981 மற்றும் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய ஒவ்வொரு வயதுப் பிரிவுக்குரிய விவாகமான ஆண்கள் மற்றும் பெண்களின் வீதாசாரம் அட்டவணை 5.4 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.4 : 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட விவாகமான சனத்தொகையின் வீதாசாரம் 1971, 1981 மற்றும் 2012**

| வயதுப் பிரிவு | ஆண் | | | பெண் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1971 | 1981 | 2012 | 1971 | 1981 | 2012 |
| **15 மற்றும் அதற்கு மேற்பட்ட சகல வயதுப் பிரிவுகளும்** | **53.6** | **55.2** | **67.7** | **59.1** | **59.0** | **67.8** |
| 15-19 | 0.6 | 0.9 | 2.3 | 10.4 | 9.7 | 10.4 |
| 20-24 | 13.3 | 16.2 | 18.5 | 45.9 | 43.7 | 42.4 |
| 25-29 | 46.2 | 48.0 | 51.4 | 73.4 | 67.9 | 73.9 |
| 30-34 | 73.4 | 74.3 | 78.6 | 85.8 | 81.2 | 87.2 |
| 35-39 | 85.0 | 86.2 | 89.1 | 88.9 | 86.1 | 89.5 |
| 40-44 | 88.7 | 89.9 | 91.4 | 86.9 | 86.1 | 88.5 |
| 45-49 | 89.1 | 90.5 | 92.0 | 83.5 | 83.6 | 86.0 |
| 50-54 | 88.2 | 90.0 | 92.0 | 76.1 | 78.6 | 82.0 |
| 55-59 | 86.9 | 89.1 | 92.0 | 69.7 | 72.7 | 76.9 |
| 60-64 | 83.8 | 86.3 | 91.0 | 58.0 | 63.6 | 70.4 |
| 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட | 76.3 | 79.3 | 85.4 | 40.7 | 47.0 | 55.4 |

ஒருபோதும் விவாகமாகாத ஆண்களின் எண்ணிக்கையின் வீழ்ச்சிக்குச் சமமாக 1971 தொடக்கம் 2012வரையான 41 வருட காலத்தினுள் சகல வயதுப் பிரிவுகளிலும் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காணக்கூடியதாகவுள்ளது. இது வெட்டிக்காட்டும் வகையில் தெளிவாகத் தெரிவது 1981 மற்றும் 2012 தொகைமதிப்புக் காலப்பகுதியிலாகும். 1981 இல் நூற்றுக்கு 55 ஆகக் காணப்பட்ட விவாகமான ஆண்களின் வீதாசாரம் 2012 ஆகும் போது 12 வீதங்களிலும் அதிமாக அதிகரித்தள்ளதுடன் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய 15 வயதிலும் அதிகமான ஆண்களில் நூற்றுக்கு 68 அளவிலான எண்ணிக்கையானோர் திருமணமானவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

ஆனால் பெண்களைக் கவனத்தில் கொண்டால் 1971 தொடக்கம் 2012 வரையான 41 வருட காலத்தினுள் 45 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவுகளில் அடங்கும் பெண்களில் மட்டும் திருமணம் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காணக் கூடியதாகவுள்ளது.

கீழே உரு 5.3 இல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளவாறு 15-44 இற்கிடைப்பட்ட வயதுப் பிரிவுகளில் திருமணமான பெண்களைக் கவனத்தில் கொண்டால் 1971 தொடக்கம் 1981 வரையான காலத்தினுள் அந்த வயதுப் பிரிவினுள் திருமணமான பெண்களின் வீதாசாரம் குறைவடைந்துள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. ஆயினும் 2012 ஆம் நடைபெற்ற குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய 25-44 இடைப்பட்ட வயதுப் பிரிவினுள்

காணப்படும் திருமணமான பெண்களின் வீதம் மீண்டும் 1971 ஆண்டில் காணப்பட்ட திருமணமான பெண்களின் வீதத்திற்கு மிக அண்மித்த நிலைமையை வெளிக்காட்டுகின்றது.

**உரு 5.3 : வயதுப் பிரிவுக்கமைய திருமணமான பெண்களின் வீதாசாரம் 1971, 1981 மற்றும் 2012**




1971, 1981 மற்றும் 2012 தொகைமதிப்புக்களுக் அமைவாக விவாக அந்தஸ்தினை ஒப்பிடுமிடத்து ஏனைய சகல வயதுப் பிரிவுகளையும் விட வேறுபட்ட இயல்பினை வெளிப்படுத்துவது 20-24 இடைப்பட்ட வயதுப் பிரிவில் அடங்கும் இளைய பெண்களாகும். அந்த வயதுப் பிரிவில் மட்டும் 1971 தொடக்கம் 2012 வரையான காலத்தினுள் திருமணமான வீதாசாரம் மிகச் சிறிதளவாக காணப்பட்டாலும் அது படிப்படியாக குறைவடைந்து செல்கின்றது. ஆரம்பக் கல்விக்கு மேலதிகமாக பெண்கள் அதிகளவில் முழுநேர உயர்கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அதிகரித்தமையை அண்மைக் காலத்தில் காணக் கூடியதாக இருத்தல் இதற்கான காரணமாக இருக்கலாம் எனக் கற்பிதம் செய்யலாம்.

44 வயதைத் தாண்டிய ஆண்களுள் நூற்றுக்கு 90 இலும் அதிகமானோர் திருமணமானவர்கள் என்றாலும் 60-64 மற்றும் 65 வயதிலும் இலும் மேற்பட்ட பெண்களுள் திருமணமானவர்கள் எனப் பதிவாகியுள்ளது முறைறே நூற்றுக்கு 70 மற்றும் நூற்றுக்கு 55 மட்டுமேயாகும். இதற்குப் பிரதான காரணமாக அமைவது பெண்களின் ஆயுட்காலம் ஆண்களின் ஆயுட்காலத்துடன் ஒப்பிடுமிடத்து உயர் பெறுமதியைக் கொண்டிருப்பதால் மூத்த பெண்கள் இந்த வயதுப் பிரிவுகளை வந்தடையும் போது தாரமிழந்த நிலைமைக்கு உள்ளாவதாக இருக்கலாம்.

**சம்பிரதாயத் திருமணம்**

1971 தொடக்கம் 2012 வரையான காலத்தினுள் சம்பிரதாயத் திருமணங்களில் பாரிய வீழ்ச்சியைக் காணக்கூடியதாகவுள்ளது. 1971 மற்றும் 1981 தொகைமதிப்பு வருடங்களில் திருமணமான நபர்களுள் முறையே நூற்றுக்கு 18 மற்றும் நூற்றுக்கு 10 அளவில் சம்பிரதாய பூர்வமாகத் திருமணமானவர்கள் காணப்பட்டாலும் 2012 தொகைமதிப்பின் போது திருமணமான நபர்களுள் நூற்றுக்கு 4 அளவிலே சம்பிரதாயபூர்வமாகத் திருமணம் செய்தவர்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய நகர, கிராம மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளைக் கவனத்தில் கொள்ளுமிடத்து சம்பிரதாயத் திருமணங்களைச் செய்தவர்கள் அதிகமாகக் காணப்படுவது பெருந்தோட்டப் பிரிவிலாகும். பெருந்தோட்டத்தில் காணப்படும் திருமணமான நபர்களுள் நூற்றுக்கு 7 அளவில் சம்பிரதாயத் திருமணங்கள் காணப்பட்டாலும் நகரம் மற்றும் கிராமப் பிரிவுகளுக்காக இந்தப் பெறுமதி முறையே நூற்றுக்கு 3.5 மற்றும் நூற்றுக்கு 4.0 அளவானதாகும்.

அவ்வாறே பல்வேறு வயதுப் பிரிவுகளைக் கவனத்தில் கொண்டால் தெரிய வரும் முக்கிய விடயம் என்னவெனின் 15 வயதிலும் குறைந்த மற்றும் 15-19 வயதுப் பிரிவுகளில் திருமணமான நபர்களுள் நூற்றுக்கு 16 அளவிலானவர்கள் சம்பிரதாயத் திருமணங்களை மேற்கொண்டிருப்பதாகும். இது வீதாசார அடிப்படையில் ஏனைய சகல வயதுப் பிரிவுகளிலும் காணப்படக் கூடிய சம்பிரதாயத் திருமணங்களை விட வெட்டிக்காட்டும் உயர்ந்த பெறுமதியாகும்.

இந்த அதிகரித்த போக்கிற்கான காரணங்களாக ஊகிக்கக் கூடியது பெருந்தோட்டப் பிரிவுச் சனத்தொகையின் குறைந்த கல்வி மட்டம், பெரும்பாலும் சட்ட ரீதியாகத் திருமணம் செய்வதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெருந்தோட்டப் பிரிவுகளில் வசதி வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுவதைப் போன்று நாட்டில் அமுலில் இருக்கும் சட்ட திட்டங்களுக்கமைய 18 வயது பூர்த்தியாவதற்கு மன்னர் திருமணம் செய்வதற்கு சட்ட அனுமதி இன்மை என்பன தெரிய வந்துள்ளன.

**அட்டவணை 5.5 : பிரிவுக்கமைய எப்போதாவது திருமணமான நபர்களுள் சம்பிரதாயத் திருமணங்களைச் செய்தவர்களின் வீதாசாரம் 1971 -2012**

| தொகமதிப்பு வருடம் | இலங்கை | | நகரம் | | கிராமம் | | பெருந்தோட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1971 | 18.4 | 18.8 | 11.7 | 12 | 20.3* | 20.6* | - | - |
| 1981 | 10.0 | 10.5 | 6.4 | 6.6 | 11.0* | 11.5* | - | - |
| 2012 | 3.8 | 3.6 | 3.4 | 3.1 | 3.8 | 3.5 | 6.5 | 6.8 |

*பெருந்தோட்டப் பிரிவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**தாரமிழந்தவர்கள்**

1971, 1981 மற்றும் 2012 ஆம் வருடங்களில் நடைபெற்ற தொகைமதிப்புக்களிலே தமது விவாக அந்தஸ்து "தாரமிழந்த" எனக் குறிப்பிட்ட 15 வயது மற்றும் அதிலும் கூடிய ஆண்கள் மற்றும் பெண்கள் விதாசாரமாக அட்டவணை 5.6 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.6 : 15 வயது மற்றும் அதிலும் கூடிய தாரமிழந்த சனத்தொகையின் வீதாசாரம் 1971,1981 மற்றும் 2012**

| வயதுப் பிரிவு | தபுதாரர்கள் | | | விதவைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1971 | 1981 | 2012 | 1971 | 1981 | 2012 |
| **15 மற்றும் அதற்கு மேற்பட்ட சகல வயதுப் பிரிவுகளும்** | **1.4** | **1.2** | **1.3** | **5.4** | **5.2** | **8.7** |
| 15-19 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 | 0.1 | 0.1 |
| 20-24 | 0.1 | 0.1 | 0.0 | 0.5 | 0.5 | 0.2 |
| 25-29 | 0.2 | 0.2 | 0.1 | 1.2 | 1.1 | 0.5 |
| 30-34 | 0.5 | 0.3 | 0.1 | 2.3 | 2.0 | 1.0 |
| 35-39 | 0.9 | 0.6 | 0.2 | 4.3 | 3.9 | 1.9 |
| 40-44 | 1.3 | 1.0 | 0.4 | 7.5 | 7.0 | 3.5 |
| 45-49 | 2.2 | 1.8 | 0.6 | 11.5 | 11.1 | 6.2 |
| 50-54 | 3.6 | 2.9 | 1.1 | 18.6 | 16.4 | 10.0 |
| 55-59 | 5.2 | 4.2 | 1.8 | 25.2 | 22.8 | 14.8 |
| 60-64 | 8.0 | 6.5 | 3.0 | 36.7 | 31.4 | 21.2 |
| 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட | 15.6 | 13.3 | 8.6 | 54.4 | 47.7 | 38.4 |

மேலே அட்டவணை 5.6 இற்கமைய தெரியவரும் விடயமாவது 1971 தொடக்கம் 2012 வரையான சகல வயதுப் பிரிவுகளிலும் ஆண்கள் மற்றும் பெண்களின் தாரமிழக்கும் தன்மையின் போக்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளது என்பதாகும். இறப்பு வீழ்ச்சியடைவதன் நன்மை இதன் மூலம் தெளிவாவதுடன் எதிர்பார்த்த வகையில் வயது படிப்படியாக அதிகரிப்பதுடன் தாரமிழக்கும் போக்கு அதிகரிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. அவ்வாறே சகல வயதுப் பிரிவுகுகளுக்காகவும் தாரமிழந்த பெண்களின் எண்ணிக்கை தாரமிழந்த எண்ணிக்கையை விட அதிகரிப்பது விசேட அம்சமாகும்.

குறிப்பாக 35-59 வயதுப் பிரிவில் தாரமிழந்த ஆண்களின் எண்ணிக்கையை விட தாரமிழந்த பெண்கள் அண்ணளவாக பத்து மடங்கு அதிகமாகும். பெரும்பாலும் இதற்குக் காரணமாக அமைவது 35-59 வயதுப் பிரிவில் காணப்படும் ஆண்கள் தாரமிழந்த பின்னர் மீண்டும் திருமணம் செய்யும் தன்மை தாரமிழந்த பெண்கள் மீண்டும் திருமணம் செய்யும் தன்மையினை விட அதிகமாகக் காணப்படுவதாக இருக்கலாம்.

**விவாகரத்துப் பெற்ற/ துணையிடமிருந்த பிரிந்த வாழும் நபர்கள்**

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட விவாகரத்துப் பெற்ற ஆண்கள் 14,847 உம் பெண்கள் 26,328 உம் ஆகும். பெண்களின் குறைந்த இறப்பு மட்டத்தைப் போன்று விவாகரத்துப் பெற்ற பெண்கள் மீண்டும் திருமணம் செய்வதை விட விவாகரத்துப் பெற்ற ஆண்கள் மீண்டும் திருமணம் செய்வது மிகவும் இலகுவாகக் காணப்படுதல் இவ்வாறு விவாகலத்துப் பெற்ற ஆண்களை விட விவாகரத்துப் பெற்ற பெண்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கலாம் என ஊகம் செய்யலாம்.

அவ்வாறே சட்ட ரீதியாகப் பிரிந்த மற்றும் பிரிந்த (சட்ட ரீதியற்ற) பிரிவு தொடர்பிலும் இவ்வாறு பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருப்பதைக் காணலாம். பிரிந்து வாழும் நபர்களுக்கு மீண்டும் திருமணம் செய்வதற்குச் சட்டத்தில் இடமில்லை என்பதால் ஆண்கள் மீண்டும் திருமணம் செய்வதென்பது தாக்கம் செலுத்தாது என்பது தெளிவாகும்.

பிரிந்து வாழும் (சட்ட ரீதியற்ற) என்ற பிரிவின் கீழ் 1971 மற்றும் 1981 ஆம் வருடங்களில் நடைபெறறட தொகைமதிப்புக்களிலே தகவல் சேகரிக்கப்படவில்லை என்பதுடன் அந்தப் பிரிவின் கீழ் முதன்முறையாகத் தகவல் சேகரிக்கப்பட்டது 2001 ஆம் ஆண்டிலேயாகும். இதன்போது ஒப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்திய 1971 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் இவ்வாறு விவாகரத்துப் பெற்ற / கணவரிடமிருந்து பிரிந்து வாழும் பெண்களின் எண்ணிக்கை விவாகரத்துப் பெற்ற / மனைவியிடமிருந்து பிரிந்து வாழும் ஆண்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

விவகாரத்துப் பெற்ற / வாழ்க்கைத் துணையிடமிருந்து பிரிந்து வாழும் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் கீழே அட்டவணை 5.7 இல் காட்டப்பட்டுள்ளது. 1971 தொடக்கம் 1981 வரையான காலப் பகுதிக்குள் விவாகரத்துப் பெற்ற நபர்களின் வீதம் மிகச் சிறிய அளவில் அதிகரித்திருந்தாலும் 2012 ஆம் ஆண்டாகும் போது மீண்டும் அது 1971 இல் காணப்பட்ட பெறுமதிக்கு அண்மித்த பெறுமதியை எடுத்துள்ளது. ஆனால் சட்ட ரீதியாகப் பிரிந்து வாழும் நபர்களின் வீதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளதைக் காணலாம்.

2012 குடிசனத் தொகைமதிப்பிற்கமைய பொதுவாக 10,000 ஆண்களுள் 58 பேர் மற்றும் 10,000 பெண்களுள் 88 பேர் தமது விவாக அந்தஸ்தாக தமது வாழ்க்கைத் துணையிடமிருந்து சட்ட ரீதியாக அல்லாவிட்டாலும் பிரிந்து வாழ்வதாகப் பதிவு செய்துள்ளனர்.

**அட்டவணை 5.7 : 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 10,000 நபர்களுக்கான விவாகரத்துப் பெற்ற, வாழ்க்கைத் துணையிடமிருந்து பிரிந்து வாழும் நபர்களின் எண்ணிக்கை 1971,1981 மற்றும் 2012**

| தொகைமதிப்பு வருடம்/ பால் விபரம் | | விவாகரத்துப் பெற்ற | பிரிந்த | |
|---|---|---|---|---|
| | | | சட்ட ரீதியாக | சட்ட ரீதியற்ற |
| 1971 | ஆண் | 22 | 21 | - |
| | பெண் | 32 | 31 | - |
| 1981 | ஆண் | 23 | 19 | - |
| | பெண் | 37 | 26 | - |
| 2012 | ஆண் | 20 | 15 | 59 |
| | பெண் | 33 | 25 | 88 |

*பிரிந்து வாழும் (சட்ட ரீதியற்ற) என்னும் பிரிவின் கீழ் 1971 மற்றும் 1981 தொகைமதிப்பிலே தகவல் சேகரிக்கப்படவில்லை.

**இன வர்க்கத்திற்கமைய விவாக அந்தஸ்து**

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே பல்வேறு இனங்களிடம் தமது விவாக அந்தஸ்தை வினவிக் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் உரு 5.4 இந் மூலம் காட்டப்பட்டுள்ளது.

**உரு 5.4 : இன வர்க்கம் மற்றும் பால் விபரத்திற்கமைய விவாக அந்தஸ்து 2012**




ஆண்களைக் கவனத்தில் எடுத்தால் சகல இனங்களுக்காகவும் விவாக அந்தஸ்திற்கமைய வீதாசாரப் பரம்பல் பெரும்பாலும் சமமான போக்கினை வெளிக்காட்டினாலும் தமிழ் இனத்தின் வீதாசாரப் பரம்பல் வேறுபட்ட தன்மையினை வெளிக்காட்டுகின்றது. பதிவு செய்யப்பட்ட திருமணத்தினுள அடங்கும் தமிழ் ஆண்களின் வீதம் ஏனை இன வர்க்கங்களை விட மிகவும் குறைந்த பெறுமதியை எடுத்துள்ளது (சகல இன வர்க்கங்களுக்காகவும் சராசரிப் பெறுமதி நூற்றுக்கு 65 என்பதுடன் தமிழ் ஆண்களுக்கான இந்தப் பெறுமதி நூற்றுக்கு 60 எனப் பதிவாகியுள்ளது). சம்பிரதாயத் திருமணங்களைச் செய்துள்ள ஆண்களின் எண்ணிக்கை ஏனைய இன வர்க்கங்கள் அனைத்தையும் விட உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிவதுடன் அதன் மூலம் பதிவுத் திருமணங்களுக்கு குறைந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. சகல இன வர்க்கங்களுக்காகவும் சம்பிரதாயத் திருமணத்தின் வீதாசாரம் நூற்றுக்கு 2.7 ஆக இருப்பினும் தமிழ் ஆண்களுள் நூற்றுக்கு 5.2 வீதமானோர் சம்பிரதாயத்

திருமணங்களை செய்தவர்களாவர். தமிழ் பெண்களும் ஏனைய இனவர்க்கத்திற்குரிய பெண்களின் திருமணம் பரம்பலை விட வேறுபட்ட திருமணத் தன்மையினை வெளிப்படுத்துவதுடன் குறிப்பாக தாரமிழத்தல் ஏனைய இன வர்க்கப் பெண்களை விட உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**முதல் திருமணத்தின் சராசரி வயது**

முதல் திருமணத்தின் சராசரி வயது (Singulate Mean Age at Marriage – SMAM) என்பது திருமணம் நடந்த சந்தர்ப்பத்தின் போது பெண் மற்றும் ஆணின் வயதுப் பரம்பல் தொடர்பான சாராம்சச் சுட்டெண்ணாகும். தற்போது நிலவும் திருமணமாகும் போக்கினைப் பின்பற்றி 50 வயதாகும் போது திருமணம் செய்திருக்கும் நபர்களி**ன் குழுவொன்று பிரமச்சரியாக வாழும் சராசரி வருடங்களின் எண்ணிக்கை இந்தச் சுட்டெண்ணின்** மூலம் வெளிப்படுதத்ப்படும். இவ்வாறு கணிக்கப்படும் சராசரி, நபர்களின் திருமணமாகும் சராசரி வயதிற்கான உத்தேச மதிப்பீடாகக் பயன்படுத்த முடியும்.

அட்டவணை 5.8 இன் மூலம் காட்டப்படுவது, 1953 தொடக்கம் 2012 தொகைமதிப்பு வரை அண்ணளவாக 60 வருட காலத்தினுள் நடைபெற்ற தொகைமதிப்புக்களில் வெளியானவாறு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான திருமணமாகும் சராசரி வயதாகும்.

**அட்டவணை 5.8 : திருமணமாகும் சராசரி வயது, 1953-2012**

| தொகைமதிப்பு வருடம் | சராசரித் திருமண வயது | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மாற்றம் |
| 1953 | 27.2 | 20.9 | 6.3 |
| 1963 | 27.9 | 22.1 | 5.8 |
| 1971 | 28.0 | 23.5 | 4.5 |
| 1981 | 27.9 | 24.4 | 3.5 |
| 2012 | 27.2 | 23.4 | 3.8 |

இதன்போது 1953 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதிக்குள் ஆண்கள் திருமணமாகும் சராசரி வயதில் பாரிய மாற்றம் ஏற்படவில்லை. கடந்த 60 வருட காலப்பகுதிக்குள் அந்த வயது 27.2 மற்றும் 28.0 வருடங்களுக்கிடையில் ஊசலாடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. மிகவும் முக்கியமான காரணியாக அமைவது, 2012 ஆம் ஆண்டாகும் போது இலங்கை ஆண்களின் திருமணமாகும் சராசரி வயது மீண்டும் 1953 ஆம் ஆண்டில் நிலவிய பெறுமதியைப் பதிவு செய்தமையாம்.

பெண்களுக்கான திருமணமாகும் சராசரி வயது 1953 தொடக்கம் 1981 வரையான 28 வருட காலப்பகுதிக்குள் படிப்படியாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடியும். அந்தக் காலப் பகுதிக்குள் பெண்களின் திருமணமாகும் வயது 20.9 வருடங்களிலிருந்து 24.4 வருடங்கள் வரை 3 1/2 வருடங்கள் வரை உயர்வடைந்துள்ளதை வெளிப்படுத்துகின்றது. ஆனால் 1981 தொடக்கம்

2012 வருடம் வரையான காலப்பகுதிக்குள் பெண்களின் திருமணமாகும் வயது ஒரு வருடத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க முடியும்.

அதற்கமைய 1953 ஆம் ஆண்டில் திருமணமான ஆண் மற்றும் திருமணமான பெண்ணுக்கிடையில் சராசரி வயது வித்தியாசம் 6 வருடங்களுக்கு அதிகமாகக் காணப்பட்டாலும் 2013 ஆம் ஆண்டின் போது திருமணமாகும் ஆணை விட பெண் 4 வயதுகள் அளவிலே இளமையானவர். திருமணமாகும் சந்தர்ப்பத்தில் ஆண் மற்றும் பெண்களுக்கிடையில் குறைந்து வரும் இந்த இந்த வயது வித்தியாசத்திற்கு முக்கியமாகச் செல்வாக்கு செலுத்தியுள்ளது பெண்களித் திருமணமாகும் வயது அதிகரித்தமை என்பது தெளிவாகும்.

**முதல் திருமணத்தின் போதான சராசரி வயது – பிரதேச வேறுபாடு**

2012 குடிசன மற்றும் விட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளில் ஆண்கள் மற்றும் பெண்களின் திருமணமாகும் சராசரி வயது அட்டவணை 5.9 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய குழுக்களில் அதிக காலம் தனிமையில் வாழ்பவர்கள் நகரப் பிரதேசத்தவர்களாவர். திருமணமாகும் சராசரி வயதைக் கவனத்தில் கொண்டால் கிராமிய மக்கள் இரண்டாம் இடத்தினை எடுக்கின்றனர். மிக விரைவாகத் திருமண வாழ்க்கையில் இணைபவர்கள் பெருந்தோட்டத்தில் வாழும் ஆண்கள் மற்றும் பெண்களுமாவர்.

**அட்டவணை 5.9 பிரிவுக்கமைய திருமணமாகும் சராசரி வயது 2012**

| பிரிவு | சராசரித் திருமண வயது | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மாற்றம் |
| இலங்கை | **27.2** | **23.4** | **3.8** |
| நகரம் | 28.1 | 24.8 | 3.3 |
| கிராமம் | 27.0 | 23.1 | 3.9 |
| பெருந்தோட்டம் | 26.2 | 22.8 | 3.4 |

**அட்டவணை 5.10 வசிக்கும் மாவட்டத்திற்கமைய திருமணமாகும் சராசரி வயது 1981 மற்றும் 2012**

| மாவட்டம் | 1981 | | 2012 | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| **இலங்கை** | **27.9** | **24.4** | **27.2** | **23.4** |
| கொழும்பு | 28.9 | 25.4 | 28.0 | 24.9 |
| கம்பஹா | 28.3 | 25.0 | 27.5 | 24.3 |
| களுத்துறை | 28.8 | 25.4 | 27.2 | 23.7 |
| கண்டி | 28.6 | 25.4 | 27.8 | 23.9 |
| மாத்தளை | 27.7 | 24.0 | 27.0 | 22.5 |
| நுவரெலியா | 27.8 | 24.3 | 27.2 | 23.2 |
| காலி | 28.9 | 26.1 | 27.3 | 23.5 |
| மாத்தறை | 29.2 | 26.7 | 27.6 | 23.5 |
| அம்பாந்தோட்டை | 28.1 | 24.8 | 26.9 | 22.6 |
| யாழ்ப்பாணம் | 28.1 | 24.9 | 28.8 | 26.4 |
| மன்னார் | 25.4 | 21.9 | 27.2 | 24.1 |
| வவுனியா | 26.7 | 22.3 | 27.6 | 24.5 |
| முல்லைத்தீவு | 26.2 | 21.9 | 25.8 | 22.7 |
| கிளிநொச்சி | - | - | 26.3 | 23.1 |
| மட்டக்களப்பு | 25.8 | 21.1 | 26.2 | 23.0 |
| அம்பாறை | 26.7 | 21.8 | 26.7 | 23.0 |
| திருகோணமலை | 26.1 | 21.3 | 25.6 | 22.3 |
| குருநாகல் | 27.0 | 24.0 | 26.9 | 22.9 |
| புத்தளம் | 25.5 | 22.2 | 25.8 | 22.2 |
| அநுராதபுரம் | 26.2 | 22.2 | 26.1 | 21.9 |
| பொலன்னறுவை | 27.4 | 22.3 | 25.9 | 21.8 |
| பதுளை | 27.6 | 24.3 | 27.2 | 22.7 |
| மொணராகலை | 27.2 | 22.4 | 26.4 | 21.7 |
| இரத்தினபுரி | 28.0 | 24.3 | 27.2 | 22.9 |
| கேகாலை | 28.4 | 25.5 | 27.5 | 23.6 |

- 1981 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் கிளிநொச்சி வேறான மாவட்டமாக காணப்படவில்லை

வசிக்கும் மாவட்டத்திற்கமைய 1981 மற்றும் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே ஆண்கள் மற்றும் பெண்கள் திருமணமாகும் சராசரி வயது ஒப்பீடு மேலே அட்டவணை 5.10 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உரு 5.5 இன் மூலம் தெளிவாகக் காட்டப்படுகின்றவாறு 1981 ஆம் ஆண்டில் தாமதமாகி திருமண வாழ்வில் இணைந்தவர்கள் மாத்தறை மாவட்டப் பெண்களாவர். அவர்கள் சராசரியாக 26.7 ஆண்டுகள் தனிமையில் வாழ்ந்து திருமண வாழ்க்கையில் இணையும் போது மட்டக்களப்பு மாவட்டப் பெண்கள் இலங்கைப் பெண்கள் திருமணம் செய்யும் சராசரி வயதுக்கு முன்னர் 21.1 வயதில் திருமண வாழ்வில் இணைந்துள்ளனர்.

2012 தொகைமதிப்புக்கமைய அதிகமான காலம் தனிமையில் வாழும் பெண்கள் யாழ்ப்பாண மாவட்டப் பெண்களாவர். அவர்கள் சராசரியாக 26.4 வயதில் திருமண வாழ்வில் இணைவதுடன் அது இலங்கைப் பெண்களின் சராசரி திருமண வயதான 23.4 இனை விட 3 வருடங்கள் அளவிலான உயர் பெறுமதிணைக் கொண்டுள்ளது. அவ்வாறே மொணராகலை மாவட்டத்தில் வழமையாக வசிக்கும் பெண்கள் சராசரியாக 21.7 என்ற குறைந்த வயதில் திருமண வாழ்க்கையில் இணைந்துள்ளனர்.

**உரு 5.5 : பெண்கள் திருமணமாகும் சராசரி வயது 1981 மற்றும் 2012**




**முதல் திருமணத்தின் போதான சராசரி வயது - இன ரீதியான வேறுபாடு**

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் பதிவாகியுள்ளவாறு இன ரீதியாகத் திருமணமாகும் சராசரி வயது அட்டவணை 5.11 இல் காட்டப்படுகின்றது.

**அட்டவணை 5.11 : இன ரீதியாகத் திருமணமாகும் சராசரி வயது 2012**

| இனத்தொகுதி | ஆண் (வருடம் | பெண் (வருடம்) |
|---|---|---|
| சிங்களம் | 27.3 | 23.4 |
| இலங்கைத் தமிழ் | 27.4 | 24.4 |
| இந்தியத் தமிழ் | 26.5 | 23.2 |
| இலங்கைச் சோணகர் | 26.4 | 22.7 |
| வேறு | 27.7 | 23.4 |

ஆண் மற்றும் பெண் இருபாலாருக்காகவும் ஏனைய இன வகைக்குள் அடங்கும் நபர்களை விட குறைந்த வயதில் திருமணம் செய்யும் போக்கு இலங்கை முஸ்லீம் இனத்திற்குள் அடங்கும் நபர்களிடம் காணப்படுகின்றது. பெண்களுக்குள் அதிக காலம் தனிமையில் வாழ்பவர்கள் இலங்கைத் தமிழ் பெண்களாவர். அவர்கள் சராசரியாக 24-25 இடைப்பட்ட வயதிற்குள் திருமண வாழ்க்கையில் இணைய ஆரம்பிக்கின்றனர்.

**கருவளம்**

ஒரு நாட்டின் சனத்தொகையில் தாக்கம் செலுத்தும் காரணிகளுள் கருவளம் பிரதான இடத்தை வகிக்கின்றது. கருவளம் என்பது உயிருடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையாகும். குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளல் பிரதானமாக திருமண பந்தத்தின் மூலம் இடம்பெறும் இலங்கைக் கலாசாரத்தில் கருவளம் 15-49 வயதிற்குள் அடங்கும் அதாவது பிரசவிக்கும் வயதிற்கும் அடங்கும் திருமணமான பெண்களின் எண்ணிக்கையில் தங்கியுள்ளது.

1981 மற்றும் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்களுக்கு அமைய 15-49 இற்கு இடைப்பட்ட பிரசவிக்கும் வயதினைக் கொண்ட பெண்களின் எண்ணிக்கை அட்டவணை 5.12 மூலம் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய 1981 ஆம் ஆண்டில் 15-49 வயதிற்கிடைப்பட்ட பெண்களுள் நூற்றுக்கு 58 அளவில் திருமணம் செய்திருந்தாலும் 2012 தொகைமதிப்புக்கமைய இந்த வீதாசாரம் நூற்றுக்கு 67 வரை உயர்வடைந்துள்ளது.

**அட்டவணை 5.12 : வயதுப் பிரவுக்கமைய 15-49 வயதிற்கிடையில் காணப்படும் திருமணமான பெண்கள் (currently married),1981 மற்றும் 2012**

| வயதுப் பிரிவு | 1981 எண்ணிக்கை | 1981 % | 2012 எண்ணிக்கை | 2012 % |
|---|---|---|---|---|
| 15-19 | 76,559 | 3.5 | 85,392 | 2.4 |
| 20-24 | 332,468 | 15.1 | 335,158 | 9.3 |
| 25-29 | 432,418 | 19.7 | 598,450 | 16.7 |
| 30-34 | 451,338 | 20.6 | 734,555 | 20.4 |
| 35-39 | 359,352 | 16.4 | 646,905 | 18.0 |
| 40-44 | 291,177 | 13.3 | 617,503 | 17.2 |
| 45-49 | 251,242 | 11.4 | 574,175 | 16.0 |
| 15-49 வயதிற்கிடைப்பட்ட திருமணமான பெண்கள் | 2,194,554 | 100.0 | 3,592,138 | 100.0 |
| 15-49 இடைப்பட்ட பெண்கள் | 3,800,063 | | 5,355,092 | |
| திருமண வீதாசாரம் | | 57.8 | | 67.1 |

குழந்தைகளைப் பிரசவிக்கும் வயதுப் பிரிவில் காணப்படும் திருமணமான பெண்களின் வயதுப் பரம்பலும் 1981 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதிக்குள் மாற்றமடைந்துள்ளது. 1981 தொகைமதிப்புடன் ஒப்பிடுமிடத்து 2012 ஆம் ஆண்டாகும் போது 29 வருடங்களிலும் குறைந்த வயதுப் பிரிவில் காணப்படும் திருமணமான பெண்களின் வீதாசாரம் வீழ்ச்சியடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கருவளம் தொடர்பில் தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான சுட்டெண்களைத் தயாரிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதப்பிலே 15-49 வயதிற்கிடையில் எப்பொதாவது திருமணமான பெண்களிடம் மட்டும் அவர்கள் பிரசவித்த குழந்தைகள் தொடர்பில் தகவல் சேகரிக்கப்பட்டது. அதற்கமைய மேற்குறிப்பிட்ட வயதுப் பிரிவில் காணப்படும் எப்போதாவது திருமணமான சகல பெண்களிடமும் அவர்கள் உயிருடன் பிரசவித்த சகல குழந்தைகளின எண்ணிக்கையையும் அவற்றுள் தொகைமதிப்பினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தின் போது உயிருடன் இருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் கடைசி உயிர்ப்பிறப்பு நிகழ்ந்த ஆண்டும் மாதமும் வினவப்பட்டன.

அதற்கமைய நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டங்களில் 15-49 இடைப்பட்ட வயதுப் பிரிவுகளில் காணப்படும் எப்போதாவது திருமணமான பெண்களுக்கு உயிருடன் பிறந்த சகல பிறப்புக்களின் எண்ணிக்கை வீதாசாரப் பரம்பல் அட்டவணை 5.13 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.13 : பிரிவுக்கமைய 15-49 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட எப்போதாவது திருமணமான பெண்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை விதாசாரத்தின் பரம்பல், 2012**

| பிரிவு | 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட எப்போதாவது திருமணமான பெண்களின் எண்ணிக்கை | மொத்தம் | உயிர்ப்பிறப்புக்களின் எண்ணிக்கை வீதாசாரம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7+ |
| **சகல பிரிவுகளும்** | **6,213,036** | **100.0** | **7.1** | **20.6** | **28.4** | **20.5** | **10.0** | **5.5** | **3.1** | **4.8** |
| **நகரம்** | 1,092,930 | 100.0 | 8.0 | 21.7 | 30.7 | 20.0 | 9.0 | 4.7 | 2.5 | 3.4 |
| **கிராமம்** | 4,851,501 | 100.0 | 7.0 | 20.6 | 28.1 | 20.3 | 10.0 | 5.6 | 3.2 | 5.1 |
| **பெருந்தோட்டம்** | 268,605 | 100.0 | 5.1 | 16.8 | 23.1 | 27.5 | 13.7 | 6.7 | 3.1 | 4.0 |

15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட எப்போதாவது திருமணமான பெண்களுள் நூற்றுக்கு 7 இலும் அதிகமான அளவானோர் எந்தவொரு உயிர்ப்பிறப்பையும் பிரசவிக்கவில்லை என்பதுடன் இலங்கையில் திருமணமான பெண்களுள் பெரும்பான்மையானோர் தமது வாழ்க்கைக் காலத்தினுள் இரண்டு குழந்தைகள் அளவில் பிரசவித்துள்ளனர் என்பது தொகைமதிப்புத் தகவல்களிலிருந்து வெளியாகியுள்ளது. ஆனால் பெருந்தோட்டப் பிரிவில் வசிக்கும் பெண்களைக் கவனத்தில் கொண்டால் அவர்களுள் அதிக வீதமானோர் உயிருடன் மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ளமை தெரிய வருகின்றது.

ஒவ்வொரு பிரிவுக்கமைய 15 வயது மற்றும் அதிலும் மேற்பட்ட எப்போதாவது திருமணமான பெண்கள் உயிருடன் பிரசவித்த குழந்தைகளின் வீதாசாரப் பரம்பல் உரு 5.6 இல் காட்டப்பட்டுள்ளது.

**உரு 5.6 : பிரிவுக்கமைய 15 வயது மற்றும் அதிலும் மேற்பட்ட எப்போதாவது திருமணமான பெண்கள் உயிருடன் பிரசவித்த குழந்தைகளின் வீதாசாரப் பரம்பல், 2012**




அதற்கமைய பெருந்தோட்டப் பிரிவில் சகல திருமணமான 100 பெண்களுள் 55 பேர் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர். ஆனால் நகரம் மற்றும் கிராமியப் பிரிவுகளில் திருமணமான 100 பெண்களுள் முறையே 40 மற்றும் 44 பேர் மட்டும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எணணிக்கையான குழந்தைகளைப் பிரசவித்துள்ளமை தொகைமதிப்புத் தகவல்களில் பதிவாகியுள்ளது.

**சிறப்பு வயது கருவள விகிதாசாரம்**

சிறப்பு வயதுக் கருவள விகிதம் என்பது குறித்த வயதுப் பிரிவுக்குள் காணப்படும் 1000 பெண்கள் உயிருடன் பிரசவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையாகும். சிறப்பு வயதுக் கருவள வீகிதாசாரத்தின் மூலம் பெண்கள் குழந்தைகளைப் பிரசவிக்க ஆரம்பிக்கும் மற்றும் நிறைவு செய்யும் வயதினைப் போன்று ஏதாவதொரு கால இடைவெளிக்குள் சிறப்பு வயதுக் கருவள விகிதாசாரத்தை ஒப்பீடு செய்வதன் மூலம் குழந்தைகளைத் பிரசவிக்கும் கால வேகம் (கால இடைவெளி) மற்றும் குழந்தைகளைப் பிரசவிக்கும் போக்கின் மாற்றத்தினையும் வெளிக்காட்டும்.

1981 மற்றும் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிளே சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கமைய பிரசவிக்கும் வயதுப் பிரிவில் காணப்படும் பெண்களின் சிறப்பு வயதுக் கருவள விகிதாசாரம் அட்டவணை 5.14 இல் வெளிப்படுத்தப்படுகின்றது.

**அட்டவணை 5.14 : சிறப்பு வயதுக் கருவள விகிதாசாரம், 1981 மற்றும் 2012**

| வயதுப் பிரிவு | கருவள விகிதம் (1000 பெண்களுக்கு) | |
|---|---|---|
| | 1981 | 2012 |
| 15-19 | 38 | 36 |
| 20-24 | 177 | 107 |
| 25-29 | 226 | 147 |
| 30-34 | 204 | 118 |
| 35-39 | 90 | 58 |
| 40-44 | 28 | 16 |
| 45-49 | 4 | 2 |

1981 மற்றும் 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய உயர்ந்த கருவளம் 25-29 வயதுப் பிரிவுக்கிடைப்பட்ட பெண்களிடம் பதிவாகியுள்ளது. அந்த வயதுப் பிரிவுப் பெண்கள் 1000 பேர் 1981 ஆம் ஆண்டில் 226 பிறப்புக்களை உயிருன் பிரசவித்துள்ளதுடன் 2012 ஆம் ஆண்டாகும் போது அந்த வயதுப் பிரிவுப் பெண்கள் 147 பிறப்புக்களை உயிருடன் பிரசவித்துள்ளனர்.

குறைந்த சிறப்புக் கருவள விகிதம் 45-49 வயதுப் பிரிவுக்கிடைப்பட்ட பெண்களிடம் பதிவாகியுள்ளது. 2012 ஆம் ஆண்டாகும் போது 45-49 வயதுப் பிரிவுக்கிடைப்பட்ட பெண்கள் 1000 பேரில் இருவர் மட்டுமே உயிருடன் குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர். பொதுவாக 45-49 இடைப்பட்ட வயதுப் பிரிவின் போது உயிரியல் ரீதியாக பிரசவிக்கும் ஆற்றல் பலவீனமடைதல், பெரும்பாலும் இந்த வயதுப் பிரிவை அடையும் பெண்கள் தமது பிரசவப் பணியினை முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளமையும் இவ்வாறு குறைந்த கருவளத்தினைப் பதிவு செய்வதற்கான காரணங்கள் என அனுமானிக்கலாம்.

**மொத்தக் கருவள விகிதாசாரம்**

மொத்தக் கருவள விகிதாசாரம் என்பது பெண்களிடம் காணப்படும் சிறப்பு வயதுக் கருவள விகிதாசாரத்திற்கமைய குழந்தைகளைப் பிரிசவிப்பார்களாயின் அவர்கள் தமது பிரசவிக்கும் காலம் நிறைவடையும் போது பிரசவிக்கும் மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கையாகும்.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய பெண்கள் வசிக்கும் பிரிவு இன வர்க்கம் மற்றும் கல்வி மட்டத்திற்கமைய 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட திருமணமான பெண்களின் மொத்தக் கருவள மட்டத்தின் ஒப்பீடு உரு 5.7 இல் காட்டப்பட்டுள்ளது.

**உரு 5.7 : பிரிவு, இன வர்க்கம் மற்றும் கல்வி மட்டத்திற்கமைய மொத்தக் கருவள விகிதாசாரம், 2012**




பெருந்தோட்டப் பெண்களின் கருவள விகிதம் 3.0 என 2012 தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய பதிவாகியுள்ளதுடன் நகரம் மற்றும் கிராமியப் பிரிவுப் பெண்களின் கருவள மட்டத்தினை விட மிகவும் கனிசமான அளவு உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. இன வர்க்கத்தினைக் கவனத்தில் கொண்டால் இலங்கை முஸ்லீம் பெண்களின் கருவளம் (3.3) ஏனைய இலங்கைப் பெண்களின் சராசரிக் கருவள மட்டத்தினை விட 0.9 அளவிலான உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. சிங்களம் மற்றும் இலங்கைத் தமிழ் பெண்கள் 2.3 என்ற குறைந்த கருவள விகிதாசாரத்தினை வெளிப்படுத்துகின்றனர்.

திருமணமான பெண்களின் கல்வி மட்டத்திற்கமைய கருவளத்தினைப் பகுப்பாய்வு செய்யும் போது பொதுவாக எதிர்பார்க்கும் தன்மையினை விட வித்தியாசமான தன்மையினை வெளிக்காட்டுகின்றது. பல்வேறுபட்ட கல்வி மட்டத்தினையுடைய பெண்களைக் கவனத்தில் கொள்ளுமிடத்து ஒரு போதும் பாடசாலை செல்லாத பெண்களின் கருவள மட்டம் பாடசாலை சென்று உயர் கல்வித் தகைமையைப் பெற்றுள்ள பெண்களின் கருவள மட்டத்தினை விட குறைந்த பெறுமதியை எடுத்துள்ளமை தெளிவாகின்றது. குறைந்த கல்விமட்டம் மற்றும் குறைந் வருமான மட்டத்தினைக் கொண்ட பெண்களை விசேடமாக இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட குடும்பத் திட்டமிடல் வேலைத்திட்டங்களின் வெற்றி சில வேளைகளில் இதற்குக் காரணமாக அமையலாம்.

**மொத்தக் கருவள விகிதாசாரம் - மாவட்டங்களுக்கிடையிலான வித்தியாசம்**

வழமையாக வசிக்கும் மாவட்டதிதற்கமைய மொத்தக் கருவள மட்ட ஒப்பீடு உரு 5.8 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

**உரு 5.8 : மாவட்ட மட்டத்திலான மொத்தக் கருவள விகிதாசாரம்,2012**




வசிக்கும் மாவட்டத்திற்கமைய ஒரு பெண்ணால் தனது பிரசவிக்கும் காலம் முடிவடையும் போது பிரசவிக்கக் கூடியதென எதிர்பார்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையில் தெளிவான வித்தியாசத்தினைக் காணக்கூடியதாகவுள்ளது.

உயர்ந்த கருவள மட்டம் முறையே திருகோணமலை, நுவரெலியா மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலும் பதிலீட்டு கருவள மட்டமான 2.1 இலும் குறைவான கருவள விகிதாசாரம் முறையே கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும் பதிவாகியுள்ளன. உயர்ந்த மற்றும் குறைந்த கருவள மட்டங்களைப் பிரதிபலிக்கும் திருகோணமலை மற்றும் கொழும்பு மாவட்டப் பெண்களின் கருவள மட்டங்களை ஒப்பீடு செய்யும் போது திருகோணமலை மாவட்டப் பெண்ணொருவர் தமது பிரசவிப்புக் காலப் பகுதிக்குள் கொழும்பு மாவட்டப் பெண்ணொருவரை விட ஒரு குழந்தையை அதிகமாகப் பிரசவிக்கின்றார் என்பது தெரிய வருகின்றது.

# நகராக்கம்

# 6.0

# நகராக்கம்

எந்தவொரு சமூகமும் குறுங்கால மற்றும் நீண்டகால மாற்றங்களுக்கு உள்ளாகும். நீண்ட காலச் சமூக மாற்றங்கள் ஆறு பிரதான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும். அதாவது கைத்தொழிலாக்கம், நவீனமயமாக்கம், நகரமயதாதல்,வர்த்தகமயமாதல், மேற்கத்தேயமயமாதல் மற்றும் உலகமயதாதல் என்பனவாகும். நகரமயமாக்கம் என்பதால் கருதப்படுவது, நகரம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதேசங்களின் சனத்தொகையின் விகிதசம அதிகரிப்பாகும். இங்கிலாந்து உட்பட மேற்கு ஐரோப்பிய நாடுகள் கைத்தொழில் மயமாக்கம் மற்றும் நவீனமயமாக்கத்திற்கு உட்பட்டதன் காரணமாக நீண்ட காலமாகக் கிராமியப் பிரதேசங்களில் வசித்த மக்கள் படிப்படியாக நகரங்களை நோக்கி பெயர்வடைய ஆரம்பித்ததுடன் நகரமயமாக்கம் ஆரம்பித்து அதன் பின்னர் படிப்படியாக உலகின் ஏனைய பிரதேசங்களையும் நோக்கிப் பரவலடைந்தது. எவ்வாறாயினும் அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கிடையில் நகரமயமாக்கம் இடம்பெறும் முறையில் தெளிவான மாற்றத்தைக் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது அபிவிருத்தியடைந்த நாடுகளில் வர்த்தகத்தை நோக்காகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. எனினும் பெரும்பாலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகரங்கள் நிருவாக மையங்களை அடிப்படையாகக் கொண்டே உருவாகியுள்ளன. இவ்வாறு நிருவாக மத்திய நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு நகராக்கம் இடம்பெறும் போது அதன் தரம் குறைவடையும். அதிகமான மூன்றாம் உலக நாடுகளில் தரத்தில் குறைந்த நகராக்கத்தினையே காணக்கூடியதாகவுள்ளது. மேலும், நகராக்கம் இடம்பெறும் போது நகரத்தைச் சுற்றி சேரிகள் உருவாதல் அல்லது பரம்பலடைதல் இடம்பெறக் கூடாது. நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நல்வாழ்வுக்காக நகராக்கம் திட்டமிடப்படுவது அத்தியாவசியமாய விடயமாகும்.

தெற்காசிய வலய நாடுகளின் நகராக்கத்தைக் கவனத்தில் கொண்டால் அவை பெரும்பாலும் அபிவிருத்திச் செயன்முறைகளுக்கு அந்தளவு தூரம் விரும்பத்தக்க முறையில் இடம்பெறவில்லை என்பது தெளிவாகின்றது. இலங்கையின் மொத்தக் கிராமியச் சனத்தொகை 15,753,322 ஆகும். அது இந்த நாட்டின் மொத்தச் சனத்தொகையில் நூற்றுக்கு 77.4 என்ற மிகப் பெரிய வீதாசாரத்தைக் கொண்டுள்ளது. எனினும் நகரச் சனத்தொகை 3,704,470 என்றளவு மட்டுமே காணப்படுகின்றது. அது இந்த நாட்டின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 18.2 என்ற மிகக் குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளது. அதற்கமைய இலங்கை ஏனைய தெற்காசிய வலய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மிக உயர்ந்த சமூக அபிவிருத்தியை எட்டிப் பிடித்திருந்தாலும் நகராக்கத்ததைப் பொறுத்தவரையில் ஓரளவு பின்னடைந்துள்ளதைக் காணக்கூடியாகவுள்ளது.

ஒரு நாட்டின் நகராக்கத் தன்மை அவ்வாறில்லையெனின் அதன் பண்புகள் அந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நபர்களின் வாழ்க்கைத் தரத்தை மிகவும் நன்றாக வெளிப்படுத்தும் குறிகாட்டியாகும். இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மிகவும் சரியான தரவு மூலம் கடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் தகவல்களாகும். காலத்திற்கேற்ப பொருள்கோடல்கள் மாற்றமடைவதால் தரவுகளை வகைப்படுத்துவதில் வரையறைகள் காணப்பட்ட போதிலும் நகராக்கத்தை அளவிடுவதற்கு தொகைமதிப்புத் தரவுகள் போதுமானதாகும்.

**நகரச் சனத்தொகையின் வளர்ச்சி**

நகராக்கத்தின் தன்மை தங்கியிருப்பது அதன் வரைவிலக்கணங்களுக்கு அமையவாகும். தற்போது இலங்கையில் நகரம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதேசங்களாகக் கவனத்தில் கொள்ளப்படுவது நகரப் பிரிவின் கீழ் உள்ளடங்கும் மாநகர சபை மற்றும் நகர சபைப் பிரதேசங்களாகும். இந்நாட்டின் நரச் சனத்தொகை படிப்படியாக வளர்ச்சியடைந்த முறை அட்டவணை 6.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.1 : நகரச் சனத்தொகை 1871-2012**

| தொகைமதிப்பு வருடம் | நகரச் சனத்தொகை | % |
|---|---:|---:|
| 1881 | 281,065 | 10.2 |
| 1891 | 321,413 | 10.7 |
| 1901 | 414,025 | 11.6 |
| 1911 | 542,945 | 13.2 |
| 1921 | 637,870 | 14.2 |
| 1931 | 737,272 | 13.9 |
| 1946 | 1,023,042 | 15.4 |
| 1953 | 1,239,133 | 15.3 |
| 1963 | 2,016,285 | 19.1 |
| 1971 | 2,848,116 | 22.4 |
| 1981 | 3,192,489 | 21.5 |
| 2001 | 2,467,301 | 13.1* |
| 2012 | 3,704,470 | 18.2 |

*மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி

1987 இற்கு முன்னர் நகரம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதேசங்களாக மாநகர சபை பிரதேசங்கள் மற்றும் நகர சபைப் பிரதேசங்களுக்கு மேலதிகமாக பட்டின சபைகளும் (Twon Council) உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 1987 இல் மாகாண சபைகள் அமைக்கப்பட்டதுடன் அந்த பட்டின சபைகள் பிரதேச சபைகளுடன் இணைக்கப்பட்டன. அந்த வரைவிலக்கணத்தின் போது சில பிரதேச சபைகள் கிராமியப் பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்டதுடன் சில பிரதேச சபைகள் நகரப் பிரிவின் மாநகர சபைகள் அல்லது நகர சபைக்குள் உள்ளடக்கப்பட்டன. இந்த நிலமை காரணமாகச் சில பிரதேச சபைகளுக்கு நகர அந்தஸ்து கைநழுவிப் போனது. 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு நடைபெற்ற காலப்பகுதிக்குள் இலங்கையின் நகரப் பிரதேசங்களின் எண்ணிக்கை 56 ஆகும். இதில் 26 நகரப் பிரதேசங்கள் மிகச் சிறிய நகரங்கள் என்பதுடன் அந்த நகரப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் அளவு 25,000 ஈலம் குறைவானதாகும். அதிகளவான நகரச் சனத்தொகை வாழும் பிரதேசங்கள் கொழும்பு, கடுவெலை தெகிவளை, கல்கிஸ்சை மொரட்டுவை, நீர்கொழும்பு, கோட்டை ஆகிய மாநகர சபைகள் மற்றும் கெஸ்பாவை, மகரகம என்ற பிரதேச சபைகளாகும். மொத்த நகரச் சனத்தொகையில் நூற்றுக்கு 50 அளவானவை இந்தப் பிரதேசங்களில் வசிக்கின்றனர்.

**மாவட்ட அடிப்படையில் நகராக்கம்**

நிகழ்கால வரைவிலக்கணப்படுத்தல்களுக்கமைய இலங்கையின் நகராக்கம் நூற்றுக்கு 18.2 ஆகும். நகரப் பிரதேசங்களைச் சரியாக வரைவிலக்கணப்படுத்தினால் இது இதனை விட உயர்ந்த பெறுமதியாகக் காணப்படலாம். மாகாணம் மற்றும் மாவட்டதிதற்கமைய நகரச் சனத்தொகையின் வீதாசாரம் அட்டவணை 6.2 இல் காட்டப்பட்டுள்ளது. மாகாணம் மற்றும் மாவட்டத்திற்கமைய நகரச் சன்தத்தொகையை ஆய்வு செய்யும் போது நகராக்கத்தின் வேறுபாட்டினைத் தெளிவாக அவதானிக்க முடியும்.

**அட்டவணை 6.2 : மாவட்டத்திற்கமைய நகரச் சனத்தொகை, 2012**

| மாகாணம் | மாவட்டம் | மொத்த சனத்தொகை | நகரச் சனத்தொகை | % |
|---|---|---|---|---|
| | **இலங்கை** | **20,359,439** | **3,704,470** | **18.2** |
| மேல் மாகாணம் | கொழும்பு | 2,324,349 | 1,802,904 | 77.6 |
| | கம்பஹா | 2,304,833 | 360,221 | 15.6 |
| | களுத்துறை | 1,221,948 | 109,069 | 8.9 |
| மத்திய மாகாணம் | கண்டி | 1,375,382 | 170,544 | 12.4 |
| | மாத்தளை | 484,531 | 60,276 | 12.4 |
| | நுவரெலியா | 711,644 | 40,151 | 5.6 |
| தென் மாகாணம் | காலி | 1,063,334 | 133,398 | 12.5 |
| | மாத்தறை | 814,048 | 96,570 | 11.9 |
| | அம்பாந்தோட்டை | 599,903 | 31,709 | 5.3 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 583,882 | 117,575 | 20.1 |
| | மன்னார் | 99,570 | 24,417 | 24.5 |
| | வவுனியா | 172,115 | 34,816 | 20.2 |
| | முல்லைத்தீவு | 92,238 | - | - |
| | கிளிநொச்சி | 113,510 | - | - |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 526,567 | 151,226 | 28.7 |
| | அம்பாறை | 649,402 | 153,338 | 23.6 |
| | திருகோணமலை | 379,541 | 85,123 | 22.4 |
| வட மேல் மாகாணம் | குருநாகல் | 1,618,465 | 30,342 | 1.9 |
| | புத்தளம் | 762,396 | 66,952 | 8.8 |
| வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | 860,575 | 50,595 | 5.9 |
| | பொலன்னறுவை | 406,088 | - | - |
| ஊவா மாகாணம் | பதுளை | 815,405 | 69,800 | 8.6 |
| | மொணராகலை | 451,058 | - | - |
| சப்பரகமுவா மாகாணம் | இரத்தினபுரி | 1,088,007 | 99,451 | 9.1 |
| | கேகாலை | 840,648 | 15,993 | 1.9 |

தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய நகரச் சனத்தொகையில் அரைவாசி (1,802,904) கொழும்பு மாவட்டத்தில் வசிக்கின்றனர். பொருளாதார மற்றும் நிருவாக மத்திய நிலையங்கள் அதிகளவில்

காணப்படுதல், கல்வி சுகாதாரம் மற்றும் ஏனைய கீழ்க் கட்டமைப்பு வசதிகளின் விருத்தி காரணமாக இலங்கையில் அதிக சனத்தொகை கொழும்பு மாவட்டத்தில் வசிக்கின்றனர். கொழும்பு மாவட்ட சனத்தொகையில் நான்கில் மூன்று பகுதியினர் (77.6%) நகரப் பிரதேசங்களில் வாழ்கின்றனர். இந்த சனத்தொகையில் நூற்றுக்கு 44 வீதம் கொழும்பு மாநகர சபைக்குள்ளும் நூற்றுக்கு 20 வீதம் கடுவெலை பிரதேச சபைக்குள்ளும் நூற்றுக்கு 15 வீதம் தெகிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபைக்குள்ளும் நூற்றுக்கு 13 வீதம் மொரட்டுவை மாநகர சபைக்குள்ளும் நூற்றுக்கு 8 வீதம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்குள்ளும் உள்ளடங்குகின்றன.

பொலன்னறுவை, மொணராகலை, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் தவிர நாட்டின் ஏனைய மாவட்டங்களில் நகரப் பண்புகளை வெளிப்படுத்தும் பிரதேசங்கள் காணப்பட்டாலும் அந்தப் பிரதேசய்களின் நகரச் சனத்தொகை கொழும்பு மாவட்டத்துடன் ஒப்பிடுமிடத்து மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இதன் மூலம் இலங்கையின் நகராக்கத்தின் ஏற்றத்தாழ்வான பரம்பல் வெளிக்காட்டப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்திற்குரிய மட்டக்களப்பு (28.7%) அம்பாறை (23.6) திருகோணமலை (22.4) உம் வட மாகாணத்திற்குரிய மன்னார் (24.5) வவுனியா (20.2) யாழ்ப்பாணம் (20.1) ஆகிய மாவட்டங்களில் மொத்த சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் அளவு நகரப் பிரதேசங்களில் வசிப்பதாக தொகைமதிப்புத் தரவுகளுக்கமைய பதிவாகியுள்ளது. குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களில் வசிக்கும் நபர்களில் நூற்றுக்கு 1.9 என்றளவான சிறு அளவே நகரப் பிரதேசங்களில் வசிக்கின்றனர்.

**கொழும்பு மாநகர சபை**

கொழும்பு மாநகர சபைக்குள் மொத்த நகரச் சனத்தொகையில் நூற்றுக்கு 15 வீதமானோர் வசிக்கின்றனர். இதன் மொத்த நில விஸ்தீரணம் 37.3 சதுர கிலோ மீற்றர்கள் என்பதுடன் 35 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு, 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய திமிபிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவும் கொழும்பு மாநகர சபைக்குள் உள்ளடங்கும். கொழும்பு மாநகர சபைக்கு 5 தேர்தல் தொகுதிகள் காணப்படுவதுடன் நிருவாகத் தேவைகளுக்காக இந்த மாநகர சபை 47 வட்டாரங்கள் (Wards) மற்றும் 15 தபால் அதிகாரப் பிரதேசங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

கடந்த தொகைமதிப்பு வருடங்களின் போது கொழும்பு மாநகர சபையின் சனத்தொகை மற்றும் சனத்தொகை அடர்த்தி அட்டவணை 6.3 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய கொழும்பு மாநகர சபைக்குள் சனத்தொகை படிப்படியாக அதிகரித்துள்ள விதம் தெளிவாகின்றது. 2012 தொகைமதிப்பிலே வழமையாக வசிப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டமையால் 2001 ஆம் ஆண்டின் சனத்தொகையை விட அண்ணளவாக 100,000 உளவிலான சனத்தொகை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

### உரு 6.1 : கொழும்பு மாநகர சபை




### அட்டவணை 6.3 : கொழும்பு மாநகர சபைக்கும் தொகைமதிப்பு வருடங்களின் போது சனத்தொகை அளவு மற்றும் சனத்தொகை அடர்த்தி 1881-2012

| தொகைமதிப்பு வருடம் | சனத்தொகை | பரப்பளவு (சதுர கி.மீ) | சனத்தொகை அடர்த்தி (1 சதுர கிலோ மீற்றருக்கு நபர்கள்) |
|---|---|---|---|
| 1881 | 110,502 | 24.47 | 4,516 |
| 1891 | 126,825 | 24.47 | 5,183 |
| 1901 | 154,691 | 25.90 | 5,973 |
| 1911 | 211,274 | 30.92 | 6,833 |
| 1921 | 244,163 | 33.51 | 7,287 |
| 1931 | 284,155 | 33.67 | 8439 |
| 1946 | 362,074 | 34.39 | 10,529 |
| 1953 | 426,127 | 34.65 | 12,298 |
| 1963 | 511,644 | 34.70 | 14,745 |
| 1971 | 562,160 | 37.29 | 15,075 |
| 1981 | 587,647 | 37.29 | 15,759 |
| 2001 | 647,100 | 37.29 | 15,407 |
| 2012 | 561,314 | 37.29 | 13,364 |

மூலம்- குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 1981

(2001,2012 ஆம் ஆண்டுகளின் தகவல்கள் உரிய வருடங்களின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தரவுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை உள்ளடங்கும் கொழும்பு பிரதேச செயலாளர் பிரவு மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவுகளின் மொத்த சனத்தொகை கிராம சேவையாளர்

பிரிவு மட்டத்தில் அட்டவணை 6.4 இற்கமைய காட்டலாம். அதற்கமைய கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் மொத்த சனத்தொகை 323,257 ஆகும். திமிபிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின் சனத்தொகை 238,057 ஆகும்.

**அட்டவணை 6.4 : கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் சனத்தொகை கிராம சேவையாளர் பிரிவிற்கமைய, 2012**

| கிராம உத்தியோகத்தர் பிரிவு | மாத்த சனத்தொகை | ஆண் | பெண் |
|---|---|---|---|
| **மொத்தம்** | **323,257** | **162,798** | **160,459** |
| சம்மந்திரனபுர | 7,829 | 4,017 | 3,812 |
| மட்டக்குளி | 28,003 | 14,029 | 13,974 |
| மோதரை | 17,757 | 8,794 | 8,963 |
| மாதம்பிட்டி | 12,970 | 6,505 | 6,465 |
| மகவத்தை | 8,809 | 4,367 | 4,442 |
| அளுத்மாவத்தை | 13,625 | 6,602 | 7,023 |
| லுனுபொக்குன | 12,423 | 6,352 | 6,071 |
| புடுமென்டல் | 13,802 | 6,740 | 7,062 |
| கொட்டாஞ்சேனை கிழக்கு | 6,385 | 3,024 | 3,361 |
| கொட்டாஞ்சேனை மேற்கு | 9,409 | 4,617 | 4,792 |
| கொச்சிக்கடை வடக்கு | 9,339 | 5,005 | 4,334 |
| ஜிந்துப் பிட்டி | 8,110 | 3,901 | 4,209 |
| மெசெஞ்சர் வீதி | 8,516 | 4,303 | 4,213 |
| புதுபசார் | 13,436 | 6,753 | 6,683 |
| கிரான்ட்பாஸ் தெற்கு | 17,588 | 8,739 | 8,849 |
| கிரான்ட்பாஸ் வடக்கு | 8,904 | 4,433 | 4,471 |
| நவகம்புர | 6,821 | 3,459 | 3,362 |
| மாளிகாவத்தை கிழக்கு | 11,524 | 5,774 | 5,750 |
| கெத்தாராமை | 13,683 | 6,907 | 6,776 |
| புதுக்கடை கிழக்கு | 10,053 | 4,987 | 5,066 |
| புதுக்கடை மேற்கு | 7,517 | 3,914 | 3,603 |
| கொச்சிக்கடை தெற்கு | 7746 | 4,062 | 3,684 |
| புறக்கோட்டை | 1,924 | 1,854 | 70 |
| கோட்டை | 1,473 | 1,065 | 408 |
| காலிமுகத்திடல் | 3,789 | 1,880 | 1,909 |
| கொம்பனி வீதி | 3,795 | 1,868 | 1,927 |
| ஹுனுப்பிட்டி | 6,883 | 3,335 | 3,548 |
| சுதுவெல்லை | 3,915 | 2,007 | 1,908 |
| வாழைத்தோட்டம் | 7,221 | 3,637 | 3,584 |
| பஞ்சிகாவத்தை | 8,467 | 4,195 | 4,272 |
| மாளிகாவத்தை மேற்கு | 8,968 | 4,363 | 4,605 |
| மாளிகாகந்தை | 8,526 | 4,530 | 3,996 |
| மருதாணை | 4,591 | 2,424 | 2,167 |
| இப்பன்வல | 2,617 | 1,027 | 1,590 |
| வேகந்தை | 6,839 | 3,329 | 3,510 |

அட்டவணை இலக்கம் 6.4 இற்கமைய கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் அதிக சனத்தொகை மட்டக்குளிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் பதிவாகியுள்ளது. அது எண்ணிக்கை அடிப்படையில் 28,003 ஆகும். குறைந்த சனத்தொகை கோட்டை கிராம உத்தியோகத்தர் பிரிவில்

பதிவாகியுள்ளதுடன் அது 1,473 ஆகும். புறக்கோட்டை கிராம உத்தியோகத்தர் பிரிவில் காணக்கூடிய விசேட அம்சமாக 1857 ஆண்களுக்கு 70 பெண்கள் என்ற மிகச் சிறிய பெறுமதி பதிவாகியுள்ளதைக் குறிப்பிடலாம். இதற்கமைய அங்கு ஆண் பெண் விகிதாசாரம் 1:26 என்ற குறிப்பிடத் தக்க மட்டத்திலான மாற்றத்தை வெளிக்காட்டுகின்றது.

அட்டவணை இலக்கம் 6.5 இற்கமைய திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில் அதிக சனத்தொகை பொரளை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பதிவாகியுள்ளதுடன் அது 21,326 ஆகும். குறைந்த சனத்தொகை பொரளை தெற்கு கிராம உத்தியொகத்தர் பிரிவில் பதிவாகியுள்ளது. அது 5,127 ஆகும். எவ்வாறாயினும் கொழும்பு வடக்கு கிராம உத்தியேபகத்தர் பிரிவில் பெண்களின் எண்ணிக்கையை விட ஆண்கள் 5,098 அதிகமாக இருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**அட்டவணை 6.5 : திம்பிரிகஸ்யாய செயலாளர் பிரிவின் சனத்தொகை கிராம சேவையாளர் பிரிவிற்கமைய, 2012**

| கிராம உத்தியோகத்தர் பிரிவு | மாத்த சனத்தொகை | ஆண் | பெண் |
|---|---|---|---|
| **மொத்தம்** | **238,057** | **118,660** | **119,397** |
| கொள்ளுப்பிட்டி | 6,711 | 3,549 | 3,162 |
| பம்பலப்பிட்டி | 7,564 | 3,621 | 3,943 |
| கறுவாத்தோட்டம் | 9,914 | 4,703 | 5,211 |
| குப்பியாவத்தை மேற்கு | 6,954 | 3,468 | 3,486 |
| குப்பியாவத்தை கிழக்கு | 10,577 | 5,498 | 5,079 |
| தெமடகொடை | 18,602 | 9,356 | 9,246 |
| வனாதமுல்ல | 17,355 | 8,547 | 8,808 |
| பொரளை வடக்கு | 21,326 | 13,617 | 7,709 |
| பொரளை தெற்கு | 5,127 | 2,566 | 2,561 |
| கோதமீபுர | 6,498 | 3,213 | 3,285 |
| நாராஹென்பிட்டி | 11,194 | 5,503 | 5,691 |
| திம்பிரிகஸ்யாய | 12,675 | 5,949 | 6,726 |
| மிலாகிரிய | 7,389 | 3,214 | 4,175 |
| ஹெவலொக் நகரம் | 7,455 | 3,464 | 3,991 |
| கிருல | 20,237 | 9,576 | 10,661 |
| கிருலப்பனை | 17,846 | 8,818 | 9,028 |
| வெள்ளவத்தை வடக்கு | 14,967 | 7,131 | 7,836 |
| வெள்ளவத்தை தெற்கு | 10,826 | 5,059 | 5,767 |
| பாமன்கடை மேற்கு | 12,451 | 5,658 | 6,793 |
| பாமன்கடை கிழக்கு | 12,389 | 6,150 | 6,239 |

# உள்நாட்டு மட்டும் சர்வதேசக் குடிப்பெயர்வுப் போக்கு

## 7.0

## உள்நாட்டு மட்டும் சர்வதேசக் குடிப்பெயர்வுப் போக்கு

ஒரு நாட்டின் நிர்வாக எல்லையைக் கடந்து ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்கு வசிப்பிடத்தை மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் குடிப்பெயர்வு உள்நாட்டுக் குடிப்பெயர்வு என அடையாளப்படுத்தப்படுவதுடன் நாடுகளுக்கிடையில் இடம்பெறும் குடிப்பெயர்வு சர்வதேசக் குடிப்பெயர்வு எனவும் அழைக்கப்படும். உள்நாட்டு குடிப்பெயர்வு நாட்டின் மீள் பரம்பல் மற்றும் சம பரம்பலில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணியாக அமைவதுடன் ஆளணி மற்றும் மனித வளப் பகிர்வில் அசமநிலை ஏற்படுவதற்கும் காரணமாக அமையும். அவ்வாறே சர்வதேச குடிப்பெயர்வு நாட்டின் சனத்தொகை மாற்றமடைவதில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணிகளுள் ஒன்றாகும். ஆகையால் குடிப்பெயர்வின் அளவு, திசைகள் மற்றும் அந்த குடிப்பெயர்வு தொடர்பில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணிகள் தொடர்பில் ஆய்வு செய்தல் மிக முக்கியமானதாகும்.

இலங்கையின் சனத்தொகை அளவு, மீள்பரம்பல் மற்றும் குடிப்பெயர்வு தொடர்பில் விரிவான தகவல்கள் கிடைக்கப் பெறுவது பத்து வருடங்களுக்கொரு முறை நடாத்தப்படும் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் மூலமாகும். 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே உள்நாட்டு மற்றும் தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கும் சனத்தொகை தொடர்பில் தகவல் சேகரித்தல் கீழே காட்டப்படும் வினாக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

1. **பிறந்த மாவட்டம் / நாடு :** நபர்கள் பிறக்கும் போது தாய் வழமையாக வசித்த மாவட்டம் அல்லது நாடு பிறந்த மாவட்டம் அல்லது நாடாக பதிவு செய்யப்பட்டது.
2. **வழமையாக வசிக்கும் மாவட்டத்தில் வசித்த காலப்பகுதி (வருடங்களில்) :** வழமையாக வசிக்கும் மாவட்டத்தில் பிறந்ததிலிருந்து வசிப்பாராயின் அது பற்றியும் அவ்வாறில்லை எனின்தற்போது வழமையாக வசிக்கும் மாவட்டத்திற்கு கடைசியாக வசிக்க வந்த திகதி தொடக்கம் வசிக்கும் காலப் பகுதி பதிவு செய்யப்பட்டது. வேறு மாவட்டத்தில் அல்லது நாட்டில் வசித்திருந்து மீண்டும் பிறந்த மாவட்டத்திற்கு வசிக்க வந்திருப்பின் பிறந்ததிலிருந்து அல்லாமல் கடைசியாக வசிக்க வந்த திகதி தொடக்கம் வசிக்கின்ற காலப்பகுதி பதிவு செய்யப்பட்டது.
3. **இதற்கு முன்னர் (கடைசியாக) வசித்த மாவட்டம் /நாடு :** தற்போது வழமையாக வசிப்பது பிறப்பிலிருந்து இல்லையாயின் தற்போது வழமையாக வசிக்கும் மாவட்டத்திற்கு கடைசியாக சிக்க வருவதற்கு முன்னர் வசித்த மாவட்டம் / நாட்டின் பெயர் பதிவு செய்யப்பட்டது.
4. **தொகைமதிப்பு நடைபெற்ற போது வழமையாக வசித்த மாவட்டத்திற்கு வசிக்க வந்தமைக்கான காரணம் :** இதன் கீழ் கடைசியாக வசித்த மாவட்டத்திலிருந்து தற்போது வசிக்கும் மாவட்டதிதற்கு வந்ததைக்கான காரணம் திருமணம், தொழில், கல்வி, இடப்பெயர்வு மீள் குடியேற்றம் அபிவிருத்திச் செயற்றிட்டம் குடும்ப உறுப்பினர்களின் தேவை மற்றும் வேறு ஏதாவது காரணங்களா என வினவப்பட்டது.
5. **குடித்தனத்தின் உறுப்பினரொருவர் நிரந்தரமாக வசிப்பதற்கல்லாமல் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் வெளிநாடு சென்றிருத்தல்:** இதன்போது வெளிநாடு சென்றிருக்கும்

நபரின் பால் விபரம் வசிக்கச் சென்ற மாவட்டம் மற்றும் வெளிநாடு சென்றமைக்கான காரணங்கள் ஆகிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

தொகைமதிப்பு வரைவிலக்கணங்களுக்கமைய நபரின் வழமையாக வசிக்கும் மாவட்டம் என்பது அந்த நபர் வழமையாக வசிக்கும் அவ்வாறில்லை எனின் வசிக்கும் இடம் உள்ளடங்கும் மாவட்டமாகும். ஒன்றிற்கு மேற்பட்ட வசிப்பிடங்களைக் கொண்டிருக்கும் நபர்களுக்காக அந்த நபரின் வழமையாக வசிப்பிடமாக கருதப்படுவது அந்த நபர் வாரத்தில் அதிக நாட்கள் வசிக்கும் இடம் உள்ளடங்கும் மாவட்டமாகும்.

**இலங்கையின் உள்நாட்டு குடிப்பெயர்வின் போக்கு மற்றும் அதன் பண்புகள்**

பல தசாப்தங்களாக இலங்கையில் காணப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணிகள் உள்நாட்டு குடிப்பெயர்வின் திசை போக்கு மற்றும் அளவு மாற்றமடைவதற்கு பிரதான காரணிகளாக அமைவதுடன் மாவட்டங்களுக்கிடையில் காணப்படும் சமமற்ற சனத்தொகைப் பரம்பல் தொடர்பில் உள்நாட்டு குடிப்பெயர்வு குறிப்பிடத்தக்க அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உள்நாட்டு குடிப்பெயர்வுப் போக்கினை பிரதான மூன்று பகுதிகளின் கீழ் கலந்துரையாடலாம். மாவட்டம் அல்லது மாகாணங்களுக்குள் இடம்பெறும் குடிப்பெயர்வு மற்றும் அதற்கு வெளியில் இடம்பெறும் குடிப்பெயர்வு முறையே உள்ளகக் குடிப்பெயர்வு மற்றும் வெளியகக் குடிப்பெயர்வு எனப்படுவதுடன் அந்த குடிப்பெயர்வு பரப்பின் மாற்றம் தேறிய குடிப்பெயர்வாகக் கருதப்படும். இந்த தேறிய குடிப்பெயர்வு தேறிய நேர்க்கணிய குடிப்பெயர்வு அல்லது தேறிய எதிர்க்கணிய குடிப்பெயர்வாகவும் இலுக்கலாம்.

**வாழ்நாள் குடிப்பெயர்வு**

தமது வாழ்க்கைக் காலத்தினுள் ஒரு முறையாவது பிறந்த மாவட்டத்திலிருநது வெளியேறி வேறு மாவட்டத்திற்கு வசிப்பதற்காக குடிபெயர்ந்த நபர்கள் “வாழ்நாள் குடிப்பெயர்வாளர்கள்” என அழைக்கப்படுவர். பிறந்த மாவட்டம் மற்றும் வழைமயாக வசிக்கும் மாவட்டங்கள் தொடர்பான தகவல்களின் உதவியுடன் வாழ்நாள் குடிப்பெயர்வு கணக்கிடப்படும். ஏதாவதொரு நபரின் பிறந்த மாவட்டம் மற்றும் வழமையாக வசிக்கும் மாவட்டம் ஒன்றாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவர் ஒருபோதும் குடிபெயராத நபராக அழைக்கப்படுவார். அதாவது அந்த நபர் “வாழ்நாள் குடிபெயராதவர்” என அழைக்கப்படுவார்.

தொகைமதிப்பிலே பெரும்பாலும் குடித்தனத்தில் காணப்படும் சகல உறுப்பினர்களதும் தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் ஒரே நபரால் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்தப் பதிலளிப்பவரால் குடித்தனத்தின் ஏனைய உறுப்பினர்களின் குறிப்பாக வேறு உறவினர்கள் மற்றும் உறவினர் அல்லாத உறுப்பினர்களின் தகவல்களை அனுமானித்துக் குறிப்பிடுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. மேலும் பதிலளிப்பவர் வினாக்களை விளங்கிக் கொள்ளும் தன்மைக்கமைய பெற்றுக்கொடுக்கப்படும் பதில்கள் வழுக்கள் கொண்டதாக அமையலாம். உதாரணமாக பிறந்த மாவட்டமாக எதிர்பார்க்கப்படுவது தாய் வழமையாக வசிக்கும் மாவட்டமாகக் காணப்பட்டாலும் பதிலளிப்பவரால் தாய் குழந்தைப் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலை உள்ளடங்கும் மாவட்டம் அல்லது குழந்தைப் பிரசவிப்புக்கு

அண்மித்த காலத்தில் தாய் தற்காலிகமாக வசித்த மாவட்டத்தை குறிப்பிடுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

இலங்கையில் வழமையாக வசிக்கும் சத்தொகையில் நூற்றுக்கு 16.9 அதாவது சகல 6 பேருக்கும் ஒருவர் வாழ்நாள் குடிப்பெயர்வாளர் ஆவார். வாழ்நாள் குடிப்பெயர்வாளர்களின் எண்ணிக்கை அதிகமாகப் பதிவாகியிருப்பது கொழும்பு (615,558) கம்பஹா (596,472) மாவட்டங்களில் என்பது அட்டவணை 7.1 இற்கமைய தெளிவாகும். அவ்வாறே குறைந்த வாழ்நாள் குடிப்பெயர்வாளர்கள் மட்டக்களப்பு (23,087) மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

**அட்டவணை 7.1 : பிறந்த மாவட்டம் மற்றும் வழமையாக வசிக்கும் மாவட்டம் தொடர்பான தகவல்களுக்கமைய வாழ்நாள் குடிப்பெயர்வாளர்கள் 2012**

| வழமையாக வசிக்கும் மாவட்டம் | மாவட்டத்தில் வழமையாக வசிக்கும் சனத்தொகை | மாவட்டத்தில் பிறந்த சனத்தொகை | மாவட்டத்தில் பிறந்த சனத்தொகையில் வழமையாக வசிக்கும் சனத்தொகை | வாழ்நாள் குடிப்பெயர்வாளர்களின் எண்ணிக்கை | வழமையாக வசிக்கும் மாவட்டச் சனத்தொகையில் வாழ்நான் குடிப்பெயர்வின் விதாசாரம் |
|---|---|---|---|---|---|
| **இலங்கை** | 20,359,439 | 20,320,972 | **16,916,180** | **3,443,259** | **16.9** |
| கொழும்பு | 2,324,349 | 2,101,129 | 1,708,791 | 615,558 | 26.5 |
| கம்பஹா | 2,304,833 | 1,854,617 | 1,708,361 | 596,472 | 25.9 |
| களுத்துறை | 1,221,948 | 1,155,918 | 1,011,654 | 210,294 | 17.2 |
| கண்டி | 1,375,382 | 1,542,367 | 1,184,941 | 190,441 | 13.8 |
| மாத்தளை | 484,531 | 508,326 | 391,980 | 92,551 | 19.1 |
| நுவரெலியா | 711,644 | 813,921 | 632,694 | 78,950 | 11.1 |
| காலி | 1,063,334 | 1,183,527 | 961,898 | 101,436 | 9.5 |
| மாத்தறை | 814,048 | 989,770 | 735,978 | 78,070 | 9.6 |
| அம்பந்தோட்டை | 599,903 | 635,845 | 518,762 | 81,141 | 13.5 |
| யாழ்ப்பாணம் | 583,882 | 676,167 | 551,873 | 32,009 | 5.5 |
| மன்னார் | 99,570 | 111,686 | 79,871 | 19,699 | 19.8 |
| வவுனியா | 172,115 | 118,039 | 94,673 | 77,442 | 45.0 |
| முல்லைத்தீவ | 92,238 | 88,916 | 58,634 | 33,604 | 36.4 |
| கிளிநொச்சி | 113,510 | 101,448 | 75,082 | 38,428 | 33.9 |
| மட்டக்களப்பு | 526,567 | 535,855 | 503,480 | 23,087 | 4.4 |
| அம்பாறை | 649,402 | 617,753 | 563,050 | 86,352 | 13.3 |
| திருகோணமலை | 379,541 | 367,710 | 325,769 | 53,772 | 14.2 |
| குருணாகலை | 1,618,465 | 1,669,443 | 1,422,889 | 195,576 | 12.1 |
| புத்தளம் | 762,396 | 705,130 | 624,155 | 138,241 | 18.1 |
| அநுராதபுரம் | 860,575 | 801,233 | 689,925 | 170,650 | 19.8 |
| பொலன்னறுவை | 406,088 | 334,260 | 280,488 | 125,600 | 30.9 |
| பதுளை | 815,405 | 915,168 | 728,656 | 86,749 | 10.6 |
| மொனராகலை | 451,058 | 417,172 | 353,831 | 97,227 | 21.6 |
| இரத்தினபுரி | 1,088,007 | 1,141,039 | 972,798 | 115,209 | 10.6 |
| கேகாலை | 840,648 | 934,533 | 735,947 | 104,701 | 12.5 |

மாவட்டத்தில் வழமையாக வசிக்கும் சனத்தொகைக்கு அமைவாக உயர்ந்த வாழ்நாள் குடிப்பெயர்வாளர்கள் பதிவாகியுள்ளது வட மாகாணத்திற்குரிய வவுனியா (45.0), முல்லைத்தீவு (36.4) மற்றும் கிளிநெச்சி (33.9) மாவட்டங்கள் மற்றும் பொலன்னறுவை (30.9) மாவட்டத்திலாகும்.

வாழ்நாள் குடிப்பெயர்வாளர்கள் மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டத்திற்கு வெளியே குடிபெயரும் போது ஏற்படும் குடிப்பெயர்வுப் பரப்பின் போக்கு தொடர்பில் ஆய்வு செய்தல் முக்கியமானதாகும். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்குள்ளும் மற்றும் அதற்கு வெளியேயும் காணப்படும் மூன்று பாரிய குடிப்பெயர்வு பரப்புக்கள் தொடர்பான தகவல்கள் அட்டவணை இலக்கம் 7.2 மற்றும் 7.3 இல் காட்டப்பட்டுள்ளன.

## அட்டவணை 7.2 : வழமையாக வசிக்கும் மாவட்டத்திற்கமைய வாழ்நாள் குடிப்பெயர்வாளர்கள் பாரியளவான குடிப்பெயர்வு பிரவாகத்திற்கமைய, 2012

| மாவட்டம் | வழமையாக வசிப்பும் மாவட்டத்திற்கு குடிபெயர்ந்த உள்வருகை தந்த வாழ்நாள் குடிப்பெயர்வாளர்கள் | பாரிய பிரவாகம் | | இரண்டாவது பாரிய பிரவாகம் | | மூன்றாவது பாரிய பிரவாகம் | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 615,558 | மாத்தறை | 11.3 | காலி | 10.9 | கண்டி | 9.9 |
| கம்பஹா | 596,472 | கொழும்பு | 26.0 | குருநாகல் | 9.9 | கண்டி | 8.0 |
| களுத்துறை | 210,294 | கொழும்பு | 35.3 | காலி | 15.9 | மாத்தறை | 7.7 |
| கண்டி | 190,441 | நுவரெலியா | 17.4 | மாத்தளை | 11.4 | கொழும்பு | 11.0 |
| மாத்தளை | 92,551 | கண்டி | 37.7 | குருணாகல் | 12.7 | அநுராதபுரம் | 8.2 |
| நுவரெலியா | 78,950 | கண்டி | 41.3 | பதுளை | 17.4 | கேகாலை | 6.1 |
| காலி | 101,436 | மாத்தறை | 30.0 | கொழும்பு | 14.0 | களுத்துறை | 13.9 |
| மாத்தறை | 78,070 | காலி | 25.8 | அம்பாந்தோட்டை | 25.0 | கொழும்பு | 12.0 |
| அம்பந்தோட்டை | 81,141 | மாத்தறை | 45.1 | இரத்தினபுரி | 10.3 | காலி | 9.8 |
| யாழ்ப்பாணம் | 32,009 | கிளிநொச்சி | 30.1 | முல்லைத்தீவு | 23.6 | வவுனியா | 7.2 |
| மன்னார் | 19,699 | யாழ்ப்பாணம் | 29.0 | புத்தளம் | 13.9 | கிளிநொச்சி | 8.9 |
| வவுனியா | 77,442 | யாழ்ப்பாணம் | 34.1 | முல்லைத்தீவு | 15.6 | கிளிநொச்சி | 9.9 |
| முல்லைத்தீவு | 33,604 | யாழ்ப்பாணம் | 33.5 | கிளிநொச்சி | 11.4 | வவுனியா | 9.9 |
| கிளிநொச்சி | 38,428 | யாழ்ப்பாணம் | 51.4 | கண்டி | 8.7 | முல்லைத்தீவு | 8.4 |
| மட்டக்களப்பு | 23,087 | அம்பாறை | 24.3 | திருகோணமலை | 12.7 | யாழ்ப்பாணம் | 11.3 |
| அம்பாறை | 86,352 | கண்டி | 19.9 | பதுளை | 15.9 | கேகாலை | 8.4 |
| திருகோணமலை | 53,772 | யாழ்ப்பாணம் | 12.7 | கண்டி | 10.6 | அநுராதபுரம் | 9.2 |
| குருணாகலை | 195,576 | கண்டி | 13.6 | கம்பஹா | 13.1 | புத்தளம் | 12.1 |
| புத்தளம் | 138,241 | குருநாகல் | 27.7 | கம்பஹா | 15.3 | மன்னார் | 11.9 |
| அநுராதபுரம் | 170,650 | குருநாகல் | 18.6 | கண்டி | 15.9 | மாத்தளை | 11.4 |
| பொலன்னறுவை | 125,600 | கண்டி | 20.3 | கேகாலை | 12.2 | மாத்தளை | 10.1 |
| பதுளை | 86,749 | நுவரெலியா | 17.0 | கண்டி | 16.7 | மொணராகலை | 13.7 |
| மொனராகலை | 97,227 | பதுளை | 30.6 | அம்பாந்தோட்டை | 17.6 | மாத்தறை | 10.8 |
| இரத்தினபுரி | 115,209 | அம்பாந்தோட்டை | 14.3 | மாத்தறை | 14.2 | கொழும்பு | 13.9 |
| கோகலை | 104,701 | கண்டி | 18.2 | குருநாகல் | 14.3 | கொழும்பு | 12.9 |

கொழும்பு, கம்பஹா, கண்டி, திருகோணமலை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களுக்குள்ளே குடிபெயர்ந்த சனத்தொகையில் நூற்றுக்கு ஐந்து வீதம் அளவானவை பாரிய குடிப்பெயர்வு போக்கு மூன்றின் மூலம் வந்தடைதல் விசேட பண்பாகும். உதாரணமாக அட்டவணை 7.2 இற்கமைய களுத்துறை மாவட்டத்திற்கு குடிபெயர்ந்த சனத்தொகையில் நூற்றுக்கு 58.9 கொழும்பு காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலிருந்து வருகை தந்துள்ளனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பிரதானமாக சனத்தொகை குடிபெயரும் கேந்திர நிலையங்களாகக் குறிப்பிடலாம். வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநெச்சி மாவட்டங்கள் தவிர இலங்கையின் ஏனைய அனைத்து மாவட்டங்களின் சனத்தொகை பிரதானமாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளமை அட்டவணை 7.3 இற்கமைய

தெளிவாகும். அவ்வாறே சகல மாவட்டங்களிலிருந்தும் வெளியில் குடிபெயரும் சனத்தொகையில் அதிகமானோர் பிரதானமாக மூன்று மாவட்டங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

**அட்டவணை 7.3 : பிறந்த மாவட்டத்திற்கு வெளியே சென்று வாழ்நாள் குடிப்பெயர்வாளர்களின் பாரிய குடிப்பெயர்வு பிரவாகம், 2012**

| பிறந்த மாவட்டம் | பிறந்த மாவட்டத்திலிருந்து பிற மாவட்டத்திற்கு குடிபெயர்ந்த வெளியில் சென்ற வாழ்நாள் குடிப்பெயர்வாளர்கள் | பாரிய பிரவாகம் | % | இரண்டாவது பாரிய பிரவாகம் | % | மூன்றாவது பாரிய பிரவாகம் | % |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 392,338 | கம்பஹா | 39.6 | களுத்துறை | 18.9 | கண்டி | 5.3 |
| கம்பஹா | 146,256 | கொழும்பு | 23.8 | புத்தளம் | 14.5 | கேகாலை | 7.3 |
| களுத்துறை | 144,264 | கொழும்பு | 37.4 | கம்பஹா | 15.7 | காலி | 9.8 |
| கண்டி | 357,426 | கொழும்பு | 17.1 | கம்பஹா | 13.3 | மாத்தளை | 9.8 |
| மாத்தளை | 116,346 | கொழும்பு | 18.7 | அநுராதபுரம் | 16.7 | கம்பஹா | 12.2 |
| நுவரெலியா | 181,227 | கொழும்பு | 20.9 | கண்டி | 18.3 | கம்பஹா | 15.2 |
| காலி | 221,629 | கொழும்பு | 30.3 | கம்பஹா | 15.5 | களுத்துறை | 15.1 |
| மாத்தறை | 253,792 | கொழும்பு | 27.5 | அம்பாந்தோட்டை | 14.4 | கம்பஹா | 13.4 |
| அம்பந்தோட்டை | 117,083 | கொழும்பு | 19.6 | மாத்தறை | 16.7 | மொனராகலை | 14.6 |
| யாழ்ப்பாணம் | 124,294 | கொழும்பு | 24.6 | வவுனியா | 21.3 | கிளிநொச்சி | 15.9 |
| மன்னார் | 31,815 | புத்தளம் | 51.5 | வவுனியா | 13.7 | கொழும்பு | 5.8 |
| வவுனியா | 23,366 | அநுராதபுரம் | 23.9 | முல்லைத்தீவு | 14.2 | கிளிநொச்சி | 13.2 |
| முல்லைத்தீவு | 30,282 | வவுனியா | 39.8 | யாழ்ப்பாணம் | 25.0 | கிளிநொச்சி | 10.6 |
| கிளிநொச்சி | 26,366 | யாழ்ப்பாணம் | 36.6 | வவுனியா | 29.0 | முல்லைத்தீவு | 14.5 |
| மட்டக்களப்பு | 32,375 | அம்பாறை | 20.7 | கொழும்பு | 15.3 | திருகோணமலை | 13.0 |
| அம்பாறை | 54,703 | கொழும்பு | 16.0 | கம்பஹா | 12.5 | மட்டக்களப்பு | 10.3 |
| திருகோணமலை | 41,941 | கம்பஹா | 13.4 | அநுராதபுரம் | 11.1 | கொழும்பு | 10.7 |
| குருணாகலை | 246,554 | கம்பஹா | 23.9 | புத்தளம | 15.5 | அநுராதபுரம் | 12.9 |
| புத்தளம் | 80,975 | கம்பஹா | 31.5 | குருநாகல் | 29.3 | கொழும்பு | 10.6 |
| அநுராதபுரம் | 111,308 | கம்பஹா | 20.4 | குருநாகல் | 15.0 | கொழும்பு | 12.3 |
| பொலன்னறுவை | 53,772 | கம்பஹா | 16.0 | கொழும்பு | 10.8 | குருநாகல் | 10.1 |
| பதுளை | 186,512 | கொழும்பு | 21.0 | மொணராகலை | 16.0 | கம்பஹா | 14.1 |
| மொனராகலை | 63,341 | பதுளை | 18.7 | கொழும்பு | 17.4 | கம்பஹா | 13.7 |
| இரத்தினபுரி | 168,241 | கொழும்பு | 29.0 | கம்பஹா | 15.4 | களுத்துறை | 1.1 |
| கேகாலை | 198,586 | கம்பஹா | 20.2 | கொழும்பு | 17.4 | குருநாகல் | 11.7 |

வாழ்நாள் குடிப்பெயர்வினைக் கணக்கிடுவதற்கு பிறந்த மாவட்டம் மற்றும் வழமையாக வசிக்கும் மாவட்டம் தொடர்பான தகவல்களை மட்டும் பயன்படுத்தப்படுவதால் பிறந்த மாவட்டத்திற்கு வெளியே வசித்து தொகைமதிப்புச் சந்தர்ப்பத்தின் போது மீண்டும் பிறந்த மாவட்டத்திற்கே

வழமையாக வசிக்க வந்திருக்கும் நபர்கள் குடிப்பெயர்வாளர்களாகக் கணக்கெடுக்கப்பட மாட்டார்கள். அதற்கமைய வாழ்நாள் குடிப்பெயர்வு குறைவாகப் பதிவாகியிருக்கலாம். முன்னர் வசித்த மாவட்டத்திற்கமைய குடிப்பெயர்வினைக் கணக்கிடும் போது எப்போதாவது வசிப்பிடத்தை மாற்றிய சகலரும் குடிப்பெயர்வாளர்களாகக் கணக்கெடுக்கப்படுவதால் அது தொடர்பில் ஆய்வு செய்வதன் மூலம் பல்வேறு குடிப்பெயர்வுப் போக்கினை அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

வழமையாக வசிக்கும் மாவட்டம் மற்றும் முன்னர் வசித்த மாவட்டத்திற்கமைய குடிபெயர்ந்த மற்றும் குடிபெயராத சனத்தொகை உரு 7.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**உரு 7.1 : குடிபெயர்ந்த மற்றும் குடிபெயராத சனத்தொகை 2012**




2012 தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய குடிபெயர்ந்த சனத்தொகை மற்றும் குடிபெயராத சனத்தொகை வயது மற்றும் பால் விபரத்திற்கமைவான பரம்பல் உரு 7.1 இல் காட்டப்பட்டுள்ளது. குடிபெயராத சனத்தொகையுடன் ஒப்பிடுமிடத்து ஆண் பெண் இருபாலருக்காகவும் 19 வயதிலும் குறைந்த குடிபெயர்ந்த சனத்தொகைக்கு அமைவாக குறைந்த பெறுமதியை எடுத்திருப்பதைக் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. இலங்கையின் குடிபெயர்ந்த சனத்தொகையின் வயதுப் பிரிவுப் பரம்பலுக்கமைய வேலை செய்யும் வயதுச் சனத்தொகை அதிகளவில் குடிபெயர்ந்துள்ளமை தெரியவந்துள்ளது. குறிப்பாக 25-39 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவில் ஆண் பெண் இருபாலரும் அதிகளவில் இடம்பெயர்ந்துள்ளமை தெரிய வருகின்றது. 24 வயதிலும் குறைந்த குடிப்பெயர்வாளர்களில் அதிகளவானோர் பெண்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 20.2 அளவில் அதாவது 4 மில்லியன்கள் அளவு அவ்வாறில்லை எனின் ஒவ்வொரு 5 நபர்களில் ஒருவர் குறைந்தபட்சம் ஒரு முறையாவது வசிக்கும் மாவட்டத்தை மாற்றம் செய்துள்ளனர்.

**அட்டவணை 7.4 : வழமையாக வசிக்கும் மாவட்டம் மற்றும் முன்னர் வசித்த மாவட்டத்திற்கமைய உள்நாட்டு குடிப்பெயர்வின் போக்கு 2012**

| வழமையாக வசிக்கும் மாவட்டம் | குடியகல்வு | குடிவரவு | தேறிய குடிப்பெயர்வு |
|---|---|---|---|
| கொழும்பு | 485,956 | 641,922 | 155,966 |
| கம்பஹா | 174,590 | 613,070 | 438,480 |
| களுத்துறை | 157,139 | 226,289 | 69,150 |
| கண்டி | 354,897 | 223,640 | -131,257 |
| மாத்தளை | 119,860 | 96,228 | -23,632 |
| நுவரெலியா | 191,029 | 88,403 | -102,626 |
| காலி | 226,584 | 117,580 | -109,004 |
| மாத்தறை | 256,135 | 94,343 | -161,792 |
| அம்பந்தோட்டை | 124,766 | 94,786 | -29,980 |
| யாழ்ப்பாணம் | 98,235 | 112,230 | 13,995 |
| மன்னார் | 43,056 | 39,461 | -3,595 |
| வவுனியா | 209,738 | 89,652 | -120,086 |
| முல்லைத்தீவு | 70,512 | 83,789 | 13,277 |
| கிளிநொச்சி | 59,112 | 106,288 | 47,176 |
| மட்டக்களப்பு | 51,537 | 28,222 | -23,315 |
| அம்பாறை | 65,493 | 91,454 | 25,961 |
| திருகோணமலை | 52,123 | 77,093 | 24,970 |
| குருணாகலை | 256,333 | 222,962 | -33,371 |
| புத்தளம் | 103,049 | 142,855 | 39,806 |
| அநுராதபுரம் | 134,369 | 181,463 | 47,094 |
| பொலன்னறுவை | 68,942 | 126,818 | 57,876 |
| பதுளை | 191,895 | 102,814 | -89,081 |
| மொனராகலை | 74,320 | 100,586 | 26,266 |
| இரத்தினபுரி | 179,270 | 131,179 | -48,091 |
| கேகாலை | 205,744 | 121,557 | -84,187 |

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய கொழும்பு மாவட்டத்திற்கு வருகைதரும் குடிப்பெயர்வாளர்களின் எண்ணிக்கையைப் போன்று மாவட்டத்திலிருந்து வெளியேறும் சனத்தொகையும் உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. அட்டவணை 7.4 இற்கு அமைய அதிகளவான தேறிய குடிப்பெயர்வு பரப்புக்கள் பதிவாகியுள்ளது கம்பஹா மாவட்டத்திலாகும். தேறிய எதிர்க்கனிய குடிப்பெயர்வின் பெறுமதி மாத்தறை மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் ஒட்டுமொத்தமாக தென் மாகாணம் உயர்ந்த தேறிய எதிர்க்கனிணப் பெறுமதியை எடுத்துள்ளது. வவுனியா மாவட்டத்தில் தேறிய குடிப்பெயர்வு 120,086 ஆகும். அதாவது அந்த மாவட்டத்திற்கு வருகைதந்த குடிப்பெயர்வாளர்களின் எண்ணிக்கையை விட மாவட்டத்திலிருந்து வெளியேறிய குடிப்பெயர்வாளர்களின் எண்ணிக்கை மிக உயர்ந்ததாகும்.

**அட்டவணை 7.5 : வழமையாக வசிக்கின்ற மாவட்டம் மற்றும் அங்கு வசிக்கின்ற கால எல்லைக்கமைய உள்ளகக் குடிப்பெயர்வாளர்கள்**

| வழமையாக வசிக்கும் மாவட்டம் | குடிபெயர்ந்த சனத்தொகை | வசித்த காலம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 05 இலும் குறைவு | | 05-09 இடையில் | | 10 அல்லது அதற்கு மேல் | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **மொத்தம்** | **3,954,684** | **1,352,689** | **34.2** | **545,452** | **13.8** | **2,056,543** | **52.0** |
| கொழும்பு | 641,922 | 200,720 | 31.3 | 101,416 | 15.8 | 339,786 | 52.9 |
| கம்பஹா | 613,070 | 196,690 | 32.1 | 104,044 | 17.0 | 312,336 | 50.9 |
| களுத்துறை | 226,289 | 69,013 | 30.5 | 42,251 | 18.7 | 115,025 | 50.8 |
| கண்டி | 223,640 | 70,463 | 31.5 | 34,460 | 15.4 | 118,717 | 53.1 |
| மாத்தளை | 96,228 | 24,482 | 25.4 | 12,930 | 13.4 | 58,816 | 61.1 |
| நுவரெலியா | 88,403 | 22,890 | 25.9 | 11,845 | 13.4 | 53,668 | 60.7 |
| காலி | 117,580 | 36,714 | 31.2 | 18,638 | 15.9 | 62,228 | 52.9 |
| மாத்தறை | 94,343 | 29,715 | 31.5 | 15,480 | 16.4 | 49,148 | 52.1 |
| அம்பந்தோட்டை | 94,786 | 29,883 | 31.5 | 14,949 | 15.8 | 49,954 | 52.7 |
| யாழ்ப்பாணம் | 112,230 | 53,006 | 47.2 | 12,185 | 10.9 | 47,039 | 41.9 |
| மன்னார் | 39,461 | 28,415 | 72.0 | 2,781 | 7.0 | 8,265 | 20.9 |
| வவுனியா | 89,652 | 38,839 | 43.3 | 7,524 | 8.4 | 43,289 | 48.3 |
| முல்லைத்தீவு | 83,789 | 80,515 | 96.1 | 399 | 0.5 | 2,875 | 3.4 |
| கிளிநொச்சி | 106,288 | 106,163 | 99.9 | 70 | 0.1 | 55 | 0.1 |
| மட்டக்களப்பு | 28,222 | 12,157 | 43.1 | 4,461 | 15.8 | 11,604 | 41.1 |
| அம்பாறை | 91,454 | 20,702 | 22.6 | 9,235 | 10.1 | 61,517 | 67.3 |
| திருகோணமலை | 77,093 | 35,006 | 45.4 | 7,917 | 10.3 | 34,170 | 44.3 |
| குருணாகலை | 222,962 | 66,787 | 30.0 | 33,765 | 15.1 | 122,410 | 54.9 |
| புத்தளம் | 142,855 | 33,713 | 23.6 | 16,316 | 11.4 | 92,826 | 65.0 |
| அநுராதபுரம் | 181,463 | 46,601 | 25.7 | 20,406 | 11.2 | 114,456 | 63.1 |
| பொலன்னறுவை | 126,818 | 23,008 | 18.1 | 10,836 | 8.5 | 92,974 | 73.3 |
| பதுளை | 102,814 | 33,714 | 32.8 | 15,011 | 14.6 | 54,089 | 52.6 |
| மொனராகலை | 100,586 | 21,985 | 21.9 | 11,008 | 10.9 | 67,593 | 67.2 |
| இரத்தினபுரி | 131,179 | 35,927 | 27.4 | 18,302 | 14.0 | 76,950 | 58.7 |
| கேகாலை | 121,557 | 35,581 | 29.3 | 19,223 | 15.8 | 66,753 | 54.9 |

வழமையாக வசிக்கும் மாவட்டத்தில் வசிக்கின்ற காலத்தைக் கவனத்தில் கொண்டால் பொலன்னறுவை, அம்பாறை, மொணராகலை, புத்தளம், அநுராதபுரம், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு வருகை தந்துள்ள குடிப்பெயர்வாளர்களில் நூற்றுக்கு 60 இலும் அதிகமான எண்ணிக்கையானோர் பத்து வருடங்களுக்கு முன்னர் வருகை தந்துள்ளமை அட்டவணை 7.5 இலிருந்து தெளிவாகின்றது. வட மாகாணத்திற்குரிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் வசிக்கும் குடிப்பெயர்வுச் சனத்தொகை முறையே நூற்றுக்கு 99.9, 96.1 மற்றும் 72.0 ஐந்து வருடங்களுக்கு குறைந்த கால எல்லைக்குள் அந்த மாவட்டங்களுக்கு வருகை தந்துள்ளனர். இந்தப் பிரதேசங்களில் குழப்பகரமான நிலமை முடிவுக்கு வந்ததன் பின்னர் பாரியளவில் இடம்பெற்ற மீள் குடியேற்றம் அதற்குக் காரணம் காரணமாக இருக்கலாம். அவ்வாறே, எண்ணிக்கை அடிப்படையிலான பெறுமதியைக் கவனத்தில் கொண்டால் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு வருகை தந்துள்ள குடிப்பெயர்வாளர்களில் முறையே 339,786 மற்றும் 312,336 அதாவது நூற்றுக்கு 50 இலும் அதிகமானோர் 10 வருடங்களுக்கு முன்னர் வருகை தந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

அட்டவணை 7.6 : முன்னர் வசித்த மாவட்டத்திலிருந்து வழமையாக வசிக்கும் மாவட்டத்திற்குக் குடிபெயர்ந்தமைக்கான காரணம் 2012

| வழமையாக வசிக்கும் மாவட்டம் | குடிபெயர்ந்த சனத்தொகை | குடிபெயர்வதற்கான காரணம் (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திருமணம் | தொழில் | கல்வி | இடப்பெயர்வு | இடம்பெயர்ந்து மீளக் குடியமர்தல் | அபிவிருத்திச் செயற்றிட்டம் | குடும்ப உறுப்பினர்களின் தேவை | வேறு |
| **மொத்தம்** | **3,954,684** | **31.7** | **20.4** | **5.4** | **3.3** | **8.9** | **2.2** | **18.8** | **9.3** |
| கொழும்பு | 641,922 | 22.8 | 42.8 | 10.5 | 0.9 | 0.2 | 0.1 | 17.2 | 5.6 |
| கம்பஹா | 613,070 | 29.2 | 30.6 | 4.3 | 1.1 | 0.4 | 0.4 | 21.5 | 12.5 |
| களுத்துறை | 226,289 | 36.8 | 13.7 | 3.5 | 1.6 | 1.4 | 0.5 | 22.4 | 20.1 |
| கண்டி | 223,640 | 42.1 | 14.5 | 10.7 | 1.2 | 0.3 | 0.4 | 19.9 | 10.9 |
| மாத்தளை | 96,228 | 46.8 | 12.5 | 3.2 | 2.1 | 0.4 | 2.0 | 23.0 | 9.9 |
| நுவரெலியா | 88,403 | 47.5 | 17.9 | 4.7 | 6.9 | 0.7 | 0.6 | 16.5 | 5.2 |
| காலி | 117,580 | 47.0 | 14.4 | 6.3 | 1.1 | 0.3 | 0.2 | 19.1 | 11.7 |
| மாத்தறை | 94,343 | 49.5 | 10.2 | 7.8 | 1.3 | 0.2 | 0.1 | 19.5 | 11.4 |
| அம்பந்தோட்டை | 94,786 | 45.1 | 13.0 | 2.8 | 1.2 | 0.4 | 3.8 | 19.3 | 14.4 |
| யாழ்ப்பாணம் | 112,230 | 3.6 | 3.9 | 4.3 | 7.6 | 70.1 | 0.2 | 7.7 | 2.6 |
| மன்னார் | 39,461 | 5.4 | 10.1 | 2.2 | 9.3 | 66.0 | 0.2 | 6.0 | 0.9 |
| வவுனியா | 89,652 | 7.3 | 10.4 | 2.8 | 36.9 | 28.5 | 1.7 | 10.3 | 2.0 |
| முல்லைத்தீவு | 83,789 | 1.2 | 3.6 | 0.7 | 0.5 | 88.3 | 2.0 | 3.5 | 0.2 |
| கிளிநொச்சி | 106,288 | 0.6 | 2.1 | 0.5 | 0.3 | 95.6 | 0.1 | 0.7 | 0.2 |
| மட்டக்களப்பு | 28,222 | 24.2 | 21.8 | 13.9 | 16.5 | 3.1 | 0.1 | 16.6 | 3.9 |
| அம்பாறை | 91,454 | 26.3 | 13.7 | 5.1 | 3.7 | 1.6 | 20.4 | 21.8 | 7.4 |
| திருகோணமலை | 77,093 | 19.7 | 15.0 | 3.3 | 4.7 | 33.2 | 3.4 | 17.3 | 3.4 |
| குருணாகலை | 222,962 | 45.6 | 12.5 | 4.6 | 1.3 | 0.3 | 0.8 | 20.4 | 14.5 |
| புத்தளம் | 142,855 | 30.8 | 16.2 | 3.0 | 17.6 | 1.2 | 1.4 | 21.7 | 8.1 |
| அநுராதபுரம் | 181,463 | 36.3 | 14.0 | 3.6 | 3.4 | 0.8 | 8.1 | 24.1 | 9.6 |
| பொலன்னறுவை | 126,818 | 31.1 | 11.9 | 1.7 | 1.7 | 0.8 | 17.6 | 25.5 | 9.7 |
| பதுளை | 102,814 | 42.6 | 16.5 | 6.7 | 1.5 | 0.4 | 1.5 | 20.5 | 10.2 |
| மொனராகலை | 100,586 | 40.4 | 18.9 | 2.1 | 1.6 | 0.7 | 4.8 | 25.0 | 6.6 |
| இரத்தினபுரி | 131,179 | 44.7 | 17.0 | 4.4 | 1.0 | 0.4 | 1.6 | 23.0 | 8.0 |
| கேகாலை | 121,557 | 53.3 | 10.3 | 3.9 | 0.9 | 0.3 | 0.2 | 17.3 | 13.8 |

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து குடிப்பெயர்வில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக "திருமணத்தை" அடையாளம் காணலாம். இதற்கு மேலதிகமாக "தொழில்" இனை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் குடிப்பெயர்வின் எண்ணிக்கையும் அதிகமாகும். திருமணம் காரணமாக அதிக எண்ணகிகையான நபர்கள் அதாவது 179,125 கம்பஹா மாவட்டத்திற்குக் குடிபெயர்ந்துள்ளதுடன் தொழில் நிமித்தம் அதிக எண்ணிக்கையான நபர்கள் அதாவது 274,475 கொழும்பு மாவட்டத்திற்குக் குடிபெயர்ந்துள்ளனர். வட மாகாணத்திற்குரிய யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையானோர் இடம்பெயர்வின் பின்னர் மீளவும் வசித்த மாவட்டத்திற்கு சென்றதன் காரணமாக குடிப்பெயர்வாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை வெளிப்படுத்துகின்றது. இடப்பெயர்வு காரணமாக குடிபெயர்ந்த நபர்களில் முறையே நூற்றுக்கு 25.4 மற்றும் 19.3 தொகைமதிப்பினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் வவுனியா மற்றும் புத்தளம் மாவட்டத்தில் வசித்துள்ளனர். கல்வி நிமித்தம் அதிகளவில் குடிபெயர்ந்த சனத்தொகை கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு குடிபெயர்ந்துள்ளமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

**மாவட்ட அடிப்படையில் தேறிய குடிப்பெயர்வு வீதம் 1981 மற்றும் 2012**

வழமையாக வசிக்கும் மாவட்டத்திற்கமைய 1981 மற்றும் 2012 ஆம் வருடங்களின் தேறிய குடிப்பெயர்வு வீத ஒப்பீடு உரு 7.2 இல் காட்டப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டம் 1981 ஆம் ஆண்டின் பின்னர் உருவாக்கப்பட்டமையால் அந்த மாவட்டத்தின் தகவல்கள் 2012 ஆம் ஆண்டிற்காக மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டச் சனத்தொகையிலும் ஒவ்வொரு 1000 பேருக்குக் காணப்படும் தேறிய குடிப்பெயர்வாளர்களின் எண்ணிக்கை " தேறிய குடிப்பெயர்வு வீதம்" என அழைக்கப்படும்.

உரு 7.2 இற்கமைய 2012 ஆம் ஆண்டில் உயர்ந்த தேறிய குடிப்பெயர்வு வீதம் வவுனியா மாவட்டத்தில் (-697.7) பதிவாகியுள்ளதுடன் இரண்டாவதாக அதிக பெறுமதி பதிவாகியுள்ளது மாத்தறை (-198.7) மாவட்டத்திலாகும். அவ்வாறே நுவரெலியா,பதுளை காலி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் உயர்ந்த தேறிய எதிர்க்கனிய குடிப்பெயர்வு வீதம் பதிவாகியுள்ளது. (முறையே -144.2, -109.2, -102.5 மற்றும் -100.1). 1981 தொடக்கம் 2012 காலப்பகுதிக்குள் நுவரெலியா, பதுளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் தேறிய எதிர்கனிய குடிப்பெயர்வு அதிகரித்துச் செல்லும் போக்கினை வெளிப்படுத்துகின்றது. 1981 இல் பொலன்னறுவை, மொணராகலை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உயர்ந்த நேர்க்கனிய குடிப்பெயர்வினைக் கொண்ட மாவட்டங்களாகப் பதிவாகியிருந்தாலும் 2012 இல் அந்த தேறிய நேர்க்கனிய குடிப்பெயர்வு குறைவடைந்து செல்லும் போக்கினை வெளிக்காட்டுகின்றது. 1981 இல் தேறிய நேர்க்கனிய குடிப்பெயர்வினைப் பதிவு செய்த மாவட்டங்களான வவுனியா மன்னார் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் 2012 இல் றேிய எதிர்க்கனிய குடிப்பெயர்வினைக் கொண்ட மாவட்டங்களாக மாறியுள்ளன. களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் 1981 இல் தேறிய எதிர்க்கனியக் குடிப்பெயர்வைப் பதிவு செய்திருந்தாலும் 2012 இல் அந்த மாவட்டங்கள் இரண்டும் தேறிய நேர்க்கனிய குடிப்பெயர்வினைக் கொண்ட மாவட்டங்களாக மாறியுள்ளன.

## உரு 7.2 : மாவட்ட அடிப்படையில் தேறிய குடிப்பெயர்வு வீதம் 1981 மற்றும் 2012



**தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கும் சனத்தொகை**

ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தற்காலிகமாக வெளிநாட்டில் வசிக்கின்ற நபர்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பகுப்பாய்வு முன்வைக்கப்பட்டுள்ளது. தொகைமதிப்பிலே குடித்தனங்களில் தற்காலிகமாக வெளிநாடு சென்றுள்ள நபர்கள் இருப்பின் அந்த நபர் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. ஆனால் குடித்தனத்தில் வசிக்கும் சகல நபர்களும் தற்காலிகமாக வெளிநாடு சென்றிருக்கும் சந்தர்ப்பத்தில் அந்த நபர்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கான வாய்ப்புக்கள் இன்மையால் அந்தத் தகவல்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. அவ்வாறே உரிய முறைமைகளுக்குப் புறம்பாக அதாவது சட்ட விரோதமாக வெளிநாடு சென்றுள்ள நபர்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு குடித்தனத் தலைவர்கள் விரும்பாமையால் இந்தத் தரவுகள் குறைவாகப் பதிவாகியுள்ளன என அனுமானிக்கலாம்.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய தற்காலிகமாக ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காலம் வெளிநாட்டில் வசிக்கும் மொத்த சனத்தொகை 604,540 எனப் பதிவாகியுள்ளது. இந்த எண்ணிக்கையில் நூற்றுக்கு 59 ஆண்களாகும்.

**அட்டவயை 7.7 : வசிக்கும் பிரிவு, பால் விபரம் மற்றும் வயதுப் பிரிவுக்கமைய வெளிநாடு சென்றுள்ள சனத்தொகை 2012**

| பிரிவு பால் விபரத்திற்கமைய | சகல வயதுப் பிரிவுகளும் | வயதுப் பிரிவு (வருடம்) | | |
|---|---|---|---|---|
| | | 18 இலும் குறைவு | 18 - 59 இடைப்பட்ட | 60 மற்றும் அதிலும் கூடிய |
| **மொத்தம்** | **604,540** | **29,218** | **565,460** | **9,862** |
| ஆண் | 354,462 | 15,653 | 333,582 | 5,227 |
| பெண் | 250,078 | 13,565 | 231,878 | 4,635 |
| **நகரம்** | **140,384** | **8,216** | **128,476** | **3,692** |
| ஆண் | 94,429 | 4,555 | 87,705 | 2,169 |
| பெண் | 45,955 | 3,661 | 40,771 | 1,523 |
| **கிராமம்** | **432,880** | **18,491** | **408,447** | **5,942** |
| ஆண் | 249,959 | 9,856 | 237,131 | 2,972 |
| பெண் | 182,921 | 8,635 | 171,316 | 2,970 |
| **பெருந்தோட்டம்** | **31,276** | **2511** | **28,537** | **228** |
1981 தொடக்கம் 2012 வரை நடாத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு மூன்றிலும் சமயம் தொடர்பான புள்ளிவிபரத் தரவுகளை மாவட்ட அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ளவாறு காட்டலாம். அதள்கமைய கீழே 9.16 அட்டவணைக்கமைய 1981 ஆம் ஆண்டில் பௌத்த சமயத்தவர்கள் அதிகமாக வசித்தது கொழும்பு மாவட்டத்தில் என்பதுடன் குறைவாகப் பதிவாகியுள்ளது முல்லைத்தீவு மாவட்டதிலாகும். இந்து சமயத்தவர்கள் அதிகதாகக் காணப்பட்டது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் என்பதுடன் புறைவாகப் பதிவாகியுள்ளது அம்பாந்தோட்டை மாவட்டத்திலாகும். இஸ்லாம் சமயத்தவர்கள் அதிகமாக கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் குறைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். றோமன் கத்தோலிக்க சமயத்தவர்கள் அதிகமாகப் பதிவாகியுள்ளது கம்பஹா மாவட்டத்தில் என்பதுடன் குறைவாகப் பதிவாகியுள்ளது அம்பாந்தோட்டை மாவட்டத்திலாகும். கிறிஸ்வத சமயத்தவர்கள் கொழும்பு மாவட்டத்தில் அதிகமாகக் குவிந்திருப்பதுடன் குறைந்த அளவிலானொர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

**அட்டவணை 9.16 : சமய அடிப்படையிலான மாவட்டச் சனத்தொகை 1981**

| மாவட்டம் | சமயம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | றோமன் கத்தோலிக்கம் | கத்தோலிக்கம் | வேறு |
| **இலங்கை** | **14,846,750** | **10,288,328** | **2,297,806** | **1,121,715** | **1,023,713** | **106,854** | **8,334** |
| கொழும்பு | 1,699,241 | 1,196,964 | 130,215 | 168,863 | 159,947 | 40,598 | 2,654 |
| கம்பஹா | 1,390,862 | 989,212 | 26,750 | 48,117 | 313,352 | 12,563 | 868 |
| களுத்துறை | 829,704 | 699,613 | 37,035 | 62,659 | 27,697 | 2,424 | 276 |
| கண்டி | 1,048,317 | 771,435 | 132,943 | 115,941 | 20,067 | 7,498 | 433 |
| மாத்தளை | 357,354 | 281,004 | 41,352 | 26,265 | 7,443 | 1,202 | 88 |
| நுவரெலியா | 603,577 | 251,247 | 303,571 | 14,902 | 28,382 | 5,312 | 163 |
| காலி | 814,531 | 767,661 | 15,086 | 26,301 | 3,586 | 1,452 | 445 |
| மாத்தறை | 643,786 | 608,714 | 15,356 | 16,670 | 2,026 | 818 | 202 |
| அம்பந்தோட்டை | 424,344 | 411,919 | 2,174 | 9,408 | 542 | 174 | 127 |
| யாழ்ப்பாணம் | 830,552 | 5,104 | 705,705 | 14,844 | 95,613 | 9,153 | 133 |
| மன்னார் | 106,235 | 3,363 | 28,885 | 29,161 | 43,633 | 1,056 | 137 |
| வவுனியா | 95,428 | 15,754 | 65,574 | 6,740 | 6,493 | 845 | 22 |
| முல்லைத்தீவு | 77,189 | 1,060 | 60,117 | 3,789 | 11,735 | 476 | 12 |
| கிளிநொச்சி | 330,333 | 9,127 | 218,812 | 78,810 | 19,704 | 3,795 | 85 |
| மட்டக்களப்பு | 388,970 | 145,687 | 72,809 | 162,140 | 5,643 | 2,387 | 304 |
| அம்பாறை | 255,948 | 82,602 | 80,843 | 76,404 | 14,303 | 1,280 | 516 |
| திருகோணமலை | 1,211,801 | 1,092,128 | 15,133 | 64,112 | 36,340 | 3,641 | 447 |
| குருணாகலை | 492,533 | 236,241 | 18,997 | 50,351 | 184,555 | 2,082 | 307 |
| புத்தளம் | 587,929 | 530,008 | 6,843 | 42,999 | 6,949 | 939 | 191 |
| அநுராதபுரம் | 261,563 | 235,758 | 4,781 | 17,090 | 3,471 | 351 | 112 |
| பொலன்னறுவை | 640,952 | 440,755 | 156,037 | 29,317 | 11,529 | 3,081 | 233 |
| பதுளை | 273,570 | 253,576 | 12,778 | 5,584 | 1,224 | 314 | 94 |
| மொனராகலை | 797,087 | 675,785 | 92,156 | 15,576 | 11,107 | 2,188 | 275 |
| இரத்தினபுரி | 684,944 | 583,611 | 53,854 | 35,672 | 8,372 | 3,225 | 210 |

மூலம் : புள்ளிவிபரத் தொகுப்பு 2013

அட்டவணை இலக்கம் 9.17 அமைய 2012 ஆம் ஆண்டில் பௌத்த சமயத்தவர்கள் அதிகமாக வசிப்பது கம்பஹா மாவட்டத்தில் என்பதுடன் குறைவாகப் பதிவாகியுள்ளது கிளிநொச்சி மாவட்டத்திலாகும். இந்து சமயத்தவர்கள் அதிகமாக வசிப்பது யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

என்பதுடன் குறைவாகப் பதிவாகியுள்ளது அம்பாந்தோட்டை மாவட்டத்திலாகும். இஸ்லாம் சமயத்தவர்கள் அம்பாறை மாவட்டத்தில் அதிகமாகப் பதிவாகியுள்ளதுடன் குறைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். றோமன் கத்தோலிக்க சமயத்தவர்கள் அதிகமாக வசிப்பது கம்பஹா மாவட்டத்தில் என்பதுடன் குறைவாக வசிப்பது அம்பாந்தோட்டை மாவட்டத்திலாகும். கிறிஸ்தவ சமயத்தவர்கள் கொழும்பு மாவட்டத்தில் அதிகமாகக் குவிந்திருப்பதுடன் குறைவான எண்ணிக்கை மொணராகலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

**அட்டவணை 9.17 : சமய அடிப்படையில் மாவட்டச் சனத்தொகை 2012**

| மாவட்டம் | சமயம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | றோமன் கத்தோலிக்கம் | கத்தோலிக்கம் | வேறு |
| **இலங்கை** | **20,359,439** | **14,272,056** | **2,561,299** | **1,967,523** | **1,261,194** | **290,967** | **6,400** |
| கொழும்பு | 2,324,349 | 1,632,225 | 186,454 | 274,087 | 162,314 | 66,994 | 2,275 |
| கம்பஹா | 2,304,833 | 1,642,767 | 52,973 | 112,746 | 449,398 | 46,080 | 869 |
| களுத்துறை | 1,221,948 | 1,018,909 | 39,541 | 114,556 | 39,774 | 8,956 | 212 |
| கண்டி | 1,375,382 | 1,009,220 | 133,744 | 197,076 | 22,379 | 12,798 | 165 |
| மாத்தளை | 484,531 | 385,151 | 43,432 | 45,682 | 7,899 | 2,342 | 25 |
| நுவரெலியா | 711,644 | 278,254 | 363,163 | 21,116 | 33,476 | 15,508 | 127 |
| காலி | 1,063,334 | 998,647 | 15,584 | 39,267 | 4,415 | 5,315 | 106 |
| மாத்தறை | 814,048 | 766,323 | 16,421 | 25,614 | 2,432 | 3,208 | 50 |
| அம்பந்தோட்டை | 599,903 | 580,344 | 1,222 | 15,204 | 1,139 | 1,692 | 302 |
| யாழ்ப்பாணம் | 583,882 | 2,168 | 483,255 | 2,363 | 75,474 | 20,511 | 111 |
| மன்னார் | 99,570 | 1,809 | 24,027 | 16,512 | 52,415 | 4,790 | 17 |
| வவுனியா | 172,115 | 16,853 | 119,401 | 11,972 | 15,305 | 8,498 | 86 |
| முல்லைத்தீவு | 92,238 | 8,185 | 69,377 | 1,880 | 9,063 | 3,664 | 69 |
| கிளிநொச்சி | 113,510 | 1,275 | 92,986 | 700 | 12,063 | 6,436 | 50 |
| மட்டக்களப்பு | 526,567 | 6,281 | 338,882 | 134,065 | 24,454 | 22,833 | 52 |
| அம்பாறை | 649,402 | 251,427 | 102,829 | 281,987 | 7,588 | 5,541 | 30 |
| திருகோணமலை | 379,541 | 99,344 | 98,442 | 159,418 | 14,493 | 7,774 | 70 |
| குருணாகலை | 1,618,465 | 1,431,632 | 14,721 | 118,305 | 43,711 | 9,926 | 170 |
| புத்தளம் | 762,396 | 329,705 | 28,811 | 150,404 | 240,221 | 12,093 | 1,162 |
| அநுராதபுரம் | 860,575 | 775,366 | 3,231 | 71,493 | 6,747 | 3,660 | 78 |
| பொலன்னறுவை | 406,088 | 364,229 | 6,886 | 30,465 | 3,192 | 1,276 | 40 |
| பதுளை | 815,405 | 591,799 | 157,608 | 47,192 | 12,020 | 6,615 | 171 |
| மொனராகலை | 451,058 | 426,762 | 11,997 | 9,809 | 1,601 | 859 | 30 |
| இரத்தினபுரி | 1,088,007 | 943,464 | 101,962 | 24,446 | 10,844 | 7,212 | 79 |
| கேகாலை | 840,648 | 709,917 | 54,350 | 61,164 | 8,777 | 6,386 | 54 |

மூலம் : குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2012

1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் வருடம் வரை கவனத்தில் கொண்டால் பௌத்த சமயத்தவர்கள் அதிகமாக வாழும் பிரதேசம் கொழும்பு மாவட்டத்தில் இருந்து கம்பஹா மாவட்டமாக மாற்றமடைந்திருப்பதுடன் குறைவாக வசிக்கும் மாவட்டம் முல்லைத்தீவிலிருந்து கிளிநொச்சியாக மாற்றமடைந்துள்ளது. 1981 தொகைமதிப்பின் போது கிளிநொச்சி தனி மாவட்டமாகக் கணக்கெடுக்கப்படாமை இதற்குக் காரணமாக இருக்கலாம். 1981 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இந்து சமயத்தவர்கள் கூடுதலாக மற்றும் குறைவாகப் பதிவாகியுள்ள மாவட்டங்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை. இஸ்லாம் சமயத்தவர்கள் இதற்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் அதிகமாக வசித்தது கொழும்பு மாவட்டமாக இருந்தாலும் 2012 ஆம் ஆண்டாகும் போது அம்பாறை மாவட்டத்திற்கு மாற்றமடைந்துள்ளது. உறோமன் கத்தோலித்த சமயவத்தவர்கள் அதிகமாக மற்றும் குறைவாக வசிக்கும் மாவட்டங்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆனால் கிறிஸ்தவ சமயத்தவர்கள் குறைவாக வசிக்கும் மாவட்டம் அம்பாந்தோட்டையிலிருந்து மொணராகலைக்கு மாற்றமடைந்துள்ளது.

# இலங்கையின் கல்வி தொடர்பான தகவல்கள்

## 10.0

## இலங்கையின் கல்வி தொடர்பான தகவல்கள்

கல்வி என்பது நாடொன்றின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான அத்தியாவசிய குறிகாட்டியாகும். இலங்கை 1948 இல் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தின் பின்னர் உருவான இலவசக் கல்வியின் அடிப்படையில் தற்கால இலங்கைச் சனத்தொகையின் எழுத்தறிவு மற்றும் கல்வித தகைமைகள் மிகவும் போற்றத்தக்க வகையில் உயர்ந்த மட்டத்தில் அமைந்துள்ளன. 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பில் சகல நபர்களினதும் எழுத்தறிவு, பெற்றுக்கொண்ட கல்வி மட்டம் மற்றும் பாடசாலை செல்லல் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அந்தத் தகவல்களை பால் விபரம், வயதுப் பிரிவு மற்றும் மாவட்டக் கல்வி மட்டம் என்பவற்றிற்கமைய விபரமாகப் பகுப்பாய்வு செய்தல் இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும்.

### இலங்கையின் தற்போதைய கல்வி மட்டம்

2012 ஆம் ஆண்டில் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தின் போது இலய்கையில் 3 வயதிற்கு மேற்பட்ட 4,390,536 பிள்ளைகள் பாடசாலை மற்றும் முன்பள்ளிக் கல்வியில் ஈடுபட்டுள்ளமை தொகைமதிப்புத் தகவல்களில் இருந்து தெரிய வந்துள்ளது. 3, 4, 5 ஆகிய வயதுப்பிள்ளைகள் 551,276 பேர் முன்பள்ளிக் கல்வியைப் பெறுகின்றனர்.

2012 ஆம் ஆண்டில் இலங்கையில் 5 வயதிற்கு மேற்பட்ட நபர்களில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்கள்4,390,536 பேரும் இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்த 10,731,218 பேரும்மூன்றாம் நிலைக் கல்வியைப் பூர்த்தி செய்த 2,793,404 பேரும் பதிவாகியுள்ளனர். இதற்குள் 5 வயதிற்கு மேற்பட்ட நபர்களில் பாடசாலை செல்லாதவர்கள் 7 இலட்சம் அளவில் பதிவாகியுள்ளனர். 2012 தொகைமதிப்பிலே பதிவாகியுள்ள 5 வயதிற்கு மேற்பட்ட 18,615,577 நபர்களில் 5-17 வயதிறிகிடைப்பட்ட பிள்ளைகள் 4,379,337 (23.5%) காணப்படுகின்றனர்.

### இலங்கையில் 25 வயதிறகு மேற்பட்ட சனத்தெகை பெற்றிருக்கும் கல்வி மட்டம்

நபரொருவர் பெற்றிருக்கும் கல்வி மட்டம் அந்த நாரின் வயது மட்டத்திற்கமைய வேறுபடும் என்பது தெளிவான விடயமாகும். பொருவாக நபரொருவரின் அடிப்படை (ஆரம்பக்) கல்வி 5 தொடக்கம் 10 வயது வரையான காலப்பகுதிக்குள்ளும் இடைநிலைக் கல்வி 11தொடக்கம் 15 வயது வரையிலும் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் மூன்றாம் நிலைக் கல்வியை 15 மேற்பட்ட வயதில் பெற்றுக்கொள்கின்றனர்.

இலங்கையின் கல்வி முறைமைக்கமைய நபரொருவருக்கு 25 வயதாகும் போது சனத்தொகையில் பெரும் பகுதியினர் தமது கல்வியை நிறைவு செய்திருப்பதால் இலங்கையின் சனத்தொகை பெற்றுள்ள கல்வி நிலைமை தொடர்பிலான விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு 25 வயதிலும் மேற்பட்ட நபர்களின் கல்வி மட்டத்தைப் பகுப்பாய்வு செய்வது மிகவும் பொருத்தமானதாகும். 2012 தொகைமதிப்பிலே நபரொருவா பெற்றுள்ள கல்வித்

தகைமையாக அவர் பெற்றுள்ள உயர் கல்வித் தகைமை குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தொழில் தகைமைகள் இதற்குள் உள்ளடக்கப்படவில்லை.

அட்டவணை 10.1 இல் காட்டப்பட்டுள்ள தரவுகளுக்கமைய 25 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையில் உயர்ந்த வீதாசாரம் இடைநிலைக் கல்வி மட்டத்தைக் (58.7%) கொண்ட சனத்தொகையாகும். அவ்வாறே 25 வயதிலும் கூடிய ஆண்களில் இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ள வீதாசாரம் (61.4%) என்பதுடன் 25 வயதிலும் கூடிய பெண்களில் இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ள பெண்களின் வீதாசாரம் (56.4%) இலும் கூடிய பெறுமதியைப் பதிவு செய்துள்ளது. ஆனால் இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ள பெண்களின் எண்ணிக்கை (3,579,875) ஆண்களின் எண்ணிக்கையை (3,499,694) விட உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. பாடசாலை செல்லாத சனத்தொகையின் வீதாசாரம் நூற்றுக்கு 4.7 ஆகும். இது கடந்த தொகைமதிப்புக்களில் பாதிவாகியுள்ள பெறுமதியை விட மிகவும் குறைந்த பெறுமதியை எடுத்துள்ளன. 1981 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் பாடசாலை செல்லாத சனத்தொகை வீதாசாரம் முறையே 18.0 மற்றும் 6.2 ஆகும். பாடசாலைக்குச் செல்லாத சனத்தொகையில் அதிக வீதாசாரம் பெண்கள் (6.1%) என்பதுடன் அந்த வீதாசாரம் பாடசாலை செல்லாத ஆண்களின் வீதாசாரத்தினதும் (3.0%) இரு மடங்காகும். மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பில் கவனம் செலுத்தினால் மூன்றாம் நிலைக் கல்வியுடன் கூடிய சனத்தொகையின் வீதாசாரம் (18.2%) ஆகும் இது ஆரம்பக் கல்வி (18.4%) மற்றும் இடைநிலைக் கல்வி (58.7%) கல்வி மட்டத்தினைக் கொண்ட சனத்தொகை வீதாசாரத்தை விட குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளது. மூன்றாம் நிலை கல்வியுடன் கூடிய சனத்தொயையை பால் விகிதாசாரத்திற்கமையப் பகுப்பாய்வு செய்தால் பெண்கள் சனத்தொகையின் வீதாசாரம் (19.3%) ஆண்கள் சனத்தொகையின் வீதாசாரத்தை (17.1%) விட உயர் பெறுமதியைப் பதிவு செய்துள்ளது. இங்கு முக்கிய விடயம் யாதெனின் மூன்றாம் நிலைக் கல்வி மட்டத்துடன் கூடிய சனத்தொகையில் உயர்ந்த சதவீதம் பெண்களில் பதிவாகியிருப்பதாகும்.

**அட்டவணை 10.1 : 25 வயதிலும் மேற்பட்ட சனத்தொகையின் கல்வி மட்டம், பால் விபரத்திற்கமைய, 2012**

| கல்வி மட்டம் | மொத்த வீதம் | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | (%) | எண்ணிக்கை | (%) | எண்ணிக்கை | (%) |
| **சகல கல்வி மட்டங்களும்** | **12,050,641** | **100.0** | **5,703,991** | **100.0** | **6,346,650** | **100.0** |
| பாடசாலை செல்லாத | 561,163 | 4.7 | 172,292 | 3.0 | 388,871 | 6.1 |
| **ஆரம்பக் கல்வி மட்டம்** | **2,214,792** | **18.4** | **1,058,900** | **18.6** | **1,155,892** | **18.2** |
| தரம் 1-5 சித்தி | 2,214,793 | 18.4 | 1,058,900 | 18.6 | 1,155,892 | 18.2 |
| **இடைநிலைக் கல்வி மட்டம்** | **7,079,569** | **58.7** | **3,499,694** | **61.4** | **3,579,875** | **56.4** |
| தரம் 6-8 சித்தி | 1,889,721 | 15.7 | 991,099 | 17.4 | 898,622 | 14.2 |
| தரம் 9-10 சித்தி | 2,886,830 | 24.0 | 1,407,833 | 24.7 | 1,478,997 | 23.3 |
| க.பொ.த (சா.த) அல்லது அதற்குச் சமமான | 2,303,018 | 19.1 | 1,100,762 | 19.3 | 1,202,256 | 18.9 |
| **மூன்றாம் நிலைக் கல்வி மட்டம்** | **2,195,117** | **18.2** | **973,105** | **17.1** | **1,222,012** | **19.3** |
| க.பொ.த (உ.த) அல்லது அதற்குச் சமமான | 1,724,574 | 14.3 | 748,407 | 13.1 | 976,167 | 15.4 |
| பட்டம் | 358,052 | 3.0 | 166,309 | 2.9 | 191,743 | 3.0 |
| பட்டப் பின் டிப்ளோமா | 68,893 | 0.6 | 32,829 | 0.6 | 35,764 | 0.6 |
| பட்டப் பின்படிப்புப் பட்டம் | 37,341 | 0.3 | 21,299 | 0.4 | 16,042 | 0.3 |
| கலாநிதிப் பட்டம் | 6,557 | 0.1 | 4,261 | 0.1 | 2,296 | 0.0 |

அட்டவணை இலக்கம் 10.2 இற்கமைய சகல மாவட்டங்களினதும் கல்வி மட்டம் தொடர்பில் கவனத்தைச் செலுத்தினால் உயர்ந்த சனத்தொகை வீதாசாரம் தரம் 6-10 சித்தியடைந்த சனத்தொகையில் பதிவாகியுள்ளது.எனினும் கொழும்பு, கண்டி மற்றும் மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களைத் தவிர நாட்டின் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் க.பொ.த (சா.த) அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பெற்றுள்ளவர்களின் சதவீதம் க.பொ.த (உ.த) அல்லது அதற்குச் சமமான தகைமையைக் கொண்ட நபர்களின் வீதாசாரத்தை விட உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களில் க.பொ.த (உ.த) அல்லது அதற்குச் சமமான தகைமையுடைய நபர்களின் வீதாசாரம் க.பொ.த (சா.த) அல்லது அதற்குச் சமமான தகைமையுடைய நபர்களின் வீதாசாரத்தை விட வெட்டிக் காட்டும்உயர் வீதாசாரத்தை வெளிக்காட்டுகின்றது. மேலும் முக்கியமான விடயமாவது பாடசாலை செல்லாத சனத்தொகையில் அதிக வீதாசாரம் பதிவாகியிருப்பது மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலாகும்.

அட்வணை 10.2 : கல்வி மட்ம் மற்றும் மாவட்ட அடிப்படையில் 25 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையின் பரம்பல், 2012

| **மாவட்டம்** | **மொத்த வீதம்** | **தரம் 1-5 சித்தி** | **தரம் 6-10 சித்தி** | **க.பொ.த (சா.த) அல்லது அதற்குச் சமமான** | **க.பொ.த(உ.த) அல்லது அதற்குச் சமமான** | **பாடசாலை செல்லவில்லை** |
|---|---|---|---|---|---|---|
| **இலங்கை** | **100.0** | **18.4** | **39.6** | **19.1** | **18.2** | **4.7** |
| கொழும்பு | 100.0 | 9.6 | 33.2 | 25.3 | 29.4 | 2.6 |
| கம்பஹா | 100.0 | 9.7 | 40.0 | 25.2 | 22.6 | 1.8 |
| களுத்துறை | 100.0 | 14.5 | 40.8 | 22.4 | 20.0 | 3.1 |
| கண்டி | 100.0 | 16.7 | 37.3 | 19.6 | 21.1 | 5.3 |
| மாத்தளை | 100.0 | 21.6 | 41.9 | 16.0 | 14.8 | 5.7 |
| நுவரெலியா | 100.0 | 31.5 | 35.6 | 13.5 | 9.2 | 10.2 |
| காலி | 100.0 | 17.6 | 41.3 | 18.7 | 18.6 | 3.9 |
| மாத்தறை | 100.0 | 18.9 | 39.7 | 18.3 | 17.5 | 5.6 |
| அம்பந்தோட்டை | 100.0 | 21.9 | 41.4 | 16.5 | 14.0 | 6.1 |
| யாழ்ப்பாணம் | 100.0 | 27.6 | 43.5 | 18.0 | 15.7 | 1.4 |
| மன்னார் | 100.0 | 23.0 | 42.3 | 13.6 | 14.2 | 2.3 |
| வவுனியா | 100.0 | 29.8 | 42.2 | 17.2 | 13.9 | 3.6 |
| முல்லைத்தீவு | 100.0 | 28.1 | 47.5 | 11.9 | 8.2 | 2.6 |
| கிளிநொச்சி | 100.0 | 32.5 | 47.8 | 13.1 | 8.7 | 2.3 |
| மட்டக்களப்பு | 100.0 | 32.5 | 29.4 | 13.9 | 13.2 | 10.9 |
| அம்பாறை | 100.0 | 27.9 | 35.9 | 14.3 | 14.6 | 7.3 |
| திருகோணமலை | 100.0 | 26.2 | 39.2 | 14.7 | 13.1 | 6.9 |
| குருணாகலை | 100.0 | 18.3 | 40.6 | 19.0 | 18.5 | 3.7 |
| புத்தளம் | 100.0 | 24.5 | 43.7 | 15.5 | 12.3 | 4.0 |
| அநுராதபுரம் | 100.0 | 20.7 | 46.3 | 16.0 | 12.8 | 4.2 |
| பொலன்னறுவை | 100.0 | 22.3 | 47.8 | 14.2 | 10.9 | 4.9 |
| பதுளை | 100.0 | 23.4 | 38.8 | 14.7 | 13.8 | 9.3 |
| மொனராகலை | 100.0 | 23.7 | 44.2 | 12.8 | 11.4 | 7.8 |
| இரத்தினபுரி | 100.0 | 22.2 | 41.3 | 15.5 | 13.7 | 7.3 |
| கேகாலை | 100.0 | 17.8 | 40.3 | 19.5 | 18.0 | 4.4 |

## முன்பள்ளிக் கல்வியைப் பெறும் பிள்ளைகள்

பிள்ளையொன்றை முன்பள்ளியில் சேர்த்தல் கட்டாயமல்லவெனினும் அண்மைக் காலத்தில் மூன்று வயதைப் பூர்த்தி செய்ததன் பின்னர் பிள்ளைகளை முன்பள்ளிக்கு அனுப்புவதற்கு பெரும்பாலான பெற்றோர்கள் ஆர்வம் காட்டுவதைத் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது. பாடசாலைக் கல்வியில் பிள்ளைகள் ஈடுபடுவதற்கு முன்னர் சம வயதுப் பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடுவதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் பிள்ளைகளை முறைசார் கல்விக்குப் பழக்கப்படுத்தல் முன்பள்ளிக்கு அனுப்புவதன் பிரதான நோக்கமாகும். இலங்கையில் பிள்ளையொன்றைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு 5 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும். பொதுவாக முன்பள்ளியில் சேரும் பிள்ளைகள் பாடசாலைக் கல்வி ஆரம்பிக்கும் வரை முன்பள்ளிக் கல்வியைப் பெறுகின்றனர். ஆகையால் சில வேளைகளில் 6 வயதான பிள்ளைகளும் முன்பள்ளிக்குச் செல்லும் சந்தர்ப்பங்களைக் காண முடியும். குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய முன்பள்ளி செல்லும் வயதில் அதாவது 3 தொடக்கம் 5 வயதுப் பிரிவில் 1,087,680 பிள்ளைகள் இருப்பது தெரியவந்துள்ளது. அந்தப் பிள்ளைகளுள் 551,576 தொகைமதிப்பு நடாத்தப்பட்ட காலப்பகுதியில் முன்பள்ளிக் கல்வியைப் பெற்றுக்கொண்டிருந்ததும் தெரிய வந்துள்ளது. இந்நாட்டின் முன்பள்ளிப் பிள்ளைகளுள் பெரும்பாலானவர்கள் 4 வயதுப் பிள்ளைகளாவர். தொகைமதிப்பிற்கமைய 3 வயதுப் பிள்ளைகள் 361,940 காணப்பட்டதுடன் அதில் நூற்றுக்கு 45 வீதமும் 4 வயதுப் பிள்ளைகள் 365,564 இல் நூற்றுக்கு 86 வீதமும் முன்பள்ளிக் கல்வியைப் பெறுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. பிரிவு ரீதியாக முன்பள்ளி செல்லும் பிள்ளைகின் விதாசாரம் கீழே 10.1 இல் காட்டப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பிள்ளைகள் முன்பள்ளிக் கல்வியில் ஈடுபடுதல் நகரம் மற்றும் கிராமப் பிரிவுகளை விட குறைவு என்பது தெளிவாகின்றது.

**உரு 10.1 : முன்பள்ளி செல்லும் பிள்ளைகளின் வீதாசாரம் வயது மற்றும் பிரிவு ரீதியாக, 2012**




கீழே உரு 10.2 இல் காட்டப்படுவது மாவட்ட மட்டத்தில் 3.4 மற்றும் 5 வயதில் காணப்படும் பிள்ளைகளுள் முன்பள்ளிக் கல்வி பெறும் பிள்ளைகளின் வீதாசாரமாகும். அந்த உருவிற்கமைய சகல மாவட்டங்களிலும் 4 வயதுப் பிள்ளைகளுள் நூற்றுக்கு 80 இலும் அதிகமானோர் முன்பள்ளி கல்வியைப் பெறுவது தெரிகின்றது. மேலும் ஒரு 10.2 இற்கமைய யாழ்ப்பாணம்,

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய வடமாகாணத்திற்குரிய மாவட்டங்கள் மற்றும் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மேல் மாகாணத்திற்குரிய மாவட்டங்களிலும் 4 வயதான பிள்ளைகள் முன்பள்ளிக் கல்வியைப் பெறுவது ஏனைய மாவட்டங்களை விட மிக உயர்ந்தது என்பதைக் காணமுடிகின்றது. மேல் மாகாணத்தில் மிகவும் சிறந்த வசதிகளைக் கொண்ட முன்பள்ளி காணப்படுவதும் தாய்மார்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதன் காரணமாகவும் பெரும்பாலான பிள்ளைகளை முன்பள்ளி கல்வியில் ஈடுபடுத்த வேண்டியேற்படுகின்றது.

உரு 10.2 : முன்பள்ளிக் கல்வி பெறும் பிள்ளைகள் மாவட்ட ரீதியாக, 2012




இலங்கையில் பல்வேறு மொழிகளைப் பேசும் இனக்குழுக்கள் காணப்படுவதால் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் போது இந்தப் பிள்ளைகள் பேசும் மொழி மிக முக்கியமானதாகும். முன்பள்ளிக் கல்வியை உயர்ந்த தரத்தில் கட்டியெழுப்புவதற்கான மிக முக்கிய அங்கமாக விளங்குவது முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதாகும். தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய முன்பள்ளி பிள்ளைகளுள் நூற்றுக்கு 70 அதிகமானோர் சிங்களப் பிள்ளைகளாவார். தமிழ் மற்றம் முஸ்லீம் பிள்ளைகள் முறையே நூற்றுக்கு 15 மற்றும் 12 வீதமாகும். தமிழ் மற்றும் முஸ்லீம் பிள்ளைகளுள் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் ஆங்கில மொழியில் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்பட்டாலும். பெரும்பாண்மையான சிங்களப் பிள்ளைகளுக்காக சிங்கள மொழிமூல ஆசிரியர்களும் தமிழ் மற்றும் முஸ்லீம் பிள்ளைகளுக்காக தமிழ் மொழி மூல ஆசிரியர்களும் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். முன்பள்ளிக் கல்வியைக் கட்டியெழுப்புவதற்கு ஆசிரியர்களுக்கு மேலதிகமாக புத்தகங்கள் மற்றும் ஏனைய கல்வி ஆதாரங்களைத் தயாரிக்கும் போது மொழி தொடர்பாகக் கவனம் செலுத்தல் அத்தியவசியமானதாகும்.

## 5-14 இற்கு இடைப்பட்ட வயதுப்பிரிவு

மொத்தநச் சிறுவர் சனத்தொகையில் (18 வயதிலும் குறைந்த) நூற்றுக்கு 52.5 வீதமானோர் 5-14 வயதிற்கிடைப்பட்ட பிரிவினுள் அடங்குவர். இந்தப் பிரிவில் ஆண் பிள்ளைகள் 1,711,177 என்பதுடன் பெண் பிள்ளைகள் 1,676,627 ஆகும். அரச கல்விக் கொள்கைக்கமைய 10-14 வயதுப் பிரிவிற்கிடைப்பட்ட பிள்ளைகள் முறைசார் பாடசாலைக் கல்வியைப் பெறுதல் கட்டாயமானதாகும். இந்த வயதுப் பிரிவுப் பிள்ளைகளின் எழுத்தறிவு (99%) உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதற்கு பாடசாலைக் கல்வியைப் பெறுவதல் கட்டாயமென்பது பிரதான காரணமாகவுள்ளது. குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கமைய 5-14 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவில் நூற்றுக்கு 93.3 முறைசார் பாடசாலைக் கல்வியைப் பெறுவதுடன் நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளில் பாடசாலைக் கல்வியைப் பெறும் பிள்ளைகளின் வீதாசாரம் முறையே 92.7, 93.6 மற்றும் 90.1 ஆகும். எனவே கட்டாயக் கல்வியைப் பெறும் வயதுப் பிரிவுப் பிள்ளைகளுள் நூற்றுக்கு 7 வீதம் அளவிலானோர் பாடசாலைக் கல்வி முறையிலிருந்து நழுவிச் செல்வது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளதுடன் இதன் போது பெருந்தோட்ட பிரிவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் 5-14 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவில் 6அல்லது 7 அல்லது 8 வயதுப் பிள்ளைகள் பல்வேறு காரணங்களால் பாடசாலைகளில் தரம் 1 இல் கல்வி பயிலும் சந்தர்ப்பங்களும் உண்டு.

உரு 10.3 : 5-14 இற்கிடைப்பட்ட வயதுப் பிரிவுப் பிள்ளைகளின் பாடசாலை செல்லும் வீதாசாரம் மாவட்ட ரீதியாக, 2012



**15-18 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவு**

சிறுவர் சனத்தொகையில் (18 வயதிலும் குறைந்த) நூற்றுக்கு 20 வீதமானோர் 15-18 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவில் அடங்குவர். இந்தப் பிரிவில் ஆண் பிள்ளைகள் 659,661 என்பதுடன் பெண் பிள்ளைகள் 657,621 ஆவர். பாடசாலைக் கல்வினைப் பெறவேண்டிய வயதில் காணப்படும் இந்தப் பிள்ளைகளுள் மூன்றில் இரண்டு பங்கானோர் முறைசார் பாடசாலைக் கல்வியைப் பெறுவதுடன் இது நகரப் பிரிவில் நூற்றுக்கு 67.9 உம், கிராமியப் பிரிவில் நூற்றுக்கு 65.5 உம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவில் நூற்றுக்கு 52.4 உம் ஆகும். நகரம்,கிராமம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளில் பாடசாலைக் கல்வியைப் பெறும் மாணவர்களில் வீதாசாரத்தைக் கவனத்தில் கொண்டால் பெருந்தோட்டப் பிரிவில் நூற்றுக்கு 50 அளவிலானோர் பாடசாலைக் கல்வி சூழலிலிருந்து நழுவிச் செல்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். பெருந்தோட்டப் பிரிவில் காணப்படும் வறுமை பெற்றோரின் அறியாமை என்பவற்றுடன் பெருந்தோட்டப் பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகளும் இதற்குக் காரணமாகலாம்.

**உரு 10.4 : 15-18 வயதுப் பிரிவுப் பிள்ளைகளின் பாடசாலை செல்லும் வீதாசாரம் மாவட்ட ரீதியாக, 2012**




**எழுத்தறிவு**

தொகைமதிப்பு வரைவிலக்கணங்களுக்கு அமைய எழுத்தறிவு என்பது ஏதாவதொரு மொழியில் சிறிய கடிதம் அல்லது பந்தியொன்றை வாசித்து விளங்கிக் கொள்வதற்கும் விளங்கி எழுதுவதற்குமான ஆற்றலாகும்.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே 10 வயதிற்கு மேற்பட்ட நபர்களின் எழுத்தறிவு தொடர்பாக வினவப்பட்டது. அதிலே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய

மூன்று மொழிகளிலும் எழுத்தறிவு அளவிடப்பட்டதுடன் அதன் மூலம் இலங்கையில் ஏதாவதொரு மொழியில் எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் அதாவது எழுத்தறிவு வீதம் நூற்றுக்கு 95.7 எனப் பதிவாகியுள்ளது. அதாவது 10 வயதிற்கு மேற்பட்ட மொத்த சனத்தொகையான 16,867,825 இல் 16,142,267 (95.7%) எழுத்தறிவு ஆற்றலைக் கொண்டவர்களாவர். அவ்வாறே ஆண்களின் எழுத்தறிவு வீதம் 96.9 ஆகக் காணப்படுகின்ற போது பெண்களின் 94.6 ஆகும். அதற்கமைய எழுத்தறிவு தொடர்பில் இலங்கை தெற்காசிய நாடுகளுள் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வாறான உயர்ந்த எழுத்தறிவு மற்றும் உயர்ந்த கல்வித் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான பிரதான காரணிகளாக 14 வயது வரை சகல பிள்ளைகளும் பாடசாலை செல்வதைக் கட்டாயப்படுத்தியமை, இலவசப் பாடநூல் விநியோகம் மற்றும் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்குகின்றமை ஆகியவற்றைக் குறிப்படலாம்.

இலங்கையின் எழுத்தறிவினை பிரிவு ரீதியாக நோக்குமிடத்து நகரப் பிரிவு (97.7%) என்ற உயர்ந்த எழுத்தறிவினை வெளிப்படுத்துகின்ற போது பெருந்தோட்டப் பிரிவு (86.1%) என்ற குறைந்த எழுத்தறிவினை வெளிப்படுத்துகின்றது. கிராமியப் பிரிவின் எழுத்தறிவு நூற்றுக்கு 95.7 ஆகும்.

**உரு 10.5 : பால் விபரம் மற்றும் பிரிவு ரீதியாக நபர்களின் எழுத்தறிவு, 2012**




1981 ஆம் ஆண்டில் இலங்கையின் எழுத்தறிவு வீதம் நூற்றுக்கு 87.2 ஆகக் காணப்பட்டதுடன் அது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து நூற்றுக்கு 8.5 வீத அதிகரிப்பை வெளிப்படுத்தியுள்ளது. அவ்வாறே ஆண் மற்றும் பெண் எழுத்தறிவு வீதம் 2012 ஆம் ஆண்டில் கடந்த தொகைமதிப்பு வருடங்களை விட பெறுமதியைப் பதிவு செய்துள்ளது. 1944 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலவசக் கல்விச் சட்டம் காரணமாக இலங்கை மக்கள் கல்வியைப் பெறுவதற்கு அதிக சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது. 1921 ஆம் ஆண்டு தொடக்கம் 1946 வரை வரையான காலப்பகுதிக்குள் எழுத்தறிவு நூற்றுக்கு 17.9 வீத வளர்ச்சியை வெளிப்படுத்துவதன் மூலம் கல்விச் சந்தர்ப்பம் அதிகரித்துச் செல்வலு தெளிவாக உறுதிப்படுத்தபப்ட்டுள்ளது. அவ்வாறே 1956 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அரச கரும மொழிகள் சட்டத்தை முன்னிலைப்படுத்தி கிராமிய சனத்தொகையில் பெரும் பகுதியினர் கல்வியில் ஈடுபட்டனர். அது 1953 மற்றும் 1963

இற்கு இடைப்பட்ட 10 வருட காலத்தினுள் எழுத்தறிவு நூற்றுக்கு 11.7 வீதத்தினால் அதிகரித்ததன் மூலம் தெளிவாகின்றது. மேலும் ஆண்களின் எழுத்தறிவு வீதம் பெண்களின் எழுத்திறிவு வீதத்தினை விட உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. மேலும் ஆராய்ந்தால் இலவசக் கல்வியின் பின்னர் பெண்கயளின் கல்வியறிவு வீதம் 1921 மற்றும் 1946 காலப்பகுதிக்குள் இரு மடங்கினால் அதிகரித்துள்ளமை தெளிவாகின்றது.

**அட்டவணை 10.3 : தொகைமதிப்பு வருடம் மற்றும் பால் விபரத்திற்கமைய எழுத்தறிவு வீதாசாரம் 1881-2012**

| தொகைமதிப்பு வருடம் | எழுத்தறிவு வீதாசாரம் % | | |
|---|---|---|---|
| | மொத்த வீதாசாரம் | ஆண் | பெண் |
| 1881 | 17.4 | 29.8 | 3.1 |
| 1891 | 21.7 | 36.1 | 5.3 |
| 1901 | 26.4 | 42.0 | 8.5 |
| 1911 | 31.0 | 47.2 | 12.5 |
| 1921 | 39.9 | 56.3 | 21.2 |
| 1946 | 57.8 | 70.1 | 43.8 |
| 1953 | 65.4 | 75.9 | 53.6 |
| 1963 | 77.1 | 85.8 | 67.5 |
| 1971 | 78.5 | 85.6 | 70.9 |
| 1981 | 87.2 | 91.1 | 83.2 |
| 2001 | 91.1 | 92.6 | 89.7 |
| 2012 | 95.7 | 96.9 | 94.6 |

இலங்கையில் பயன்படுத்தப்படும் பிரதான மொழிகளான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றுள் சிங்கள மொழி தொடர்பான எழுத்தறிவு நூற்றுக்கு 80 இலும் அதிகமாகக் காணப்படுவதுடன் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி தொடர்பான எழுத்தறிவு நூற்றுக்கு முறையே 26 மற்றும் 31 ஆகும்.

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே பல மொழிகள் தொடர்பான எழுத்தறிவுத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதற்கமைய இலங்கையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகள் தொடர்பான எழுத்தறிவு நூற்றுக்கு 8 வீதமாக வெளிப்படுத்தப்பட்டதுடன் சிங்களம் மற்றும் ஆங்கிலம் தொடர்பில் நூற்றுக்கு 28 வீதமும் சிங்களம் மற்றும் தமிழ் தொடர்பில் நூற்றுக்கு 10 வீதமும் தமிழ் மற்றும் ஆங்கிலம் தொடர்பில் நூற்றுக்கு 10 வீதமான எழுத்தறிவும் பதிவாகியுள்ளன.

இலங்கையின் எழுத்தறிவினை மாவட்ட மட்டத்தில் கவனத்தில் கொண்டால் கம்பஹா மாவட்டத்தில் உயர்ந்த எழுத்தறிவு வீதம் பதிவாகியுள்ளதுடன் குறைந்த எழுத்தறிவு வீதம் ம்டடக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து நுவரெலியா, அம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களில் எழுத்தறிவு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

**உரு 10.6 : மாவட்ட ரீதியாக எழுத்தறிவு வீதம், 2012**




இலங்கையில் நபர்களின் சிங்கள மொழியறிவு சகல வயதுப் பிரிவுகளுக்காகவும் சமமாகக் காணப்படுவதுடன் ஆங்கில மொழியறிவு வயதுப் பிரிவுகளுக்கமைய அதாவது 10-14, 15-24, 25-29, மற்றும் 30 வயதிற்கு மேற்பட்ட என்றவாறு பகுப்பாய்வு செய்தால் 15-24 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவில் காணப்படும் நபர்களின் ஆங்கில மொழியறிவு (44%) ஏனைய வயதுப் பிரிவுகளை விட உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. அவ்வாறே தமிழ் மொழியறிவு உயர்ந்த வீதாசாரத்தைக் காட்டுவது 10-14 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவிலாகும்(41%). இலங்கையில் பாடசாலைகளில் தமிழ் மொழி ஒரு பாடமாக பாடப்பரப்பினுள் உள்ளடக்கப்பட்டமையின் காரணத்தினால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டதாகக் கருத முடியும். மேலும் மூன்று மொழிகயையளும் பேசக் கூடிய நபர்களுள் அதிக வீதாசாரம் பதிவாகியுள்ளது10-14 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவிலாகும். 30 வயதிற்கு மேற்பட்ட நபர்களுள் மும்மொழியறிவு இல்லாத நபர்களின் எண்ணிக்கை ஏனைய வயதுப் பிரிவினருடன் ஒப்பிடுமிடத்து அதிகமாகும்.

உரு 10.7 : வயதுப் பிரிவு மற்றும் மொழி மூலத்திற்கமைய எழுத்தறிவு வீதாசாரம், 2012




**இன ரீதியான மொழியறிவு – 2012**

2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பினைப் பயன்படுத்தி இன ரீதியாக 10 வயதிலும் மேற்பட்ட நபர்களின் எழுத்தறிவினை மொழி மூலத்திற்கமைய கணிப்பிட்டு கீழே அட்டவணை 10.4 இல் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் 10 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையைக் கவனத்தில் கொண்டால் சிங்கள மொழியறிவு உயர்ந்த பெறுமதியை கொண்டிருப்பதுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழியறிவு முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களை வகிக்கின்றன.

10 வயதிற்கு மேற்பட்ட சிங்களச் சனத்தொகையின் சிங்கள மொழியறிவு நூற்றுக்கு 96.4 ஆகவும் தமிழ் மற்றும் ஆங்கில மொழியறிவு வீதம் முறையே நூற்றுக்கு 5.3 மற்றும் 31.1 ஆகும்.

அதிக சிங்கள மொழியறிவு காணப்படுவது சிங்கள இனத்தவரிடம் என்பதுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழியறிவு அதிகமாகக் காணப்படுவது முறையே இலங்கை முஸ்லீம் மற்றும் பரங்கிய இனத்தவர்களிடமாகும். அவ்வாறே குறைந்த சிங்கள மொழியறிவு இலங்கைத் தமிழரிடம் பதிவாகியுள்ளதுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழியறிவு குறைவாகக் காணப்படுவது முறையே சிங்கள மற்றும் இந்தியத் தமிழ் இனத்தவர்களிடமாகும். சகல இனத்தவர்களினதும் மொழியறிவினை ஆய்வு செய்தால் மும் மொழியறிவு உயர்ந்த மட்டத்தில் காணப்படுவது மலாயர்களிடமாகும்.

**அட்டணை 10.4 : இன ரீதியான மொழியறிவு, 2012**

| இனத் தொகுதி | எழுத்தறிவு விகதம் | | |
|---|---|---|---|
| | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| **இலங்கை** | **79.7** | **26.4** | **30.8** |
| சிங்களவர் | 96.4 | 5.3 | 31.1 |
| இலங்கைத் தமிழர் | 17.3 | 94.1 | 24.3 |
| இந்தியத் தமிழர் | 20.9 | 86.2 | 19.4 |
| இலங்கைச் சோனகர் | 40.6 | 94.8 | 38.7 |
| பறங்கியர் | 77.0 | 29.1 | 97.4 |
| மலாயர் | 81.8 | 97.1 | 66.8 |
| வேறு | 54.1 | 38.3 | 80.8 |

**கணனியறிவு**

சர்வதேசத்தைப் போன்று இலங்கையிலும் கணனிப் பயன்பாடு அண்மைக்கால வரலாற்றில் இடம்பெற்றுள்ள பிரபல்யமான விடயமாகும். 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே இலங்கையில் வசிக்கும் 10 வயதிற்கு மேற்பட்ட சகல நபர்களிடமும் கணனியறிவு அதாவது கணனியைப் பயன்படுத்துக் கூடிய ஆற்றல் தொடர்பில் வினவப்பட்டது.

தொகைமதிப்பு வரைவிலக்கணங்களுக்கமைய கணனியைப் பயன்படுத்தும் ஆற்றல் என்பது அடுத்தவரின் உதவி அல்லது ஒத்துழைப்பின்றி தனக்குத் தேவையான ஏதாவதொரு பணியை தாமாகவே கணனியைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்கான ஆற்றலாகும் (இதன்போது மேற்கொள்ளும் பணி தொடர்பில் கவனம் செலுத்தபடமாட்டாது).

2012 குடிசன மறறும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் போது 10 வயதிற்கு மேற்பட்ட நபர்களிடம் கணனியைப் பயன்படுத்தும் ஆற்றல் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளுக்கமைய நூற்றுக்கு 24.2 வீதமானோருக்கு கணனியறிவு உண்டு என்பது தெளிவாகின்றது. அதாவது 10 வயதிற்கு மேற்பட்ட 16,867,825 பேரில் 4,086,167 பேருக்கு கணனியறிவு காணப்படுவதடன் அதில் 2,143,901 (52.5%) ஆண்கள் என்பதுடன் 1,942,266 (47.5%) பெண்களாவர்.

கணனியறிவை பிரிவு ரீதியாகப் பகுப்பாய்வு செய்தால் நகரப் பிரிவில் (36.8%) அதிக கணனியறிவு பதிவாகியுள்ளதுடன் பெருந்தோட்டப் பிரிவில் அந்தப் பெறுமதி மிகக் குறைந்த பெறுமதியைப் பதிவு செய்துள்ளது. கிராமப் பிரிவில் கணனிப் பயன்பாடு நூற்றுக்கு 22.1 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

**உரு 10.8 பிரிவு ரீதியாக இலங்கையின் கணனிப் பயன்பாடு, 2012**




கணனியைப் பயன்படுத்தும் ஆற்றல் காணப்படும் நபர்களை வயதுப் பிரிவிற்கமைய வகைப்படுத்தினால் இளைளோர் சனத்தொகை அதாவது 15-24 இற்பு இடைப்பட்ட வயதுப் பிரிவினரிடம் உயர்ந்த கணனிப் பயன்பாடு (48%) பதிவாகியுள்ளது. 30 வயதிற்கு மேற்பட்ட நபர்களிடம் கணனிப் பயன்பாடு (14%) குறைவாகவுள்ளது.

அதற்கு மேலதிகமாக 10-14 மற்றும் 25-29 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவினரின் கணனிப் பயன்பாடு முறையே நூற்றுக்கு 34 மற்றும் 36 ஆகும்.

ஆண் பெண் ரீதியாக கணனியைப் பயன்படுத்தும் ஆற்றல் தொடர்பில் கவனத்தில் கொண்டு முழு இலங்கை மற்றும் பிரிவு ரீதியாகப் பகுப்பாய்வு செய்தபோது ஆண்கள் பெண்களை விட உயர்ந்த கணனியறிவை கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

**உரு 10.9 : இலங்கையின் பால் விபரத்திற்கமைய கணினிப் பயன்பாடு மற்றும் பிரிவு**



மாவட்ட ரீதியாக கணனியறிவைப் பரீட்சித்தால் உயர் வீதாசாரம் (38.0%) பதிவாகியிருப்பது கொழும்பு மாவட்டத்திலாகும். அவ்வாறே உயர் வீதாசாரம் பதிவாகியுள்ள ஏனைய மாவட்டங்களாக முறையே கம்பஹா (30.5%), கண்டி (28.9%) மற்றும் களுத்துறை (26.4%) ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன.

மொத்தமாக எடுத்து நோக்கினால் வட மாகாணத்தில் வெட்டிக்காட்டும் குறைந்த அளவிலான கணனியறிவு வீதாசாரம் பதிவாகியுள்ளது. குறைந்த கணனியறிவு வீதாசாரம் முல்லைத்தீவு (8.4%) மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. வடமாகாணத்தில் 30 வருடங்களாக நிலவிய ஆமைதியற்ற சூழ்நிலை காரணமாக மின்சார வசதி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமாகியமை என்பவற்றை இதற்குரிய காரணங்களாகக் குறிப்பிடலாம். ஆனால் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கணனியறிவு (22.*%) வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து வெட்டிக் காட்டும் உயர் பெறுமதியைப் பதிவு செய்துள்ளது.

வயதுப் பிரிவிற்கமைய சகல மாவட்டங்களிலும் வசிக்கும் சனத்தொகையின் கணனியறிவை அவதானிக்கையில் காணக் கூடிய விசேட அம்சம் யாதெனின் 30 வயதிற்கு மேற்பட்ட வயதுப் பிரிவில் கணனியறிவுடைய நபர்களின் அதிக வீதாசாரம் கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி மாவட்டங்களில் மட்டும் பதிவாகியுள்ளமையாகும். இந்த மாவட்டங்களில் உயர் கல்வி நிலையங்கள் மற்றும் அலுவலகங்களைக் கொண்டுள்ளமையால் வசதி வாய்ப்புக்களைப் பொருத்த மட்டில் அபிவிருத்தியமைந்த மாவட்டங்களாக இருப்பதால் கணனியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அதிகமாக இருதத்ல் இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம் எனக் குறிப்பிட முடியும். சகல மாவட்டங்களிலும் உயர் கணனியறிவைப் பதிவு செய்திருப்பது 15-29 இற்கு இடைப்பட்ட வயதுப் பிரிவில் உள்ளடங்கும் நபர்கள் என்பதுடன் சகல வயதுப் பிரிவுகளில் கணனியைப் பயன்படுத்தும் ஆற்றலைக் குறைவாகப் பதிவு செய்திருப்பது முல்லைத்தீவு மாவட்டமாகும்.

## உரு: 10.10 கணினி அறிவு வயதுப் பிரிவு மற்றும் மாவட்ட ரீதியாக 2012



# பொருளாதார ரீதியாகச் செயற்பாடுடைய மற்றும் செயற்பாடற்ற நபர்கள்

# 11.0

## பொருளாதார ரீதியாகச் செயற்பாடுடைய மற்றும் செயற்பாடற்ற நபர்கள்

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மொத்தச் சனத்தொகையில் மூன்றில் இரண்டு அளவு 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினைக் கொண்ட நபர்களின் மனித உழைப்பு பெரும் பங்களிப்பினை வழங்குகின்றது. தொழிற்படைக்குள் உள்ளடங்கும் இந்த நபர்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரித்தல் காலாண்டுத் தொழிற்படை அளவீட்டினைப் போன்று குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலும் மேற்கொள்ளப்படுகின்றது. குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே பொருளாதார ரீதியாகச் செயற்பாடுடைய மற்றும் செயற்பாடற்ற நபர்கள் தொடர்பான அடிபப்டைத் தகவல்கள் மட்டும் சேகரிக்கப்பட்டதுடன் காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின் போது விரிவான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும். காலாண்டு தொழிற்படை அளவீட்டின் போது தகவல் சேகரித்தலின் ஈடுபடல் பாலம் தகவல் சேகரிக்கும் தினத்திற்கு முன்னைய 7 தினங்களாகக் கருதப்படும். (current economic activities). ஆனால் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் போது தகவல் சேகரித்தலின் ஈடுபடும் காலம் ஒரு வருடமாகும் (usual economic activities). அதற்கமைய தொகைமதிப்பிலே தொகைமதிப்புத் தினத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் ஈடுபட்ட சகல நடவடிக்கைகள் தொடர்பாகவும் தகவல் சேகரிக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம் ஒரு வருட காலத்தினுள் பொருளாதார ரீதியாகச் செயற்பாடுடைய மற்றம் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற நபர்களை அடையாளம் காண்பதாகும்.

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய இலங்கையில் பொருளாதார ரீதியாகச் செயற்பாட்டு ஆற்றல் காணப்படும் 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களின் எண்ணிக்கை 15,227,773 எனப் பதிவாகியுள்ளது. இந்த நபர்களில் 7,266,234 அதாவது நூற்றுக்கு 48 ஆண்கள் என்பதுடன் நூற்றுக்கு 52 (7,961,539) பெண்களாவர். பொருளாதார ரீதியாகச் செயற்படும் ஆற்றல் காணப்பட்டாலும் தொகைமதிப்பு நடாத்தப்பட்ட தினத்திற்கு 52 வாரங்களுக்கு முன்னர் (அதாவது ஒரு வருடத்திற்கு முன்னர்) ஈடுபட்டிருந்த வேலைகளைக் கவனத்தில் கொண்டால் குறைந்தபட்சம் 26 வாரங்களாவது பொருளாதார ரீதியாக செயற்பாடுடைய நபர்களின் எண்ணிக்கை 7,857,370 ஆகும். பொருளாதார ரீதியாகச் செயற்பாடுடைய நபர்களுள் நூற்றுக்கு 93 தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் என்பதுடன் எஞ்சிய நூற்றுக்கு 7 அதாவது எண்ணிக்கை ரீதியாக 521,938 நபர்கள் தொழிலற்றவர்கள் என்பது தொகைமதிப்புத் தகவல்களுக்கு அமையப் பதிவாகியுள்ளது. மேலும் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுள் நூற்றுக்கு 48 பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற நபர்களாவர்.

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பிலே தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாக அரச துறை சேவையாளர்கள் அரசு சார்ந்த சேவையாளர்கள் தனியார் துறை உத்தியோகத்தர்கள் தொழில் வழங்குனர்கள் சுயதொழில் செய்பவர்கள் கம்பளம் பெறாது குடும்பப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற நபர்களாக கவனத்தில் கொள்ளப்படுவது முழு நேர மாணவர்கள், வீட்டு வேலைகளில் ஈடுபடுபவர்கள், தொழிலில் ஈடுபடாது வருமானம் பெறுபவர்கள் முதியோர் சமூக சேவைகளில் ஈடுபடுபவர்கள் பாடசாலை செல்லாத பிள்ளைகள் மற்றும் வேறு பொருளாதாரமற்ற

நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஆகும். 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய நபர்களுள் பொருளாதார மற்றும் பொருளாதாரமற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விதம் உரு 11.1 இல் காட்டப்படுகின்றது.

**உரு 11.1 : பொருளாதார ரீதியான செயற்பாட்டுத் தன்மைக்கமைய 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையின் வகைப்படுத்தல் 2012**




**பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகை**

தொகைமதிப்பு வரைவிலக்கணங்களுக்கு அமைய பொதுவாக ஒரு வருட காலத்தினுள் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நபர்கள் 7.3 மில்லியன்கள் அதாவது நூற்றுக்கு 70.8 ஆண்களாகும். சகல நாடுகளைப் போன்றே இலங்கையிலும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகையில் பெரும்பாண்மையானோர் ஆண்களாவர். இதற்குப் பிரதான காரணம் இந்த நாட்டின் பொருளாதாரத்தினுள் ஆண்கள் தலைமை வகிக்கும் தொழில்வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவது காரணமாக இருக்கலாம். அவ்வாறே குடும்பக் கூறினுள் இல்லத் தலைவிகளாப் பெண்களுக்கு குடும்ப வேலைகளில் ஈடுபடவில் அதிக பொறுப்பு சமூக ரீதியாக பெண்களுக்கு உரித்துடையதாக அமைதல் அதில் தாக்கம் செலுத்தும் காரணமாக அமையலாம். வசிக்கும் பிரிவுக்கமைய தரவுகளைப் பகுப்பாய்வு செய்தால் பெருந்தோட்டப் பிரிவில் பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்புத் தெளிவாகத் தெரியவரும். பெருந்தோட்டப் பிரிவில் பெண்களின் வறுமை குறைந்த கல்வியறிவு மட்டம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவைச் சுற்றி சென்றடையக் கூடிய எல்லைக்குள் பொருளாதார நடவடிக்கைகள் அதிகமாகக் காணப்படும் காரணத்தினால் பெருந்தோட்டப் பிரிவின் பெண்கள் அந்தத் தொழில் வாய்ப்புகளில் இலகுவாக ஈடுபடுகின்றனர். பொருட்கள் மற்றும் சேவை உற்பத்தி வேலைகளில் பெண்களின் பங்களிப்புக் குறைவடைதல் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சியில் நேரடியாகத் தாக்கம் செலுத்தும் காரணியாகும். ஆகையால் பெண்களை தொழிற்சந்தையை நோக்கி கவர்வதற்கு அவர்களை அதிகளவில் ஈடுபடுத்தக் கூடிய முதலீட்டு வலயங்கள், கைத்தொழிற்சாலைகள் என்பவற்றைப் போன்று பல்வேறு சுய தொழில் வாய்ப்புக்களையும் தரப் பொருளாதாரத்தினுள் உயர்வடையச் செய்ய வேண்டும். மேலும் பொருளாதாரத்தில் பெண்களின் உயர்ந்த பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு போக்குவரத்து வசதிகள் மின்சாரம் நீர் போன்ற கீழ்

கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதும் குழந்தைகளைப் பாதுகாப்பாக பராமரிப்பதற்கான முறைமைகளை விருத்தி செய்தல் அவசியயமாகும். 2012 குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய 25 வயதிற்கு மேற்பட்ட பெண்களுள் நூற்றுக்கு 75 அளவில் குறைந்தபட்சம் தரம் 6 வரை கல்வி பயின்றுள்ளனர். மேலும் நகர மற்றும் கிராமப் பிரதேச பெண்களின் கல்வி மட்டம் மேலும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்தப் பிரிவுகளில் பெண்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் போது கல்வி மட்டத்திற்கமைய அவர்களை ஈடுபடுத்தக் கூடிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது அவசியமாகும்.

**அட்டவணை 11.1 : வசிக்கும் பிரிவுக்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகை, 2012**

| பிரிவு | 15 வயதிற்கு மேற்பட்ட மொத்த சனத்தொகை | பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சனத்தொகை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | % | ஆண் | % | பெண் | % |
| **மொத்தம்** | **15,227,773** | **7,335,432** | **100.0** | **5,190,697** | **100.0** | **2,144,735** | **100.0** |
| நகரம் | 2,843,630 | 1,332,572 | 18.1 | 939,080 | 18.1 | 393,492 | 18.3 |
| கிராமம் | 11,753,182 | 5,638,585 | 76.9 | 4,048,473 | 78.0 | 1,590,112 | 74.1 |
| பெருந்தோட்டம் | 630,961 | 364,275 | 5.0 | 203,144 | 3.9 | 161,131 | 7.5 |

**உரு 11.2 : வசிக்கும் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகை, 2012**




பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகை வசிக்கும் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமையஅட்டவணை 11.1 இல் காட்டப்பட்டுள்ளது. இந்தத் தரவுகளுக்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பெண்களுள் நூற்றுக்கு 7.5 பெருந்தோட்டப் பிரிவில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் ஆண்களுள் பெருந்தோட்டப் பிரிவில் ஈடுபட்டுள்ளவர்கள் நூற்றுக்கு 3.9 மட்டுமேயாகும். உரு 11.2 இற்கமைய நகரம் மற்றும் கிராமப்

பிரிவுகளில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகையில் நூற்றுக்கு 30 வீதமளவிலானவர்கள் பெண்கள் என்பதுடன் பெருந்தோட்டப் பிரிவில் அந்தப் பெறுமதி நூற்றுக்கு 44.2 ஆகும். இதற்கமைய ஏனைய பிரிவுகளை விட பெருந்தோட்டப் பிரிவில் பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்காக வழங்கும் பங்களிப்பு அதிகம் என்பது தெளிவாகும்.

**பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் சனத்தொகையின் பண்புகள்**

பொருளாதார நறடவடிக்கைகளில் ஈடுபடும் சனத்தொகையை பால், வயது விவாக அந்தஸ்து என்பற்றிற்கமைய ஆய்வு செய்தால் முக்கியமான பல தகவல்கள் வெளியாகின்றன. வயதுப் பிரிவுக்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் சனத்தொகை உரு 11.3 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய ஆண்கள் இளவயதிலேயே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தெளிவாகின்றது. மேலும் 35-39 வயதிற்கிடைப்பட்ட வயதுப் பிரிவு ஆண்கள் ஏனைய வயதுப் பிரிவுகளிலுள்ள ஆண்களை விட அதிகமாகப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். வயதுப் பிரிவுக்கமைய கவனத்தில் கொண்டால் பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்காக அதிகளவு பங்களிப்புச் செய்துள்ளது நடுத்தர வயதுப் பிரிவிலாகும். குடும்பப் பொருளாதாரத்தை பலப்படுததுவதற்காக பெண்களுக்கு 30-40 வயதிற்கிடைப்பட்ட காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடல்அதிதயவசியமாக இருந்தாலும் சிறு குழந்தைகளைப் பராமரித்த்ல் மற்றும் வீட்டு வேலைகள் ஏனைய வேலைகளின் காரணத்தினால் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தாமதமாகின்றது. 60-64 வயதுப் பிரிவின் பின்னர் ஆண் பெண் இருபாலரும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழங்கும் பங்களிப்பு படிப்படியாக குறைவடைந்து செல்வதை இந்த உருவின் மூலம் மேலும் தெளிவாகின்றது.

**உரு 11.3 : வயதுப் பிரவு மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடல், 2012**




விவாக அந்தஸ்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகையை ஆய்வு செய்த போது பல முக்கியமான விடயங்கள் வெளியாகியுள்ளன. 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுள் நூற்றுக்கு 68 அளவில் திருமணமான நபர்களாவர். அதற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் திருமணமானவர்கள் என்பதுடன் அந்த எண்ணிக்கை 5,577,917 ஆகும். ஆமலும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சகல திருமணமான நபர்களுள் நான்கு பேரில் மூன்று பேர் ஆண்களாவர். தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட திருமணமான பெண்கள் 5,401,061 பதிவாகியுள்ளனர். இந்தப் பெண்களுள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வீதாசாரம் நூற்றுக்கு 28 அளவானதாகும். அதாவது திருமணமான பெண்களுள் நான்கில் மூன்று பேர் அளவில் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்றவர்கள். ஏனைய விவாக அந்தஸ்துக்களுக்கமைய ஈடுபட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகளைக் கவனத்தில் கொண்டால் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தாரமிழந்தவர்களில் நூற்றுக்கு 79.6 மற்றும் விவாகரத்துப் அல்லது பிரிந்து வாழ்பவர்களில் நூற்றுக்கு 51.1 வீதம் பெண்கள் என்பது வெளியாகியுள்ளது.

**அட்டவணை 11.2 : விவாக அந்தஸ்து மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகை 2012**

| விவாக அந்தஸ்து | 15 வயதிற்கு மேற்பட்ட மொத்த சனத்தொகை | பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சனத்தொகை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | ஆண் | | பெண் | |
| | | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **மொத்தம்** | **15,227,773** | **7,335,432** | **5,190,697** | **70.8** | **2,144,735** | **29.2** |
| ஒருபோதும் விவாகமாகாத | 3,927,602 | 1,476,694 | 1,026,540 | 69.5 | 450,154 | 30.5 |
| திருமணமான | 10,322,105 | 5,577,917 | 4,076,523 | 73.1 | 1,501,394 | 26.9 |
| தாரமிழந்த | 792,947 | 174,194 | 35,503 | 20.4 | 138,691 | 79.6 |
| விவாகரத்து அல்லது பிரிந்து வாழும் | 185,119 | 106,627 | 52,131 | 48.9 | 54,496 | 51.1 |

**அட்டவணை 11.3 : தொழிலின் தன்மை மற்றும் பிரிவுக்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை 2012**

| பால் விபரம் | | தொழிலின் தன்மை மற்றும் பிரிவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சனத்தொகை | அரச உத்தியோகத்தர்கள் | அரசு சார்ந்த சேவையாளர்கள் | தனியார் துறை ஊழியர்கள் | தொழில் வழங்குனர் | சுயதொழில் புரிவோர் | சம்பளம் பெறாது குடும்பத் தொழிலுக்கு பங்களிப்புச் செய்வோர் |
| **மொத்தம்** | **7"335"432** | **1"122"734** | **244"989** | **2"980"361** | **190"680** | **2"414"258** | **382"410** |
| **%** | **100.0** | **15.3** | **3.3** | **40.6** | **2.6** | **32.9** | **5.2** |
| ஆண் | 5,190,697 | 723,457 | 151,992 | 2,101,865 | 164,276 | 1,927,228 | 121,879 |
| **%** | **100.0** | **13.9** | **2.9** | **40.5** | **3.2** | **37.1** | **2.3** |
| பெண் | 2,144,735 | 399,277 | 92,997 | 878,496 | 26,404 | 487,030 | 260,531 |
| **%** | **100.0** | **18.6** | **4.3** | **41.0** | **1.2** | **22.7** | **12.1** |

தொழில் அந்தஸ்து மற்றும் பிரிவுக்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் எண்ணிக்கைஅட்டவணை 11.3 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுள் நூற்றுக்கு 40.6 தனியார் துறையில் சம்பளம் பெறும் தொழில்களிலும் நூற்றுக்கு 32.9 தமது பொருளாதார நடசடிக்கைகளிலும் நூற்றுக்கு 15.3 சம்பளம் பெறும் அரச துறை தொழில்களிலும் நூற்றுக்கு 3.3 சம்பளம் பெறும் அரசு சார்ந்த தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். இதற்கிடையில் எந்தவொரு சம்பளமும் பெறாமல் குடும்பப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்யும் நபர்கள் நூற்றுக்கு 5.2 அளவில் காணகப்படுகின்றனர். கால் விபரத்திற்கமைய கவனத்தில் கொண்டால் ஆண்களுக்கு அமைவாகப் பெண்கள் அரச துறை சேவையில் இணையும் தன்மை இந்தத் தரவுகளுக்கமைய தெளிவாகும்.

மேலும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்களுள் சம்பளம் பெறாமல் குடும்பப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுபவர்கள் நூற்றுக்கு 12.1 அளவு உயர்வானதாகும்.

**பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடித்தனத் தலைவர்கள் தொடர்பான தகவல்கள்**

வயதுப் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடித்தனத் தலைவர்கள் தொடர்பான தகவல்கள் அட்டவணை 11.4 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமையப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சனத்தொகையில் அரைவாசி (3,618,683) குடித்தனத் தலைவர்களாவர். இந்தக் குடித்தனத் தலைவர்களுள் பெரும்பாண்மையானவர்கள் ஆண்கள் என்பதுடன் அவர்களுள் அதிகமானவர்கள் 30 வயதிலும் மேற்பட்ட நபர்களாவர். பெண்கள் குடித்தனத் தலைவர்களாக செயற்படும் குடித்தனங்களின் எண்ணிக்கை 369,246 என்பதுடன் இதில் நூற்றுக்கு 30.7 (113,222) 45-54 வயதிற்கிடைப்பட்ட வயதுப் பிரிவில் உள்ளடங்குவதுடன் நூற்றுக்கு 23.7 (87,589) 35-44 வயதிற்கிடைப்பட்ட பெண்களாவர். 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவுப் பெண்கள் குடித்தனத் தலைவர்களாகச் செயற்படும் குடித்தனங்கள் 62,166 காணப்படுவதாக அட்டவணை 11.4 இன் தகவல்களுக்கமைய தெரிய வருகின்றது.

**அட்டவணை 11.4 : வயதுப் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடித்தனத் தலைவர்களின் எண்ணிக்கை 2012**

| வயதுப் பிரிவு | பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குடித்தனத் தலைவர்களின் எண்ணிக்கை | ஆண் | % | பெண் | % |
|---|---|---|---|---|---|
| **மொத்தம்** | **3,618,683** | **3,249,437** | **100.0** | **369,246** | **100.0** |
| 15-19 | 9,847 | 7,278 | 0.2 | 2,569 | 0.7 |
| 20-24 | 65,643 | 57,583 | 1.8 | 8,060 | 2.2 |
| 25-29 | 204,849 | 187,740 | 5.8 | 17,109 | 4.6 |
| 30-34 | 403,781 | 373,877 | 11.5 | 29,904 | 8.1 |
| 35-44 | 997,424 | 909,835 | 28.0 | 87,589 | 23.7 |
| 45-54 | 1,047,657 | 934,435 | 28.8 | 113,222 | 30.7 |
| 55-59 | 404,066 | 355,439 | 10.9 | 48,627 | 13.2 |
| 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட | 485,416 | 423,250 | 13.0 | 62,166 | 16.8 |

பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆண் பெண் குடித்தனத் தலைவர்கள் தொடர்பாகப் பகுப்பாய்வு செய்யும் போது ஆண்களுள் குடித்தனத் தலைவர்களாக செயற்படும் அதிக வீதாசாரம் 25-44 வயதிற்கிடைப்பட்ட வயதுப் பிரிவில் பதிவாகியுள்ளது.

உரு 11.4 : பால் விபரம் மற்றும் விரிவான வயதுப் பிரிவுகளுக்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் குடித்தனத் தலைவர்கள் 2012




**தொழிலற்ற சனத்தொகை**

குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு நடாத்தப்பட்ட தினத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னரான காலப் பகுதிக்குள் தொழில் செய்யும் எதிர்பார்ப்புடன் வேலை தேடிக் கொண்டிருக்கும் அல்லது வேலையொன்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் அதற்கு முயற்சி செய்கின்ற நபர்கள் தொழிலற்ற சனத்தொகை என அழைக்கப்படும். தரவுகளுக்கமைய தொழிலற்ற சனத்தொகை 521,938 என்பதுடன் அதில் அதிகமானவர்கள் ஆண்களாவர்.

தொழிலற்ற சனத்தொகை வசிக்கும் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய அட்டவணை 11.5 இல் காட்டப்படுகின்றது. அதற்கமைய நகர, கிராம மற்றும் பெருந்தோட்டம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் தொழிலற்ற ஆண்களின் வீதாசாரம் முறையே நூற்றுக்கு 59.3, 57.4 மற்றும் 54.8 ஆகும். தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய கிராமியப் பிரிவில் மட்டும் 409,510 அளவிலான தொழிலற்றவர்கள் பதிவாகியுள்ளதன் மூலம் இந்த நாட்டின் கிராமியப் பிரிவு மக்களை ஈடுபடுத்துவதற்குப் போதுமானளவு பொருளாதார நடவடிக்கைகள் இல்லையென்பது தெளிவாகின்றது. அதாவது கிராமப் பிரிவை அண்டி தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பது தொடர்பில் அரசு மற்றும் தனியார் துறையின் தலையீடு அவசியமாகும்.

**அட்டவணை 11.5 : வசிக்கும் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய தொழிலற்ற சனத்தொகை, 2012**

| வசிக்கும் பிரிவு | 15 வயதிலும் கூடிய சனத்தொகை | தொழிலற்ற சனத்தொகை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | ஆண் | | பெண் | |
| | | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **இலங்கை** | **15,227,773** | **521,938** | **300,432** | **57.6** | **221,506** | **42.4** |
| நகரம் | 2,843,630 | 84,383 | 50,019 | 59.3 | 34,364 | 40.7 |
| கிராமம் | 11,753,182 | 409,510 | 235,042 | 57.4 | 174,468 | 42.6 |
| பெருந்தோட்டம் | 630,961 | 28,045 | 15,371 | 54.8 | 12,674 | 45.2 |

**உரு 11.7 : பால் விபரம் மற்றும் கல்வி நிலமைக்கமைய தொழிலற்ற சனத்தொகை, 2012**




**பொருளாதார நடவடிக்கைகளில் ஈடபடாத சனத்தொகை**

இலங்கையில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 15,227,773 நபர்களில் அரைவாசி அளவான எண்ணிக்கை பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற நபர்கள் என்ற வகுதிக்குள் அடங்குவர். அது எண்ணிக்கை ரீதியில் 7,370,403 ஆகும். குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பின் போது பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற நபர்களாக அடையாளப்படுத்தப்படுவது தொழில் செய்யாமல் தொழில் செய்யும் எதிர்பார்ப்போ அல்லது ஆற்றலோ இல்லாத நபர்களாவர்.

பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகையில் நூற்றுக்கு 75 வீதம் பெண்கள் என்பதுடன் வசிக்கும் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை தொடர்பில் ஆய்வு செய்தால் பெருந்தோட்டப் பிரிவு தவிர்ந்த ஏனைய இரு பிரிவுகளிலும் ஆண்களை போன்று மூன்று மடங்கு பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பது பதிவாகியுள்ளது. 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நகரப் பிரிவுச் சனத்தொகையில் நூற்றுக்கு 50.2 வீதமும் கிராமியச் சனத்தொகையில் நூற்றுக்கு 48.5 வீதமும் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்றவர்கள். பெருந்தோட்டப் பிரிவில் மட்டும் ஓரளவிற்கு இந்த நிலைமையில் மாற்றத்தைக் காணக் கூடியதாகவுள்ளது. அந்தப் பிரிவில்

பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற சனத்தொகை நூற்றுக்கு 37.8 ஆகும். இதற்குக் காரணமாகக் கருதக் கூடியது பெருந்தோட்டப் பிரிவில் குறிப்பிடத்தக்களவு பெண்கள் பெருந்தோட்ட கைத்தொழிலுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுவதாகும். அட்டவணை 11.7 மற்றும் உரு 11.8 இல் இது தெளிவாகும்.

**அட்டவணை 11.7 : வசிக்கும் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை 2012**

| பிரிவு | 15 வயதிலும் கூடிய சனத்தொகை | பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | ஆண் | % | பெண் | % |
| **இலங்கை** | **15,227,773** | **7,370,403** | **1,775,105** | 24.1 | **5,595,298** | 75.9 |
| நகரம் | 2,843,630 | 1,426,675 | 376,010 | 26.4 | 1,050,665 | 73.6 |
| கிராமம் | 11,753,182 | 5,705,087 | 1,321,154 | 23.2 | 4,383,933 | 76.8 |
| பெருந்தோட்டம் | 630,961 | 238,641 | 77,941 | 32.7 | 160,700 | 67.3 |

**உரு 11.8 : வசிக்கும் பிரிவு மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை 2012**




மாகாண மட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை தொடர்பான தகவல்கள் உரு 11.9 இல் காட்டப்பட்டுள்ளது. பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத அதிகளவு சனத்தொகை மேல், மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் பதிவாகியுள்ளது.

**உரு 11.9 : மாகாண மட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை, 2012**




பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத நபர்களை ஆண் பெண் விபரத்திற்கமைய ஆய்வு செய்யும் போது மேல் மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத ஆண்கள் 561,682 எனப் பதிவாகியுள்ளது. ஒவ்வொரு மாகாணத்திலும் வசிக்கும் சனத்தொகையில் நூற்றுக்கு 20 மற்றும் 26 இற்கு இடைப்பட்ட வீதாசாரம் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத ஆண்களாவர். கிழக்கு மாகாணத்தினுள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத ஆண்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 20.1 உம் பெண்கள் நூற்றுக்கு 79.9 உம் எனப் பதிவாகியுள்ளன. அதற்கமைய ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையில் பாரிய வேறுபாட்டினை கிழக்கு மாகாணத்தில் காணக் கூடியதாகவுள்ளது. அதன் போது குறைவான வேறுபா மத்திய மாகாணத்தில் பதிவாகியுள்ளதுடன் ஒட்டு மொத்தமாக ஒன்பது மாகாணங்களிலும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையையும் தாண்டிக் காணப்படுகின்றது.

**அட்டவணை 11.8 : வசிக்கும் மாவட்டம் மற்றும் பால் விபரத்திற்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை, 2012**

| மாகாணம் | பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை | ஆண் | | பெண் | | ஆண் பெண் வேறுபாடு |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | |
| **மொத்தம்** | **7,370,403** | **1,775,105** | **24.1** | **5,595,298** | **75.9** | 51.8 |
| மேல் | 2,184,311 | 561,682 | 25.7 | 1,622,629 | 74.3 | 48.6 |
| மத்திய | 911,153 | 236,221 | 25.9 | 674,932 | 74.1 | 48.1 |
| தென் | 911,090 | 226,398 | 24.8 | 684,692 | 75.2 | 50.3 |
| வடமேல் | 861,392 | 187,725 | 21.8 | 673,667 | 78.2 | 56.4 |
| சப்பிரகமுவா | 672,323 | 167,686 | 24.9 | 504,637 | 75.1 | 50.1 |
| கிழக்கு | 573,031 | 115,337 | 20.1 | 457,694 | 79.9 | 59.7 |
| வடக்கு | 427,002 | 96,373 | 22.6 | 330,629 | 77.4 | 54.9 |
| வடமத்திய | 419,865 | 85,520 | 20.4 | 334,345 | 79.6 | 59.3 |
| ஊவா | 410,236 | 98,163 | 23.9 | 312,073 | 76.1 | 52.1 |

அட்டவணை இலக்கம் 11.9 இன் மூலம் காட்டப்படுவது வயதுப் பிரிவுக்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை பற்றிய தகவல்களாகும். அதற்கமைய பொருளாதார ரீதியில் செயற்பாடற்ற நபர்களுள் நூற்றுக்கு 25.5 உள்ளடங்குவது 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவிலாகும். அவர்கள் பொருளாதார ரீதியில் செயற்பாடற்றவர்களாகக் காணப்படுவதற்குப் பிரதான காரணம் முதுமையடைந்தமையாக இருக்கலாம். அதற்கடுத்ததாக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகையில் அதிகமானோரை பிரதிநிதித்துவப்படுத்துவது 15-19 இடைப்பட்ட வயதுப் பிரிவினையாகும். இதற்குக் காரணம் அவர்கள் தற்போதும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் வயதில் காணப்படுவதாகும். பொருளாதார ரீதியில் செயற்பாடற்ற மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 49.9 (3,676,059) வீதம் 20 தொடக்கம் 54 இற்கிடைப்பட்ட வயதுப் பிரிவுக்கு உரியதாகும். அதாவது பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகையில் அரைவாசி அளவு உள்ளடங்குவது தொழிற்படையிலாகும். பொருளாதார ரீதியில் செயற்பாடற்ற மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 9 வீதம் (660,017) ஆகிய 20 – 24 இற்கிடைப்பட்ட வயதுப் பிரிவில் கணிசமான அளவானோர் உயர் கல்வியில் ஈடுபடுபவர்களாக இருக்கலாம். எவ்வாறாயினும் தொழிற்படையில் செயற்பாடுடைய வயதுப் பிரிவாகிய 20 மற்றும் 54 வயதிற்கிடைப்பட்ட பிரிவில் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்றவர்கள் நூற்றுக்கு 49.9 போன்ற பாரிய பெறுமதியாகக் காணப்படுவது அபிவிருத்தி அடைந்துவரும் நாடென்ற வகையில் பொருளாதார அபிவிருத்தியில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும்.

**அட்டவணை 11.9 : வயதுப் பிரிவுக்கமைய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை, 2012**

| வயதுப் பிரிவு | 15 வயதிலும் கூடிய மொத்த சனத்தொகை | பொருளாதார ரீதியில் செயற்பாடற்ற சனத்தொகை | % |
|---|---|---|---|
| **மொத்தம்** | **15,227,773** | **7,370,403** | **100.0** |
| 15-19 | 1,644,249 | 1,316,779 | 17.9 |
| 20-24 | 1,532,883 | 660,017 | 9.0 |
| 25-29 | 1,552,848 | 554,469 | 7.5 |
| 30-34 | 1,639,415 | 590,869 | 8.0 |
| 35-44 | 2,768,286 | 947,242 | 12.9 |
| 45-54 | 2,505,290 | 923,462 | 12.5 |
| 55-59 | 1,064,229 | 501,339 | 6.8 |
| 60 மற்றும் அதற்கு மேல் | 2,520,573 | 1,876,226 | 25.5 |

அட்டவணை 11.10 இன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாத சனத்தொகை ஈடுபட்டுள்ள நடவடிக்கை மற்றும் பால் விபரத்திற்கமைய காட்டப்பட்டுள்ளது. அதற்கமையப் பொருளாதார ரீதியாகச் செயற்பாடற்ற சனத்தொகையில் பெரும்பாண்மையானோர் வீட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். அது நூற்றுக்கு 50 இலும் அதிகமாகும். வீட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விட 3,734,026 அதிகமாகும். இதன் மூலம் தெளிவாவது இலங்கையில் பெண்களின் எழுத்தறிவு அபிவிருத்தியடைந்த மேற்குலக நாடுகளுக்கு மிக அண்மித்ததாகக் காணப்பட்டாலும் சமூக மனப்பாங்குகளில் இன்னும் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களுக்கு உட்படவில்லை என்பதாகும்.

**அட்டவணை 11.10 : பொருளாதார நடவடிக்கைகளில் செயற்பாடற்ற சனத்தொகை ஈடுபட்டுள்ள நடவடிக்கை மற்றும் பால் விபரத்திற்கமைய, 2012**

| ஈடுபட்டுள்ள நடவடிக்கை | பொருளாதார ரீதியில் செயற்பாடற்ற சனத்தொகை | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **அமாத்தம்** | **7,370,403** | **1,775,105** | **24.1** | **5,595,298** | **75.9** |
| பாடசாலை செல்பவர்கள் | 1,431,105 | 671,460 | 46.9 | 759,645 | 53.1 |
| வீட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளோர் | 4,199,558 | 232,766 | 5.5 | 3,966,792 | 94.5 |
| வருமானம் பெறுபவர்கள் | 66,547 | 38,517 | 57.9 | 28,030 | 42.1 |
| ஓய்வூதியம் பெறுபவர்கள் | 346,084 | 213,089 | 61.6 | 132,995 | 38.4 |
| வேலை செய்ய முடியாத நபர்கள் | 914,934 | 399,610 | 43.7 | 515,324 | 56.3 |
| சமூக சேவையாளர்கள் | 32,909 | 20,796 | 63.2 | 12,113 | 36.8 |
| பாடசாலை செல்லாதவர்கள் | 32,869 | 20,649 | 62.8 | 12,220 | 37.2 |
| வேறு பொருளாதாரமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் | 346,397 | 178,218 | 51.4 | 168,179 | 48.6 |

# நபர்கள் வசிக்கும் வீடு தொடர்பான தகவல்கள்

## 12.0

## நபர்கள் வசிக்கும் வீடு தொடர்பான தகவல்கள்

1946 ஆம் ஆண்டு தொடக்கம் நடாத்தப்படும் தொகைமதிப்புக்களில் சனத்தொகையினைக் கணக்கெடுப்பதற்கு மேலதிகமாக நபர்கள் வசிக்கும் வீடுகளைக் கணக்கெடுப்பதும் மேற்கொள்ளப்பட்டது.தொகைமதிப்பின் நிரற்படுத்தும் கட்டத்தின் போது சகல கட்டிடக் கூறுகளும் (Building Units) வீட்டுக் கூறுகள் (Housing Units), கூட்டு வசிப்பிடங்கள் (Collective Living Quarters) மற்றும் வசிப்பிடமற்ற கட்டிடக் கூறுகள் (Non-housing Units) என வகைப்படுத்தப்பட்டு நிரற்படுத்தப்பட்டன. அதன்போது நபர்கள் வசிக்கும் கட்டிடக் கூறுகள் அடையாளம் காணப்பட்டதுடன் அந்த வீடுகளில் மட்டும் வீட்டு வசதிகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்ட ன. சகல வீடுகளிலும் காணப்படும் குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் முறை, சுகாதார வசதிகள், வீட்டிற்கு வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளும் மார்க்கம், உணவு சமைப்பதற்குப் பயன்படுதத்ப்படும் எரிபொருள், வீட்டின் உரிமை மற்றும் கழிவகற்றும் முறை போன்றவையும் வீடு அமைக்கப்பட்டுள்ள முறை மற்றும் அவற்றின் தன்மைகள் தொடர்பான தகவல்களும் இதன் கீழ் சேகரிக்கப்பட்டன.

இம்முறை தொகைமதிப்பிலே இந்நாட்டில் நபர்கள் வசிக்கும் மொத்தக் கட்டிடக் கூறுகளின் எண்ணிக்கை 5,267,159 காணப்படுவதாகப் பதிவாகியுள்ளதுடன் கம்பஹா மாவட்டத்தில் (607,662) நபர்கள் வசிக்கும் கட்டிடக் கூறுகளின் அதிக எண்ணிக்கையும் மன்னார் மாவட்டத்தில் (23,539) நபர்கள் வசிக்கும் கட்டிடக் கூறுகளின் குறைவான எண்ணிக்கையும் பதிவாகியுள்ளது. வீட்டுக் கூறுகளில் நூற்றுக்கு 95 அளவானவை வசிக்கும் நோக்கில் மட்டும் பயன்படுத்துவதாக தொகைமதிப்புப் பெறுபேறுகளுக்கமைய தெரிய வந்துள்ளது. எஞ்சிய நூற்றுக்கு 5 அளவான வீட்டுக் கூறுகளில் வசிப்பதற்கு மேலதிகமாக ஏதாவதொரு பொருளாதார நடவடிக்கை அதாவது வீட்டில் மேற்கொள்ளப்படும் உணவுப் பொதிகள் தயாரித்தல், சிறு வியாபார நடவடிக்கைகள், மணமகள் அலங்காரம், அலங்காரப் பூக்கள் தயாரித்தல்,கயிறு திரித்தல் மற்றும் ஆடைகள் தைத்தல் போன்ற பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தொகைமதிப்புத் தகவல்களுக்கு அமைய உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொகைமதிப்பிலே ஒரு நபர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்றாக வசித்து ஒன்றாக உணவுகளைத் தயாரித்துப் பகிர்ந்து வசிப்பார்களாயின் அது குடித்தனம் என வரைவிலக்கணப் படுத்தப்படும். அதற்கமைய வீட்டுக் கூறொன்றில் ஒரு குடித்தனம் அல்லது பல குடித்தனங்கள் காணப்படலாம். தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய பெரும்பாலான வீட்டுக் கூறுகள் தனிக் குடித்தனங்கள் எனப் பதிவாகியுள்ளன. அவற்றுள் ஒரு நபர் மட்டும் வசிக்கும் வீட்டுக் கூறுகள் 370,302 (7.1%) ஆகும்.

1981 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நபர்கள் வசிக்கும் கட்டிடக் கூறுகளின் எண்ணிக்கை பிரிவுக்கமைய அட்டவணை 12.1 இல் காட்டப்பட்டுள்ளது. சகல பிரிவுகளிலும் நபர்களின் வசிக்கும் கட்டிடக் கூறுகளில் எண்ணிக்கை ரீதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை தொகைமதிப்புத் தகவல்களுக்கமையப் பதிவாகியிருந்தாலும் நகரம் மற்றும் கிராமப் பிரதேசங்களுக்கு அமைவாக பெருந்தோட்டப் பிரிவில் நபர்கள் வசிக்கும் கட்டிடக் கூறுகளின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பு ஏற்படவில்லை.

31 வருட கால எல்லைக்குள் மொத்த சனத்தொகை 14,846,750 இலிருந்து 20,359,439 ஆடி அதிகரிக்கும் போது நபர்கள் வசிக்கும் வீடுகளின் எண்ணிக்கை 2,813,844 இலிருந்து 5,267,159 ஆக அதிகரித்துள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் ஒரு வீட்டில் வசிக்கும் சராசரி நபர்களின் எண்ணிக்கை 5.3 இலிருந்து 3.9 ஆகக் குறைவடைந்துள்ளது.

**அட்டவணை 12.1 : பிரிவு ரீதியாக நபர்கள் வசிக்கும் கட்டிடக் கூறுகளின் எண்ணிக்கை 1981 மற்றும் 2012**

| பிரிவு | 1981 | | 2012 | |
|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **%** | **எண்ணிக்கை** | **%** |
| இலங்கை | **2,813,844** | **100.0** | **5,267,159** | **100.0** |
| நகரம் | 511,810 | 18.2 | 908,078 | 17.2 |
| கிராமம் | 2,084,841 | 74.1 | 4,133,982 | 78.5 |
| பெருந்தோட்டம் | 217,193 | 7.7 | 225,099 | 4.3 |

**வீடு நிர்மாணிக்கப்பட்ட வருடம்**

வீட்டின் தன்மை தொடர்பாகப் பரீட்சிக்கும் போது வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ள வருடம் மிக முக்கியமான அளவு கோலாகும். தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய அண்மையில் அதாவது 2005 ஆம் ஆண்டின் பின்னர் நிர்மாணிக்கப்பட்டு வசிக்கும் வீடுகள் 1.6 மில்லியன்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 323,194 வீடுகள் 2011 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டு வசிக்கும் வீடுகளாகப் பதிவாகியுள்ளன.

**உரு 12.1 : நிர்மாணிக்கப்பட்டுள்ள வருடத்திற்கமைய வீடுகளின் எண்ணிக்கை 2005-2011**




2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாத சுனாமி அனர்த்தத்தினால் கரையோரப் பிரதேசங்களில் அதிக எண்ணிக்கையான வீடுகள் முழுமையாக அழிவடைந்தன. ஆகையால் 2005 ஆம் ஆண்டில்

நிர்மாணித்து வசிக்கும் வீடுகளின் எண்ணிக்கை 256,804 ஆகும். அதன் பின்னர் உரு 12.1 இல் காட்டப்பட்டுள்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளது.

**வீடுகளின் கட்டமைப்புத் தன்மை**

தொகைமதிப்பிலே வீடுகளின் கட்டமைப்பைத் தீர்மானிப்பதற்காக தனி வீடு, மாடி வீடு, இணைந்த வீடு, இரட்டை வீடு, வரிசை வீடு, குடிசை போன்ற பல்வேறு கட்டமைப்புக்களாக வீடு வகைப்படுத்தப்பட்டுள்ளது. வேறு கட்டிடங்களின் பகுதியல்லாத, அடுத்துள்ள வீட்டிலிருந்து வேறாக்கப்பட்டு அதற்கான சுவர் மற்றும் கூரையினைக் கொண்டுள்ள வீடு தனி வீடு என அழைக்கப்படுவதுடன் வீடுகளின் பெரும்பாண்மையானவை ஒரு மாடி வீட்டுக் (84.8%) கூறுகளாகும். இதற்கு மேலதிகமாக இருமாடித் தனி வீடுகள் நூற்றுக்கு 7.2 அளவிலும் வரிசையாக அறைகளைக் கொண்ட வீட்டுக் கூறுகள் நூற்றுக்கு 3.6 அளவிலும் பதிவாகியுள்ளன. வரிசையான அறைகளைக் கொண்ட வீட்டுக் கூறுகளின் அதிக வீதாசாரம் நுவரெலியா மாவட்டத்தில் (31.2%) பதிவாகியுள்ளதுடன் பதுளை மாவட்டத்தில் நூற்றுக்கு 11.5 வீததமும் பதிவாகியுள்ளன. 2012 ஆம் ஆண்டில் எமது நாட்டில் அதிகளவான தற்காலிக வீடுகள் மற்றும் குடிசைகள் முல்லைத்தீவு (44.5%) மற்றும் கிளிநொச்சி (24.4%) மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.

**வீடுகளின் உடமை அந்தஸ்து**

தொகைமதிப்பிலே வீட்டுடமை தொடர்பாகவும் தேடியறியப்பட்டது. அதற்கமைய நாட்டிலுள்ள வீடுகளில் நூற்றுக்கு 82.9 வீதமானவற்றின் உடமை வீட்டில் வசிக்கும் உரிமையாளர்களுக்குக் காணப்படுவதுடன் நூற்றுக்கு 6.3 அளவானவை வாடகை அடிப்படையில் வசிப்பதாகப் பதிவாகியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் நூற்றுக்கு 15.8 அளவானவை வாடகை அடிப்படையில் வீட்டுரிமையாளரிடமிருந்து வீட்டுடைமையைப் பெற்றிருப்பதை காணக்கூடியதாக இருப்பதுடன் கம்பஹா மாவட்த்தில் அது நூற்றுக்கு 13.2 ஆகும். இதற்கு மெலதிகமாக நூற்றுக்கு 1.3 அளவிலான வீடுகளில் அத்துமீறிய வசிப்பாளர்கள் காணப்படுவதும் இம்முறைத் தொகைமதிப்பில் வெளியாகியுள்ளது.

அன்றும் இன்றும் வீடுகளின் உரிமை அந்தஸ்து மாற்றமடைந்துள்ள முறையினை ஆய்வு செய்வதற்காக நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளில் வசிக்கும் உரிமையாளர்களுக்குச் சொந்தமான மற்றும் வாடகைக்கு வசிக்கும் வீடுகளின் வீதாசாரம் அட்டவணை 12.2 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய சகல பிரிவுகளிலும் வசிக்கும் உரிமையாளர்களுக்குச் சொந்தமான வீடகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் பெருந்தோட்டத்தினுள் வசிக்கும் உரிமையாளர்களுக்குச் சொந்தமான வீடுகளின் வீதாசாரத்தில் நூற்றுக்கு 1.3 இலிருந்து 22.2 வரை வெட்டிக் காட்டும் அதிகரிப்பைக் காணக் கூடியதாகவுள்ளது.

வாடகைக்கு வசிக்கும் வீடுகள் தொடர்பில் கவனத்தில் கொண்டால் பெருந்தோட்டம் தவிர ஏனைய பிரிவுகளில் வாடகைக்கு வசிக்கும் வீடுகளின் வீதாசாரம் குறைவடைந்துள்ளது. பெருந்தோட்டத்தில் வாடகைக்கு வசக்கும் வீடுகளின் வீதாசாரம் நூற்றுக்கு 1.3 இலிருந்து நூற்றுக்கு 5.3 வரை அதிகளித்துள்ளது.

**அட்டவணை 12.2 : வீட்டில் வசிக்கும் உரிமையாளருக்கு சொந்தமான மற்றும் வாடகைக்கு வசிக்கும் வீடுகளின் வீதாசாரம் வசிக்கும் பிரிவுக்கமைய 1981 மற்றும் 2012**

| பிரிவு | வீட்டில் வசிக்கும் உரிமையாளருக்குச் சொந்தமான | | வாடகைக்கு வசிக்கும் | |
|---|---|---|---|---|
| | **1981** | **2012** | **1981** | **2012** |
| **இலங்கை** | **69.5** | **82.9** | **10.2** | **6.3** |
| நகரம் | 58.0 | 75.0 | 29.1 | 14.8 |
| கிராமம் | 79.5 | 88.0 | 6.5 | 4.5 |
| பெருந்தோட்டம் | 1.3 | 22.2 | 1.3 | 5.3 |

**வீடுகளின்தன்மை**

2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கமைய நபர்கள் வசிக்கும் 5,207,740 வீட்டுக் கூறுகளில் நூற்றுக்கு 81.4 வீட்டுக் கூறுகள் நிலையான பொருட்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டிருக்கும் வீட்டுக் கூறுகளாகக் காணப்படுவதுடன் நூற்றுக்கு 17.8 பகுதி நிரந்தரப் பொருட்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியதைவ தற்காலிகப் பொருட்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டுளள்ன. பகுதி நிரந்தரப் பொருட்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டிருக்கும் வீடுகளில் அதிக எண்ணிக்கையானவை நுவரெலியா மாவட்டத்தில் (11.7%) காணப்படுவதுடன் தற்காலிகப் பொருட்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டிருக்கும் வீடுகளில் அதிக எண்ணிக்கையானவை காணப்படுவது மட்டக்களப்பு (16.8%) மாவட்டத்திலாகும். மேலும் முல்லைத்தீவு, நுவரெலியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வீட்டுக் கூறுகளில் அரைவாசியிலும் அதிகமானவை கட்டப்பட்டிருப்பது பகுதி நிரந்தரப் பொருட்கள் மற்றும் தற்காலிகப் பொருட்களைப் பயன்படுத்தியாகும்.

**அட்டவணை 12.3 : வீடு கட்டப்பட்டிருக்கும் பொருட்களுக்குமைய வீட்டுக் கூறுகளின் எண்ணிக்கை 1981 மற்றும் 2012**

| வீட அமைக்கப்பட்டுள்ள பொருட்கள் | 1981 | | 2012 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| **இலங்கை** | **2,813,839** | **100.0** | **5,207,740** | **100.0** |
| நிரந்தரப் பொருட்கள் | 1,178,575 | 41.9 | 4,238,491 | 81.4 |
| பகுதி நிரந்தரப் பொருட்கள் | 1,453,316 | 51.6 | 927,408 | 17.8 |
| தற்காலிகப் பொருட்கள் | 181,948 | 6.5 | 41,841 | 0.8 |

குறிப்பு:

**நிரந்தரப் பொருட்கள் :** சுவரை கட்டுவதற்காக செங்கல்/கல் சீமெந்துக்கல்/ கபோக்கல் போன்றவையும் கூரை அமைப்பதற்காக ஒடு/ அஸ்பெஸ்டோஸ் கூரைத் தகடு/ கொங்ரீட் போன்றவையும் தரைக்கு சீமெந்து / டெராசோ/ தரையோடு/ கிரனைட் மரம் போன்ற நெடுவாழ்வுடைய நிரந்தரப் பொருட்கள் பயன்படுத்தப்பட்ட வீடுகள்.

**பகுதி நிரந்தரப் பொருட்கள் :** சுவரை அமைப்பதற்காக களிமண்ணும் கூரை மற்றும் தரையை அமைப்பதற்காக ஏதாவது பொருட்கள் பயன்படுத்தப்பட்ட வீடுகள்

**தற்காலிகப் பொருட்கள் :** சுவர் மற்றும் கூரை அமைப்பதற்காக பனையோலை/ வைக்கோல்/உலோகத் தகடுகள் போன்றவற்றையும் தரையை அமைப்பதற்கு களிமண் அல்லது மண் பயன்படுத்தப்பட்ட வீடுகள்.

## வீட்டுக் கூறுகளின் சுவர், கூரை மற்றும் தரையை அமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள்

வீட்டுக் கூறுகளின் சுவர், கூரை மற்றும் தரையினை அமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாகவும் தொகைமதிப்பிலே தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. வீடுகளின் சுவர்களை அமைப்பதற்காக செங்கல் சீமெந்து அல்லது களி பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தொகைமதிப்புத் தரவுகளுக்கமைய வீட்டுக் கூறுகளில் அரைவாசிக்கு மேல் (53.1%) சுவரைக் கட்டுவதற்காக செங்கல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கிளிநொச்சி (0.8%) மன்னார் (2.3%) மற்றும் யாழ்ப்பாணம் (2.1%) ஆகிய மாவட்டங்களில் செங்கல் பயன்பாடு மிகக் குறைந்த பெறுமதியை எடுத்துள்ளது. சுவரை அமைப்பதற்கான சீமெந்துக்கல் பயன்பாடு நூற்றுக்கு 33.8 ஆகும். வீட்டுக் கூறுகளில் நூற்றுக்கு 5 அளவானவை சுவரை அமைப்பதற்காக களிமணணைப் பயன்படுத்தியுள்ளது.

வீடுகளில் தரையை அமைப்பதற்காக அதிகளவில் சீமெந்து (72.5%) பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதிக விலையுடைய டெராசோ தரையோடு அல்லது கிரனைட் பயன்பாடு நூற்றுக்கு 12.2 ஆகும். ஆனால் வீட்டுக் கூறுகளில் நூற்றுக்கு 7.5 அளவானவை இன்னும் களிமண்ணைப் பயன்படுத்தி தரை அமைக்கப்பட்டுள்ளது.

கூரை அமைப்பதற்காக ஓடுகளைப் பயன்படுத்தல் இந்நாட்டின் அயன வலயக் காலநிலைத் தன்மைக்கு மிகவும் பொருத்தமானதாகும். கூரை அமைப்பதற்காக ஓடுகளைப் பயன்படுத்தியுள்ள வீடுகள் நூற்றுக்கு 47.6 காணப்படுவதுடன் அஸ்பெஸ்டோஸ் பயன்பாடு நூற்றுக்கு 34.6 அளவானவையாகும். கொழும்பு மாவட்டத்தில் மட்டும் அஸ்பெஸ்டோஸ் பயன்பாடு நூற்றுக்கு 64.6 என்ற உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. மேலும் கொழும்பு மாவட்டத்தில் நூற்றுக்கு 14.0 கொங்ரீட் இனைப் பயன்படுத்தி கூரை அமைக்கப்பட்டுள்ளதென தொகைமதிப்பில் வெளியாகியுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் வசிக்கும் வீடுகளில் நூற்றுக்கு 53.5 கூரை அமைப்பதற்கு உலோகத் தகடுகளைப் பயன்படுத்தியுள்ளன. வட மாகாணத்தில் யாழ்ப்பாணம்

தவிர ஏனைய மாவட்டங்களிலும் உலோகத் தகடுகளைப் பயன்படுத்தல் ஓரளவு உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. இதற்கு மேலதிகமாக வட மாகாணத்தில் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் கிடுகு வைக்கோல் மற்றும் பனையோலை போன்றன கூரை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வீடுகளின் சுகாதார வசதிகள்**

வீடுகளின் சுகாதார வசதிகள் (sanitary) தொடர்பாகவும் தொகைமதிப்பிலே தகவல் சேகரிக்கப்பட்டது. இதன்போது குடிநீரைப் பெற்றுக் கொள்ளல் உயவு சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளும் மார்க்கம் மலசல கூட வசதிகள் திண்மக் கழிவுகளை அகற்றல் போன்றன தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

**பிரதான குடிநீர் மூலம்**

இம்முறைத் தொகைமதிப்புக்கமைய பாதுகாப்பான குடிநீர் (safe drinking water) பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வீடுகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 80.9 எனப் பதிவாகியுள்ளது. வீட்டுக் கூறின் சூழலுக்குள் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பான கிணறு (31.4%) மற்றும் வீட்டினுள் குழாய் நீர் (21.1%) வசிப்பவர்களின் பிரதான குடிநீர் மூலமாகும்.

**உரு 12.2 : குடிநீர் மூலங்களுக்கு அமைய குடித்தனங்களின் வீதாசாரப் பரம்பல் 2012**



1981 மற்றும் 2012 தொகைமதிப்புத் தரவுகளை ஒப்பிடும் போது வீட்டினுள் குழாய் நீர் பயன்பாடு நகரம் கிராமம் மற்றும் பெருந்தோட்டம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது (அட்டவணை 12.4). வீட்டினுள் குழாய் நீர் காணப்படுவதால் நீரைக் எடுத்து வருவதற்கு எடுக்கும் காலம் குறைவாகவுள்ளது. அவ்வாறே குழாய் நீரை பயன்படுத்துவோரில் நூற்றுக்கு 89.1 வீட்டினுள் அமைக்கப்பட்டுள்ள நீர்க் குழாயைப் பயன்படுத்துவதுடன் அது 1981 தொகைமதிப்பிலே நூற்றுக்கு 46.6 ஆகப் பதிவாகியுள்ளது. மேலும் குழாய் நீரைப் பயன்படுத்துவோரில் வீட்டினுள் அமையப் பெற்றுள்ள நீர்க் குழாய் பயன்பாட்டின் அதிகளவு வீதாசாரம் மாத்தறை கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பதிவாகியுள்ளது.

2012 தொகைமதிப்புக்கமைய வீட்டிற்கு வெளியே அமையப் பெற்றுள்ள பொது நீர்க் குழாயைப் பயன்படுத்துவோரின் விதாசாரம் நூற்றுக்கு 10.9 ஆகும். அது 1981 தொகைமதிப்புக்கு அமைவாக நூற்றுக்கு 42.5 வீழ்ச்சியைக் காட்டுகின்றது. வீட்டிற்கு வெளியே அமையப் பெற்றுள்ள பொது நீர்க் குழாய் பயன்பாட்டின் உயர்ந்த பெறுமதி வட மாகாணத்தில் பதிவாகியுள்ளது. அவற்றுள் யாழ்ப்பாணம் மாவட்டம் (72.6%) விசேடமானதாகும்.

## அட்டவணை 12.4 : குழாய் நீரைப் பயன்படுத்தும் வீடுகளின் வீதாசாரம் வசிக்கும் பிரிவுகள் மற்றும் மாவட்டங்களுக்கு அமைவாக 1981 மற்றும் 2012

| பிரிவு/ மாவட்டம் | 1981 | | 2012 | |
|---|---|---|---|---|
| | வீட்டினுள் நீர்க் குழாய் | வீட்டிற்கு வெளியே நீர்க் குழாய் | வீட்டினுள் நீர்க் குழாய் | வீட்டிற்கு வெளியே நீர்க் குழாய் |
| **இலங்கை** | **46.6** | **53.4** | **89.1** | **10.9** |
| நகரம் | 52.9 | 47.1 | 92.1 | 7.9 |
| கிராமம் | 35.4 | 64.6 | 87.9 | 12.1 |
| பெருந்தோட்டம் | 43.9 | 56.1 | 69.7 | 30.3 |
| கொழும்பு | 61.1 | 38.9 | 93.6 | 6.4 |
| கம்பஹா | 52.9 | 47.1 | 89.9 | 10.1 |
| களுத்துறை | 56.3 | 43.7 | 92.8 | 7.2 |
| கண்டி | 49.5 | 50.5 | 91.7 | 8.3 |
| மாத்தளை | 43.7 | 56.3 | 88.9 | 11.1 |
| நுவரெலியா | 28.3 | 71.7 | 78.0 | 22.0 |
| காலி | 41.8 | 58.2 | 90.3 | 9.7 |
| மாத்தறை | 54.5 | 45.5 | 94.3 | 5.7 |
| அம்பந்தோட்டை | 21.5 | 78.5 | 91.2 | 8.8 |
| யாழ்ப்பாணம் | 29.9 | 70.1 | 27.4 | 72.6 |
| மன்னார் | 11.4 | 88.6 | 79.4 | 20.6 |
| வவுனியா | 43.7 | 56.3 | 57.4 | 42.6 |
| முல்லைத்தீவு | 20.7 | 79.3 | 53.2 | 46.8 |
| கிளிநொச்சி | * | * | 73.5 | 26.5 |
| மட்டக்களப்பு | 25.5 | 74.5 | 91.7 | 8.3 |
| அம்பாறை | 55.5 | 44.5 | 91.5 | 8.5 |
| திருகோணமலை | 34.2 | 65.8 | 88.0 | 12.0 |
| குருணாகலை | 45.6 | 54.4 | 82.5 | 17.5 |
| புத்தளம் | 46.9 | 53.1 | 84.7 | 15.3 |
| அநுராதபுரம் | 42.0 | 58.0 | 86.3 | 13.7 |
| பொலன்னறுவை | 43.0 | 57.0 | 87.4 | 12.6 |
| பதுளை | 35.0 | 65.0 | 85.0 | 15.0 |
| மொனராகலை | 54.8 | 45.2 | 87.1 | 12.9 |
| இரத்தினபுரி | 47.5 | 52.5 | 80.7 | 19.3 |
| கேகாலை | 60.8 | 39.2 | 83.7 | 16.3 |

*1981 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டம் பிரித்து வேறுபடுத்தப்பட்டிருக்கவில்லை

## உணவு சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் பிரதான எரிபொருள்

உணவு சமைப்பதற்கான பிரதான ஊடகமாக நூற்றுக்கு 78.4 வீதமான குடித்தனங்களில் விறகு பயன்படுத்தப்படுவதுடன் நூற்றுக்கு 18.5 இல் எரிவாயு பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து கொழும்பு மாவட்டத்தில் (60.5மு) எரிவாயுவை பயன்படுத்தி உணவு சமைத்தல் உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதைத் தொகைமதிப்புத் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன.

**அட்டவணை 12.5 : விறகு மற்றும் எரிவாயுவைப் பயன்படுத்தும் வீடுகளின் வீதாசாரம் வசிக்கும் பிரிவு மற்றும் மாவட்டத்திற்கமைய 1981 மற்றும் 2012**

| பிரிவு/ மாவட்டம் | விறகுப் பயன்பாடு | | சமையல் எரிவாயுப் பயன்பாடு | |
|---|---|---|---|---|
| | 1981 | 2012 | 1981 | 2012 |
| **இலங்கை** | **94.1** | **78.4** | **0.4** | **18.5** |
| நகரம் | 85.4 | 35.8 | 2.2 | 53.7 |
| கிராமம் | 96.6 | 86.8 | 0.0 | 11.6 |
| பெருந்தோட்டம் | 90.0 | 95.0 | 0.1 | 3.7 |
| கொழும்பு | 82.3 | 28.8 | 3.6 | 60.5 |
| கம்பஹா | 96.3 | 62.5 | 0.3 | 31.0 |
| களுத்துறை | 97.7 | 77.1 | 0.1 | 21.2 |
| கண்டி | 96.7 | 80.8 | 0.2 | 17.8 |
| மாத்தளை | 98.1 | 90.9 | 0.1 | 8.4 |
| நுவரெலியா | 96.4 | 86.5 | 0.1 | 11.2 |
| காலி | 97.7 | 83.6 | 0.1 | 15.4 |
| மாத்தறை | 98.1 | 86.7 | 0.1 | 12.6 |
| அம்பந்தோட்டை | 98.6 | 93.0 | 0.0 | 6.5 |
| யாழ்ப்பாணம் | 96.5 | 90.7 | 0.2 | 5.2 |
| மன்னார் | 98.4 | 88.5 | 0.0 | 8.5 |
| வவுனியா | 96.6 | 83.0 | 0.0 | 12.7 |
| முல்லைத்தீவு | 97.8 | 97.5 | 0.0 | 0.6 |
| கிளிநொச்சி | * | 96.8 | * | 0.7 |
| மட்டக்களப்பு | 97.6 | 74.6 | 0.1 | 20.3 |
| அம்பாறை | 97.2 | 77.4 | 0.1 | 16.5 |
| திருகோணமலை | 96.5 | 82.4 | 0.1 | 13.8 |
| குருணாகலை | 98.2 | 94.4 | 0.0 | 5.2 |
| புத்தளம் | 97.7 | 87.4 | 0.0 | 10.6 |
| அநுராதபுரம் | 98.0 | 91.9 | 0.0 | 7.6 |
| பொலன்னறுவை | 97.8 | 93.7 | 0.1 | 5.7 |
| பதுளை | 97.3 | 91.5 | 0.1 | 7.7 |
| மொனராகலை | 98.6 | 96.2 | 0.0 | 3.2 |
| இரத்தினபுரி | 98.1 | 92.7 | 0.1 | 6.7 |
| கேகாலை | 98.3 | 92.7 | 0.0 | 6.8 |

*1981 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டம் பிரித்து வேறுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

1981 மற்றும் 2012 தொகைமதிப்புத் தகவல்களை ஒப்பீடு செய்யும் போது சகல மாவட்டங்களிலும் விறகுப் பயன்பாடு படிப்படியாகக் குறைவடைந்துள்ளதுடன் எரிவாயு பயன்பாடு அதிகரித்துள்ளதையும் காணக் கூடியதாகவுள்ளது. ஆனால் மாத்தளை அம்பாந்தோட்டை யாழ்ப்பாணம் முல்லைத்தீவு கிளிநொச்சி குருணாகல் அநுராதபுரம் பொலன்னறுவை பதுளை மொணராகலை இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் விறகினைப் பயன்படுத்தும் வீடுகளின் எண்ணிக்கை ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து உயர்ந்த பெறுமதியை எடுத்துள்ளது. (90% இனைத் தாண்டியுள்ளது). கொழும்பு மாவட்டத்தில் விறகினைப் பயன்படுத்தல் 1981 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 82.3 ஆகக் காணப்பட்டாலும் 2012 ஆகும் போது அது நூற்றுக்கு 28.8 வரை குறைவடைந்துள்ளது. அதற்குச் சமாந்திரமாக கொழும்பு மாவட்டத்தில் எரிவாயுப் பயன்படுத்தல் நூற்றுக்கு 3.6 இலிருந்து நூற்றுக்கு 60.5 வரை கணிசமான மட்டத்திற்கு அதிகரித்துள்ளது.

**வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளும் மார்க்கம்**

வீட்டினை வெளிச்சப்படுத்துவதற்காக நிகழ்காலச் சமூகத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவது மின்சாரமாகும். இதுவரை தேசிய மின்சார கட்டமைப்பின் மூலம் நூற்றுக்கு 87 அளவான வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. தரவுகளுக்கமைய நகரப் பிரதேசத்தினுள் நூற்றுக்கு 96.8 இற்கு தேசிய மின்சாரக் கட்டமைப்பின் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் கிராமிய மற்றும் பெருந்தோட்டபிரிவுகளுக்கு மறையே 85.2 மற்றும் நூற்றுக்கு 79.9 அளவில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகப் பதிவாகியுள்ளது. 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆகும்போது வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்தும் வீதாசாரம் சகல பிரிவுகளிலும் விரைவாக அதிகரித்துள்ளதுடன் 2012 ஆகும்போது பிரிவுகளுக்கிடையில் காணப்படும் விதாசார வித்தியாசம் கணிசமான அளவினால் குறைவடைந்துள்ளது.

**உரு 12.3 : வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மின்சாரம் மற்றும் மண்ணெண்ணெய் பயன்பாடு 2981 மற்றும் 2012**



இம்முறை கடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்புக்கு அமைய வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதற்கான மண்ணெண்ணெய் பயன்பாடு நூற்றுக்கு 12.2 ஆகும். வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மண்ணெண்ணெய் பயன்படுத்துவோரின் வீதாசாரம்1981 ஆம் ஆண்டிற்கு அமைவாக 2012 ஆண்டில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது. 1981 இல் நகரப் பிரிவில் அரைவாசி (51.8%) அளவு மண்ணெண்ணெய் பயன்படுத்தியுள்ளதுடன் அந்த வீதாசாரம் கிராமம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளில் முறையே நூற்றுக்கு 89.6 மற்றும் நூற்றுக்கு 86.5 ஆகும். 2012 தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய நகரப் பிரிவில் மண்ணெண்ணெய் பயன்படுத்தல் நூற்றுக்கு 3.1 வரை வீழ்ச்சியடைந்துள்ளது. ஏனைய இரு பிரிவுகளிலும் தெளிவான வீழ்ச்சியைக் காணக் கூடியதாகவுள்ளது.

**அட்டவணை 12.6 : வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மின்சாரம் மற்றும் மண்ணெண்ணெய் பயன்படுத்தும் வீடுகளின் வீதாசாரம் வசிக்கும் பிரிவு மற்றும் மாவட்டங்களுக்கமைவாக 1981 மற்றும் 2012**

| பிரிவு/ மாவட்டம் | மின்சாரம் | | மண்ணெண்ணெய் | |
|---|---|---|---|---|
| | 1981 | 2012** | 1981 | 2012 |
| **இலங்கை** | **14.9** | **87.0** | **82.5** | **12.2** |
| நகரம் | 45.9 | 96.8 | 51.8 | 3.1 |
| கிராமம் | 8.3 | 85.2 | 89.6 | 13.8 |
| பெருந்தோட்டம் | 5.6 | 79.9 | 86.5 | 19.2 |
| கொழும்பு | 45.4 | 97.7 | 54.4 | 2.2 |
| கம்பஹா | 21.8 | 96.3 | 78.1 | 3.6 |
| களுத்துறை | 18.0 | 93.4 | 81.8 | 6.2 |
| கண்டி | 19.3 | 92.6 | 80.6 | 7.2 |
| மாத்தளை | 7.1 | 84.4 | 92.7 | 14.8 |
| நுவரெலியா | 10.1 | 88.0 | 89.7 | 11.8 |
| காலி | 12.3 | 93.7 | 87.5 | 6.2 |
| மாத்தறை | 10.2 | 93.6 | 89.7 | 6.2 |
| அம்பந்தோட்டை | 5.3 | 88.3 | 94.4 | 11.3 |
| யாழ்ப்பாணம் | 25.6 | 72.4 | 74.3 | 27.3 |
| மன்னார் | 3.9 | 58.3 | 94.8 | 39.8 |
| வவுனியா | 5.7 | 69.7 | 93.4 | 28.8 |
| முல்லைத்தீவு | 2.1 | 20.5 | 97.1 | 72.8 |
| கிளிநொச்சி | * | 9.8 | * | 78.9 |
| மட்டக்களப்பு | 11.6 | 67.2 | 88.2 | 32.4 |
| அம்பாறை | 13.4 | 81.3 | 86.2 | 17.9 |
| திருகோணமலை | 11.7 | 76.2 | 87.8 | 23.4 |
| குருணாகலை | 4.6 | 85.1 | 95.2 | 13.4 |
| புத்தளம் | 10.8 | 83.7 | 89.0 | 15.0 |
| அநுராதபுரம் | 6.4 | 82.8 | 93.5 | 16.0 |
| பொலன்னறுவை | 4.7 | 82.4 | 95.0 | 16.7 |
| பதுளை | 10.8 | 85.9 | 89.0 | 13.4 |
| மொனராகலை | 3.5 | 69.4 | 96.2 | 27.4 |
| இரத்தினபுரி | 6.0 | 82.8 | 93.7 | 15.7 |
| கேகாலை | 5.6 | 88.2 | 94.3 | 11.4 |

*1981 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டம் பிரித்து வேறுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**தேசிய மின்சாரக் கட்டமைப்பு மற்றும் கிராமிய சிறு நீர்மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தைப் பயனிபடுத்திய வீதாசாரம்

தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய நூற்றுக்கு 0.6 ளைவானோர் சூரிய சக்தியைப் பயன்படுத்துவது தெரிய வந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் நூற்றுக்கு 11.1வீதமானோர் வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பிரதான மூலம் சூரிய சக்தியாகும்.

**சுகாதார வசதிகள்**

சுகாதார வசிதிகள் தொடர்பாகத் தேடியறியம் போது “நீரடைப்பு மலசல கூடங்கள்” (water seal toilet) இன் பயன்பாடு விரைவாக உயர்வடைந்துள்ளமை தெரிய வந்துள்ளத. 1981 தொடக்கம் 2012 வரையாக காலப் பகுதிக்குள் நூற்றுக்கு 22.1 இலிருந்து நூற்றுக்கு 93.6 வரை “நீரடைப்பு மலசல கூடத்தின்” பயன்பாடு உயர்வடைந்துள்ளது. தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய நூற்றுக்கு 86.7 தனிப் பாவனைக்குரிய மலசல கூடங்களாகவும் நூற்றுக்கு 10.9 அளவானவை ஏனைய குடித்தனங்களுடன் சேர்ந்து பயன்படுத்தும் மல4ல கூடங்களாகவும் நூற்றுக்கு 0.7 பொதுப் பயன்பாட்டிற்கான மசல கூடங்களையும் பயன்படுத்தியுள்ளன.

**உரு 12.4 : மாவட்ட அடிப்படையில் தனிப் பாவணைக்கான மலசல கூடங்களைப் பயன்படுத்தல், 2012**




1981 தொகைமதிப்பிலே எந்தவொரு வகையிலுமான மலசல கூடங்களைப் பயன்படுத்தாத குடித்தனங்கள் நூற்றுக்கு 33.5 பதிவாகியிருந்ததுடன் 2012 தொகைமதிப்பிலே பதிவாகியுள்ளது நூற்றுக்கு 1.7 வீதம் மட்டுமேயாகும். எனினும் எண்ணிக்கை அடிப்படையில் 88,280 குடித்தனங்கள் எந்த வொரு முறையிலுமான மலசல கூட வகையினைப் பயன்படுத்துவதில்லை என்பது தெரிய வந்துள்ளது. அவற்றுள் நூற்றுக்கு 68 வீதம் வடக்கு கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் பதிவாகியுள்ளன.

மாவட்ட மட்டத்தில் பரிசீலனை செய்யம் போது கிளிநொச்சி (21.9%) மற்றும் முல்லைத்தீவு (20.6%) மாவட்டங்களில் ஐந்து வீட்டுக் கூறுகளில் ஒன்றிற்கு மலசல கூட வசதிகள் இல்லை என்பதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நூற்றுக்கு 12.5 இற்கு மலசல கூட வசதிகள் இல்லை என்பதும் பதிவாகியுள்ளது.

### திண்மக் கழிவுகளை அகற்றல்

திண்மக் கழிவகளை அகற்றும் முறைமை தொடர்பில் தேடியறிந்த போது பெரும்பாண்மையான குடித்தனங்கள் கழிவுகளை எரிப்பது (47.2%) தெரியவந்துள்ளது. வசிக்கும் பிரிவு ரீதியாகக் கவனத்தில் கொண்டால் கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பிரிவுகளிலுள்ள குடித்தனங்களில் திண்மக் கழிவுகளை எரித்தல் முறையேநூற்றுக்கு 53.9 மற்றும் 50.2 ஆகும். குடித்தனத்தின் வளவுக்குள் கழிவுகளைப் புதைத்தல் நூற்றுக்கு 23.3 ஆகக் காணப்படுவதுடன் உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவுகளை அகற்றல் நூற்றுக்கு 20.5 அளவாகும். இதற்கு மேலதிகமாகக் கொம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்காகக் கழிவுகளைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ள குடித்தனங்கள் நூற்றுக்கு 7.7 பதிவாகியுள்ளதுடன் அந்த வீதாசாரம் நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவில் முறையே நூற்றுக்கு 2.7, 8.8, மற்றும் 7.6 ஆகும்.

கழிவுகளை முறையறற் விதத்தில் பெருந்தெருக்களில், ஆறுகளில், கால்வாய்களில் மற்றும் காடுகளில் வீசியெறிதல் அதிகளவில் இடம்பெறுவது பெருந்தோட்டப் பிரிவில் (12.8%) இடம்பெறுவதுடன் தொகைமதிப்புத் தகவல்களுக்கமைய நுவரெலியா மாவட்டத்தில் நூற்றுக்கு 11.7 வீதமாக குடித்தனங்கள் திண்மக் கழிவுகளை முறையற்ற விதத்தில் பெருந்தெருக்களில், ஆறுகளில், கால்வாய்களில் மற்றும் காடுகளில் கொட்டுகின்றமை பதிவாகியுள்ளது.

**அட்டவணை 12.7 : வசிக்கும் பிரிவிற்கமைய திண்மக் கழிவுகளை அகற்றும் வீதாசாரம், 2012**

| பிரிவு | திண்மக் கழிவுகளை அகற்றும் பிரதான மார்க்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உளளூராட்சி நிறுவனங்களினால் சேகரித்தல் | குடியிருப்பாளரினால் எரித்தல் | குடியிருப்பாளரினால் வளவிற்குள் புதைத்தல் | குடியிருப்பாளரினால் கூட்டுப்பசளை தயாரிக்கப் பயன்படுத்தல் | குடியிருப்பாளரால் வீதியில்/ஆற்றில்/ அருவியில் / கடலில்/ களப்பில்/ காட்டில் வீசுதல் | ஏனையவை |
| **இலங்கை** | **20.5** | **47.2** | **23.3** | **7.7** | **0.9** | **0.3** |
| நகரம் | 75.1 | 16.0 | 5.6 | 2.7 | 0.4 | 0.3 |
| கிராமம் | 9.4 | 53.9 | 27.3 | 8.8 | 0.3 | 0.2 |
| பெருந்தோட்டம் | 3.2 | 50.2 | 22.5 | 7.6 | 12.8 | 3.7 |

### இலத்திரனியல் உபகரணப் பயன்பாடு

குடித்தனங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறுஇலத்திரனியல் உபகரணங்கள் தொடர்பில் தேடியறிந்த போது தொலைக்காட்சி, வானொலி, செல்லிடப் பேசி, நிலையான தொலைபேசி, மேசைக் கணனி மடிக் கணனி பயன்பாடு முறையெ 78.3, 68.9, 78.9, 42.4, 15.0 மற்றும் 5.6 ஆகும். வசிக்கும் பிரிவிற்கமைய இரத்திரனியல் உபகரணப் பயன்பாட்டைக் கவனத்தில் கொண்டால் எப்போதும் நகரப் பிரவு முன்னிலை வகிக்கின்றது. கணனிப் பயன்பாட்டினைக்

கவனத்தில் கொண்டால் பிரிவுகளுக்கிடையில் மிகவும் தெளிவான வேறுபாட்டினைக் காணமுடியும். மேலும் நாட்டில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து கொழும்பு மாவட்டத்தினுள் தொடர்பாடல் உபகரணங்களைப் பயன்படுத்தும் ஆற்றல் மிக உயர்ந்த பெறுமதியைப் பெற்றுள்ளது.

**உரு 12.5 : வசிக்கும் பிரிவிற்கமைய இலத்திரனியல் உபகரணப் பயன்பாடு, 2012**




இம்முறை தொகைமதிப்பில் முதன் முறையாக இணையத் தளத்தில் பிரவேசிக்கும் ஆற்றல் காணப்படும் குடித்தனங்களின் எண்ணிக்கை தொடர்பாகத் தேடியறிந்ததுடன் மொத்தக் குடித்தனங்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 10.9 இற்கு இணையத்தளத்தினுள் பிரவேசிக்கும் ஆற்றல் காணப்படுகின்றது. வசிக்கும் பிரிவிற்கமையக் கவனத்தில் கொண்டால் நகரப் பிரிவுக் குடித்தனங்களில் நூற்றுக்கு 23.4 இற்கும் கிராமியப் பிரிவுக் குடித்தனங்களில் நூற்றுக்கு 8.6 இற்கும் மற்றும் பெருந்தோட்டப் பிரிவுக் குடித்தனங்களில் நூற்றுக்கு 4.1 இற்கும் இணையத் தளத்தினுள் பிரவேசிக்கும் ஆற்றல் காணப்படுகின்றது. வீட்டிலிருந்து இணையத் தளத்திற்குள்

பிரவேசிக்கும் ஆற்றலுள்ள குடித்தனங்களின் வீதாசாரம் மற்றும் வேறு இடங்களிலிருந்து இணையத் தளத்தினுள் பிரவேசிக்கும் குடித்தனங்களின் வீதாசாரம் உருக்கள் 12.6 மற்றும் 12.7 இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி ஈகிய மாவட்டங்களில் வீட்டிலிருந்தவாறே இணையத் தளத்தினுள் பிரவேசிக்கும் ஆற்றலுள்ள குடித்தனங்கள் அதிகளவில் அமைந்துள்ளன. பல்வேறு நிறுவனங்கள், தொலைத் தொடர்பு நிலையங்கள், அறிவகம் மற்றும் வேறு இடங்களிலிருந்து இணையத் தள வசதிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஆற்றலுள்ள அதிக எண்ணிக்கையான குடித்தனங்கள் வட மாகாணத்திற்குரிய மாவட்டங்களில் காணப்படுகின்றன.

**உரு 12.6 : வீட்டிலிருந்து இணையத் தளத்திற்குள் பிரவேசிக்கும் ஆற்றல் மாவட்ட ரீதியாக, 2012**



**உரு 12.7 : வேறு இடங்களிலிருந்து இணையத் தளத்திற்குள் பிரவேசிக்கும் ஆற்றல் மாவட்ட ரீதியாக, 2012**



# பின்னிணைப்பு

## எண்ணக்கருக்க்ள் மற்றும் வரைவிலக்கணங்கள்

**1. பிரிவு**

நகரப் பிரிவு – மாநகர சபை மற்றும் நகர சபை மூலம் நிருவகிக்கப்படும் சகல பிரதேசங்களும் நகரப் பிரிவினுள் அடங்கும்.

பெருந்தோட்ப் பிரிவு – 20 ஏக்கர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்ச்செய்கையுடன் கூடிய சகல இடங்களும் பெருந்தோட்டப் பிரிவினுள் அடங்கும்.

கிராமப் பிரிவு – நகரம் மற்றும் பெருந்தோட்டப் பிரிவில் அடங்காத ஏனைய சகல பிரதேசங்களும் கிராமியப் பிரிவினுள் அடங்கும்.

**2. வழமையான வசிப்பிடம்**

வழமையான வசிப்பிடம் எனக் கருதப்படுவது தொகைமதிப்பினை மேற்கொள்ளும் சந்தர்பப்த்தில் நபரொருவர் தொடர்ச்சியாக 6 மாதத்திற்கு மேற்பட்ட காலம் வசிப்பதற்கு எதிர்பார்க்கும் இடமாகும்.

உதாரணம் - வழமையான வசிப்பிடத்தினுள் உள்ளடங்குவது நபரொருவர் வசிக்கும், நித்திரை செய்யம், அவருடைய ஆணை அணிகள் மற்றும் ஏனைய பொருட்களை வைத்திருக்கும் வீட்டுக்கூறு அல்லது கூட்டு வசிப்பிடமாகும். நபரொருவராயின் வழமையாக வேலைக்குச் செல்வது அல்லது மாணவராயின் பாடசாலை செல்வது இந்த வசிக்கும் இடத்திலிருந்தாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வழமையான வசிப்பிடம் நிரந்தர வசிப்பிடமாகக் காணப்பட்டாலும் நபரொருவரின் வழமையான வசிப்பிடம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிரந்தர வசிப்பிடமாக அமைய வேண்டியது கட்டாயமானதல்ல.

**3. குடித்தனம் மற்றும் குடித்தனத் தலைவர்**

குடித்தனமொன்று தனிநபர் குடித்தனம் அல்லது பலநபர் குடித்தனமாகக் காணப்படலாம். தனிநபர் குடித்தனமென்பது தனியாக வசித்து வேறு நபர்களுடன் சேராமல் தமது உணவு மற்றும் பானங்களை தமாகவே தயாரித்துக் கொண்டு வசிக்கும் தனிநபராவார். பலநபர் குடித்தனமென்பது உணவு மற்றும் பானங்களைப் பொதுவாகத் தயாரித்துக் கொண்டு ஒன்றாக வசிக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட நபர்களின் கூட்டமாகும். குடித்தனத்தில் குடும்ப உறுப்பினர்கள் அதாவது கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் மட்டுமன்றி வெளியாரும் அதாவது உறவினர்கள் விடுதியாளர்கள் மற்றும் வீட்டு வேலையாட்கள் போன்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொர்வாக உணவு பானங்களைப் பகிர்ந்து கொள்தற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் நபர்களும் அடங்குவர். குடித்தனத்துடன் வசிக்கும் ஆனால் தமது உணவு பானங்களை வேறாகத் தயாரித்துக் கொள்ளும் தங்குமடத்தினர் வேறாக குடித்தனமாகக் கருதப்படுவர்.

**குடித்தனத் தலைவர்**

குடித்தனத் தலைவர் என்பது குடித்தனத்தில் வழமையாக வசிக்கின்ற குடித்தனத்தின் உறுப்பினர்களால் குடித்தனத் தலைவர் என அடையாளப்படுத்தப்படும் நபராவார்.

**4. பிறந்த திகதி**

பிறந்த வருடம் மற்றும் மாதத்தினைக் குறித்துக் கொள்ளுமாறு கணக்கெடுக்கும் உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பதிலளிப்பவர் தமது பிறந்த திகதியைத் தெரியாதவிடத்து உத்தேச வயதினைப் பதிவு செய்வதற்காக குடும்ப உறுப்பினர்களின் வயது தொடர்பாக விளக்கம் தெரிந்த உறவினர் ஒருவரிடம் வினவுதல் அல்லது நன்றாகத் தெரிந்த பொது அல்லது தனிப்பட்ட சம்பவங்களைப் தொடர்புபடுத்தி வினவுதற்கு கணக்கெடுக்கும் உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**5. விவாக அந்தஸ்து**

தொகைமதிப்பினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் காணப்படும் விவாக அந்தஸ்து இங்கு கவனத்தில் கொள்ளப்படும். நபரொருவரின் திருமணம் பதிவு செய்யப்பட்டிருப்பின் “திருமணமான” என (பதிவு செய்யப்பட்டுள்ள) வகைப்படுத்தப்பட்டுள்ளது. திருமணம் சட்ட ரீதியாகப் பதிவு செய்யப்படவில்லை எனினும் யாராவதொரு நபர் தான் சம்பிரதாயபூர்வமாக திருமணம் செய்துள்ளதாகக் குறிப்பிட்டால் அதுவும் “திருமணமான” என (சம்பிரதாயபூர்வமான) வகைப்படுத்தப்பட்டுளள்து. நபரொருவர் விவாகரத்துப் பெற்றவராகக் கருதப்டுவது நீதிமன்றத்தினால் விவாகரத்து வழங்கப்பட்டிருந்தால் மட்டுமேயாகும். விவாகரத்துப் பெற்ற ஒருவர் மீண்டும் திருமணம் செய்திருந்தால் விவாகரத்துப் பெற்றவராக அல்லாமல் திருமணமானவராகக் கருதப்பட்டுள்ளது. “சட்டரீதியாகப் பிரிந்துள்ள” எனக் கருதப்படுவது நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பிரிந்து வாழும் நபராவார். நீதிமன்ற உத்தரவின் பேரில் அல்லாமல் தமது சுய விருப்பின் பேரில் பிரிந்து வாழும் நபர் “பிரிந்து வாழும் சட்டரீதியற்ற” என வகைப்படுத்தப்பட்டுள்ளார்.

**6. இனத் தொகுதி**

இனத் தொகுதி சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இலங்கை முஸ்லீம், பரங்கியர், மலாயர், இலங்கைச் செட்டி மற்றும் பரதர் என வேளுபடுத்திக் காட்டலாம். மேலே காட்டப்பட்டுள்ள வகைக்குள் அடங்காத சகலரும் “ஏனையோர்” ஏனையோர் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தியயத் தொடர்புகளைக் கொண்டுள்ள தமிழர்கள் சில சந்தர்ப்பங்களில் அவர் அல்லது அவரது பெற்றோர் இலங்னைக் பிரஜாவுரிமையைப் பதிவின் மூலம் பெற்றிருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்தியம் தமிழர் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இனக் கலப்பு காணப்படும் சந்தர்ப்பத்தில் பிள்ளை தந்தையின் இனத்தொகுதியைச் சேர்ச்சதாகக் கருதப்படும்.

**7. பிரஜாவுரிமை**

பரம்பரையாக பிரஜாவுரிமையைப் பெற்றுள்ள மற்றும் பதிவின் மூலம் பிரஜாவுரிமையை பெற்றவர்கள் என வேறுபடுத்தில் காட்டல் தொகைமதிப்பில் இடம்பெறவில்லை. சந்தேகமான

சந்தர்ப்பங்களில் தேவையான சான்றிதழ்கள்.‍ ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து உண்மையான பிரஜாவுரிமை என்ன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கணக்கெடுக்கும் உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இந்நாட்டுப் பிரஜாவுரிமையற்ற நபர்களின் பிரஜாவுரிமை அவரது நாட்டுடன் பதிவு செய்து கொள்ளப்பட்டது.

### 8. பிறந்த மாவட்டம்

பிள்ளை பிறந்த போது அதன் தாயார் வழமையாக வசித்த மாவட்டம் அல்லது வெளிநாட்டில் பிறந்திருப்பின் உரிய நாடு பிறந்த மாட்டமாகக் தொகைமதிப்பில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களுடன் தொடர்புடைய சம்பவங்களின் போது அந்த மாவட்டத்தின் புதிய பெயர் மற்றும் மாவட்ட எல்லைகளுக்கமைய அடையாளம் காணுமாறு கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

### 9. வழமையாக வசிக்கும் மாவட்டத்தில் வசிக்கும் காலம்

இதன்போது காலப் பகுதியாகக் கருதப்படுவது தற்போது வசிக்கும் மாவட்டத்திற்கு வருகைதந்த நாள் தொடக்கம் தொகைமதிப்பும் தினம் வரையான வருடகாலமாகும். மாவட்டத்தினுள் இடம்பெறும் வசிப்பிட மாற்றம் இதன்போது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

### 10. முன்பள்ளி.‍பாடசாலை.‍பல்கலைக்ழகம்.‍தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள்.‍ வேறு நிறுவனங்களில் பங்குபற்றல்

கடந்த 30 தினங்களுள் முறைசார் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நபர்கள் இதன் கீழ் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். அவ்வாறே நபரொருவர் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கையில் விடுமுறை காலம் காரணமாக அல்லாது அவ்வாறான வேறு காரணங்களினால் இந்தக் காலப்பகுதிக்குள் உண்மையாகவே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை என்றாலும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள்தாகக் கருதப்பட வேண்டும். முன்பள்ளி என்பது பிள்ளையொன்று முறையாகப் பாடசாலைக் கல்வியைப் பெறுவதற்கு தரம் 1 இல் சேர்வதற்கு முன்னர் பிள்ளைக்கு முறைசார் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் இடமாகும். முதலாம் வகுப்பு தொடக்கம் க.பொ.த (சா.த) வரை ஏதாவதொரு வகுப்பு வரை முறைசார் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் அரச அல்லத ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் பாடசாலை பாடசாலையாகக் கருதப்படும். ஏதாதொரு ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் (திறந்த பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக) பல்கலைக்கழகமாகக் கருதப்பட்டுள்ளது. முறைசார் வகையில் விரிவுரை / பாடநெறியை நடாத்தி இறுதியில் தொழில் அல்லது சுயதொழிலலை மேற்கொள்ளக் கூடிய வகையில் முறைசார் தொழில்அல்லது தொழில் நுட்ப பயிற்சியைப் பெற்றிருப்பதாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றிதழை வழங்கும் நிறுவனம் தொழில்/ தொழில்நுட்ப நிறுவனமாகக் கருதப்படும். ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றிதழை வழங்கும் தனியார் வகுப்புக்கள் தையல் வகுப்புக்கள் போன்ற பாடநெறிகள் “வேறு கல்வி நிறுவனங்கள்” என்பதக் கீழ் கணக்கெடுக்கப்படும்.

## 11. உயர் கல்வித் தகைமைகள்

இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டிருப்பது, நபரொருவர் பெற்றுள்ள உயர் கல்வித் தகைமை என்ன என்பதாகும்.

## 12. எழுத்தறிவு

சிங்களம், தமிழ் மற்றும் ஆகிய மொழிகளில் எழுதும் மற்றும் பேசும் ஆற்றல் இதன்போது அளவிடப்படும். நபரொருவர் ஏதாவதொரு மொழியை வாசிப்பதற்கு மற்றும் எழுதுதற்கான ஆற்றலாகக் கருதப்படுவது அந்த மொழியை விளங்கி வாசிப்பதற்கும் மற்றும் சிறிய கடிதமொன்றை அல்லது பந்தியொன்றை எழுதுவதற்கும் முடிந்தால் மட்டுமேயாகும். நபரொருவருக்கு குறைந்தபட்சம் ஒரு மொழியிலாவது எழுதுவற்கு, வாசிப்பதற்கு இயலுமானால் எழுதத்றிவாகக் கருதப்படும்.

## 13. கணனியறிவு

யாராவதொரு நபருக்கு அடுத்தவரின் உதவியின்றி ஏதாவதொரு பணியைக் கணனியின் மூலம் மேற்கொள்ள முடிகின்றமை கணனியறிவாகக் கருதப்படும். ஒருவருக்கு எவரதும் உதவியின்றி கணனி விளையாட்டை விடையாட முடியுமாயின் அந்த நபர் கணனி அறிவையுடைய நபராகக் கருதப்படுவார்.

## 14. தொழிற்படை

தொழிற்படையில் உள்ளடங்குவது 15 வயதிலும் கூடிய பொருளாதார ரீதியில் செயற்பாட்டுடைய சனத்தொகையினராவர்.

## 15. பொதுவாக பொருளாதார ரீதியில் செயற்பாடுடைய சனத்தொகை

பொதுவாக பொருளாதார ரீதியாக செயற்பாடுடைய சனத்தொகை என்பது வரைவிலக்கணப்படுத்துவது கவனத்தில் கொளள்ப்படும் காலப்பகுதியான தொகைமதிப்பிற்கு முன்னரான அண்மித்த 12 மாத காலப்பகுதியில் முன்னரைப் பகுதியில் ஏதாவது தொழிலில் ஈடுபடும் தொழிலற்ற நபர்களாவர். முன்னரைப் பகுதி என்பது 26 வாரங்கள் அல்லது அதிலும் கூடிய காலப்பகுதியாகும்.

## 16. பொதுவாக தொழிலில் ஈடுபடும்.

மேலே குறிப்பிட்ட கவனத்தில் கொள்ளும் காலப்பகுதியில் முன்னரைப் பகுதியில் பொருளாதார ரீதியாகச் செய்பாடுடைய சம்பளம் பெறும் தொழிலொன்றைச் செய்யும் நபர் அல்லது சம்பளம் பெறாமல் குடம்பப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்யும் நபராவார்.

### 17. பொதுவாக வேலையற்றோர்

பொருளாதார ரீதியாகச் செயற்பாடுடைய முன்னரைப் பகுதியில் தொழில் ஒன்றில் ஈடுபடாமல் ஆனால் தொழிலொன்றைத் தேடும் அல்லது தொழிலொன்றைச் செய்வதற்குத் தயாராகவுள்ள நபரொருவர் மேலே குறிப்பிட்ட கவனத்தில் கொள்ளும் காலப்பகுதியில் தொழிலற்றவராகக் கருதப்படுவார்.

### 18. தொழிலின் தன்மை

தொழிலின் தன்மை 4 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**(I) ஊழியர்**

சம்பளம், கூலி, கொமிஸ் அல்லது இலாபத்தை எதிர்பார்த்து வேலையொன்றில் ஈடுபடும் நபர் சேவையாளர் ஆவார். இந்தக் கொடுப்பனவை மாதாந்த, வாராந்த அல்லது செய்யப்படும் வேலை அளவிற்கேற்ப வழங்கலாம். நிரந்தர, தற்காலிக அல்லது அமைய அடிப்படையில் வேலை செய்யலாம். கொடுப்பனவு பண அடிப்படையிலேயே வழங்க வேண்டுமென்பதல்ல. அது ஏதாவது பொருளாக அல்லது இலாபப் பங்காக அல்லது வேறு ஏதாவது பொருளாதார நன்மையுடையதாக இருக்கலாம். தொழிலில் ஈடுபடும் துறைக்கமைய சேவையாளர்கள் அரச, அரசு சார்ந்த மற்றும் தனியார் துறை என்ற வகையில் உப வகைப்படுத்தலுக்கு உட்படலாம்.

**(II) தொழில் வழங்குனர்**

சம்பளம் வழங்கும் ஒரு ஊழியர் அல்லது பலரைத் தொடர்ச்சியாக வேலைக்கமர்த்தி தமது வியாபாரத்தை வர்த்தகத்தை அல்லது குடும்ப தொழிலில் ஈடுபட்டுள்ள நபரை தொழில் வழங்குனராக அடையாளப்படுத்தப்படுவார்.

**(III) சுயதொழிலில் புரிபவர்**

சம்பளம் பெறும் ஊழியர் ஒருவரையேனும் தொடர்ச்சியாக ஈடுபடுத்தாமல் தமது தொழிலை நடாத்திவச் செல்லும் நபர் சுயதொழிலில் ஈடுபடுபவராகக் கருதப்படுவார்.

**(IV) சம்பளம் பெறாமல் குடும்பப் பொருளாதார நடவடிக்கைக்கு பங்களிப்புச் செய்பவர்**

யாராவதொரு நபர் சம்பளம் பெறாமல் குடும்பப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுவாராயின் அந்த நபர் இப்பெயரால் அடையாளப்படுத்தப்படுவார்.

**அந்தரங்கமானது :**
தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தமது மிகச் சிறந்த அறிவிற்கும், திறமைக்கும் எட்டியவரையில் சகலரும் இத்தகவல்களை வழங்குமாறு வேண்டப்படுகின்றனர். தனிப்பட்ட தகவல்கள் எக்காரணத்திற்காகவும் வழங்கப்பட மாட்டாது.

# குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு 2011
# இலங்கை

## குடிசன, வீட்டுவசதிகள் படிவம்

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

**படிவம் F3**

## இங்கிருந்து ஆரம்பிக்கவும்

அறிவுரை
- விடைகளைப் பதிவதற்கு தரப்பட்ட பென்சிலை மாத்திரம் பாவிக்கவும்.
- ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டியிருந்தால் தூய்மையாக அழிக்கவும்.
- படிவத்தில் தேவையற்ற எதையும் எழுத வேண்டாம்.

குடித்தனத் தலைவரின் பெயர்

விலாசம்

### படிவத்தில் உள்ள வினாக்களுக்கு விடைகள் பதியப்பட வேண்டிய முறை

இலக்கத்தை எழுதும் முறை

0 1 2 3 4 5 6 7 8 9

விடையை இவ்வாறு நிறந்தீட்டுக →

இவ்வாறு பதிய வேண்டாம் → ✓ ✗ •

விடை இலக்கமாயின் அதைக் கூட்டினுள் தெளிவாக எழுதவும்.

வருடம் 1 9 6 8 மாதம் 1 2

விடையானது தரப்பட்டுள்ள விடைகளில் ஒன்றாயின் உரிய விடையினை மாத்திரம் நிறந்தீட்டுக.

ஆண் 1
பெண் 2

விடையாக சொல், குறியீடு ஆகிய இரண்டையும் குறிப்பிட வேண்டுமாயின்,

கண்டி 2 1

விடையைச் சொற்களினால் மாத்திரம் குறிப்பிட வேண்டுமாயின்,

நெற்செய்கையாளர்

**கவனிக்க:** சகல வீட்டுக் கூறுகளுக்கும் (வெற்றுக் கூறுகளும் உள்ளடங்கலாக) கூட்டு வசிப்பிடங்களுக்கும் மற்றும் நபர்கள் வழமையாக வசிக்கும் வசிப்பிடமற்ற கட்டிடக் கூறுகளுக்கும் இப்படிவம் நிரப்பப்பட வேண்டும்.

**A0** தொகைமதிப்புக் கண்டத்தை அடையாளப்படுத்தும் இலக்கம்

**A1** மாகாணமும் மாவட்டமும்

**A2** தேர்தல் பிரதேசம்

**A3** பி. செ. / உ. அ. அ. பிரிவு

**A4** கிராம உத்தியோகத்தர் பிரிவு

**A5** பிரிவு
1. நகரம்
2. கிராமம்
3. பெருந்தோட்டம்

**A6** மா.ந.ச./ ந.ச./ பிரதேச சபை

**A7** வட்டாரம்/ கிராமம்/ பெருந்தோட்டம்

**A8** தொகைமதிப்புக் கண்ட இலக்கம்

**A9** கூறின் தொகைமதிப்பு இலக்கம்

\- A-Z

**A10** கூறின் வகை
1. வீட்டுக்கூறு
2. கூட்டு வசிப்பிடம்
3. வசிப்பிடமல்லாத கட்டிடக்கூறு

**A11** வசிப்பிடத்தின் தன்மை
1. வசிப்பிடம்
2. வெற்றிடம் (வெற்றிடமாயின் 2 எனக் குறிப்பிட்டு அடுத்த கூறுக்குச் செல்க)

**A12** குடித்தன இலக்கம்

வீட்டுக்கூறு ஒன்றில் ஒரு குடித்தனம் காணப்படின் '1' எனவும், ஒன்றிற்கு மேற்பட்ட குடித்தனங்கள் இருப்பின் '1', '2' என்ற தொடரில் இலக்கமிடவும். கூட்டு வசிப்பிடம் மற்றும் வசிப்பிடமல்லாத கட்டிடக்கூறுகளுக்கு எப்போதும் '0' ஐக் குறிக்கவும்.

**A13** படிவ இலக்கம்

குடித்தனத்தில்/ கூட்டுவசிப்பிடத்தில்/ வசிப்பிடமல்லாத கட்டிடக்கூறில் 6 பேருக்கு மேற்பட்டோர் இருப்பின் ஒன்றிற்கு மேற்பட்ட படிவங்கள் பாவிக்கப்பட வேண்டியிருப்பதுடன், படிவங்களின் எண்ணிக்கைக்கேற்ப அவற்றுக்கு '001', '002', '003' எனும் தொடரில் இலக்கமிடவும்.

### கணக்கெடுக்கும் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் தகவல்கள்

கணக்கெடுக்கும் உத்தியோகத்தரின் பெயர்

கையொப்பம்

திகதி

மேற்பார்வை உத்தியோகத்தரின் பெயர்

கையொப்பம்

திகதி

குறிப்பு ►

1

## நபரின் தகவல்கள்

**P0 தொகைமதிப்புக் கணத்தின் போது இவர் (திருத்தச் சுற்றின்போது மாத்திரம் பதியவும்)**

- வழமையாக வசிப்பவர் தொகைமதிப்புக் கணத்தின்போது இருந்தார் → 1
- வழமையாக வசிப்பவர் ஆனால் தொகைமதிப்புக் கணத்தின்போது தற்காலிகமாக இருக்கவில்லை → 2
- வழமையாக வசிக்காதவர் தொகைமதிப்புக் கணத்தின்போது தற்காலிகமாக இருந்தார் → 3

**P1 நபரின் இலக்கம்**

